ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நம்மாழ்வாரருளிச் செய்த

திருவாய்மொழி-ஏழாம்பத்து.

ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

திவ்யார்த்ததீபிகை யுரையுடன் கூடியது.

(இரண்டாம் பதிப்பு.)

ஸ்ரீஸ்வாமியின்

ஷஷ்டி பூர்த்தி நினைவு மாலையின்

பன்னிரண்டாவது மலராக வெளியிடப்பட்டது.

ஸ்ரீகாஞ்சி ஸ்ரீ வேங்கடேச்வர அச்சுக்கூடம்.

கிடைக்குமிடம்:—

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சிபுரம்.

விலை 2—4—0

1952

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நம்மாழ்வாரருளிச்செய்த

திருவாய்மொழி—ஏழாம்பத்து

(காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய திவ்யார்த்ததீபிகை யுரையுடன் கூடியது)

முதல் திருவாய்மொழி—உண்ணிலாவிய.

உரையவதாரிகை:—எம்பெருமான் கீதையிலே *தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா* என்று சொல்லிவைத்து, உடனே *மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாம் ஏதாம் தரந்தி தே* என்றும் சொல்லிவைத்தான். அதாவது—ஒரு குருவி பிணைத்த பிணை ஒருவராலவிழ்க்க வொண்ணாதாப்போலே தான் பிணைத்த மாயப்பிறவிப் பிணையானது ஒருவராலும் கழற்ற வொண்ணாதது என்று முன்னம் சொல்லிவைத்து, என் திருவடிகளையே தஞ்சமாகப் பற்றுவார் யாவரோ அவர்கள் அந்தப்பிணையை எளிதாகக் கழற்றிக்கொள்ள வல்லார்கள் என்று பின்னைச் சொன்னான். அந்தத்திருமுகப் பாசுரத்தில் நம்பிக்கையாலே ஆழ்வார் கீழ்த் திருவாய்மொழியில் பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாக முன்னிட்டுத் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஆர்த்தராய்ச் சரணம் புகுந்தார் மாயப்பிறவி மயர்வறுத்து நித்ய கைங்கர்ய ஸாம்ராஜ்யம் பெறவேணுமென்று.

அந்த சரணாகதி பலித்ததில்லை. பரதாழ்வானுடைய சரணாகதிக்கு முன்னே தேவதைகளின் சரணாகதி கிடந்ததாய் அதற்குப் பலன் அளித்த பின்னரே பரத சரணாகதிக்குப் பலன்தர வேண்டினாப்போலே—இங்கும் ஆழ்வாருடைய சரணாகதிக்கு முன்னே இவ்வுலகில் சில ஸம்ஸாரிகள் சரணாகதி செய்திருப்பர்கள் போலும்; நாங்கள் வாழலாம்படி ஸர்வோத்துங்கமானதொரு பிரபந்தத்தை உபகரித்தருள வேணுமென்று சிலர் சரணாகதி செய்திருந்தார்களாகவேணும்; அதுதான் முந்தின சரணாகதியாகையாலே அதற்குப் பலனளித்த பின்னரே ஆழ்வாருடைய சரணாகதிக்குப் பலனளிக்க வேண்டி எம்பெருமான் தாழ்த்தான்.

ஆழ்வாருடைய சரணாகதிக்கு முன்னே இப்படியொரு சரணாகதி யிருந்திருக்க வேணுமென்னுமிடம் ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியாலும் தெரியாநின்றது. ஆழ்வார் தாமே மேலே "எண்ணாதனகளெண்ணும் நன் முனிவரின்பந்தலைச் சிறப்பப் பண்ணார்பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத்தான்பாடி" என்றருளிச் செய்யாநின்றார்; திருவாய்மொழி யருளிச் செய்கைக்கு நிதானம் கூறுகிற பாசுரமாயிற்றிது. "எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின்பந் தலைச் சிறப்ப" என்றவிடத்து ஆழ்வார் திருவுள்ளத்தில் ஓடிக்கிடந்த பொருளாவது—

திருவாய்மொழி அவதரிப்பதற்கு முன்னே முனிவர்களெல்லாரும் திரள்கூடி 'எம்பெருமானுடைய பெருமைகளையெல்லாம் வருணிக்கப் பிறந்த உபநிஷத்துக்களுங்கூட *யதோ வாசோ நிவர்த்தந்தே* என்று பின்வாங்கிப்போயின; அப்படியன்றிக்கே பகவத் ஸ்வரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்களையெல்லாம் செவ்வனே பேசவல்லதொரு பிரபந்தம் அவதரிக்க வேணுமென்று பெருமாளைப் பிரார்த்திப்போம்' என்று நினைத்தார்களாம். பிறகு

திருவாய்மொழி அவதரித்தான பின்பு அம்முனிவர்கள் மறுபடியும் திரள்கூடி 'எம்பெருமானுக்கு இன்னம் சில குணங்களும் இன்னம் சில விபூதிகளும் உண்டாக வேணும்' என்று நினைத்தார்களாம். இப்படியே நம்பிள்ளை அர்த்தமருளிச் செய்கிறார். *எண்ணுதனகளெண்ணும் நன் முனிவர்* என்கிற மூலத்திற்கு இங்ஙனே பொருள் சொல்லியே தீரவேண்டும். திருவாய்மொழியினால் எம்பெருமானுடைய குணவிபூதிகளெல்லாம் கபளீகரிக்கப்பட்டு விட்டன என்பது பரம தாற்பரியம்.

இப் பாசுரத்தின்படி எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குணவிபூதி சேஷ்டிதங்களைக் குறையறப் பேசவல்லதொரு ப்ரபந்தம் திருவவதரிக்கவேணுமென்று ஏற்கெனவே சிலர் சரணாகதி செய்திருக்க வேண்டுகையாலே முந்துற முன்னம் அதற்குப் பலனளிக்கவேண்டி எம்பெருமான் ஆழ்வாருடைய சரணாகதியைப் பழுதாக்கினானென்னலாம். இவருடைய சரணாகதிக்கு இப்போதே பலன் தந்தால் திருவாய்மொழி அரைகுறையாயன்றோ போயிருக்கும். முந்தின சரணாகதிக்குப் பலன் முற்றிற்றாகாதே. திருவாய்மொழி தலைக்கட்டவேண்டி ஆழ்வாரை இன்னமும் இவ்விபூதியிலே வைத்தானாயிற்று. முன்னமே இவர் "பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ" என்று வயிறெரிந்திருக்கிறாரே; அந்த வயிற்றெரிச்சல்தானே மேலும் தலையெடுத்து *அங்தோ வடியேனுனபாத மகலகில்லே னிறையுமே யென்று சொன்னவடியேனை, இன்னமும் அகற்றமவற்றின் நடுவேயிருத்தித் துடிக்கவைப்பது தருமமோ வென்று கூப்பிடுகிறார் இத் திருவாய்மொழியில்.

ஜிதேந்திரியரில் தலைவரான ஆழ்வார் இங் நிலத்திலிருப்புக்குத் துடிக்கவேண்டிய அவசியமுண்டோ? விஷயங்களும் இந்திரியங்களும் இருந்தாலென்ன! அவற்றில் ஆழ்வார் கலங்குகைக்கு ப்ரஸக்தியில்லையே, துடிப்பானேன்? என்னில்; இதற்கு ஆழ்வார் தாமே இதில் ஆறும் பாட்டில் ஸுஸ்பஷ்டமாக உத்தரமருளிச் செய்கிறார் "விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும் செறும் ஐம்புலனிவை, மண்ணுளென்னைப் பெற்றால் என்செய்யா மற்று நீயும் விட்டால்" என்று.

*மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங் கூற அவதரித்த மங்கையர்கோன் தம்முடைய பெரிய திருமொழியிலே இத் திருவாய்மொழியை விவரியா நிற்பாராய் இரண்டு திருமொழிகள் அருளிச் செய்கிறார்; [1. திருவுக்குந் திருவாகிய செல்வா. 2. மாற்றமுள.]

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"*முடியானேயிற் கரணங்களையுடைய இவர்க்கு இந்த்ரியவச்யதை யுண்டென்னுமிடம் கிழோடு விருத்தமன்றோ என்னில்; அசல் அகம் நெருப்புப்பட்டு வேவாநின்றால் தந்தாம் அகம் பரிஹரியாதிருப்பாரில்லையிறே; புற்றினருகே பழுதை கிடந்தாலும் ஸர்ப்பம் என்று புத்திபண்ணி ப்ரமிக்கக்கடவதாயிருக்குமிறே. அங்குத்தைக்கும் இங்குத்தைக்கும் பொதுவான உடம்போடேயிருக்கிறபடியைக் கண்டார்; நாட்டாரடைய இந்த்ரிய வச்யராய்க் கிடந்து நோவுபடுகிறபடியையும் கண்டார்; இது நம்மளவும் வரில் செய்வதென்! என்று அஞ்சிக் கூப்பிடுகிறார்."

இந்தப் ப்ராக்ருத மண்டலத்திலே யிருந்தால் என்ன அனர்த்தம் விளையுமோ என்கிற அச்சம் மேலிட்டு ஓலமிடுகிறார் என்றதாயிற்று. .... *)

உண்ணிலாவியவைவரால்குமைதீற்றி என்னையுன்பாதபங்கயம் *
நண்ணிலாவகையே நலிவானின்னமெண்ணுகின்றாய் *
எண்ணிலாப்பெருமாயனேயிமையோர்களேத்தும் உலகம்மூன்றுடை *
அண்ணலே யமுதே யப்பனே என்னையாள்வானே! (க)

எண் இலா பெரு மாயனே	அளவிட முடியாத ப்ரக்ருதி தத்வத்தை உபகரணமாக வுடையவனே!
இமையோர்கள் ஏத்தும்	தேவர்களாலே துதிக்கப்படுபவனும்
உலகம் மூன்று உடை	மூவுலகங்களையும் சேஷமாக வுடையனுமான
அண்ணலே	ஸ்வாமியே!
அமுதே	பரமபோக்யனே!
அப்பனே	மஹோபகாரங்கள் செய்பவனே!

என்னை ஆள்வானே	என்னை நிர்வஹித்துக் கொண்டு போருமவனே!;
என்னை	அடியேனை
உள் நிலாவிய ஐவரால் குமைதீற்றி	உள்ளே நிரந்தர வாஸம் பண்ணுகின்ற பஞ்சேந்திரியங்களாலும் நலிவுறும்படி பண்ணி
உன் பாதபங்கயம்	உனது திருவடித்தாமரைகளை
நண்ணிலா வகையே	கிட்டாதபடியாகவே
இன்னம் நலிவான் எண்ணுகின்றாய்	இன்னமும் ஹிம்ஸிப்பதாக எண்ணியிருக்கின்றாய் போலும்.

* * * [உண்ணிலாவிய.] பிரானே! உன் திருவடிகளையே சரணமாகப்பற்றின வென்னை இந்திரியங்களை யிட்டு நலியப் பார்க்கிறாயே! இது தகுதியோ? என்கிறார். பகைவர் பாஹ்ய சத்ருக்களென்றும் ஆந்தர சத்ருக்களென்றும் இருவகைப்படுவர்; ஆயுதங்களாலே நமது உடலுக்கு நலிவை விளைக்கும் பகைவர் பாஹ்ய சத்ருக்களாவர். அப்படியன்றிக்கே கண்ணுக்குத் தெரியாதபடி உள்ளேயிருந்துகொண்டே நலிகின்ற பஞ்சேந்திரியங்கள் ஆந்தர சத்துருக்களெனப்படும்; இத்தன்மையை 'உண்ணிலாவிய வைவரால்' என்று ஆழ்வார் தெரிவிக்கிறார். அசேதநங்களான இந்திரியங்களை 'ஐந்தால்' என்று சொல்லவேண்டுமிடத்து 'ஐவரால்' என்றது—இந்த்ரியங்களானவை அசேதனங்களைப் போலன்றிக்கே சேதநர்கள் போலவே நின்று நலியுந் தன்மையைப் பற்ற. திருமங்கையாழ்வாரும் "உடனின்று ஐவரென்னுள் புகுந்து" என்றருளிச் செய்தது காண்க.

குமைதீற்றி—குமைக்கும்படி பண்ணி; குமைத்தலாவது ஸஹிக்க வொண்ணாதபடி ஹிம்ஸித்தல். இந்திரியங்கள் ஹிம்ஸித்தால் அதற்காக எம்பெருமானை நொந்து பேசலாமோ வென்னில்; எம்பெருமானுக்கு ஹ்ருஷீகேசனென்று ஒரு திருநாமமுண்டு; ஹ்ருஷீகமென்று இந்திரியங்களுக்குப் பெயர்; அவை தானிட்ட வழக்காம்படியிருப்பவன் என்பது பற்றியே ஹ்ருஷீகேசனென்று திருநாமமாயிற்றென்பதை ஆழ்வார் தாம் அறிந்தவராதலால் இங்ஙனே சொல்லுகிறார் போலும். பிரானே! உனக்கு விதேயமல்லவோ அவை; நீ நியமித்தால் கேளாவோ அவை; நீயேயன்றோ அவற்றை ஏவி நலிகின்றாய் என்கிறார்.

தமக்கு நலிவாவது இன்னதென்பதைக் காட்டுகிறார் "உன் பாத பங்கயம் நண்ணிலா வகையே" என்று. திருவடிகளைக் கிட்டாதொழிகையே இவ்வாத்மாவுக்கு நலிவு என்றிருக்கிறார். நலிவான் இன்ன மெண்ணுகின்றாய்—*அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறைமார்பா! உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே* என்றபின்பும் என்னை இங்ஙனம் நலியப் பார்க்கிறாயே இது தகுமோ? என்கிறார்.

ஆழ்வார் இங்ஙனே யருளிச் செய்வதைப்பற்றி ஸ்ரீவசநபூஷணத்தில் சில ஆராய்ச்சிகள் தோன்றியுள்ளன; அதில் மூன்றாம் பிரகரணத்தில் "ஸ்வதோஷாநுஸந்தாநம் பயஹேது; பகவத் குணாநுஸந்தாநம் அபயஹேது; பயாபயங்களிரண்டும் மாறாடில் அஜ்ஞதையே ஸித்திக்கும்" என்று முந்துற அருளிச்செய்தார். சேதநன் தன்னுடைய தோஷங்களைப் பார்த்தவாறே பயப்படவும், எம்பெருமானுடைய திருக்குணங்களை அநுஸந்தித்தவாறே அந்தபயம் தீரவும் நேரும்; இப்படியன்றிக்கே 'அநாதிகாலம் தனக்குப் பரதந்த்ரமான ஆத்மவஸ்துவை கர்மவ்யாஜத்தாலே ஸம்ஸரிக்கச் செய்து போந்தவனன்றோ, கேட்பாரற்ற ஸ்வதந்திரனானவன் இன்னமும் ஸம்ஸரிப்பிக்கில் செய்வதென்?' என்று அவன்படியை நினைத்து பயப்படுகை

யும், 'முன்போலன்றிக்கே நமக்கிப்போது ஆத்ம குணங்களுண்டாகையால் பேற்றில் கண்ணழிவு இல்லை' என்று தன்படியை நினைத்து பயம் கெடுகையும் ஆகுமானல் அவிவேகமே ஸித்தித்து விடும்; தான் தனக்கு நாசகனென்று பயப்படுகையும் ஈச்வரனே ரக்ஷகனென்று பயம் கெடுகையுமாகிற விவேக வேஷம் இல்லாமையாலே அவிவேகமே ஸித்தித்துவிடும்—என்பதாக அருளிச்செய்தார்; இதற்குமேலே தோன்றக்கூடிய சங்கையை அநுவதித்துப் பரிஹாரமும் காட்டியருளினர் (பிள்ளை லோகாசார்யர்);

> "ஆனல் *நலிவானின்ன மெண்ணுகின்றாய்* ஆற்றங்கரை வாழ்மரம்போலஞ்சுகின்றேன் என்கிற பாசுரங்களுக்கு அடியேன்னென்னில்; பந்தாநுஸந்தாநம். ப்ரஜை தெருவிலே இடறித் தாய் முதுகிலே குத்துமாபோலே நிருபாதிக பந்துவாய் சக்தனுமிருக்கிறவன் விலக்கா தொழிந்தால் அப்படிச் சோல்லலாமிறே. ப்ரஜையை கிணற்றின் கரையில் நின்றும் வாங்காதொழிந்தால் தாயே தள்ளினளென்னக் கடவதிறே."

என்கிற சூர்ணிகைகள் அருமருந்தானவை. இவற்றின் கருத்தாவது—எம்பெருமான் படியை நினைத்து பயம் தீரவேணுமே யல்லது பயப்படுகை கூடாதென்பது சாஸ்த்ரார்த்தமானல் தத்வ வித்துக்களில் தலைவரான ஆழ்வார்கள் *உண்ணிலாவிய வைவரால் குமை தீற்றி யென்னையுன் பாதபங்கயம் நண்ணிலாவகையே நலிவானின்ன மெண்ணுகின்றாய்* மக்கள் தோற்றக் குழிதோற்றுவிப்பாய் கொலென்று இன்னமாற்றங்கரை வாழ்மரம் போலஞ்சுகின்றேன் என்று அருளிச்செய்த பாசுரங்களுக்குக் கதியென்ன? என்று சங்கை; அதற்குப் பரிஹாரமாவது—பேறும் இழவுமான இரண்டும் அவனாலே யென்னலாம்படி நிருபாதிகரக்ஷகனை அவனோடு தங்களுக்குண்டான ஸம்பந்தத்தினுடைய அநுஸந்தானமே அப்படியருளிச் செய்கைக்குக் காரணம். ஸம்பந்தாநுஸந்தானத்தாலே இப்படி அவன் குறையாகச் சொல்லலாமோ வென்னில், விளையாட்டுக்காகத் தெருவிலே போடித்திரிகிற ப்ரஜை, அங்கே இடறிக் கால் நொந்தவாறே அழுதுகொண்டு அகத்திலே வந்து தனக்கு இந்தவேதனை வந்தது தாயாலேயாக நினைத்து அவள் முதுகிலே குத்துமாபோலே, ஒழிக்க வொழியாத உறவுடையனாய் நலிவைத் தவிர்க்கைக்கு சக்தனுமாயிருக்கிறவன் நலிவுபடவிட்டு விலக்காதொழிந்தால் 'அவன் இவற்றையிட்டு நலிவிக்கிறான்' என்னலாமன்றே. விலக்காத மாத்திரமே கொண்டு அவன் செய்தானென்னலாமோவென்னில், கிணற்றின் கரையில் நின்றும் வாங்காவிட்டால் கிணற்றிலே பிரஜை விழுந்தவளவில் 'தாய் அப்போதே சென்று எடுத்தாளாகில் இந்த ஆபத்து நேருமோ? கிணற்றின் கரையிலிருப்பை இவள் இசைந்திருக்கையாலன்றோ குழந்தை விழுந்தது; ஆனபின்பு இவளன்றோ தள்ளினள்' என்று லோகம் சொல்லக்கடவதன்றோ......... இதற்கு மேலும் அறிந்துகொள்ள வேண்டிய அர்த்த விசேஷங்களை ஸ்ரீவசநபூஷண தத்வ்யாக்யானங்களில் அறிந்துகொள்வது.

இத் திருவாய்மொழியில் முன்னடிகளெல்லாம் அஞ்சிக் கதறுகிறபடியாயும், பின்னடிகளெல்லாம் அச்சந்திர எம்பெருமான் படிகளைப் பேசுகிறபடியாயும் செல்லாநின்றது. பிள்ளை திருநறையூரரையர் "இப்பாட்டுக்களில் முன்னடிகளெல்லாம் புலியின் வாயிலே அகப்பட்ட ப்ரஜை தாய்முகத்திலே விழித்துக்கொண்டு புலியின்வாயிலே கிடந்து நோவுபடுமாபோலேயாயிருக்கிறது" என்று பணிப்பராம்.

எண்ணிலாப் பெருமாயனே !—எண்ணிறந்த மிகவும் ஆச்சரியமான குணங்களை யுடையவனே! என்பது ஒரு நிர்வாஹம். எண்ணிறந்த செயல்களைச் செய்யவல்லதான ப்ரக்ருதியைப் பரிகரமாக வுடையவனே! என்பது மற்றொரு நிர்வாஹம். ... ... (க)

என்னையாளும்வன்கோவோரைந்திவைபெய்து இராப்பகல்மோதுவித்திட்டு*
உன்னைநானணுகாவகை செய்துபோதிகண்டாய்*
கன்னலேயமுதே கார்முகில்வண்ணனே கடல்ஞாலம் காக்கின்ற*
மின்னுநேமியினாய் வினையேனுடைவேதியனே! (உ)

கன்னலே அமுதே	பரமபோக்யனே!
கார் முகில் வண்ணனே	காளமேக நிறத்தனே!
கடல் ஞாலம் காக்கின்ற	கடல் சூழ்ந்த வுலகங்களை ரக்ஷித்தருள்கின்ற
மின்னு நேமியினாய்	உஜ்ஜ்வலமான திருவாழியை யுடையவனே!
வினையேனுடை வேதியனே	பாவியேனான என் திறத்திலே எட்டாதபடி வேத வேத்யனாயிருக்குமவனே!
என்னை ஆளும் வன் கோ ஓர் ஐந்து இவை பெய்து	என்னை அடிமை கொள்ளுகிற கொடிய அரசர்கள் போன்ற இந்த பஞ்சேந்திரியங்களை ஏவி வைத்து
இராப் பகல் மோதுவித்திட்டு	இரவும் பகலும் பீடிக்கச் செய்து
நான் உன்னை அணுகா வகை	நான் உன்னைக் கிட்டாதபடி
செய்து போதி கண்டாய்	பண்ணிப்போருகிறாய்.

* * * [என்னையாளும்வன்கோ.] எலியெலும்பனான வென்னை இந்திரியங்களாலே நோவுபடுத்தி அந்த நோவை அறிவிக்க முடியாதபடி கடக்க நிற்கிறாயே! என்கிறார். ஈச்வரன் ஸர்வ சேஷியாயிருப்பவன்; அவனுக்கு ஜீவாத்மா அடிமைப்பட்டிருப்பன்; அவனுக்கு மனஸ்ஸு விதேயமாயிருக்கும்; மனஸ்ஸுக்கு இந்திரியங்கள் சேஷமாயிருக்கும்—என்றிப்படி ஒரு முறையுண்டு; இந்த முறை கெட்டு என்னை இந்திரியங்கள் ஆளும்படியாவதே! என்கிற பரிதாபத்தைக் காட்டுகிறார் "என்னையாளும் வன்கோ ஓரைந்திவை" என்பதனால். இந்திரியங்களுக்கு நான் ஆட்பட்டு அவற்றின் வழியே ஒழுகவேண்டும்படியான நிலத்திலே என்னை வைத்தாயே! என்று நொந்து சொல்லுகிறபடி.

இப்பாட்டின் முதலடியைத் திருவுள்ளம்பற்றியே மங்கையர்கோன் தமது திருமொழியில் * கோவாய் ஐவரென் மெய்குடியேறிக் கூறை சோறிவைதா வென்று குமைத்துப் போகார், நானவரைப் பொறுக்ககிலேன் * (7-7-9) என்றருளிச் செய்தார்.

இவைபெய்து இராப்பகல் மோதுவித்திட்டு—துர்மார்க்க ப்ரவ்ருத்திக்கு அடியான இந்த இந்திரியங்களை எனக்கு எதற்காகக் கொடுத்தாய்? இவற்றை என்னிடத்திலே உண்டுபண்ணாதிருக்கலாகாதோ? இரவு பகலென்கிற வாசியில்லாமல் இடைவீடின்றி என்னை நலிகைக்காகவேயன்றோ இவற்றை நீ என் பக்கலிலே உண்டாக்கிற்று என்று நெஞ்சுளுத்துச் சொல்லுகிறார்.

ஆழ்வீர்! இவ்விந்திரியங்களினால் உமக்கு என்ன பாதகம்? இதற்காக நீர் நெஞ்சு நோவானேன்? செவி வாய் கண் மூக்குடல் என்கிற ஐந்து இந்திரியங்களாலும் நீர் நம்மை அநுபவிக்கலாமன்றோ; செவிகளாலே என் கதைகளைக் கேட்கலாம்; வாயாலே என்னை வாழ்த்தலாம்; கண்களாலே என்னையும் என் அடியார்களையும் காணலாம்; மூக்காலே என்னுடைய பிரசாதமான திருத்துழாய் முதலியன மோரலாம்; உடலாலே என்னைத் தழுவி முழுசிப் பரிமாறலாம். இப்படி நல்லுபயோகங்களுக்கு உரியனவான இவற்றைப்பற்றி ஏதுக்கு இப்படி நெஞ்சுடைந்து சொல்லுகிறீர்? என்று எம்பெருமான் திருவுள்ளமாக, அதற்கு உத்தரமருளிச் செய்கிறார்—உன்னை நானணுகாவகை செய்து என்று. பிரானே! இந்த இந்திரியங்கள் உன்னுடைய அநுபவத்துக்கே ஏகாந்தமாகில் வெறுப்பனோ நான்!, அப்படி ஆகமாட்டாதே; * அகற்ற நீ வைத்த மாய வல்லைம்புலன்களாமவை நன்கறிந்தனன்* என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேனே; விஷயாந்தரங்களிலே பரந்தோடி உன்னருகு வாராமைக்கு இட்ட இடையூறுகளன்றோ இவை என்கிறார்.

ஆழ்வீர்! அப்படியாகாது; ஒருகால் அப்படியானால் அப்போது எம்மிடமறிவித்தால் பரிஹரித்துத் தருகிறோம் என்று எம்பெருமான் திருவுள்ளமாக, போதிகண்டாய் என்கிறார்; இவற்றால் படும் எளிவரவை அறிவிக்கவொண்ணாதபடி கண்மறையப்போகிறாயே! எங்கு வந்து எங்ஙனம் அறிவிப்பது என்கை. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"உன்னை அநுபவிக்க வேணுமென்று போந்த பிராட்டியை மாயமானைக் காட்டிப் பிரித்து ஏகாக்ஷி ஏகர்ணிகள் கையிலே காட்டிக்கொடுத்து உன்னைக் கொண்டகன்றாற்போலே கிடாய் இதுவும்."

கன்னலேயமுதே! உன்னுடைய பரம போக்யதையை எனக்கு நீ காட்டிக்கொடாமலிருந்தால் இந்திரியங்களின் வழியே நான் ஓடித்திரிய ருசியுடையேனாவேன்; உன்னுடைய போக்யதையையும், கார்முகில் போலும் வடிவழகையும் காட்டிக்கொடுத்தாயாதலால் உன் அநுபவத்திற்கு விரோதியாக இவ்விந்திரியங்கள் என்ன பாடுபடுத்துமோ என்று அஞ்சாநின்றேனென்கை.

கடன்ஞாலம்காக்கின்ற மின்னு நேமியினாய்!—'காக்கின்ற' என்ற விசேஷணம் நேமியிலும் அந்வயிக்கலாம், நேமியானிடத்திலும் அந்வயிக்கலாம். *அருளார் திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்* (திருவிருத்தம்) என்ற பாசுரம் இங்கு நினைக்கத்தகும். கையுந் திருவாழியுமான அழகைக்காட்டி என்னை யீடுபடுத்திப்புறம்பு தள்ளலாமோ! என்றவாறு.

வினையேனுடை வேதியனே—இவ்விடத்தில் ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"* தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்ய மதிதைவதம்* என்றும், * பொதுநின்ற பொன்னங்கழல் * என்றுஞ் சொல்லுகிறபடியே ஊர்ப்பொதுவாயிருக்கிற நீ, என்னளவிலே வந்தவாறே, வேதைகஸமதிகம்யனானாய்; இன்றிருந்து ஓலைப்புறத்தே கேட்கும்படியான பாபத்தைப் பண்ணுவதே நான்!" என்று. பிரானே! உன்னைப் பிரத்யக்ஷமாகக் கண்ணாரக்கண்டு அநுபவிக்க வேண்டிய நான் அப்படி யநுபவிக்க ப்ராப்தமாகாமல் 'சாஸ்த்ரங்களால் கேட்டறியத்தக்கவனத்தனே' என்று நிற்கும்படியாவதே, இப்படியும் எனக்கொரு பாபமோ? என்றவாறு. மேலே உதாஹரித்த ஈட்டு ஸ்ரீஸூக்தியில் "என்னளவிலே" என்றிருப்பதைக்கொண்டு சிலர் மூலபாடத்தை 'வினையேனிடை' என்று திருத்துவர்கள்; அதுவேண்டா; 'வினையேனுடை' என்ற பாடத்திலும் வியாக்கியானம் பொருந்தும். வேதியன்—வேத்வேத்யன் என்றபடி. (உ)

வேதியாநிற்குமைவரால் வினையேனைமோதுவித்து* உன் திருவடிச்.
சாதியாவகை நீதடுத்தென்பெறுதியந்தோ *
ஆதியாகியகலிடம்படைத்து உண்டுமிழ்ந்துகடந்திடந்திட்ட *
சோதிநீண்முடியாய்! தொண்டனேன்மதுசூதனனே! (௩)

ஆதி ஆகி	காரணபூதனாய்க்கொண்டு
அகல் இடம் படைத்து	விஸ்தாரமான ஜகத்தை ஸ்ருஷ்டித்து
உண்டு	(பிரளயத்திலே) வயிற்றிலே வைத்து நோக்கி
உமிழ்ந்து	பிறகு வெளிப்படுத்தி
கடந்து	(ஒருகால்) அளந்து
இடந்திட்ட	(வராஹரூபியாய்) இடந்தவனே!
சோதி நீள் முடியாய்	உஜ்ஜ்வலமாய் நீண்ட திருவபிஷேகத்தை யுடையவனே!
தொண்டனேன் மதுசூதனனே	என்னை யீடுபடுத்திக் கொண்ட மதுசூதனனே!
வினையேனை	பாவியான வென்னை
வேதியா நிற்கும் ஐவரால்	இடைவிடாதே நலியும் பஞ்சேந்திரியங்களாலே
மோதுவித்து	பீடிக்கச்செய்து
உன் திருவடி சாதியாவகை	உன் திருவடிகளைக் கிட்டாதபடி
நீ தடுத்து என் பெறுதி	நீ தடைசெய்து என்ன பயன் பெற்றாயாகிறாய்;
அந்தோ	ஐயோ!.

* * * [வேதியாநிற்கும்.] 'ஆழ்வீர்! உம்மை நான் இந்த ப்ரக்ருதியிலே வைத்தது ஒரு ப்ரயோஜனத்துக்காகக் காணும்' என்று எம்பெருமான் திருவுள்ளமாக, பிரானே! என்னை இப்படி நலிவித்து என்ன ப்ரயோஜனம் கொள்ளப்பார்க்கிறாய்? என்கிறார்.

'வேதியாநிற்கும்' என்கிற சொல் 'வெய:' என்கிற வட சொல்லடியாகப் பிறந்தது. நசமீ வேயம், க்ருத்திகா வேயம் என்பது முதலான வியவஹாரங்களில் வேயபதப்ரயோகம் காண்க. வேதமாவது அடித்தல்; ஹிம்ஸித்தலென்று தாற்பரியம். இடைவீடின்றிக் கொலை பண்ணுவதையே தொழிலாகவுடைய பஞ்சேந்திரியங்களினால் என்னை க்லேசப்படுத்தி உன் திருவடிகளுக்கு தூரஸ்தனாம்படி செய்துவைத்து என்ன ப்ரயோஜனம் பெறப் பார்க்கிறா யென்கிறார்.

முதலடிக்கு மிக அழகிய ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—" * யாவஜ் ஜீவ மக்நி ஹோத்ரம் ஜுஹுயாத் * என்றால் *ஸாயம் ப்ராத:* என்று ஒரு காலங்களிலே ஒதுக்கா நின்ற திறே; அங்ஙனன்றிக்கே ஸர்வாவஸ்தைகளிலும் அடிமை செய்ய ஆசைப்பட்டுச் சொன்ன தெல்லாம் இவற்றின் பக்கலிலேயானபடி. போகத்துக்குப் பாரித்ததெல்லாம் க்லேசப்படு கைக்கு உடலாவதே!." என்று. இதன் கருத்தாவது—சாஸ்த்ரங்களில் யாவஜ்ஜீவம் அக்நி ஹோத்ரம் செய்து போரவேணுமென்று சொல்லிற்று. யாவஜ்ஜீவமென்றால் உயிருள்ள வரை யில் என்று பொருள். உயிருள்ளவளவும் இரவும் பகலும் முடுக்க அக்நிஹோத்ரம் செய்ய வேணுமென்பதாகத்தேறும்; ஆனால் அப்படியில்லை; அதே சாஸ்த்ரத்தில் மற்றோரிடத்தில் *ஸாயம் ப்ராதரக்நிஹோத்ரம் ஜுஹுயாத்* என்று காலையிலும் மாலையிலும் அக்நிஹோத்ரம் செய்யும்படி விதித்திருக்கையாலே அதற்கு ஒரு காலநியதி ஏற்பட்டுவிட்டது. எம்பெருமா னுக்குக் கைங்கர்யம் பண்ணவேணுமென்று பாரிப்புக்கொண்ட ஆழ்வார் *ஒழிவில் கால மெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்* என்றார். யாவஜ்ஜீவம் அடிமைசெய்யவேணுமென்று பாரித்தபடி. கீழே விவரித்தபடி அக்நிஹோத்ரத்திற்குக் காலை மாலை யென்று ஒரு காலநியதி ஏற்படுத்தினாற்போல இங்கும் கைங்கர்யத்திற்கு ஒரு காலநியதி ஏற்படுத்த வேண்டியதுண்டோ வென்னில், அது கிடையாது; ஒரு கணப்பொழு தும் இடைவீடின்றியே கைங்கர்யம் செய்யவேணுமாயிற்று இவருடைய பாரிப்பு. ஐயோ! அந்தப் பாரிப்பெல்லாம் விபரீதமாகிறதே! ஒருகொடிப்பொழுதும் ஓய்வின்றி இந்திரியங்களின் பக்க லிலே ஹிம்ஸைப்படுவதே பலனாகத் தேறப்போலிருக்கிறதே! நான் பாரித்த பாரிப்பு இப் படியா ஆவது! என்று கிலேசிக்கிறபடியாக நம்பிள்ளை விவரித்தருளினாராயிற்று.

[ஆதியாகி இத்யாதி.] பிரானே! உன்னுடைய சேஷ்டிதங்களை ஆராய்ந்தால் ரக்ஷிப்ப தொன்றே உன் தொழிலாகக் காண்கிறது; * படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்து தேர்ந்து உலகளிக்கும் முதற்பெருங் கடவுளாயிருக்கின்ற நீ என்னை இங்ஙனே நலியவேணுமென்று திருவுள்ளம் பற்றலாமோ? என்றவாறு. சோதிநீண்முடியாய்!—ரக்ஷிப்பதற்கென்றே முடிகவித் திருப்பவனல்லையோ? ... ... (௩)

சூதுநானறியாவகை சுழற்றிஓரைவரைக்காட்டி*உன்னடிப்
போதுநானணுகாவகை செய்துபோதிகண்டாய் *
யாதும்யாவருமின்றிநின்னகம்பாலொடுக்கி ஓராலினீளிலை *
மீதுசேர்குழவி! வினையேன்வினைதீர்மருந்தே! ... ... (௪)

யாதும் யாவரும் இன்றி	சேதநாசேதனப் பொருள்க ளொன்றொழியாமல்
நின் அகம் பால் ஒடுக்கி	உன் திருவயிற்றின் ஏக தேசத் திலே ஒதுங்கும்படி பண்ணி
ஓர் ஆலின் நீள் இலை மீது	ஓர் ஆலமரத்தினுடைய சிறிய இலையின்மீது
சேர் குழவி	குழந்தையாய்க் கண்வளர்ந்தரு ளினவனே!
வினையேன் வினை தீர் மருந்தே	பாவியேனை யென்னுடைய பாவங்களைத் தீர்க்கும் மருந் தானவனே!
ஓர் ஐவரை காட்டி	பஞ்சேந்திரியங்களைக் காட்டி
நான் சூது அறியா வகை	நான் உறுவது அறியாதபடி
சுழற்றி	என்னை மருளப்பண்ணி
உன் அடி போது நான் அணுகா வகை செய்து	உன் திருவடி மலர்களை நான் கிட்டாதபடி பண்ணி
போதிகண்டாய்	கண்காணாதபடி கடக்க நிற்கின் றாயே!.

* * *—[சூது நானறியாவகை.] பிரானே! உன் திருவடிகளைப் பெறுவதற்கு உபாயம் உன்திருவடிகளே யென்றிருக்கிற இந்த என்னுடைய அறிவுங்கூட அழியும்படி இந்திரியங்களைக்கொண்டு என்னைக் கலக்கி உன் திருவடிகளைச் சேராதபடி பண்ணவா நினைத்திருக்கிறாய்? என்கிறார்.

சூது என்பதற்கு க்ருத்ரிமம் என்கிற பொருள் உலகில் ப்ரஸித்தமானாலும் அந்தப் பொருள் இங்கு விவக்ஷிதமன்று; * தொழக் கருதுவதே துணிவது சூதே * சூதாவதென்னெஞ்சத் தெண்ணினேன் * என்ற விடங்களில் போல இங்குப் பொருள் கொள்க. சூது—உறுவது. 'இவ்வாத்மாவுக்கு விஷயப்ராவண்யம் விநாச ஹேது, எம்பெருமானை யநுபவித்தலே உஜ்ஜீவநம்' என்றறிவதன்றோ உறுவது; அப்படி நான் அறியாதபடிக்கு சப்தாதி விஷயங்களைக் காட்டி பிரமிப்பித்து உன் திருவடிமலர்களை நான் கிட்டாதபடி பண்ணிக் கண்ணுக்குத் தோற்றாமே கடக்க நிற்கிறாயே! இது தகுதியோ வென்கிறார்.

போதிகண்டாய் என்ற விடத்திற்கு நம்பிள்ளை யருளிச்செய்வது—"கூட நிற்கில் இதெல்லாம் படவல்லேன் கிடீர்; கூட நிற்கில் கண்ணோட்டம் பிறக்குமென்று கடக்கப் போவாரைப் போலே." (இதன் கருத்தாவது) கொலைப்பாதகர்களான இந்திரியங்களோடே என்னை வைத்து எவ்வளவு வதைசெய்தாலும், நீ அகன்று போகாமல் கூடவே யிருப்பாயாகில் எந்தக் கஷ்டமும் பொறுத்துக்கொள்ளத் தடையிராது. 'கூடவேயிருந்தால் தயை பண்ண வேண்டிவருமே' என்று நினைத்து அகன்று போவாரைப்போலே நீயும் அகன்று போவதனால் வருத்தம் பொறுக்கக் கூடியதாக இல்லையே! என்றவாறு.

[யாதும் யாவருமின்றி இத்யாதி.] பிரானே! ஆபத்துக்களைப் போக்கிக் காத்தருள்வது உன்பணியே யன்றி ஆபத்தை விளைப்பது உன் பணியன்றே; பிரளயங்கொள்ளாதபடி உலகங்களைத் திருவயிற்றிலே வைத்து நோக்கி ஓர் ஆலந்தளிரிலே சிறு குழவியாய்க் கண்வளர்ந்தருளுமவனான நீ உன்னுடைய ஆபத்ஸகத்வத்தை ப்ரஸித்தப்படுத்திக் கொண்டவனாயிருந்து வைத்து இப்போது எனக்கு ஆபத்தை விளைக்கப் பார்ப்பது தகுதியோ? என்றவாறு.

வினையேன் வினைதீர்மருந்தே!—பாபமே நிரூபகமான என்னுடைய பாபங்களைப் போக்கும் மருந்தாகவல்லவனே! என்றபடி. ஏற்கெனவே எனக்கிருந்த பாவங்களைப் போக்கி விஷயப்ராவண்யத்தில் நின்றும் மீட்டு உன்னளவிலே யீடுபடுத்திக்கொண்டு இவ்வளவு செய்த நீ மறுபடியும் நான் விஷயப்ரவணனாம்படி வழிதேடுவது தகுதியோ? இந்நிலத்திலே வைப்பது விஷயப்ரவணனாகைக்கு இட்ட வழியன்றோ. ... . (௪)

தீர்மருந்தின்றியைந்துநோயடும் செக்கிலிட்டுத்திரிக்குமைவரை *
நேர்மருங்குடைத்தாவடைத்து நெகிழ்ப்பானொக்கின்றாய் *
ஆர்மருந்தினியாகுவார் ? அடலாழியேந்தியசுரர்வன்குலம் *
வேர்மருங்கறுத்தாய் ! விண்ணுளார்பெருமானேயோ ! (௫)

அடல் ஆழி ஏந்தி	தேசு பொருந்திய திருவாழியைக் கையிலே தாங்கி
அசுரர் வன்குலம்	அசுரர்களின் பிரபலமான கூட்டங்களை
மருங்கு வேர் அறுத்தாய்	பக்கவேரோடே அறுத்தவனே !
ஓ விண்ணுளார் பெருமானே	ஓ நித்யஸூரிநாதனே !
தீர் மருந்து இன்றி	மாற்று மருந்தில்லாதபடி [அபரிஹார்யமாக]
ஐந்து நோய் அடும்	ஐந்து வகைப்பட்ட சப்தாதி விஷயங்களாகிற நோய்களாலே முடிக்கக்கடவதான
செக்கில் இட்டு	(சரீரமாகிற) செக்கிலே தள்ளி
திரிக்கும் ஐவரை	நெருக்குகிற பஞ்சேந்திரியங்களை
நேர் மருங்கு உடைத்தா அடைத்து	நேரிலும் பக்கங்களிலுமாக நிறுத்தி
நெகிழ்ப்பான் ஒக்கின்றாய்	நெகிழ விடுவான் போலேயிரா நின்றாய்;
இனி மருந்து ஆகுவார் ஆர்	இனி மருந்தாகக்கூடியவர் யார் ?

* * *—[தீர் மருந்தின்றி] நான் ஒரு ஸமாதானம் செய்துகொள்ள முடியாதபடி விஷயங்களாலும் இந்திரியங்களாலும் என்னை நலிந்து நீ கை விட்டால் ரக்ஷகராவார் வேறு உளரோ வென்கிறார். என்னை ஹிம்ஸிப்பவர்களும் ஐவர்; ஹிம்ஸைக்குப் பரிகரமான வஸ்துக்களும் ஐந்து என்கிறார். சப்தாதி விஷயங்களாகிற ஐந்து நோய்களாலே பஞ்சேந்திரியங்கள் நலிகின்றமையைச் சொன்னபடி. தீர்மருந்தின்றி என்றது—வேறொரு ப்ரதிக்ரியை பண்ணவொண்ணாதபடி என்றவாறு. ஸர்வசக்தியான ஸர்வேச்வரனாலும் போக்கப் போகாதவையாதலால் இங்ஙனே சொல்லுகிறது. சரீரத்தை இங்குச் செக்கு என்கிறது. செக்கானது சுழன்று கொண்டேயிருப்பதும், தன்னிடத்தில் வந்து விழுந்த எள் முதலிய வஸ்துக்களை ஒரு கணப்பொழுதில் உருமாய்க்குமதுமாயிருத்தலால் இது சரீரத்திற்குப் பொருத்தமான த்ருஷ்டாந்தமென்க.

நேர் மருங்கு உடைத்தா அடைத்து—நேர்—எதிர்; மருங்கு—பக்கம். என்னுடைய எதிரிடமும் பக்கவிடமும் இந்த ஐந்து சத்துருக்களை யுடைத்தாம்படி நெருக்கி என்றபடி. எங்குப் பார்த்தாலும் இவையேயாம்படி செய்து என்கை. இங்கே ஈடு;—“அபிமந்யு என்றொரு பாலனை நலிகைக்கு அதிரத மஹாரதர்களடங்கலும் சூழப்போந்தாப்போலே இந்திரியங்களைக் கையடைப்பாக்கி.”

நெகிழ்ப்பானொக்கின்றாய்—நெகிழவிடுவான் போலே யிராநின்றாய்: உன்பக்கலில் உண்டாகியிருக்கிற விச்வாஸமும் குலையும் போலே யிராநின்றது என்று தாற்பரியம். இதுவரையில் உன்னை ரக்ஷகனென்று நம்பியிருந்தேன் : ரக்ஷகனல்லன், பக்ஷகன்போலும் என்று இப்போது நினைக்க வேண்டியதாகிறதே! என்றவாறு.

இப்படிச் சொன்ன ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் ‘ஆழ்வீர்! உம்முடைய கஷ்டத்திற்கு நீரே ஒரு மருந்து தேடிக்கொள்ளப்பாரும்’ என்ன, ஆர்மருந்தினியாகுவார்? என்கிறார். மருந்து என்றும் மருத்துவனென்றும் ப்ரஸித்தனான நீயே கைவிட்டால் இனி வேறொரு மருந்து தேடப்போமோ? என்கை. மருந்து என்பது அசேதநமாகையாலே ‘எது மருந்தாகும்’ என்று சொல்லவேண்டுவது முறைமையாயிருக்க ‘ஆர் மருந்தினியாகுவார்’ என்று உயர்திணையாகக் கூறினமையால் ஆழ்வாருடைய மருந்து ஒரு பரமசேதநனாகவே யிருக்க

வேணுமென்னுமிடம் பெறப்படுகிறது. *நிர்வாணம் பேஷஜம் பிஷக்* என்ற ஸஹஸ்ரநாமம் இங்கே அநுஸந்திக்கத்தக்கது.

அடலாழியேந்தி யசுரர் வன்குலம் வேர்மருங்கறுத்தாய்—இங்கு அசுரர் என்னும்சொல் அஸுரர்களென்கிற தைத்யவகுப்பினரை மாத்திரம் சொல்லுவதன்று; ஆஸுர ப்ரக்ருதிகளாயுள்ளவர்களை யெல்லாம் சொல்லுகிறது; ஆகவே ராக்ஷஸர்களும் இச் சொல்லில் அடங்குவர்கள். ஸுதர்சநசதகத்தில் * காசீ விப்லோஷ சைத்யக்ஷபண* என்பது முதலான சுலோகங்களில் அடலாழியின் அதிசயம் அறியத்தக்கது.

விண்ணுளார் பெருமானேயோ!—இவ்விடத்தில் பரமபோக்யமான ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"ஒருத்தன் சிறையிருக்க, பிதாவும் மாதாவும் ப்ராதாக்களுமாய்க் கல்யாணம் செய்யக்கண்டு தான் கூடப்பெறுதே நோவுபடுமாபோலே, நித்யஸூரிகளும் பிராட்டியும் அவனுமாகப் பரமபதத்திலே யிருக்கிறபடியை அநுஸந்தித்து அங்கே கேட்கும்படி கிடந்து கூப்பிடுகிறுர். ஹா ராம! ஹா லக்ஷ்மண! ஹா ஸுமித்ரே* என்று பிராட்டி தனியே கிடந்து கூப்பிட்டாப்போல, பரமபதத்திலிருப்பும் அணிகலங்கும்படி கூப்பிடுகிறுர்." ... (ரு)

விண்ணுளார்பெருமாற்கடிமைசெய்வாரையும்செறும் ஐம்புலனிவை *
மண்ணுளென்னைப்பெற்றல் என்செய்யாமற்றுநீயும்விட்டால் ? *
பண்ணுளாய்கவிதன்னுளாய் பத்தியினுள்ளாய்பரமீசனே! * வந்தென்
கண்ணுளாய்நெஞ்சுளாய் ! சொல்லுளாய் ! ஒன்றுசொல்லாயே. (சு)

விண் உளார்	விண்ணுலகில் உள்ளவர்களாய்க் கொண்டே	பண் உளாய்	(என்னுடைய) ஆர்த்த ஸ்வரத்தை அறியுமவனே !
பெருமாற்கு	பராத்பரனுன உனக்கு	கவிதன் உளாய்	(என்னுடைய) ஆர்த்தியே வடிவெடுத்த சொற்களை யறியுமவனே!
அடிமை செய்வாரையும்	அடிமை செய்பவர்களான நித்யஸூரிகளையும்		
மண்ணுள்	இந்நிலத்திலே	பத்தியின் உள்ளாய்	என்னுடைய ஆற்றுமையை அறியுமவனே!
செறும்	மேலிட்டு நலியக்கூடிய		
ஐம்புலன் இவை	இந்த பஞ்சேந்திரியங்கள்	பரம் ஈசனே	பராத்பரனே!
என்னை பெற்றல் என் செய்யா	(இவற்றை வெல்லுதற்குரியவலிமையற்ற) என்னிடம் வந்து சேர்ந்தால் இவை என்னதான் செய்யமாட்டா;	என் கண் உளாய் நெஞ்சு உளாய் சொல் உளாய்	என்னுடைய கண்ணோடும் நெஞ்சோடும் வாகிந்திரியத்தோடும் வாசியற உள்ளே ஸந்நிதி பண்ணியிருப்பவனே!
மற்று	அதற்குமேலே		
நீயும் விட்டால்	சக்தனுன நீயும் கைவிட்டால்	வந்து	என்னளவில் வந்து
(என் செய்யா)	என்ன செய்யமாட்டா; [எதுவும் செய்யக்கூடுமன்றே.]	ஒன்று சொல்லாய்	(அபயமாக) ஒரு வார்த்தை யருளிச் செய்யவேணும்.

* * *—[விண்ணுளார் பெருமாற்கு] நம்மிற் காட்டில் எவ்வளவோ மேம்பட்டவர்கள் என்று ப்ரஸித்தி பெற்றவர்களையும் நலியக்கடவ இந்திரியங்கள் என்னை என்னபாடு படுத்தா? என்கிறுர். விண்ணுளாருடைய பெருமானுக்கு அடிமைசெய்வாரையும் செறும் என்றும் பொருள்கொள்ளலாம்; விண்ணுளார்— விண்ணுலகத்திலே யிருப்பவர்களாய்க் கொண்டு, பெருமானுக்கு அடிமை செய்வாரையும் செறும் என்றும் பொருள் கொள்ளலாம். அடிமை செய்வார்—அடிமைசெய்ய ருசியுடையார் என்றும், அடிமைசெய்து கொண்டிருப்பவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். ஸ்வர்க்கலோக வாஸிகளான இந்திராதி தேவர்களைக் கொள்ளவுமாம்; பரமபதவாஸிகளான கருத்மான் முதலிய நித்யஸூரிகளைக் கொள்ளவுமாம். இருவகுப்பினர் விஷயமாகவும் இரண்டு இதிஹாஸங்களை ஆசாரியர்கள் எடுத்துக்காட்டி இவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கின்றுர்கள்.

நரகாஸுரனென்பவன் ப்ராக்ஜோதிஷமென்னும் பட்டணத்திலிருந்துகொண்டு ஸகல ப்ராணிகளையும் நலிந்து தேவஸித்த கந்தர்வாதிகளுடைய கன்னிகைகளையும் பற்பலரைப் பலாத்காரமாய் அபஹரித்துக் கொண்டுபோய்த் தான் மணம் புணர்வதாகக் கருதித் தன் மாளிகையிற் சிறைவைத்து, வருணனது குடையையும் மந்தரகிரிசிகரமான ரத்னபருவதத்தையும் தேவமாதாவான அதிதி தேவியின் குண்டலங்களையும் கவர்ந்துபோனதுமன்றி இந்திரனுடைய ஐராவத யானையையும் அடித்துக் கொண்டுபோகச் சமயம் பார்த்திருக்க, அஞ்சிவந்து பணிந்து முறையிட்ட இந்திரன் வேண்டுகோளால் கண்ணபிரான் கருடனை வரவழைத்து ஸத்யபாமையுடனே தான் கருடன்மேலேறி அந்நகரத்தையடைந்து போர்செய்து நரகனைக்கொன்று, அவன் பல திசைகளிலிருந்து கொண்டுவந்து சிறைப்படுத்தியிருந்த பதினாறாயிரத்தொருநூறு கன்னிகைகளையும் ஆட்கொண்டு, நரகனால் முன்பு கவரப்பட்ட (இந்திர மாதாவான அதிதி தேவியின்) குண்டலங்களை அவளிடம் கொடுக்கும்பொருட்டு ஸத்யபாமையுடனே கருடன் தோள்மேல் ஏறிக்கொண்டு தேவலோகத்துக்குச்செல்ல, அங்கு இந்திராணி ஸத்யபாமைக்கு ஸகல உபசாரங்களைச் செய்தும் தேவர்க்கே உரிய பாரிஜாத புஷ்பம் மானிடப்பெண்ணாகிய இவளுக்குத் தகாதென்று ஸமர்ப்பிக்க வில்லையாதலின், அதனைக்கண்டு பாமை விருப்புற்றவளாய் நாதனை நோக்கி 'ப்ராணநாதனே! இந்தப் பாரிஜாத தருவை த்வாரகைக்குக் கொண்டுபோக வேண்டும்' என்றதைக் கண்ணபிரான் திருச்செவி சார்த்தி உடனே அந்த வ்ருக்ஷத்தை வேரோடு பெயர்த்துக் கருடன் தோளின் மேல் வைத்தருளி த்வாரகைக்குக் கொண்டுபோக, அப்பொழுது இந்திராணி தூண்டிவிட்டதனால் இந்திரன் தேவஸைன்யங்களுடனே வந்து மறித்துப் போர்செய்தான்; கண்ணபிரான் அவனை ஸகல ஸைன்யங்களுடன் பங்கப்படுத்திப் பின்பு அம்மரத்தைக் கொணர்ந்து ஸத்யபாமையின் வீட்டுப் புழைக்கடைத் தோட்டத்தில் நாட்டியருளினன் என்கிற மேல்கதை யிருக்கட்டும்; தனக்கு மஹோபகாரம் செய்தருளின பகவான் திறத்திலே இந்திரன் த்ரோஹியானானென்பது இவ்வரலாற்றினின்று அறியத்தக்கது. "விண்ணுளாரையும் ஐம்புலன் செறும்" என்னத் தட்டுண்டோ?

ஈட்டில் மற்றொருகதையை எடுத்தருளிச் செய்கிறார்—அதாவது; "ஸுமுகமென்கிற ஸர்ப்பவிசேஷம் திருவடிகளிலே சென்று கிட்ட, பெரிய திருவடி ஓடிச்சென்று 'எனக்கு ஆமிஷமாயிருக்கிற இத்தைக் கைக்கொண்டு நோக்குவதே!' என்று வெறுத்து 'தேவரீரையும் நாய்ச்சிமாரையும் நெடுங்காலம் வஹித்துக்கொண்டு திரிந்தேன், நான் என் பெற்றேன்' என்றானிறே. இதிறே ஸம்ஸாரஸ்வபாவமிருக்கும்படி."

இங்கு அறியவேண்டிய கதையாவது—தேவேந்திரனுக்கு நண்பனும் மந்திரியும் ஸாரதியுமான மாதலியானவன் அழகினும் குணத்திலும் மிகச் சிறந்த தன் புதல்வியான குணகேசியென்னும் கன்னிகைக்குத் தக்க வரனைத் தேடுபவனாய்ப் புறப்பட்டு வழியில் நாரதமுனிவரைச் சந்தித்துத் துணையாகக் கொண்டு பலவுலகங்களிற் சென்று பார்த்துத் தக்க வரனைக் காணமல் பாதாளலோகத்தில், வாஸுகியினால் ஆளப்படுகின்ற போகவதி யென்னுஞ் சிறந்த நகரத்தை யடைந்து அங்கேயிருக்கின்ற அனேக குமாரர்களைப் பார்க்கின்றபொழுது ஸுமுகனென்னும் நாககுமாரனை நோக்கி அவனுடைய ரூபலாவண்யங்களிலீடுபட்டு அவனுக்குத் தன் மகளைக் கொடுக்கக் கருதி அவனது பாட்டனாரைக் கண்டுபேச, அவர் மகிழ்ச்சியோடு துயரமுங் கொண்டவராய் 'இவனது தந்தையைக் கருடன் பக்ஷித்து இந்த ஸுமுகனையும் ஒரு மாதத்திற்குள் பக்ஷிப்பேனென்று சொல்லியிருக்கின்றானாதலால் இவ

னுக்கு மணஞ்செய்தல் ஏற்றதன்று’ என்று தெரிவித்தார். அதுகேட்ட மாதலி ‘என்னால் மருமகனாக வரிக்கப்பட்ட உனது பௌத்திரன் எங்களுடன் வந்து தேவேந்திரனைக் காண்பானாயின் அவனுக்கு ஆயுளைத் தந்து கருடனைத் தடுக்க முயல்வேன்’ என்று சொல்லி ஸுமுகனை யழைத்துக்கொண்டு இந்திரனிடஞ் சென்றுசேர, அங்கு இந்திரனுடனே உபேந்திர மூர்த்தியான திருமாலும் வீற்றிருக்கையில், நிகழ்ந்த செய்திகளை யெல்லாம் நாரதமுனிவர் சொல்லக்கேட்ட திருமால் இந்திரனை நோக்கி ‘இவனுக்கு அமிர்தத்தைக் கொடுக்கலாம்; அதனால் இவர்கள் இஷ்டஸித்தி யடைந்தவராவர்’ என்று சொல்லியருள, இந்திரன் கருடனது பராக்கிரமத்தை ஆலோசித்துத் திருமாலை நோக்கி ‘தேவரீரே அவனுக்கு அமுதத்தையும் ஆயுளையும் தந்தருள்க’ என்றதற்கு, திருமால் ‘ஸகல லோகாதிபதியான நீ கொடுப்பதே போதும்; அதனை மாற்றுபவர் யார்?’ என்றுகூற, பிறகு இந்திரன் ஸுமுகனுக்கு அமுதமுண்பியாமல் நீண்ட ஆயுளை வரமளிக்க, உடனே மாதலி ஸுமுகனுக்குத் தன்மகளை மணம் புரிவித்தான். இச்செய்தியைக் கேள்வியுற்ற கருடன் கோபங்கொண்டு இந்திரனோடு மாறுபட்டு, தனது இரையை அவன் தடுத்து விட்டதற்காகப் பலபல நிஷ்டூர வார்த்தைகள் கூறுகையில் ஸுமுகன் தான் நீண்ட ஆயுளை வரம் பெற்றிருந்தாலும் கருடனுடைய கறுவுதலைக்கண்டு அஞ்சிப் பாம்புவடிவாய்த் திருமாலினருகிற் சேர்ந்து அப்பெருமானது கட்டிலின் காலைக் கட்டிக்கொண்டு சரண்புக, பின்பு கருடன் திருமாலை நோக்கி ‘ஸகல தேவர்களினுள்ளும் மஹா பலசாலியான வுன்னைச் சிறிதும் சிரமமின்றி இறகு முனையாற் சுமக்கின்ற என்னினும் வலிமையுடையார் யார்? இதனைச் சற்று ஆலோசித்துப்பார்’ என்று செருக்கிப் பேச, அக்கடுஞ் சொற்கேட்ட திருமால் கருடனை நோக்கி ‘மிகவும் துர்ப்பலனான நீ உன்னைத் தானே மஹா பலசாலியாக எண்ணி எனது முன்னிலையில் தற்புகழ்ச்சி செய்து கொண்டது போதும்; மூவுலகமும் எனது உடம்பை வஹிக்க முடியாவே; யானே எனது சக்தியால் என்னை வஹித்துக்கொண்டு உன்னையும் வஹிக்கின்றேன்? எனது இந்த வலக்கையொன்றை மாத்திரமாவது நீ தாங்கவல்லையாகில் உனது செருக்குமொழி பயன் பட்டதாகும்’ என்று சொல்லிக் கருடனது தோளில் தனது வலக்கையை வைத்த மாத்திரத்தில் அவன் அதன் அதிபாரத்தைத் தாங்க மாட்டாமல் வருந்தி வலிமையொழிந்து மூர்ச்சித்து விழுந்து, பின்னர் அரிதில் தெளிந்து திருமாலை வணங்கிப் பலவாறு பணிமொழி கூறி ‘என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்’ என்று பிரார்த்திக்க, திருமால் திருவுள்ளமிரங்கி அவனுக்கு ஸமாதானங்கூறித் தனது திருவடியின் பெருவிரலால் ஸுமுகனை யெடுத்துக் கருடன் தோளிலிட்டு ‘இவனை நீ உனது அடைக்கலமாகக் கொண்டு பாதுகாக்கக் கடவை’ என்று குறிப்பிக்க. அதுமுதல் கருடன் ஸுமுகனோடு நட்புக்கொண்டு அவனைத் தோளில் தரிக்க, அவனும் அச்சமின்றி ‘கருடா! ஸுகமா?’ என்று க்ஷேமம் விசாரிப்பவனாயினன்—என்பதாம்.

இன்னமும் ஈட்டு ஸ்ரீ ஸூக்திகள் காண்மின்;—“அவன் தான் அவதரித்து சோகிப்பது மோஹிப்பதானாப் போலேயாயிற்று இவர்களும். அன்றிக்கே, * அயர்வறுமமரர்களதிபதியாயிருக்கிற ஸர்வேச்வரனுக்கு, ஸம்ஸாரத்திலே முமுக்ஷுக்களாய் கைங்கர்யத்திலே அவகாஹித்திருக்கக் கடவரானவர்களையும் நெருக்கக்கடவ இந்த்ரியங்களிவை. ஒரு விச்வாமித்ர ஸுக்ரீவாதிகளைக் கண்டோமிறே. ஜ்ஞாநாதிகனான விச்வாமித்ரனகப்பட ஒரு விஷயத்தின் காற்கடையிலே நெடுங்காலம் கிடந்தானிறே. பெருமாளுக்குப் பரிவரான மஹாராஜர், பெருமாளை மின்னுக்கும் இடிக்கும் இரையாக விட்டுவைத்து நாலுமாஸம் இந்த்ரிய பரவசராய் அவ்வழியென்று நினைத்திலரிறே.”

"மண்ணுளேன்னைப் பெற்றால்" என்ற சொல்நயத்தால் ஆழ்வார் தாம் விண்ணுளாரில் ஒருவர் என்பது தோன்றுமென்ப.

பின்னடிகளின் உட்கருத்தை நம்பிள்ளை வெகு அழகாகவும் உருக்கமாகவும் எடுத்தருளிச்செய்கிறபடி பாரீர்;—"[பண்ணுளாய்] என் ஆர்த்தஸ்வரம் கேளாதிருக்கிறாயல்லையே. [கவி தன்னுளாய்] என்னுடைய ஆர்த்திகர்ப்பமான உக்தி கேளாதிருக்கிறாயல்லையே. [பத்தியினுள்ளாய்] இப்படி சொல்லுகிற ஆற்றாமை அறியாதிருக்கிறாயல்லையே. [பரமீசனே] உனக்கு முடியாததொன்று உண்டாயிருக்கிறாயல்லையே. உன் சேஷித்வம் ஏறிப்பாயாத இடமுண்டோ?" .... (சா)

ஒன்றுசொல்லியொருத்தினில் நிற்கிலாத ஓரைவர்வன்கயவரை*
என்றுயான்வெல்கிற்பன் உன்திருவருளில்லையேல்? *
அன்றுதேவரசுரர்வாங்க அலைகடலரவமளாவி * ஓர்
குன்றம்வைத்த எந்தாய் கோடியேன்பருகின்னமுதே! (எ)

அன்று	பண்டொரு காலத்திலே	கொடியேன் பருகு இன் அமுதே	பாவியேனான நானும் பருகும்படியான இன்னமுதமே!
தேவர் அசுரர்	தேவர்களும் அசுரர்களும்	உன் திரு அருள் இல்லை எல்	உன்னுடைய கிருபை இல்லையாகில்,
வாங்க	வலிக்கும்படியாக	ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கிலாத ஓர் ஐவர் வன் கயவரை	ஆறியிருக்கமாட்டாத பஞ்சேந்திரியங்களாகிற பிரபலக் கொடியவர்களை
அலை கடல்	அலையெறிகிற கடலிலே		
அரவம் அளாவி	வாஸுகி யென்கிற பாம்பைச் சுற்றி		
ஓர் குன்றம்	மந்தர மலையை	யான் என்று வெல்கிற்பன்	அடியேன் என்றைக்கு வெல்லவல்லவனாவேன்?
வைத்த எந்தாய்	நாட்டின பெருமானே!		

* * * [ஒன்று சொல்லி] அடியார்கட்கு அருந்தொழில் செய்தும் அபேக்ஷிதம் தலைக்கட்டுவதையே இயல்வாக வுடையனான உன்னுடைய கருணையில்லையாகில் பிரபலமான இந்திரியங்களை நான் வெல்லுவதென்றொரு பொருளுண்டோ வென்கிறார்.

ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கிலாத—ஒரு விஷயத்திலே சாபலத்தைப் பண்ணி அதை புகும்வரையில் அதிலே நிலைநில்லாத என்றபடி. ஒருத்து—ஒருமைப்பாடு. இன்—சாரியை; இல்—ஏழனுருபு. கயவர்—கொடியர். "ஓர் அர்த்தத்திலே நிற்கக் கடவதல்லாத" என்று ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்கையாலே அதற்கீடாக "ஓரத்தனில்" என்று பாடமிருக்கலாம் என்றார் ஒரு பெரியார். அர்த்தம் என்பது 'அத்தன்' என்று திரியலாம்; மகரனகரப்போலி. ஆனாலும் "ஒருத்து—ஒருமைப்பாடு" என்று வியாக்கியானங்கள் காண்கையாலே பாடத்திருத்தம் வேண்டாவென்க.

பின்னடிகளிற் குறித்த வரலாறு:—முன்னொரு காலத்தில் இவ்வண்ட கோளத்திற்கு அப்புறத்திலுள்ள விஷ்ணுலோகத்துச் சென்று திருமகளைப் புகழ்ந்துபாடி அவளால் ஒரு பூமாலை ப்ரஸாதிக்கப்பெற்ற ஒரு வித்யாதர மகள், மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன் கை வீணையில் தரித்துக்கொண்டு பிரமலோக வழியாய் மீண்டுவருகையில் துர்வாஸமஹாமுனி எதிர்ப்பட்டு அவளை வணங்கித் துதிக்க, அவ்விஞ்சைமங்கை அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டாள்; அதன் பெருமையையுணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட அம்முனிவன் ஆனந்தத்தோடு தேவலோகத்திற்கு வந்து, அப்பொழுது அங்கு வெகு உல்லாஸமாக ஐராவத யானையின்மேற் பவனி வந்துகொண்டிருந்த இந்திரனைக்கண்டு அவனுக்கு அம்

மாலையைக் கைநீட்டிக்கொடுக்க, அவன் அதனை மாவட்டியினால் வாங்கி அந்த யானையின் பிடரியின்மேல் வைத்தவளவில் அம்மதயானை அதனைத் துதிக்கையாற் பிடித்திழுத்துக் கீழெறிந்து காலால் மிதித்துத் துவைத்தது; அதுகண்டு முனிவரன் கடுங்கோபங்கொண்டு இந்திரனை நோக்கி 'இவ்வாறு செல்வச்செருக்குற்ற உன்னுடைய ஐச்வரியங்களெல்லாம் ஒளிந்துவிடக்கடவன' என்று சபிக்க, உடனே தேவர்களின் செல்வம் ஒழிந்தன; ஒழியவே அசுரர் வந்து பொருது அமரரை வென்றனர். பிறகு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து அப்பிரான் அபயமளித்துக் கட்டளையிட்டபடி அசுரர்களையுந் துணைக் கொண்டு மந்தரமலையை மத்தாக நாட்டி வாஸுகியென்னும் மஹா நாகத்தைக் கடைகயி றாகப் பூட்டிப் பாற்கடலைக் கடையலாயினர். அப்பொழுது மத்தாகிய மந்தரகிரி கடலி னுள்ளே அழுந்திவிட, தேவர்களின் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமை வடிவ மெடுத்து அம்மலையின் கீழே சென்று அதனைத் தனது முதுகின்மீது கொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமல் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந் தருளியிருந்தனன். இப்படி ஸ்ரீமந்நாராயணன் அக்கடலினிடையே மஹா கூர்மமாய் மந்தர பர்வதத்திற்கு ஆதாரமாய் எழுந்தருளியிருக்க, வாஸுகியின் வாலைப் பிடித்துக்கொண்ட தேவர்களும் தலையைப் பிடித்துக்கொண்ட அசுரர்களும் ஆகிய இருதிறத்தாரும் அதனை வலியப்பிடித்து இழுத்துக் கடையவல்ல வலிமையில்லாதவராய் நிற்க, அது நோக்கி அத்திரு மால் தான் ஒரு திருமேனியைத் தரித்து இருவகுப்பினர் பக்கத்திலேயும் நின்று வாஸுகி யின்வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தனன். அப்பால் அந்த மஹாவிஷ்ணு தந்வந்தரி யென்னும் தேவரூபத்தைத் தரித்து அம்ருதபூர்ணமான கமண் டலத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அந்த க்ஷீரஸமுத்திரத்திலிருந்து தோன்றினன். அப் பொழுது அசுரர்கள் தந்வந்தரியின் கையிலிருந்த அம்ருத கலசத்தை பலாத்காரமாகப் பிடுங்கிக்கொள்ள அந்த எம்பெருமான் ஜகந்மோஹனமான ஒரு பெண்வடிவத்தைத் தரித்து அசுரர்களை மயக்கி வஞ்சித்து அமுதத்தைக் கைக்கொண்டு அமரர்களுடைய கோஷ்டிக்கு மாத்திரம் ப்ரஸாதித்தனன்.

[இப்படி எம்பெருமான் மோஹினீரூபத்தால் அசுரர்களை மயக்கித் தேவர்களுக்கே அமிருதத்தைப் பங்கிட்டுக் கொடுத்துவருகையில், ராஹுவென்னும் ஓர் அசுரன் தான் இருக்கவேண்டிய அசுரர் கூட்டத்தைவிட்டுத் தந்திரமாகத் தேவகோஷ்டியினிடையிலே புகுந்து கையேற்று அமிருதத்தை வாங்கியுண்ண, அதனை ஸூர்ய சந்திரர்கள் குறிப்பித்த மாத்திரத்தில், எம்பெருமான் அவனை அகப்பையாலடித்துத் தலைவேறு உடல்வேறாக்க, அமி ருதமுண்டதனால் உயிர் நீங்காத அந்தத் தலையும் உடலும் விஷ்ணுவின் அநுக்ரஹத்தால் ராஹு கேதுக்கள் என இரண்டு க்ரஹங்களாகி ஸூர்யன் முதலிய ஏழு க்ரஹங்களோடு சேர்ந்து தம்மேற் கோள்சொன்ன ஸூர்ய சந்திரர்க்குப் பகையாய்ச் சிற்சில காலத்தில் அவர் களைப் பிடித்துக்கொள்ளுகின்றன; அதுவே க்ரஹணமெனப் படுகின்றது—என்பதும் இங்கு அறியத்தக்கது.] ... ... (எ)

இன்னமுதெனத்தோன்றி ஓரைவர்யாவரையும்மயக்க* நீவைத்த
முன்னமாயமெல்லாம் முழுவேரரிந்து * என்னையுன்
சின்னமும்திருமூர்த்தியும் சிந்தித்தேத்திக் கைதொழவேயருளெனக்கு*
என்னம்மா! என்கண்ணா! இமையோர்தம்குலமுதலே! (அ)

என் அம்மா	என் ஸ்வாமியே !	முழுவேர் அரிந்து	வாஸனையோடே போக்கி
என் கண்ணா	எனக்கு எளியவனானவனே !	என்னை	அடியேனை
இமையோர் தம் குலம் முதலே	நித்யஸூரிகளின் திரளுக்குத் தலைவனே !	உன் சின்னமும் திரு மூர்த்தியும்	உனது அஸாதாரண லக்ஷணங்களான சங்கசக்ராதிகளையும் திவ்யமங்கள விக்ரஹத்தையும்
ஓர் ஐவர்	சப்தாதி விஷயங்கள் ஐந்தும்		
இன் அமுது என தோன்றி	இனிய அமிருதம்போல் போக்யமாய்த் தோன்றி	சிந்தித்து	நெஞ்சார நினைத்து
யாவரையும் மயக்க	எப்படிப்பட்டவர்களையும் மயக்கும்படியாக	ஏத்தி	வாயாரத் துதித்து
		கை தொழ	கையாரத் தொழும்படியாகப் பண்ணி
நீ வைத்த	நீ உண்டாக்கி வைத்த		
முன்னம் மாயம் எல்லாம்	அநாதியான ஸம்ஸாரத்தையெல்லாம்	எனக்கே அருள்	எனக்கென்று விசேஷித்த க்ருபையைப் பண்ணவேணும்.

* * * [இன்னமுதென.] எனக்குண்டான ப்ரக்ருதி ஸம்பந்தத்தையறுத்து, மனமொழி மெய்களாலே உன்னையே நான் நிரந்தரமாக அநுபவிக்கும்படி பண்ணியருளவேணுமென்கிறார். முன்னம் அநுபவிக்குங்காலத்தில் அமுதம்போல் பரமபோக்யமாகத் தோற்றுவதும், பிறகு பரிபாகத்தில் விஷமாயிருப்பதும் சப்தாதி விஷயங்களுக்குண்டான இயல்பு. இங்கு "இன்னமுதெனத்தோன்றி" என்று முன்னம் தோன்றுகிற ரீதி மாத்திரமே சொல்லப்பட்டது; பரிணாமத்தில் விஷமாகுமதென்னுமிடம் இங்குச் சொல்லிற்றில்லையேயாகிலும் அது சொற்போக்கில் அர்த்தாத்ஸித்தம்.

இத்திருவாய்மொழியில் பாசுரந்தோறும் ஐவர் என வருமது பஞ்சேந்திரியங்களைக் குறிக்குமதாயினும் இப்பாசுரத்தில் ஐவரென்பது சப்தாதி பஞ்ச விஷயங்களைக் குறிக்குமதாக ஆசாரியர்கள் வியாக்கியானமருளியுள்ளார்கள். ஈடு காண்மின்;—"[ஓரைவர்] தனித்தனியே ப்ரபலமாய் அத்விதீயமான சப்தாதி விஷயங்கள் ஐந்தும்." ஆறாயிரமும் ஒன்பதினாயிரமும் இருபத்தினாலாயிரமும் இப்படியே. பன்னீராயிரவுரைகாரர் மாத்திரம் "ஐவர்—ஐந்து இந்த்ரியங்களாலே" என்று உரையிட்டார்.

சப்தாதி விஷயங்களானவை முகப்பில் பரமபோக்யம் போலத் தோற்றி எப்படிப்பட்டவர்களையும் மதிகெடுக்கும்படியாக நீ பண்ணிவைத்த பழையதான இந்த ஸம்ஸாரபந்தத்தை நிச்சேஷமாக விடுவித்து உன்னுடைய பஞ்சாயுதாதி திவ்ய சின்னங்களையும் அவற்றால் பொலியும் திருமேனியையுமே இடையறாது சிந்திக்கவும் துதிக்கவும் கைதொழவும் பாங்கான திருவருளைச்செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கிறாராயிற்று. சின்னம்—வடசொல் விகாரம். .... (அ)

குலமுதலடும்தீவினைக் கொடுவன்குழியினில் வீழ்க்குமைவரை *
வலமுதல்கெடுக்கும் வரமேதந்தருள்கண்டாய் *
நிலமுதலினியெவ்வுலகுக்கும் நிற்பனசெல்வனவென * பொருள்
பலமுதல்படைத்தாய் என்கண்ணா! என்பரஞ்சுடரே ! (௬)

நிலம் முதல்	பூமி முதலாக	குலம்	குலத்தை
இனி எவ்வுலகுக்கும்	மற்றும் ஸகல லோகங்களுக்கும்	முதல் அடும்	வேரோடே முடிக்கவல்ல
		தீவினை	பாபங்களை விளைக்கவல்ல
நிற்பன செல்வன என	ஸ்தாவர ஜங்கம ரூபமான	கொடு வன் குழியினில்	(சப்தாதி விஷயங்களாகிற) படுகுழியிலே
பொருள் பல	பொருள்கள் பலவற்றையும்	வீழ்க்கும் ஐவரை	தள்ளக்கூடிய பஞ்சேந்திரியங்களை
முதல் படைத்தாய்	முன்னம் படைத்தவனே!	வலம் முதல் கெடுக்கும் வலமே	மூல பலத்தோடே முடிக்கும்படியான மிடுக்கை
என் கண்ணா	என் கண்ணனே!		
என் பரம் சுடரே	என் பரஞ்சோதி வடிவனே!,	தந்தருள் கண்டாய்	அநுக்ரஹித்தருளவேணும்.

* * * விஷயங்களிலே ஆத்மாவைத் தள்ளும் இந்திரியங்கள் என்னை நலியாதபடி பண்ணவேணும் என்று இரக்கிறார்.

குலமுதலடுந்தீவினை—ஒருவன் பண்ணின பாபம் அவனொருவனோடே போகையல்லாமல் குலமாக முதலற முடிக்க வல்லவையான பாவங்களை விளைக்கக் கூடியதாய், கொடியதாய், அநுபவித்து முடியவொண்ணாதபடியாயிருக்கிற குழியிலே தள்ளி ஹிம்ஸிக்கின்றவர்களாம் ஐவர்; அவர்கள் தாம் பஞ்சேந்திரியங்களென்று பேர்பெற்ற மஹாநுபாவர்கள். அந்தப் பெருமிடுக்காளருடைய மிடுக்கை முதலிலே முடிக்கக் கடவதான உன்னுடைய அநுக்ரஹத்தைப் பண்ணியருள வேணுமென்கிறாராயிற்று முன்னடிகளில். இங்குக் குழியென்றது சப்தாதி விஷயங்களை.

இவ்விடத்து ஈடுமுப்பத்தாறாயிரத்திலும் இருபத்தினாலாயிரத்திலும்—“ * ந ஹி தர்ம விருத்தேஷு பஹ்வபாயேஷு கர்மஸு, மூலகாதிஷு ஸஜ்ஜந்தே புத்திமந்தோ பவத்விதா:. என்றானிறே மால்யவான் ராவணனுக்கு” என்கிற ஸ்ரீஸூக்தி காண்கிறது. இந்த ச்லோகம் மால்யவானுடையதாக ஸ்ரீ ராமாயணத்தில் இப்போதுள்ள பதிப்பு ஒன்றிலும் காணப்படவில்லை; திருவடியின் வார்த்தையாகக் காண்கிறது. ஆகவே இங்கு நேர்ந்திருக்கும் பிறழ்வு குறிக்கொள்ளத் தக்கது.

நிலமுதலினி இத்யாதி. பிரானே! நீ ஜகத் ஸ்ருஷ்டி முதலியவற்றைச் செய்கிறபோது உனக்கு ஆரேனும் துணைபுரிந்ததுண்டோ? ஸங்கல்ப மாத்திரத்தையே துணைக்கொண்டன்றோ செய்தாய். ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜனம் மோக்ஷமன்றோ. அது பெறவேண்டாவோ? பூமி முதலாக மற்றும் இப்படியுண்டான எல்லாவுலகங்களிலும் ஸ்தாவரஜங்கமங்களான பல பதார்த்தங்களையும் முன்பே யுண்டாக்கினாய்; அப்படிப் பொதுவான ரக்ஷணம் செய்தது மாத்திரமே யல்லாமல் கண்ணபிரானாய் வந்தவதரித்து ஒருநாடாக வடிவழகை அநுபவிப்பித்தாய்; அவ்வழகை நானொருவனே அநுபவிக்கும்படியும் உதவினாய்; இத்தனையுஞ் செய்தவுனக்கு இந்தப் பஞ்சேந்திரியப் பாவிகளிடத்தினின்று மீட்டு ரக்ஷிக்கை அரிதாயிற்றோ? என்றாராயிற்று.

இரண்டாமடியில் “வலமே தந்து” “வரமே தந்து” என்பன பாட பேதங்கள். (௬)

என்பரஞ்சுடரேயென்றுன்னையலற்றி உன்னிணைத்தாமரைகட்கு *
அன்புருகிநிற்குமதுநிற்கச் சுமடுதந்தாய் *
வன்பரங்களெடுத்தைவர்திசைதிசை வலித்தெற்றுகின்றனர் *
முன்பரவைகடைந்து அமுதம்கொண்டமூர்த்தியோ ! (௭)

முன்	முன்பொரு காலத்திலே
பரவை கடைந்து	கடலைக் கடைந்து
அமுதம் கொண்ட மூர்த்தி	அமுதத்தை யெடுத்து உதவிய ஸ்வாமியே!,
என் பரம் சுடரே என்று உன்னை அலற்றி	எனக்கு விதேயனான பரஞ்சோதியே! என்றிப்படி உன்னை நோக்கிக் கூப்பிட்டு
உன் இணை தாமரைகட்கு	உனது உபய பாதங்கள் விஷயத்திலே
அன்பு உருகி நிற்குமது நிற்க	அன்பினாலே உருகியிருக்க வேண்டியது ப்ராப்தமாயிருக்க
	(அதற்கு விரோதமாக)
சுமடு தந்தாய்	(சரீரமாகிற) சும்மாட்டைத் தந்தாயே!, (அதனால்)
வன் பரங்கள் எடுத்து	பிரபலமான விஷய பாரங்களைச் சுமத்தி
ஐவர்	பஞ்சேந்திரியங்கள்
திசை திசை	ஒவ்வொரு மூலையாக
வலித்து	இழுத்து
எற்றுகின்றனர்	பீடிக்கின்றனர் ;
ஓ	இது பொறுக்கமுடியவில்லையே.

* * * பிரானே !உன் திருவடிகளிலே அடிமை செய்கைக்கு இடையூறாய் விஷயாநுபவங்களுக்குப் பாங்கான உடம்பை எனக்குத் தந்தாய்; அதுவே ஹேதுவாகப் பஞ்சேந்திரியங்களும் பொறுக்கவொண்ணாத ஹிம்ஸைகளைச் செய்கின்றன; அவற்றைப் பரிஹரித்தருள வேணும் என்று ஆர்த்தியோடே பெருமிடறு செய்து கூப்பிடுகிறார்.

முதலில் 'என்பரஞ் சுடரே' என்று ஒருவிளி யிருப்பது அதுபோன்ற பல்லாயிரம் விளிகளுக்கு உபலக்ஷணம்; "ஸ்ரீநாத நாராயண வாஸுதேவ ஸ்ரீக்ருஷ்ண பக்தப்ரிய சக்ர பாணே, ஸ்ரீபத்மநாபாச்யுத கைடபாரே ஸ்ரீராம பத்மாக்ஷ ஹரே முராரே!; அநந்த வைகுண்ட முகுந்த க்ருஷ்ண கோவிந்த தாமோதர மாதவ........" என்றிப்படி ஓய்வின்றி எம்பெருமானது திருநாமங்களையே சொல்லிச் சொல்லிப் போதுபோக்குவதென்று ஒன்றுண்டே; அதுதான் இங்கு முதலடியில் விவக்ஷிதம்; என்பரஞ்சுடரே! என்றாற்போலே பலபல திருநாமங்களை வாயாரச் சொல்லியலற்றி நீராயுருகி நிற்கையன்றோ என் ஸ்வரூபத்திற்குச் சேருவது; பிரானே! அந்த நிலைமையிலன்றோ என்னை நீ நிறுத்தவேண்டும்; அஃதொழிய அதற்கு எதிரான நிலையிலே வைத்திருக்கின்றாயே; அதாவது விஷயாநுபவங்களுக்கு உபகரணமான ப்ரக்ருதியைத் தந்துவைத்திருக்கிறாயே! என்கிறார் முன்னடிகளில். சுமடு—இந்திரியங்கள் சுமத்தின சுமையையெல்லாம் சுமக்கைக்கீடான சரீரமாகிற சும்மாடு என்றபடி.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"ஒன்றுக்கொன்று ஒப்பாயிருப்பன இரண்டு செவ்விப் பூப்போலேயிருக்கிற உன் திருவடிகளில் போக்யதையை அநுஸந்தித்து ப்ரேம பரவசனாய் நெகிழ்ந்து நீராய் நிற்கை இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபமாகக் கடவது. [அது நிற்கச் சுமடு தந்தாய்] ஸ்வரூபமிதுவாயிருக்க உன்பக்கலில் நின்றும் அகற்றி விஷயங்களிலே கொடுபோய் மூட்டக்கடவதான சரீரத்தைத் தந்தாய்; உன்னையநுபவிக்கைக்கு உறுப்பாக தேஹத்தைத் தந்தாயானாய் நீ; அதுதானே எனக்கு இழவுக்கு உடலாயிற்று. ராஜபுத்ரன், தலையில் முடியை வாங்கிச் சும்மாட்டைக்கொண்டு வழியிலே நின்றால் அ யறியாதார் சுமையெடுத்திக்கொண்டு போமாபோலேயாயிற்று பகவதநுபவத்துக்கீடாகக் கொடுத்த சரீரம் இந்திரியங்களுக்குப் பணி செய்யும்படியாய் விட்டது."

மூன்றாமடி பரிதாபமே வடிவெடுத்தது. ஒரு எலியெலும்பன் தலையிலே அளவு கடந்த சுமையையெடுத்து வைத்துச் சிலர் சுற்றும் நின்று மூலைக்கொருவராக இழுத்தால் என்ன பாடு படலாகுமென்பது சொல்லப்போமோ? என்னால் தாங்கவொண்ணாத சுமையை என் தலைமேல் வைப்பது; ஒருவரிருவரன்றிக்கே ஐவர் வலிப்பது; அதுதானும் ஒருவழியாக வலிக்கையன்றிக்கே திசைதோறும் வலிப்பது; இப்படியானால் இது பொறுக்கக்கூடிய விஷயமோ பிரானே! என்கிறார். ஈற்றடியினால், அமுதம் கொடுப்பது சிலர்க்கு; விஷம் கொடுத்து உயிரை மாய்ப்பது சிலர்க்கு என்றிப்படி ஒரு விரதம் கொண்டிருக்கிறாயோ? என்று கேட்கிறபடி. ... . (க0)

கொண்டமூர்த்தியோர்மூவராய்க் குணங்கள்படைத்தளித்துக்கெடுக்கும்* அப்
புண்டரீகக்கொப்பூழ்ப் புனற்பள்ளியப்பனுக்கே *
தொண்டர்தொண்டர்தொண்டர்தொண்டன்சடகோபன் சொல்லாயிரத்துளிப்பத்தும் *
கண்டுபாடவல்லார் வினைபோம்கங்குலும்பகலே. (கக)

குணங்கள் கொண்ட	ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற மூன்று குணங்களைக்கொண்ட	மூர்த்தி ஓர் மூவர் ஆய்	மும்மூர்த்திகளுமாய்

படைத்து அளித்து கெடுக்கும்	ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை நடத்துகின்ற	சொல் ஆயிரத்துள்	அருளிச் செய்த ஆயிரத்தினுள்
அ புண்டரீகம் கொப்பூழ்	அப்படிப்பட்ட பத்மநாபனை	இப் பத்தும்	இப்பத்துப் பாசுரங்களையும்
புனல்பள்ளி அப்பனுக்கே	காரண ஜலத்திலே கண்வளர்ந்த பெருமானுக்கு	கங்குலும் பகலும்	ஸதாகாலமும்
தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்	தாஸாநுதாஸரான ஆழ்வார்	கண்டு பாட வல்லார்	பொருள்கண்டு பாடவல்லாருடைய
		வினை போம்	பாவங்கள் தொலைந்துபோம்.

* * *—இத்திருவாய்மொழியைப் பாடவல்லார்க்கு இந்திரியங்களால் நலிவுபடவேண்டிய பாவங்கள் தொலையுமென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகின்றார். "கொண்ட மூர்த்தியோர் மூவராய்க் குணங்கள்" என்றதை "குணங்கள் கொண்ட மூர்த்தியோர் மூவராய்" என்று அந்வயித்துக் கொள்வது. ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற மூன்று குணங்களுக்கும் தகுதியாக மூன்று திருக்கோலங்களைப் பரிக்ரஹித்தான் எம்பெருமான். ஸத்வகுணங் கொண்ட மூர்த்தி—தானான மூர்த்தி; ரஜோகுணங்கொண்ட மூர்த்தி—பிரமனான மூர்த்தி; தமோகுணங்கொண்ட மூர்த்தி—உருத்திரனான மூர்த்தி. பிரமனுக்கு அந்தர்யாமியாய்ப் படைத்தல் தொழிலைச் செய்தும், ருத்ரனுக்கு அந்தர்யாமியாய் ஸம்ஹாரத் தொழிலைச் செய்தும், தானான தன்மையிலே நின்று காத்தல் தொழிலைச் செய்தும் போருமவன் என்கிறது முதலடி.

அப்புண்டரீகக் கொப்பூழ்—எம்பெருமானே முதல்வன் என்பதைத் திருநாபிக்கமலமே மூதலித்துக் கொடுக்கும். இவ்வாழ்வார்தாமே பெரிய திருவந்தாதியில்* முதலாந் திருவுருவம் மூன்றென்பர், ஒன்றே முதலாகும் மூன்றுக்கு மென்பர் முதல்வா,! நிகரிலகு காருருவா நின்னகத்ததன்றே புகரிலகு தாமரையின் பூ * என்ற பாசுரத்தினால் வெளியிட்டருளின அர்த்தத்தை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே "த்ரயோ தேவாஸ்துல்யா:" என்கிற ச்லோகத்திலே "இதி ப்ராந்தி ஜீவம் விஷய பரிவாதீ ஹ்ருதயம் ஹரம் தவ நாபீ நாளீகம் ஹிரண்யகர்ப்பம் ப்ரஸூய ஸம்வாதயதி ந:" என்பதனால் விவரித்தருளினார்.

புனல்பள்ளியப்பனுக்கே—ஜகத்தையெல்லா முண்டாக்குகைக்காக ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினபடியைச் சொல்லுகிறது. அப்படிப்பட்ட எம்பெருமானுக்குத் தொண்டர் தொண்டர் தொண்டர்க்குத் தொண்டராம் ஆழ்வார். இங்கே நம்பிள்ளை அருளிச் செய்யும்படி பாரீர்;—"விஷயங்களையும் இந்த்ரியங்களையும் அநுஸந்தித்த நெஞ்சாறல்தீர சேஷத்வத்தினுடைய எல்லை நிலத்திலே போய் நிற்கிறார், தாபார்த்தன் மடுவிலே ஆழவிழியுமாப்போலே."

தாஸாநுதாஸ சரமாவதி தாஸரான ஆழ்வாரருளிச் செய்த ஆயிரத்தினுள்ளே இத்திருவாய்மொழியைக் கண்டு பாடவல்லாருடைய வினைகள் தொலைந்திடும்.

"கங்குலும் பகலுங் கண்டு பாடவல்லார்" என்றும் அந்வயிக்கலாம்; "கண்டுபாடவல்லாருடைய கங்குலும் பகலும் வினைபோம்" என்றும் கொள்ளலாம்; இரவும் பகலுமுண்டாகிற வினைகளெல்லாம் போம் என்றபடி.... ... . (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம். நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

இரண்டாந்திருவாய்மொழி-கங்குலும் பகலும்.

உரையவதாரிகை:—கீழே ஆரும்பத்தின் ஈற்றுத் திருவாய்மொழியில்—பெரிய பிராட்டியார் முன்னிலையாகத் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே விழுந்து சரணம் புகுந்தவிடத்திலும் ஆழ்வார் தாம் எம்பெருமானுடைய திருவடிவாரத்திலே சென்று நிற்கக் கண்டிலர். இன்னமும் இந்த ப்ரக்ருதி மண்டலத்திலேயே தம்மைக்கண்டார். சப்தாதி விஷயங்களும் இந்திரியங்களும் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே வைத்தபோதே தன்பக்கலில் நின்றும் நம்மை அகற்றப்பார்த்தானன்றோ வென்று கருதிப் புலியின் வாயிலே அகப்பட்டாப்போலே கூப்பிட்டார் கீழ்த் திருவாய்மொழியிலே.

இந்த ஆர்த்தியை எம்பெருமான் அறியாதவனல்லன்; "எப்படியும் இவர்க்கு நாம் பேறுபெறுவிப்பது திண்ணம்; இவர் அங்கே வந்து செய்யும் காரியத்தை இங்கேயிருந்து தான் செய்யட்டுமே" என்றிருந்தானவன். மக்களைப் பட்டினியிட்டு வைத்தும் வந்த விருந்தினரைப் பேணுவாரைப்போலே 'இவ்வாழ்வார் தாம் நாலுநாள் நோவுபட்டாராகில் படுகிறார்; இவருடைய திவ்யப் பிரபந்தத்தைக் கொண்டு நாட்டை வாழ்விப்போம்' என்றிருந்தான். இவர் ஒரு நொடிப்பொழுது இங்கிருந்தாலும் எம்பெருமான்றன்னாலும் திருத்தவொண்ணாத ஸம்ஸாரம் எவ்வளவோ திருந்திவாழும்படியாயன்றோ விருப்பது. அதற்காகவே இவரை இங்கு வைததான் அவன். "அந்தோ! இக்கொடுவுலகத்தில் இருப்புப் பொருந்தாத நம்மைக்கொண்டோ இவன் காரியம் நிர்வஹிக்கப் பார்ப்பது! இந்நிலத்தில் இருப்புப்பொருந்துவார் பலருண்டே; அன்னவர்களில் ஆரேனுமொருவரைக் கொண்டு காரியம் பார்க்கலாகாதோ!" என்று துடிக்கிறார் ஆழ்வார். இங்கு இருப்புப் பொருந்தாதாரைக் கொண்டே காரியம் பார்க்கவேணும் என்பதே எம்பெருமானுடைய பிடிவாதமாயிற்று.

இப்படி எம்பெருமானைப் பிரிந்து துடிக்கவேண்டியதாயிற்றே யென்று நிலைகலங்கின ஆழ்வார் தாமான தன்மையை யிழந்து தமது பரிதாபத்தைத் தம் வாயாலே சொல்லகில்லாதாராய் தாய் சொல்லவேண்டும்படியான தளர்த்தியுண்டாக, திருத்தாயார் பாசுரமாகச் செல்லுகிறது இத்திருவாய்மொழி.

திருத்தாயார் இப்பராங்குச நாயகியைப் பெரிய பெருமாள் [ஸ்ரீரங்கநாதர்] திருவடிகளிலே யிட்டு வைத்துக்கொண்டிருந்து இவள் அழுவது தொழுவது மோஹிப்பது பிரலாபிப்பது அடைவுகெடப் பேசுவது நெடுமூச்செறிவது அதுவும்மாட்டாதொழிவது ஸ்தப்தையாயிருப்பது முதலியவற்றை ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லி இவள் திறத்திலே நீர் என் செய்வதாகத் திருவுள்ளம்பற்றியிருக்கிறீர்? என்று கேட்கிறபடியாய்ச் செல்லுகிறதாயிற்று.

நம்பிள்ளையீடு;—"இத் திருத்தாயாரும் ஸர்வபரங்களையும் அவர் தலையிலே பொகட்டுப் பெண்பிள்ளையைத் திருமணத்தூணுக்குள்ளேயிட்டு அவருடைய அசரண்ய சரண்யத்வாதி குணங்களை விண்ணப்பஞ் செய்யாநின்றுகொண்டு, ஒரு காலநியதியாதல் ஒரு தேசநியதியாதல் அதிகாரிநியதியாதலின்றிக்கே ஸர்வஸமாச்ரயணீயராயிருக்கிறபடியை யநுஸந்தித்துத் தன் பெண்பிள்ளையினுடைய தசையைத் திருவுள்ளத்திலே படுத்துகிறாள் இத் திருவாய்மொழியாலே."

"பட்டர் இத்திருவாய்மொழி அருளிச் செய்யும்போதெல்லாம் 'ஆழ்வார்க்கு ஓடுகிற தசையறியாதே அவருடைய ஸாவவ்ருத்தியுமின்றிக்கே யிருக்கிற நாம் என் சொல்லுகிறோம்! என்று திருமுடியிலே கையை வைத்துக் கொண்டிருப்பர்." ... . (*)

கங்குலும்பகலும்கண்டுயிலறியாள் கண்ணநீர்கைகளாலிறைக்கும் *
சங்குசக்கரங்களென்றுகைகூப்பும் தாமரைக்கண்ணென்றேதளரும் *
எங்ஙனேதரிக்கேனுன்னைவிட்டென்னும் இருநிலம்கைதுழாவிருக்கும் *
செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தாய் இவள்திறத்தென்செய்கின்றாயே. (க)

செம் கயல் பாய் நீர் திரு அரங்கத்தாய்	அழகிய மீன்கள் துள்ளி விளையாடுமிடமான திருக்காவேரி சூழ்ந்த கோயிலில் சயனித்தருள்பவனே!	என்று கை கூப்பும்	என்று சொல்லி அஞ்ஜலி பண்ணி நின்றாள்;
(இப் பெண்பிள்ளையானவள்)		தாமரை கண் என்றேதளரும்	(என்னைக் கடாக்ஷித்த) தாமரைக் கண்களன்றோ இவை! என்று சொல்லித் தளர்கின்றாள்;
கங்குலும் பகலும்	இரவும் பகலும்	உன்னை விட்டு எங்ஙனே தரிக்கேன் என்னும்	(பிரானே) உன்னைவிட்டுப் பிரிந்து தரிக்கவும் முடியுமோ?' என்கின்றாள்;
கண் துயில் அறியாள்	கண்ணுறங்கப் பெறுகின்றிலள்;	இரு நிலம்	விஸ்தீர்ணமான பூதலத்தை
கண்ண நீர் கைகளால் இறைக்கும்	கண்ணீரைக் கைகளாலே இறைக்க வேண்டும்படி தாரை தாரையாய்ப் பெருக விடா நின்றாள்;	கைதுழாவிருக்கும்	கைகளாலே துழாவா நின்றாள்: (ஸ்ரீரங்கநாதனே!)
சங்கு சக்கரங்கள்	திருவாழி திருச்சங்குகள் இதோ ஸேவை ஸாதிக்கின்றன	இவள் திறத்து என் செய்கின்றாய்	இப் பெண்பிள்ளை விஷயத்தில் ஏது செய்வதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கிறாய்?

* * *—பேச்சுக்கு நிலமல்லாதபடி தன் மகளுக்குண்டாயிருக்கிற நிலைமையைப் பெரியபெருமாளுக்கு அறிவித்து இவள் விஷயமாக நீர் செய்தருள நினைத்திருக்கிறது என்னோ? என்று கேட்கிறாள் ஸ்ரீபராங்குச நாயகியின் திருத்தாய்.

கங்குலும் பகலும் கண்துயிலறியாள்—*கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே * என்று (திருவிருத்தத்தில்) அருளிச் செய்தவர் இவ்வாழ்வாரேயாதலால் இரவோடு பகலோடு வாசியறக் கண்துயிலாதே இவர்க்கு. ஸம்ஸாரிகள் உறக்கமே யாத்திரையாயிருப்பர்கள். ஆழ்வார் இந்நிலத்திலிருந்துவைத்தே இமையோர் படியாயிருப்பர். விசாரமுள்ளவர்கட்குக் கண்ணுறங்குமோ. *என்றுகொல் சேர்வதந்தோ* என்றும் *எந்நாள் யானுன்னையினிவந்து கூடுவனே* என்றும் இடையறாத விசாரங்கொண்டவிவர்க்குக் கண்ணுறங்க விரகில்லையன்றோ. "கண்துயில் கொள்ளாள்" என்னாதே 'கண்துயில் அறியாள்' என்றதன் கருத்தை நம்பிள்ளை காட்டியருளுகிறார்—'ஸம்ச்லேஷத்தில் அவன் உறங்கவொட்டான்; விச்லேஷத்தில் விரஹவ்யஸநம் உறங்கவொட்டாது; ஆகையாலே இவளுக்கு இரண்டுபடியாலும் உறக்கமில்லாமையாலே அறியாளென்கிறது."

கண்ணநீர் கைகளாலிறைக்கும்—*தாராதமனக்காதல் தொண்டர் தங்கள் குழாங் குழுமித் திருப்புகழ்கள் பலவும்பாடி ஆராத மனக்களிப்போடழுத கண்ணீர் மழைசோர* என்றும், *ஏறடர்த்ததும் ஏனமாய் நிலங்கீண்டதும் முன்னிராமனாய் மாறடர்த்ததும் மண்ணளந்ததும் சொல்லிப்பாடி வண்பொன்னிப் பேராறு போல்வருங் கண்ணநீர் கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றஞ் சேறு செய் தொண்டர்* என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமானுடைய ஒவ்வொரு குணசேஷ்டிதங்களை நினைத்துத் தாரைதாரையாய்க் கண்ணீர் பெருக

விடுவது பக்தர்களுக்கு ஒரு நித்யக்ருத்யமாதலால் அதனைச் சொல்லுகிறது. கைகளாலிறைக்குமென்றது கண்ணீரின் மிகுதி சொன்னபடி.

சங்குசக்கரங்களென்று கைகூப்பும்—கண்ணீர் பெருகா நிற்கச்செய்தே *சங்கும் சக்கரமும் சிரித்த முகமும் தொங்கும் பதக்கங்களுமாய் நம்பெருமாள் ஸேவை ஸாதிக்கிற அழகு காண்மின் காண்மின்! காண வாரீர்! என்று சொல்லி பாவநாப்ரகர்ஷத்தாலே சங்கு சக்கரங்களை நோக்கிக் கை கூப்புகின்றாள். *இன்னாரென்றறியேன் அன்னே யாழியொடும் பொன்னார் சார்ங்கமுடையவடிகளை இன்னாரென்றறியேன்* என்று பரகால நாயகி அஸாதாரண லக்ஷணங்களைக் காணாநிற்கச் செய்தேயும் இன்னாரென்று அறுதியிடமாட்டாதே பேசுகிறாள்; இப்பராங்குச நாயகி திருவாழி திருச்சங்குகளைக் காணாதவளவிலும் கண்டதாக நினைந்து வாயால்மொழிந்து அஞ்ஜலிபந்தம் பண்ணாநின்றாள்.

தாமரைக்கண்ணேன்றே தளரும்—''தாமரைக்கண்களால் நோக்காய்'' என்று சொல்ல வேணுமென நினைத்துத் தொடங்கினாள்; தாமரைக்கண் என்ற வளவிலே விகாரப்பட்டு மேலே சொல் எழமாட்டாமல் தளர்கின்றாள்; (திருவிருத்தத்தில்) *பெருங்கேழலார் தம் பெருங்கண்மலர்ப்புண்டரீகம் நம்மேல் ஒருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம்* என்று அத்தலையில் திருக்கண்ணோக்கமடியாகவே தாம் ஒரு பொருளாகப் பெற்றதாய் அருளிச் செய்தாராகையாலே அந்தத் திருக்கண்களை நினைத்து 'என்னை இவ்வளவாக ஆக்கின திருக்கண்களுக்கு இப்போது உபேக்ஷிக்கை பணியாயிற்றோ!' என்கிறாளாகவுமாம்.

உன்னைவிட்டு எங்ஙனே தரிக்கேன் என்னும்—*உண்டியே உடையே உகந்தோடுமிம் மண்டலத்தவரிலே என்னையும் ஒருத்தனாக [-ஸம்ஸாரியாக] வைத்திருந்தால் நான் சூது சதுரங்க மாடியும் விஷயாந்தரங்களிலே மண்டியும் உறங்கியும் ஓடியுமுழன்றும் ஒருவாறு போது போக்கித் தரித்திருக்கமாட்டேனோ? வேறொன்றால் தரிக்கவொண்ணாதபடி என்னை இப்படியாக்கி இப்போது கைவாங்கி நிற்கிறாயே! பிரானே! இது தகுதியோ வென்கின்றாள். *கார்கலந்தமேனியான் கைகலந்தவாழியான் பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான் சீர்கலந்த சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையினாழ் துயரை என்னினைந்து போக்குவரிப்போது* என்று அடியிலே பேசினவரன்றோ இவர். கார்கலந்த மேனியான் சீர்கலந்த சொல்லும், கைகலந்த வாழியான் சீர்கலந்த சொல்லும், பார்கலந்த வல்வயிற்றான் சீர்கலந்த சொல்லும் பாம்பணையான் சீர்கலந்த சொல்லும் நினைத்துப் போதுபோக்கலாமேயன்றி வேறொன்றால் போதுபோக்கவரிது என்று அறுதியிட்டார்; எப்போதும் சீர்கலந்த சொல்நினைந்தே போது போக்க வொண்ணுமோ? இடையிடையே காட்சியும் வேண்டாவோ? *காணாது திரிதருவேன் கண்டுகொண்டேன்* என்று பேசுவதற்கும் இலக்குக் கிடைத்தாலன்றோ தரிக்கலாவது என்றிருக்கிறாள் போலும்.

எங்ஙனே தரிக்கேனென்றவுடனே வரக்காணாமையாலே இருநிலம் கைதுழாவிருக்கும் ''மஹாப்ருதிவி ஒரு பீங்கானுக்குட்பட்ட சந்தனபங்கப்பட்டது படாநின்றது'' என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி. 'துழாவியிருக்கும்' என்பது தொக்கித் 'துழாவிருக்கும்' என்று கிடக்கிறது. நிலத்தைத் துழாவியிருத்தல் ஒரு வகையான உந்மாத க்ருத்யம்.

செங்கயல்பாய்நீர்த் திருவரங்கத்தாய்!—இங்கே கயலை நினைப்பூட்டுவது ஒரு கருத்தாலேயாம் *ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ। முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்

ஹ்யாவிவொஜா தள = ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ!, முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யாவிவோத்த்ருதௌ* என்று பண்டே சொல்லக் கேட்டிருக்கின்றாயே, நீரை விட்டுப் பிரிந்த மீன் பட்டது படுமிவள் என்பதை யறிந்துவைத்தும் இங்ஙனே பிரிந்திருத்தல் தகுதியோவென்று காட்டுகிறபடி. என் செய்கின்றாயென்றது—என்ன செய்வதாக ஸங்கல்பித்திருக்கிறாய் என்றபடி. "உன்மனத்தாலென்னினைந்திருந்தாயென்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவன்னினைவு" என்கிற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தி இங்கே அநுஸந்தேயம். ... ... (க)

என்செய்கின்றாயென்தாமரைக்கண்ணாவென்னும் கண்ணீர்மல்கவிருக்கும் *
என்செய்கேனெறிநீர்த்திருவரங்கத்தாயென்னும் வெவ்வுயிர்த்துயிர்த்துருகும் *
முன்செய்தவினையேமுகப்படாயென்னும் முகில்வண்ணாதகவிதோவென்னும் *
முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய் என்கொலோமுடிகின்றதிவட்கே. (உ)

(இப் பெண்பிள்ளையானவள்)

என் தாமரை கண்ணா	என்னை யீடுபடுத்திக்கொண்ட செந்தாமரைக் கண்ணனே!
என் செய்கின்றாய் என்னும்	என்னை என் செய்வதாகவிருக்கிறாய்? என்று சொல்லுகின்றாள்;
கண் நீர் மல்க இருக்கும்	கண்ணீர் ததும்பநின்று ஸ்தப்தையாயிருக்கின்றாள்;
எறி நீர் திரு அரங்கத்தாய்	அலையெறிகின்ற திருக்காவேரி சூழ்ந்த திருவரங்கத்தில் துயில்பவனே!
என் செய்கேன் என்னும்	(உன்னைப் பெறுதற்கு) என்ன செய்வேன்? என்கிறாள்;
வெவ்வுயிர்த்து உயிர்த்து	வெப்பமாகப் பலகாலும் பெருமூச்சுவிட்டு
உருகும்	கரைகின்றாள்;
முன் செய்த வினையே	முற்பிறவிகளிலே நான்பண்ணி வைத்த கருமமே!
முகப்படாய் என்னும்	என் கண்முன்னே வந்து நில் பார்ப்போம் என்கிறாள்;
முகில் வண்ணா	காளமேகவண்ணனான எம் பெருமானே!
இது தகவோ என்னும்	இதுதானோ உன்னுடைய க்ருபைக்கு லக்ஷணம்! என்கிறாள்;
இவ் உலகம்	இந்த ப்ரபஞ்சங்களையெல்லாம்
முன் செய்து	முற்காலத்தில் ஸ்ருஷ்டித்து
உண்டு உமிழ்ந்து	(காலவிசேஷங்களிலே) உண்பதும் உமிழ்வதும் செய்து
அளந்தாய்	அளப்பதும் செய்து பல முகமாக ரக்ஷித்தருளும் பெருமானே!
இவட்கு	இங்ஙனே துடிக்கின்ற என் பெண் பிள்ளைக்கு
முடிகின்றது என்கொலோ	(இந்தப்பரிதாபமெல்லாம்) என்னைப் முடியப்போகிறதோ?

* * *—கீழ்ப்பாட்டில் "இவள் திறத்து என் செய்கின்றாயே" என்று தாய் பாசுரமாகச் சென்றது; அதுதானே இப்போது தலைவி பாசுரமாகச் செல்லுகிறது. "என் தாமரைக்கண்ணா! என செய்கின்றாய்" என்று கேட்கிறாளாயிற்று பராங்குச நாயகி. முந்துற முன்னம் என்னைத் தோற்பித்து ஈடுபடுத்திக்கொண்ட திருக்கண்கள் இப்போது எங்கே போயின? மீண்டும் அத்திருக்கண்களாலே குளிரநோக்க நினைத்திருக்கிறாயோ? அன்றி, நெறிகாட்டி நீக்கப் பார்த்திருக்கிறாயோ? வென்று கேட்கின்றாள்.

கண்ணீர்மல்கவிருக்கும்—*எங்கும் பக்கநோக்கறியான் என் பைந்தாமரைக் கண்ணனே* என்னும்படி பிராட்டிமார் திருமுலைத்தடத்தாலே நெருக்கியணைத்தாலும் புரிந்து பாராதே ஏகாக்ரமாக அன்று கடாக்ஷித்தருளின திருக்கண்கள் இன்று எங்கேபோயினவோவென்று உள்குழைந்துருகிக் கண்ணீர் நிரம்பப் பெற்றாள்.

எறிநீர்த் திருவரங்கத்தாய் என்செய்கேன் என்னும்—என்னுடைய தாபம் தீரும்வழி எனக்கொன்றும் தெரியவில்லையே; இன்னது செய்வதென்று தோன்றவில்லையே; *பொன்னி சூழரங்கமேய பூவைவண்ணா! நான் என்ன செய்தால் என் தாபமாறும்? நீயே சொல்லாய் என்கிறாள். இங்கே திருவரங்கத்திற்கு 'எறிநீர்' என்று விசேஷணமிட்டிருத்தலால் 'என்

லைக் கொண்டுசென்று திருக்காவேரியிலே போடவல்லார் ஆரேனுமுண்டோ!' என்று அலை பாய்வதாகக் கருத்துத் தோன்றும். திருக்காவேரியிலே கொண்டுவந்து போடுவானேன்? தம் கண்ணெதிரே தாமிரபர்ணி இல்லையோ? அதில் விழலாகாதோவென்று சிலர் கேட்கக் கூடுமே; அதற்கு நம்பிள்ளையருளிச் செய்கிறார்—"திருப்பொருநலில் நீர், பிரிந்தார்க்கு நிலாப் போலே உபதப்தமாயிரா நின்றதுபோலே." என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி. தம்முடைய தாபம் தாமிரபர்ணியிலும் எறிப்பாய்ந்து அதிலே அடிவைக்கவும் அணுகவும் போகாமையாலே திருக்காவேரியிலே திருவுள்ளம் சென்றதென்கை.

வெவ்வுயிர்த்துயிர்த்து உருகும்—பிரிந்தவர்கள் பூவும் பல்லவமுமான செடி கொடி மரங்களை அருகே கண்டால் ஆறியிருக்க மாட்டார்களே; *தஹந்தீவ நிஃச்வாஸை: வ்ருக்ஷாந் பல்லவதாரிண:—தஹந்தீமிவ நிச்ச்வாஸை: வ்ருக்ஷாந் பல்லவதாரிண:* என்று பிராட்டியானவள் பல்லவந்திகழ் பூஞ்செடிகளை பெருமூச்செறிந்து அழிக்க நினைத்தாப்போலே இப் பராங்குச நாயகியும் * நீள்பொழில்குருகூரை உஷ்ணோஷ்ணமான பெருமூச்செறிதலாலே பங்கம் செய்யப் பார்த்தாள்போலும். உருகும் என்கிறவிடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"உருகுகிறபடியே நிற்குமத்தனை; இனி நெடுமூச்செறிகைக்கு தர்மியுமில்லையோ வென்னும்படி யுருகும்; வெவ்விதாகப் பலகால் நெடுமூச்செறிந்து அவ்வுஷ்ணத்தாலே உருகாநிற்கும்."

முன்செய்தவினையே முகப்படாயென்னும்—எம்பெருமான் என்னை இப்படி உபேக்ஷிக்கும்படி நான் என்ன பாவம் பண்ணிவிட்டேன்? அப்படி நான்செய்த பாவம் ஏதேனுமுண்டாகில் அது என்னெதிரே வந்து நிற்கட்டுமே என்கிறாள். நாம் முன்செய்த முழுவினையால் இழக்கிறோமேயல்லது அவன்மேலே பழிசொல்லிப் பயனென்? என்று திருவுள்ளம்போலும். * மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹதஸ்தி ந ஸம்சய:—மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹதஸ்தி ந ஸம்சய: * என்று பிராட்டி தான்செய்த பாபத்தின் பலனைத் தான் அநுபவிப்பதாகச் சொன்னாளன்றோ.

அப்படி நான் பாபம் செய்திருந்தால்தானென்ன? பாபமென்று ஒரு பெருமூட்டை ஏதேனுமுண்டோ? உன் திருவுள்ளத்தில் உதிக்கின்ற நிக்ரஹ ஸங்கல்பத்திற்கேயன்றோ பாபமென்று பெயர். நீ திருவுள்ளமிரங்கினால் அந்த நிக்ரஹ ஸங்கல்பம் குலையாதோ? உன் இரக்கம் எங்கே போயிற்று? என்கிறாளாயிற்று 'முகில்வண்ணா தகவு இதோ' என்னும். நீ முகில் வண்ணனல்லையோ? மேகத்திற்குண்டான தன்மையெல்லாம் உனக்குமுண்டே; பெய்ய நினைத்த இடமளவும் சென்று பெய்யுமதன்றோமேகம்; அது கைம்மாறு கருதுவதுமுண்டோ? புண்ய பாபங்களைப் பார்த்துப் பின்வாங்குவது தானுமுண்டோ? என்கிறாள். 'தகவு இதோ' 'தகுவதோ' என்பன பாடபேதங்கள்.

நம்முடைய ஔதார்யம் எங்கே பலிக்கக்கண்டு முகில்வண்ணா! என்கிற இவ்வார்த்தை சொன்னதென்று எம்பெருமான் கேட்க; அதற்குத் தாய் விடை கூறுகின்றாள் போலும்; முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய்! என்கிறாள். முன்பு ஜகத்ஸ்ருஷ்டி முதலியவற்றை நிர்ஹேதுகமாகப் பண்ணினவனன்றோ நீ, காணகளேபரங்களில்லாத வித்தை வெறும் உன் க்ருபையாலே உண்டாக்கினாயித்தனையன்றோ. உண்டாக்கிவிட்டவளவேயோ? ப்ரளயாபத்திலே வயிற்றிலே வைத்து நோக்கி, உள்ளே கிடந்து நோவுபடாதபடி புறப்பட விட்டு எல்லை நடந்து மீட்டுக்கொண்டு ஸகலவித ரக்ஷணமும் பண்ணினையல்லையோ? என்றாளாயிற்று.

இவட்கு முடிகின்றது என்கோலோ?—இவள் விஷயத்தில் என்ன செய்வதாகத் திருவுள்ளத்தில் முடித்திருக்கிறீர்! இவளுடைய நிலைமை என்னய் முடியுமோ? என்றுமாம். (உ)

வட்கிலளிறையும்மணிவண்ணாவென்னும் வானமேநோக்கும்மையாக்கும் *
உட்குடையசுரருயிரெல்லாமுண்ட ஒருவனேயென்னுமுள்ளுருகும் *
கட்கிலீயுன்னைக்காணுமாறருளாய் காகுத்தாகண்ணனேயென்னும் *
திட்கொடிமதிள்சூழ்திருவரங்கத்தாய் இவள்திறத்தென்செய்திட்டாயே. (௩)

இறையும் வட்கு இலள்	சிறிதும் வெட்கமில்லாதவளாகி	உள் உருகும்	உள்ளம் நீர்ப்பண்டமாய் உருகப் பெறுகின்றாள்;
மணிவண்ணா என்னும்	நீல மணிவண்ணனே! என்று கூப்பிடா நின்றாள்!	கட்கு இலீ	கண்களுக்கு விஷயமாகமாட்டாதவனே!
வானமே நோக்கும்	(யானைக்கு உதவவந்தாப்போலே நமக்கும் உதவ வரக்கூடுமென்று) வானத்தையே நோக்குகின்றாள்;	காகுத்தா கண்ணனே!	ஸ்ரீ ராம க்ருஷ்ணாவதாரங்கள் செய்து எல்லார் கண்ணுக்கும் விஷயமானவனே!
மையாக்கும்	(எதிர்பார்த்தபடி வந்து தோன்றக் காணாமையினால்) மோஹமடைகின்றாள;	உன்னை காணும் ஆறு அருளாய் என்னும்	உன்னை நான் கண்ணாரக் காணும் விதம் அருளவேணுமென்கின்றாள்;
உட்கு உடை அசுரர்	வலிமையுடையவர்களான அசுரர்களினுடைய	திண் கொடிமதிள் சூழ் திரு அரங்கத்தாய்	திடமான கொடிகள் விளங்கும் மதிள்களாலே சூழப்பட்ட திருவரங்கத்தில் துயிலும் பெருமானே!
உயிர் எல்லாம் உண்ட	பிராணன்களை யெல்லாம் கவர்ந்த	இவள் திறத்து என் செய்திட்டாய்	இப் பெண்பிள்ளை விஷயமாக நீ செய்தது என்னே!
ஒருவனே என்னும்	அத்விதீயனே! என்கின்றாள்;		

* * *—இப்பெண்பிள்ளை இப்படிப்பட்ட நிலைமையை அடைந்தவளாம்படி இவளிடத்தில் நீர் செய்திட்டது என்னேவென்கிறாள். இறையும் வட்கிலள்—'நாண்மடம் அச்சம் பயிர்ப்பு' என்னுமிவை நான்கும் மாதர்க்கு நிரூபகம்; இவற்றுள், நாண் (வெட்கம்) முந்துறமுன்னம் சொல்லப்பட்டதாதலால் அது மிக முக்கியமாகும்; அந்தோ! அது சிறிதுமில்லையாயிற்றே யென்கிறாள். வட்கு—வெட்கம்; லஜ்ஜை. நாணமற்றுப் போயிற்றென்பது எங்ஙனே தெரிந்ததென்ன, [மணிவண்ணாவென்னும்] நாணமுடையவளாயிருந்தால் கணவனுடைய நாமத்தைச் சொல்லியழைப்பாளோ? பெற்றதாய் முன்னே வடிவழகைச் சொல்லுகின்றாளே. நான் கேட்டாலும் மறைக்கவேண்டியதைத் தானே வாய்விட்டுச் சொல்லுகின்றாளே. காமினி ஆசைப்படுவது வடிவழகையன்றோ தான் அகப்பட்ட துறையைச் சொல்லிக் கூப்பிடுகின்றாள்.

மணிவண்ணாவென்று ஸாமான்யமாகவா கூப்பிடுகின்றாள்; இருநாடளவும் கேட்கும்படியாகவன்றோ கூப்பிடுகிறாள். கூப்பிட்டவாறே ஸ்ரீகஜேந்திராழ்வானுக்கு உதவ வந்தாப்போலே நமக்கும் உதவுகைக்காக ஸ்ரீ வைகுண்டத்தில் நின்றும் வரக்கூடுமென்றெண்ணி [வானமே நோக்கும்] ஆகாசத்தையே பாராநின்றாள். பார்த்தவளவிலும் வந்து தோன்றக் காணாமையாலே [மையாக்கும்] மயங்குகின்றாள், அறிவு கெடுகின்றாளென்கை.

சிறிது மயக்கம் தெளிந்தவாறே உட்குடையசுரருயிரெல்லாமுண்ட வொருவனே! யென்கின்றாள். தேவர்களுக்காக உடம்பு நோவக் காரியஞ்செய்து அசுரர்களோடே, பொருது வெற்றிபெற்று வருமவனே! என்கிறாள். ஆண்புலிகளுக்கோ காரியஞ் செய்வது! பெண்பிறந்தார்க்குக் காரியம் செய்யலாகாதென்று திருவுள்ளமோ? ப்ரயோஜநாந்தர பரர்களுக்கேயோ காரியஞ் செய்வது? அநந்ய ப்ரயோஜநர்களுக்குக் காரியம் செய்யலாகாதென்று

திருவுள்ளமோ? பெருமிடுக்கர்களுக்கேயோ காரியஞ் செய்வது? அபலைகளுக்குக் காரியஞ் செய்யலாகாதென்று திருவுள்ளமோ? காரியமாகுமளவும் திருவடியைப்பற்றிக்கிடந்து, காரியம் தலைக்கட்டினவாறே மார்பு நெறித்து எதிரிடுமவர்களுக்கேயோ காரியஞ் செய்வது? அருளினபோதோடு அருளாதபோதோடு வாசியற உன் திருவடிகளே தஞ்சமென்றிருப்பார்க்குக் காரியஞ் செய்யலாகாதோ? என்கிற நிர்வேதங்கள் இந்த விளியிலே தோன்றும். உட்கு—மிடுக்கு.

உள் உருகும்—அத்தலையிலுள்ள திருக்குணங்களை நினைத்தும், தன்னுடைய மநோரதம் நிறைவேறப்பெறாமை பற்றியும் நீர்ப்பண்டம்போலே யுருகுகின்றாள்.

கட்கிலீ! உன்னைக் காணுமாறு அருளாய் என்னும்—ஒருநாளும் கண்ணுக்கு இலக்காகாதவனென்று சாஸ்த்ரங்களில் பேசப்பட்டிருக்குமவனே! உன்னை நான் காணும் வகை அருளவேணுமென்கிறாள். * ந ஸந்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம் * என்றும் * ந மாம்ஸ சக்ஷுரபிவீக்ஷதே தம் * என்றும் ஒருவருடைய கண்ணுக்கும் இலக்காகாதவனென்று ஓதியிருக்கையாலே கட்கிலி யென்றது. கட்கு—கண்ணுக்கு, இலி—விஷயமாகாதவன் என்றவாறு. கண்ணுக்கு இலக்காகப் பெறாதவனென்று அறிந்து வைத்து 'காணுமாறருளாய்' என்றால் இது அஸங்கதமன்றோவென்னில், * ந சக்ஷுஷா பச்யதி கச்சநைநம் * என்று ஓதின உபநிஷத்தே * தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் * என்றும் ஓதிவைத்திருக்கையாலே அப்பெருமான் தானே பரகதஸ்வீகாரமாகக் காட்டியருள்வது உண்டாகையாலும், அவன் தானே கீதையில் * திவ்யம் ததாமி தே சக்ஷு: பஶ்ய மே யோகமைஶ்வரம்—திவ்யம் ததாமி தே சக்ஷு: பச்ய மே யோகமைச்வரம் * என்று திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்துக் காட்டியருளினமை ப்ரஸித்தமாகையாலும் அது பற்றாசாகக் காணுமாறருளாய் என்னக் குறையில்லை. காகுத்தனும் கண்ணனும் திருவவதரித்து அப்படி காட்டிக் கொடுத்ததில்லையோ என்பது 'காகுத்தா கண்ணனேயென்னும்' என்பதில் உறையும்.

ஆமாம்; கட்கிலியானவென்னைக் காட்டிக்கொடுப்பதற்கென்றே விபவாவதாரங்கள் செய்தேன்; அப்போதுவந்து தோனாமல் இப்போது * காணுமாறருளாய் என்றால் எங்ஙனேயருளும்படி? என்று எம்பெருமான் திருவுள்ளமாக, திட் கோடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்! என்கிறாள் திருத்தாய். அவதாரகாலத்தில் இழந்தாருடையவும் இழவு தீர்க்கவன்றோ இங்கே வந்து சாய்ந்தருளிற்று. 'வருவாரெல்லாரும் வாருங்கோள்' என்று கொடிகட்டிக் கொண்டன்றோ கிடக்கிறது.

இவள் திறத்து என் செய்திட்டாய்—இவள் இங்ஙனே பிச்சேறுவதற்கு என்ன மருந்திட்டாய்? ... ... (க)

இட்டகாலிட்டகையளாயிருக்கும் எழுந்துலாமயங்கும்கைகூப்பும் *
கட்டமேகாதலென்றுமூர்ச்சிக்கும் கடல்வண்ணாகடியைகாணென்னும் *
வட்டவாய்நேமிவலங்கையாவென்னும் வந்திடாயென்றென்றேமயங்கும் *
சிட்டனேசெழுநீர்த்திருவரங்கத்தாய் இவள்திறத்தென்சிந்தித்தாயே. (௨)

(இப் பெண்பிள்ளையானவள்)		(மற்றும் சில சமயங்களிலே)	
இட்டகால் இட்ட கையள் ஆய் இருக்கும்	(சில சமயங்களிலே) கையும் காலும் இட்டது இட்டபடியே யிராநின்றாள்;	எழுந்து உலாம்	எழுந்து உலாவுகின்றாள்;
		மயங்கும்	மயங்கா நின்றாள்;

கை கூப்பும்	(அப்படி மயங்கின தசையிலும்) கைகூப்புதல் தவிர்கின்றிலள்;	வட்டம் வாய்நேமி வலம் கையா என்னும்	வட்டமான விளிம்பையுடைய திருவாழியை வலத்திருக்கையிலுடையவனே! என்கின்றாள்;
காதல் கட்டமே என்று மூர்ச்சிக்கும்	(பகவத் விஷயத்திலே) காதலைத் தாங்குவது வெகு கஷ்டமென்று சொல்லி மூர்ச்சையடைகின்றாள்;	வந்திடாய் என்று என்றே மயங்கும்	வாராய் வாராய் என்று பலகாலு மழைத்தும் வரக்காணாது மயங்குகின்றாள்;
கடல்வண்ணா கடியை காண் என்னும்	கடல் வண்ணனே! என் விஷயத்தில் நீ கடுமைகொண்டிருக்கிறாயே! என்கிறாள்;	சிட்டனே!	பரமபவித்திரனே!
		செழுநீர் திரு அரங்கத்தாய்	நீர்வளம் பொருந்திய கோயிலிலே கண்வளர்ந்தருளுமவனே!
		இவள் திறத்து என் சிந்தித்தாய்	இப்பெண்பிள்ளை விஷயமாக நீ சிந்தித்திருப்பது என்ன?

* * * —அம்புகள் செய்யும் காரியமும் குணங்கள் செய்யும் காரியமும் ஒருபடிப்பட்டிருக்குமென்பர்கள். ஸ்ரீராமசரங்களானவை சிலரை மூர்ச்சிக்கப்பண்ணும்; சிலரைத் துடிக்கப்பண்ணும்; சிலரை ஓரிடத்தில் தரித்திருக்கமாட்டாதே அங்குமிங்கும் பதறியோடப் பண்ணும். அங்ஙனேயாயிற்று பகவத்குணங்களும் படுத்துகிறபடி. இட்ட கால் இட்ட கையளாயிருக்கு மென்றது ஸ்தம்பித்திருக்கும்படியைச் சொன்னவாறு. "கைகளாயிருக்கும்" என்கிற பாடத்திற்காட்டிலும் 'கையளாயிருக்கும்' என்கிறபாடம் நன்கு பொருந்தும்.

எழுந்து உலாம்—ஸ்தம்பித்திருக்கிற நிலைமை நீங்கினவாறே எழுந்து உலாவுகின்றாள். உலாம் என்றது 'உலாவும்' என்றபடி. "உலாய் மயங்கும்" என்று சில பிரதிகளில் பதிப்பித்திருப்பது அச்சுப்பிழையென்பர்.

மயங்கும்—உலாவி அங்குமிங்கும் பார்த்து, வந்து தோன்றக்காணாமையாலே மயங்கும்படியாயிற்று. மயங்குமளவிலும் கைகூப்புகை தவிராமையாலே 'கைகூப்பும்' என்றது. இங்கு இருபத்தினாலாயிரப்படி ஸ்ரீஸூக்திகள் வருமாறு;—"(கைகூப்பும்) உணர்த்தியின்றியேயிருக்க, பூர்வவாஸனையாலே கைகூப்பும். மோஹித்த தசையிலும் தவிருகிறிலள். மயங்காநிற்கச் செய்தே உணர்த்தியுடையாரைப் போலேயாயிற்று அஞ்ஜலி பண்ணுகிறது" என்று. ஈட்டு ஸ்ரீஸூக்தியோவென்னில்; "(கைகூப்பும்) உணர்த்தியில் தொழுமவளல்லள்; மயங்கினால் தொழாதிருக்கவல்லளல்லள்." என்றுள்ளது. தொழுதால் அதனை ஸாதனகோடியிலே கணக்கிட்டுக் கொள்வனோ! என்கிற அச்சத்தாலே தொழுகையில் கூச்சமேயாயிருக்கும் ஸத்ஸம்பிரதாய நிஷ்டர்களுக்கு.

காதல் கட்டமேயென்று மூர்ச்சிக்கும்—பகவத் விஷயத்தில் காதலைத் தாங்குவது மிகவும் கஷ்டமென்கிறாள். பசியனுக்குச் சோறு கிடையாதொழிந்தால் பசிக்கு ஆற்றமாட்டாமே பரிதபிக்குமாபோலே ஆழ்வார் தமது காதலுக்குப் பரிதபிக்கிறார்காணும். அடியேன் *மயர்வற மதிநல மருளினன்* என்று பக்தியைக் கொடுத்தருளினமைக்கு உகந்து பேசினார்; இப்போது அந்த பக்திக்குத் தக்க இரை கிடைக்காமையினாலே 'அந்தோ! கஷ்டத்தையன்றோ அவன் கொடுத்தது' என்று வெறுத்துப் பேசுகிறார். 'பகவத்விஷயத்தில் காதலே புருஷார்த்தம்' என்று பலகாலும் அறுதியிடுகின்ற ஆழ்வார், இப்போது 'காதலுக்கு மேற்பட்ட ஆபத்து இல்லை' என்று பேசுகிறபடி என்னே!.

இந்த கஷ்டத்துக்குப் பரிஹாரமில்லாமையாலே [மூர்ச்சிக்கும்] ஆத்மா உள்ளவரையில் இப்படி கஷ்டமே அநுபவிக்க வேண்டியதன்றோ நம் கதியாயிற்று! என்று சொல்லி மோஹியாநின்றாள்.

கடல்வண்ணா! கடியை காண் என்னும்—கடலானது ஸகல பதார்த்தங்களையும் தன்னுள்ளே யடக்கி ஒன்றையொன்று நலியாதபடி நோக்குமாபோலே நீயும் நோக்குமவன் என்பது பற்றிப் பிரானே! உன்னைக் கடல்வண்ணனென்கிறார்கள்; அப்படி நோக்குவாயல்லையே நீ; கண்ணற்றவனாயிருக்கின்றாயே! என்கிறாள். கடியை—கடியன் என்பதன் முன்னிலை; நிர்க்ருணனாயிருக்கின்றாய் என்றபடி.

வட்டவாய் நேமி வலங்கையாவென்னும்—கையுந் திருவாழியுமான அழகைக் காணவேணுமென்று ஆசைப்பட்டு அதைப் பூர்த்தியாகச் சொல்லமாட்டாதே நடுவேயிளைத்து அரைகுறையான சொல்லோடே முடித்து, வந்திடாயென்றென்றே மயங்குகின்றாள். ஒருகால் 'வந்திடாய்' என்று சொல்லி ஆறியிருக்கமாட்டாமையாலே, விடாய்த்தவன் தாஹம் தீருமளவும் 'தண்ணீர் தண்ணீர்' என்றே வாய் வெருவுமாபோலே 'வந்திடாய் வந்திடாய்' என்றே ஊடுருவச் சொல்லுகின்றாள்; அங்ஙனம் சொல்லிக்கொண்டே மயங்குகின்றாள்; மயங்கினாலும் வாஸனையாலே வாய்ச்சொல் அநுவர்த்தியாநிற்கும்.

சிட்டனே—சிஷ்டனென்று ஆசாரசீலனுக்குப் பெயர். இங்கு, சிஷ்ட பாவனை பண்ணியிருப்பவனே! என்று விபரீத லக்ஷணையாகப் பொருள் கொள்ளவேணும். உம்மைப் போலே நாலு சிஷ்டர்கள் இருந்தால் பெண்கள் நன்றாகக் குடிவாழலாம்! என்று பரிஹஸித்துச் சொல்லுகிறபடி. "ப்ரஹ்மஹத்யைகளைப் பண்ணிப் பூணூலை வெளுக்கவிட்டுக் கையிலே பவித்ரத்தையுமிட்டு ஓத்துச் சொல்லித் திரிவாரைப்போலேயிருந்ததீ! உம்முடையபடி." என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி.

செழுநீர்த்திருவரங்கத்தாய்!—நீர்வாய்ப்பும் நிழல்வாய்ப்புங்கண்டு அழகிதாகக் கண்ணுறங்கவோ நீர் இங்கே வந்து சாய்ந்தது? இவள் திறத்திலே நீர் செய்தருளப் பார்த்தது என்கொல்? ... . (௪)

சிந்திக்கும் திசைக்கும்தேறும் கைகூப்பும் திருவரங்கத்துள்ளாயென்னும்
வந்திக்கும்* ஆங்கேமழைக்கண்ணீர்மல்க வந்திடாயென்றென்றேமயங்கும்*
அந்திப்போதவுணனுடலிடந்தானே அலைகடல்கடைந்தவாரமுதே *
சந்தித்துன்சரணம்சார்வதேவலித்த தையலைமையல்செய்தானே. (௫)

அந்தி போது	மாலைப்பொழுதிலே
அவுணன் உடல் இடந்தானே	(நரசிங்கமூர்த்தியாய்த்தோன்றி) இரணியனது உடலைப் பிளந்தவனே!
அலை கடல் கடைந்த ஆர் அமுதே	அலையெறிகின்றகடலை(த்தேவர்களுக்காக)க் கடைந்த ஆராவமுதமே!
சந்தித்து உன் சரணமே சார்வது வலித்த தையலை மையல் செய்தானே	உன்னோடே கலந்து உன் திருவடிகளிலேயே லயிக்கவேணுமென்கிற திடமான அத்யவஸாயங்கொண்ட இப்பெண்பிள்ளையை மதி கெடுத்தவனே!
	(இப் பெண்பிள்ளையானவள்)
சிந்திக்கும்	(எற்கெனவே விதிவசமாக நேர்ந்திருந்த கலவியைப் பற்றிச்) சிந்தனை செய்கின்றாள்;
திசைக்கும்	அறிவு அழியா நின்றாள்;
தேறும்	(திடீரென்று) தெளிவு பெறுகின்றாள்;
கைகூப்பும்	அஞ்ஜலி பண்ணுகின்றாள்;
திரு அரங்கத்து உள்ளாய்என்னும்	கோயிலிலே கண்வளர்ந்தருளுமவனே! என்கிறாள்;
வந்திக்கும்	தலைவணங்கா நின்றாள்;
ஆங்கே	அவ்வளவிலே
மழை கண் நீர் மல்க	கண்ணீர் தாரை தாரையாகப் பெருக நின்று
வந்திடாய் என்று என்றே மயங்கும்	(எம்பெருமானே!) வாராய் வாராய் என்று பலகாலுஞ் சொல்லி (வரக் காணாது) மோஹிக்கின்றாள்.

* * *—பழைய விஷயீகாரங்களை நினைக்கத் தொடங்கிவிட்டாள்; அதாவது—*மாறி மாறிப் பலபிறப்பும் பிறந்து ஸம்ஸாரிகளிலே ஒருவனாய்க் கைகழிந்து போய்க்கொண்டிருந்த வென்னை * பெருங்கேழலார் தம் பெருங்கண்மலர்ப்புண்டரீகம் நம்மேலொருங்கே பிறழ வைத்தார் இவ்வகாலம் * என்று பேசும்படியாகத் தானாகவே மேல்விழுந்து வந்து கடாக்ஷித்துப்பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி யடிமைகொண்டு ஸகலாவயவ ஸௌந்தர்யத்தையுங்காட்டி யீடுபடுத்திக்கொண்டு போந்தவன் இப்போது உபேக்ஷித்திருப்பது என்னோ வென்று சிந்திக்கிறபடி.

திசைக்கும்—பழைய பரிமாற்றங்களை நினைத்தவாறே, 'அந்தோ! அப்போதைய நிலைமை என்ன, இப்படியாயிற்றே' என்று அறிவு கலங்கா நின்றாள். தேறும்—"இன்றாக நாளையேயாக, இனிச்சிறிது நின்றாக நின்னருளென்பாலதே" என்னுமாபோலே என்றேனுமொருநாள் அருள் பலித்தே தீருமன்றோ வென்று தனக்குத் தானே தேறி நிற்கின்றாள். கைகூப்பும்—கீழ்ப்பாட்டில் "மயங்கும் கைகூப்பும்" என்றது; இப்பாட்டில் "தேறும் கை கூப்பும்" என்கிறது. மயங்கியிருக்கும் போதோடு தேறிநிற்கும் போதோடு வாசியற எப்போதும் அஞ்ஜலிபந்தம் மாறாதேயிருப்பது ஸ்வரூப மென்றதாயிற்று.

திருவரங்கத்துள்ளாய்! என்னும்—பரமபதத்தில் நின்றும் போந்து திருப்பாற்கடலில் நின்றும் போந்து, ராமக்ருஷ்ணாதி அவதாரங்கள் போலே காதாலே கேட்டிருக்கையன்றிக்கே, அந்தர்யாமியாய்க் கண்ணுக்குத் தோற்றாதிருக்கையுமன்றிக்கே * மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்யத் துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர அகமகிழுந் தொண்டர் வாழ அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளுகைக்கு ஒரு ப்ரயோஜனம் ஸித்தித்ததாக வேண்டாவோ வென்கிறாள்.

வந்திக்கும்—வந்தித்தலென்று ஸ்தோத்ரம் பண்ணுகைக்கும் தொழுகைக்கும் பெயர். திருவரங்கத்துள்ளாய்! என்று சொல்லிக்கொண்டு முகம் முறுவல் முதலானவற்றைத் துதியா நின்றாள்; (அல்லது) திருவடிகளிலே விழுந்து கிடக்கின்றாள் என்கை. ஆங்கே—அப்படிப்பட்ட நிலைமைதன்னிலே. மழைக்கண்ணீர் மல்க—குளிர்ந்த கண்ணீர் ததும்ப; வந்திடாய் என்றென்றே மயங்கும்—தன் ஆற்றாமை தோற்ற 'பிரானே! வாராய்; பெருமானே வந்தருளாய்' என்று பலகாலும் சொல்லி, வந்தருளக் காணாமையாலே அறிவு கெடா நின்றாள்.

வந்திடாய் என்றால் வருகைதான் எனக்குப் பணியோ? என்று அவனுக்குத் திருவுள்ளமாக, ஒரு சிறுக்கனுக்கு உதவத் தூணிலே வந்து தோன்றினவனல்லையோ நீ யென்று நரஸிம்ஹாவதார கதையையெடுத்துப் பாடத் தொடங்கினாளென்கிறாள். [அந்திப்போதவுணனுடலிடந்தானே!] இது தாயின் சொந்தப் பேச்சேயல்லது மகள் பேச்சின் அநுவாதமன்றெனினும், மகள் பேச்சே தாயின் உள்ளத்துள் ஊறியிருந்து சொல்லுகிறதாகையாலே இதை மகள் பேச்சின் அநுவாதமாகவுங் கொள்ளலாம். தாய் தானே சொல்லுகிறதாகக் கொண்டாலுங் குறையில்லை.

அலைகடல்கடைந்த ஆரமுதே—உன்னை அமுதமாக நினையாதே உப்புச் சாற்றை அமுதமாக நினைத்து அதற்காக உன் திருமேனியை நோவுபடுத்துமவர்களுக்கோ நீ உதவலாவது? * ஆராவமுதாயடியேனுடலியகமே தித்திப்பாய்* என்றும், * அமுதிலுமாற்றவினியன்* என்றும் இருப்பார்க்கு உதவலாகாதோ? சந்தித்து உன்சரணம் சார்வதே வலித்த தையலை மையல் செய்தானே!—உன்னைக்கிட்டி உன் ஸன்னிதியிலே முடியவேணுமென்று திண்ணிதான அத்ய

வளாயங் கொண்டிருக்கிற இவளை இப்படி அறிவு கெடுப்பதே! என்கிறாள். இங்கு ஆறுயிரப்படியருளிச்செயல்;—"உன் திருவடிகளை ஒருகால் கண்டு ஸம்ச்லேஷிக்க வேணுமென்னுமாசையாலே தன்னை தரித்துக்கொண்டிருக்கிற இப்பெண்பிள்ளையை இப்பாடு படுத்த வேணுமோ!" .... (ரு)

மையல்செய்தென்னைமனம்கவர்ந்தானேயென்னும் மாமாயனேயென்னும்*
செய்யவாய்மணியேயென்னும் தண்புனல்சூழ்திருவரங்கத்துள்ளாயென்னும்*
வெய்யவாள்தண்டுசங்குசக்கரம்வில்லேந்தும் விண்ணோர்முதலென்னும்*
பைகோள்பாம்பணையாயிவள்திறத்தருளாய் பாவியேன்செயற்பாலதுவே. (சா)

(இப் பெண்பிள்ளையானவள்)

என்னை மையல் செய்து	என்னை வியாமோஹப்படுத்தி	வெய்ய வாள் தண்டு சங்கு சக்கரம் வில் ஏந்தும்	(ஆச்ரித விரோதி விஷயத்தில்) வெப்பமே வடிவெடுத்த பஞ்சாயுதங்களைத் தரித்துக் கொண்டிருக்கிற
மனம் கவர்ந்தானே யென்னும்	மனதைக் கொள்ளை கொண்டவனே! என்கிறாள்;	விண்ணோர் முதல் என்னும்	நித்யஸூரி நாதனே! என்கிறாள்;
மா மாயனே என்னும்	மிகப் பெரிய மாயங்களை யுடையவனே! என்கிறாள்;	பை கொள் பாம்பு அணையாய்	படமெடுத்த ஆதிசேஷன் மீது சயனித்தருள்பவனே!
செய்யவாய் மணியே என்னும்	சிவந்த அதரசோபையை உடையையாய்க் கொண்டு நீலமணி போன்றவனே! என்கிறாள்;	இவள் திறத்து	இப் பெண்பிள்ளை விஷயமாக
தண் புனல் சூழ் திரு அரங்கத்துள்ளாய் என்னும்	குளிர்ந்த தீர்த்தம் சூழ்ந்த கோயிலில் கண்வளர்ந்தருள்பவனே! என்கிறாள்;	பாவியேன் செயல் பாலது	பாவியேனை நான் செய்யக் கூடியது இருந்தால் அதை
		அருளாய்	அருளிச்செய்யவேணும்.

* * * என் பக்கலிலே அளவுகடந்த வியாமோஹத்தைப் பண்ணி என்னை அறிவழித்து எனது மனத்தைக் கொள்ளை கொண்டவனே! என்கிறாள் என்மகள். கலக்கிற போது அபரிமிதமான மாயச்செயல்களைச் செய்யுமவனே! என்கிறாள். அப்படி ஸம்ச்லேஷிக்குமளவில் வார்த்தையருளிச் செய்யுமளவில் திருப்பவளத்திலும் திருவுடம்பிலும் பிறக்கும் அழகை நினைத்துச் செய்யவாய்மணியே! என்கிறாள்; கோயிலில் கண்வளர்ந்தருளுகிறபடியை நினைத்து இக்கிடை தனக்கு உபயுக்தமாகிறதில்லையே! என்கிற பரிதாபம் தோற்ற விளிக்கின்றாள். அடியார்களுடைய ஆபத்துக்களைப் போக்குகைக்காகக் கொடியவையான திவ்யாயுதங்களை ஏந்தியிருக்கின்ற நீ என்னுடைய பிரதிபந்தகங்களை நீக்கி என்னோடே ஸம்ச்லேஷிக்கிறாயல்லையே! என்று இன்னாப்புத் தோற்றச் சொல்லுகிறாள். பிரானே! அரவணையை விட்டு நீ பிரியாதிருக்கிறாப்போலே இவளையும் விட்டுப் பிரியாதிருக்க வேண்டாவோ? அப்படியில்லாமைக்கு யாது காரணமோ? இவள் இங்ஙனே கிலேசப்படா நிற்க, இந்த கிலேசத்தைப் போக்க வழிதேடாதே படுக்கை விரித்துக் கிடந்துறங்குவதே! இஃது என்னே!; இவளை இப்படி காணவைத்த பாபத்தையுடைய நான் இவள் திறத்துச் செய்யக்கூடியதை அருளிச் செய்யவேணும் என்கிறாள் தாய்.

"மையல் செய்தென்னை மனங் கவர்ந்தானே!" என்றவிடத்திற்குப் பிள்ளான் அருளிச் செய்வது பாரீர்;—"அதிக்ஷுத்ரமான காகத்தின் பக்கலிலே ப்ரஹ்மாஸ்த்ரத்தை விட்டருளின உன்னுடைய ஸர்வ வசீகரணமான ப்ரணயித்வகுணத்தாலே என்னுடைய மனஸ்ஸை அபஹரித்தவனே!" என்று. ஒரு காகம் பிராட்டி திருமேனியிலே சிறிது நலிவை உண்டுபண்ணிற்றென்று அதன்மேலே ப்ரஹ்மாஸ்த்ரத்தை விட்டருளினமை ஸ்ரீராமாயண ப்ரஸித்தம். அல்பமான அபராதத்திற்காக இப்படிப்பட்ட மஹத்தான செயலைச் செய்யுமள

வில் "அந்தோ! நம் மீது இப்படியும் ஒரு மையல் உண்டாவதே!; நமக்காகவன்றோ இவ்வரிய பெரிய செயல் செய்தது!" என்று நெஞ்சைப் பறிகொடுக்க வேண்டும்படியாகுமென்றவாறு.

கலக்கிற ஸமயத்தில் தாழநின்று கையைக் காலைப் பிடித்த பரிமாற்றங்களை நினைத்து மாமாயனே! என்றது. .... (௬)

பாலதுன்பங்களின்பங்கள்படைத்தாய் பற்றிலார்பற்ற நின்றானே*
காலசக்கரத்தாய் கடலிடங்கோண்ட கடல்வண்ணகண்ணனேயென்னும் *
சேல்கோள்தண்புனல்சூழ்திருவரங்கத்தாயென்னும் என்தீர்த்தனேயென்னும்*
கோலமாமழைக்கண்பனிமல்கவிருக்கும் என்னுடைக்கோமளக்கோழுந்தே. (௭)

என்னுடை கோமளம் கொழுந்து	மிக மெல்லியலாளான என் மகள்	கண்ணனே என்னும்	ஸ்ரீ கிருஷ்ணா என்கிறாள்;
பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய் என்னும்	அவ்வவ்விடங்களுக்குத் தகுதியாக இன்பங்களையும் துன்பங்களையும் படைத்தவனே! என்கிறாள்;	சேல் கொள் தண் புனல் சூழ் திரு அரங்கத்தாய் என்னும்	மீன்கள் நிரம்பிய குளிர்ந்த தீர்த்தம் சூழ்ந்த கோயிலில் வாழ்பவனே! என்கிறாள்;
பற்று இலார் பற்ற நின்றானே என்னும்	அசரண்ய சரண்யனே! என்கிறாள்;	என் தீர்த்தனே என்னும்	என்னைப் பவித்திரனாக ஆக்குமவனே! என்கிறாள்;
கால சக்கரத்தாய் என்னும்	காலசக்ரத்திற்கு நிர்வாஹகனானவனே! என்கிறாள்;		
கடல் இடம் கொண்ட கடல் வண்ணா என்னும்	திருப்பாற்கடலை இடமாகக் கொண்ட கடல் வண்ணனே! என்கிறாள்;	கோலம் மா மழை கண் பனி மல்க இருக்கும்	அழகு பொருந்திப் பெருத்துக் குளிர்ந்த கண்கள் நீர்பெருக நிற்கின்றாள்.

* * * எம்பெருமானுடைய ஸ்ருஷ்டிக்ரமத்தை நோக்குமிடத்து இன்ப துன்பங்களை அந்தந்த ஆச்ரயங்களுக்குத் தகுதியாக அமைக்கின்றபடியைக் காணநின்றோம். அநுகூலர்கள் இன்பங்களை யநுபவிப்பதென்றும், பிரதிகூலர்கள் துன்பங்களை யநுபவிப்பதென்றும் வரப்புகட்டி வைத்திருப்பதுண்டே; அந்த வரம்புக்கு நான் பஹிர்ப்பூதையோ என்கிறாளென் மகள். இரண்டாமடியின் முடிவிலுள்ள 'என்னும்' என்பது விளிதோறும் அந்வயிக்கக் கடவது.

பால—பால் என்று இடத்திற்குப் பெயர்; பால என்றது அந்தந்த இடத்திற்குத் தகுதியாக என்றபடி. அந்தந்த பதார்த்தங்கள் பொறுக்குமளவுகளிலேயன்றோ நீ ஸுக துக்கங்களைச் சுமத்துவது; 'தன் காய்பொறாத கொம்பு' என்னும்படியான ஸ்ருஷ்டி இல்லையே. அதற்கு மாறாக இப்படி என்னைப்படுத்தலாமோ? என்கிறாள்.

பற்றிலார் பற்றநின்றானே!—அசரண்ய சரண்யன் என்று விருதூதித்திரிகிறாயே!, என்னைத் துடிக்க விட்டிருக்குமுனக்கு இந்த விருது தகுமோ? கள்ளிச்செடியை மஹாவ்ருக்ஷமென்னுமாபோலே யாகுமன்றோ வென்கிறாள்.

காலசக்சரத்தாய்!—இதற்கு இரண்டு படியாகப் பொருள் கூறுவர். கால சக்கரத்துக்கு நியாமகனானவனே! என்பது ஒரு பொருள். 'உமக்கு அருள் செய்கைக்கு ஒரு கால நியமமுண்டு' என்பாயாகில், பிரானே! காலமென்று அப்படியொன்றுண்டோ? நீ ஸங்கல்பிக்குமதுவே காலமன்றோ? கால சக்கரத்தைத் தன்னிஷ்டப்படி நடத்தவல்லவுனக்கு இது வொரு வார்த்தையோ? என்பதாகக் கொள்க. காலன் என்று யமனுக்குப் பேராகையாலே, விரோதிக்கு மிருத்யுவான திருவாழியை யுடையவனே! என்பதும் ஒருபொருள்.

கடலிடங்கொண்ட கடல்வண்ணா கண்ணனே!—*ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:, நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம் * என்கிற பிரமாணத்தை நோக்கிச் சொல்லுகிறபடி. *வெள்ளை வெள்ளத்தின் மேலொருபாம்பை மெத்தையாக விரித்து அதன்மேலே கள்ள நித்திரை கொள்கின்றபடியை விட்டு இடையனாய் வந்து பிறந்தாய்; அவ்விருப்பையும் விட்டுக் கோயிலிலே வந்து சாய்ந்தருளினாய்; இதெல்லாம் பழுதே போகா நின்றதே யென்கின்றாள் மூன்றாமடியால்.

"சேல்கொள் தண்புனல்சூழ்" என்றது ஸாபிப்ராயம். பிரானே! மீன்களின் படியை நீ ப்ரத்யக்ஷீகரிக்கவல்லையே; மீன் நீரைவிட்டுப் பிரிந்தால் துடிக்கும்படியை அறிவாயே. அப்படியேகாண் என்படியும் என்று சொல்லுமாபோலே யிருந்தது. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி; "ஜலசரஸத்வங்கள் ஜலத்தைப் பிரிந்து தரிக்கிலன்றோ இவள் உம்மைப் பிரிந்து தரிக்கவல்லளாவது; அவ்வூரிலே வர்த்திக்கிறவுமக்குப் போருமோ இவளுக்கு முகங்காட்டாதொழிகிறவிடம்."

என் தீர்த்தனே என்னும்! என்னளவில் மிக்க பரிசுத்தியை யுண்டாக்கினவனே! என்கிறாள். அதாவது—நீ முகம் காட்டாதொழிந்தாலும் உன்னையொழிய வேறிடம் நெஞ்சாலும் நினைக்கமாட்டாதபடி செய்திருப்பவனே! என்றபடி. தீர்த்தமென்று இழிந்தாடுந் துறைக்குப் பேராதலால் நான் இழிந்தாடும் துறையாயிருப்பவனே! என்றதாகவுமாம். மகரனகரப் போலி.

என்னுடைக் கோமளக் கொழுந்து கோலமாமழைக்கண் பனிமல்கவிருக்கும்—கொள்கொம்பிலே சேர்ந்து தரிக்கவேண்டுங் கொடிபோலே உன்னோடே சேர்ந்தாலல்லது தரிக்கமாட்டாதவளான இப்பெண்பிள்ளை கண்ணுங்கண்ணீருமாயிருக்கிறபடி கண்டாயே; இவ்விருப்புக்கு க்ருஷிபண்ணின நீ பலித்தவளவிலே இதையநுபவிக்கவாகிலும் வரலாகாதோ? என்று கருத்து. ... ... (எ)

கொழுந்துவானவர்கட்கென்னும் குன்றேந்திக்கோநிரைகாத்தவனென்னும் *
அழுந்தொழுமாவியனலவெவ்வுயிர்க்கும் அஞ்சனவண்ணனேயென்னும் *
எழுந்துமேல்நோக்கியிமைப்பிலளிருக்கும் எங்ஙனேநோக்குகேனென்னும் *
செழுந்தடம்புனல்சூழ்திருவரங்கத்தாய் என்செய்கேனென்திருமகட்கே. (அ)

(இப்பெண் பிள்ளையானவள்)

வானவர்கட்கு கொழுந்து என்னும்	நித்ய ஸூரிகளுக்குத் தலையானவனே! என்கிறாள்;
குன்று ஏந்தி	கோவர்த்தன மலையைக் குடையாக வெடுத்து நின்று
கோ நிரை காத்தவன் என்னும்	பசுக்களின் கூட்டத்தைக் காத்தருளினவனே! என்கிறாள்;
அழும்	கண்ணுங் கண்ணீருமா யிருக்கின்றாள்;
தொழும்	அஞ்ஜலி பண்ணா நின்றாள்;
ஆவி அனல வெவ்வுயிர்க்கும்	ஆத்மவஸ்து கொளுந்தும்படி வெப்பமாகப் பெருமூச்சு விடா நின்றாள்;
அஞ்சனம் வண்ணனே என்னும்	அஞ்சனமேனியனே! என்கிறாள்;

(இக் கூக்குரலைக்கேட்டு எம்பெருமான் வரக்கூடுமென நினைத்து)

மேல் எழுந்து நோக்கி	மேலே தலையெடுத்துப் பார்த்து
இமைப்பு இலள் இருக்கும்	இமையாத கண்ணினளாய் இருக்கின்றாள்;
எங்ஙனே நோக்குகேன் என்னும்	எந்த ப்ரகாரத்தாலே உன்னைக் காண்பேன்? என்கின்றாள்;
செழு தடம் புனல் சூழ் திரு அரங்கத்தாய்	மிகச் சிறந்த தீர்த்தம் சூழ்ந்த கோயிலிலே கண் வளர்ந்தருளுமவனே!
என் திரு மகட்கு	பிராட்டியோடொத்த என் பெண்மகள் விஷயத்திலே
என் செய்கேன்	எதைச் செய்வேன்?

* * *—பிரானே! உன்னுடைய பரத்வத்தையும் ஸௌலப்யத்தையும் மாறி மாறி யநுஸந்தியா நின்றாளென்மகள்; வானவர்கட்குக் கொழுந்தே! என்று பரத்வத்தைப் பேசினவாறே கோநிரை காத்தவனே! என்று ஸௌலப்யத்தைப் பேசுகின்றாள்; குன்றேந்தினவனே! என்று பின்னையும் ஒரு பரத்வத்தைப் பேசுகின்றாள். பரத்வத்தைக்கண்டு இறாய்க்காமைக்காக ஸௌலப்யத்தைப் பேசுகையும், ஸௌலப்யத்தைக்கண்டு இகழாமைக்காகப் பரத்வத்தைப் பேசுவதும் மாறிமாறிச் செல்லுமே மெய்யன்பர்களுக்கு.

அழும் தொழும்—பக்தி பரவசரைப்போலே கண்ணும் கண்ணீருமாயிருக்கிறபடியும், ப்ரபந்நரைப்போலே அஞ்ஜலிபந்தம் பண்ணுகிற்கிறபடியும் சொல்லிற்றாயிற்று. ஆவியனல வெவ்வுயிர்க்கும்—கீதையிலே ஆத்மஸ்வரூபத்தைப் பேசும்போது * அச்சேத்யோயம் அதாஹ்யோயம் * என்று சொல்லிற்று. ஆவியானது தஹிக்கவொண்ணாதது என்றபடி. அப்படிப்பட்ட ஆவியும் தஹித்ததாம்படி வெப்பமாகப் பெருமூச்சு விடுகின்றாள்—அஞ்சனவண்ணனே! என்கின்றாள்.

அங்ஙனம் கூப்பிட்டவாறே நீ வரக்கூடுமென்று எண்ணி எழுந்து மேல் நோக்குகின்றாள்; ஒரு க்ஷணம் தோற்றி மறைந்து விடுவாயோவென்று இமையாதேயிருக்கின்றாள். [எங்ஙனே நோக்குகேனென்னும்] ஈடு;—"தான் பார்த்த திக்கில் வரக்காணாமையாலே பின் நோக்கிவந்து கட்டிக்கொள்ளுமென்று புரிந்து பாராநிற்கும்."

என் திருமகட்கு என் செய்கேன்—இவளுக்காக நான் ஏதேனும் உபாயம் அநுட்டிக்கலாமோ? என்னவுபாயத்தை யனுட்டிப்பேன். பிராட்டி உம்முடைய திருமார்பிலே நித்ய வாஸம் பண்ணுகிறப்போலே இவளும் உம்மை அலகில்லாதே உம்மோடே பொருந்தியிருக்க வேண்டியவளன்றோ? .... (அ)

என்திருமகள்சேர்மார்பனேயென்னும் என்னுடையாவியேயென்னும்*
நின்திருவெயிற்றாலிடந்துநீகொண்ட நிலமகள்கேள்வனேயென்னும்*
அன்றுருமேழும்தழுவிநீகொண்ட ஆய்மகளன்பனேயென்னும்*
தென்திருவரங்கம்கோயில்கொண்டானே தெளிகிலேன்முடிவிவள்தனக்கே. (கூ)

என் திரு மகள் சேர் மார்பனே என்னும்	எனக்குப் புருஷகார பூதையான பிராட்டி சேர்ந்த திருமார்பை யுடையவனே! என்கிறாள்;	உரு எழும்	இடிபோன்ற குரலை யுடைய ரிஷபங்களேழையும்
என்னுடை ஆவியே என்னும்	எனக்கு உயிராயிருப்பவனே! என்கிறாள்;	தழுவி	மதமொழித்து
நின் திரு எயிற்றால் இடந்து நீ கொண்ட	உனது கோரப் பற்களாலே இடந்து எற்றுக்கொண்ட	நீ கொண்ட	மணந்துகொண்ட
நிலம் மகள் கேள்வனே என்னும்	பூமிப்பிராட்டிக்கு நாயகனே! என்கிறாள்;	ஆய் மகள் அன்பனே என்னும்	நப்பின்னைப் பிராட்டிக்கு ப்ரியனே! என்கிறாள்;
அன்று	முன் பொருகால்	தென் திரு அரங்கம் கோயில் கொண்டானே	ஸ்ரீரங்கநாதனே!
		இவள் தனக்கு	இவளுக்கு
		முடிவு தெளிகிலேன்	ஆர்த்தி முடியுமாறு அறிகின்றிலேன்.

* * * பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகக் கொண்டவர்களுக்குப் பலனில் வியபிசாரமில்லாமையாலே, அந்தோ! நான் பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகக் கொண்டு பற்றியிருக்க என்கதி இங்ஙனேயாவதே! என்கிறாள். என் என்பதைத் திருமகள் சேர்மார்வனில் அந்வயித்துப் பொருள் கொள்ளவுங் கூடுமானாலும் இங்குத் திருமகளில் அந்

வயமே விவக்ஷிதம். என்னுடைய திருமகள் என்றபடி. "அனந்தாழ்வான் தன் பெண் பிள்ளையை என்திருமகளென்று திருநாமம் சாத்தினன்" என்பது ஈடு.

"என் திருமகள் சேர்மார்பனேயென்னும்" என்று ஒரு வாக்கியமாகவும், "என்னுடையாவியே யென்னும்" என்று மற்றொரு வாக்கியமாகவும் யோஜிப்பது தவிர, முதலடி முழுவதையும் ஒரே வாக்கியமாக யோஜிப்பதுமுண்டு. இங்கே ஈட்டில் ஆச்சரியமானதோர் ஐதிஹ்யம் காண்மின்;—பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்யுமவை கேட்கைக்காக நஞ்சீயரையழைத்தருளித் தாம் அமுது செய்யா நிற்கச்செய்தே இத்திருவாய்மொழியயிலைக் கேட்டருளா நிற்க, இப்பாட்டளவிலே வந்தவாறே *என் திருமகள் சேர்மார்பனே யென்னுமென்னுடையாவியே யென்னும்* என்று இயலைச் சேர்த்தருளிச் செய்ய, அத்தைக் கேட்டுக் கையையுதறி 'ஸ்ரீரங்கநாத!' என்று அணையிலே சாய்ந்தருளினர் பட்டர்" என்று அருளிச் செய்வர். அப்போது திருமேனியிலே பிறந்த விக்ருதியைக் கண்டு இவர்க்கு பகவத்ப்ராப்தி அணித்தாகிறதோவென்று அஞ்சியிருந்தேனென்று ஜீயராருளிச் செய்வர்."

பட்டர் * ஸ்ரீரங்கேச புரோஹிதாஸையாலே அடிக்கடி பகவத் ஸன்னிதியிலே உபந்யாஸங்கள் செய்தருள நேரும். அதற்காக முன்னடி நஞ்சீயரையழைத்து அருளிச்செயல் பாசுரங்களைச் சொல்லவிட்டுச் செவிக்கினியதாகக் கேட்பது வழக்கம். அமுது செய்து கொண்டே ஒரு நாள் கேட்டருளா நின்றார். அப்போது இயல் ஸேவிக்கின்ற நஞ்சீயர் இப்பாசுரத்தை ஸேவிக்கும்போது "என் திருமகள்சேர் மார்பனே யென்னும்" என்கிற விடத்தில் நிறுத்தாமல் ஏக ச்வாஸமாகவே முதலடியை முழுதுஞ் சொல்லி நிறுத்தினாராம். என்னும் என்பதற்கு 'என்று சொல்லுகிறாள்' என்கிற அர்த்தம் தவிர, 'என்று சொல்லப்படுகிற' என்கிற அர்த்தமும் உண்டாதலால் 'என் திருமகள்சேர் மார்பனென்று சொல்லப்படுகிற என்னுடைய ஆவியே என்கிறாள்' என்று விவக்ஷித்து நஞ்சீயர் நிறுத்தினபடி. பட்டர் அந்த இன்சுவையை யறிந்து திருவுள்ளமுடை குலைப்பட்டாரென்றதாயிற்று. "இவர்க்கு ப்ராணன் ஒரு வாயு விசேஷமல்ல; ஒரு மிதுனமாயிற்று. திருமகள் சேர் மார்பனைக் கொண்டு எனக்கு தாரகனானவனே! என்னும்."

என் திருமகள்சேர் மார்பனென்று சொல்லப்படுமதான என்னுவியே! என்று பொருள் விவக்ஷிதமானபடி. ஆனதுபற்றியே "இவர்க்கு ப்ராணன் ஒரு வாயுவிசேஷமல்ல; ஒரு மிதுனமாயிற்று" என்றருளிச் செய்தது.

இரண்டாமடியில் வராஹாவதாரத்தை ப்ரஸ்தாவித்தது—நீ பூமிப்பிராட்டி பக்கல் முகம்பெற வேணுமானால் அவள் பரிகரமான எங்களை நோக்கியேயாக வேணுங்காண் என்ற கருத்தினலாம். அன்றியே, * பாசிதூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள், மாசுடம்பில் நீர் வாராமானமிலாப்பன்றியாந், தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார், பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே.* (நாச்சியார் திருமொழி 11-8) என்று ஆண்டாளருளிச்செய்த கணக்கிலே, பூமிப்பிராட்டிக்கு நீ அருளிச்செய்த திருவாக்கு வெறுமனேயோ? என்று கேட்கிற கருத்தாகவுமாம்.

மூன்றாமடியில் நப்பின்னைப் பிராட்டியை மணந்துகொண்ட வரலாறு அநுஸந்திக்கப்படுகிறது. 'உரு' என்றாலும் 'உரும்' என்றாலும் இடிக்குப் பெயர். இடிபோலே பயங்கரமான குரலையுடைய ஏறு என்று சொல்லவேண்டுமிடத்து இடியென்றே சொன்னவிது அந்த ரிஷபங்களின் பயங்கரத்தன்மையைக் காட்டும். தழுவி யென்றது மங்கலவழக்கு; வதை செய்து என்பது தாற்பரியம்.

அங்ஙனம் எருதேழடர்த்த ச்ரமம் தீருகைக்காகத் தென் திருவரங்கம் கோயில் கொண்டானே! இவளைப்பற்றி நீர் ஸித்தாந்தம் செய்திருக்குமது இன்னதென்று அறிகின்றிலேன் என்றாளாயிற்று. ... . (௯)

முடிவிவள்தனக்கொன்றறிகிலேனென்னும் மூவுலகாளியேயென்னும் *
கடிகமழ்கொன்றைச்சடையனேயென்னும் நான்முகக்கடவுளேயென்னும் *
வடிவுடைவானோர்தலைவனேயென்னும் வண்திருவரங்கனேயென்னும் *
அடியடையாதாள்போலிவளணுகியடைந்தனள் முகில்வண்ணனடியே. (௧௦)

இவள்	இப்பெண் பிள்ளையானவள்,
தனக்கு முடிவு ஒன்று அறிகிலேன் என்னும்	தனது ஆர்த்திக்கு முடிவு ஒன்றும் தெரியவில்லையே! என்கிறாள்;
மூ உலகு ஆளியே என்னும்	மூவுலகுக்கும் கடவுளான இந்திரனுக்கு அந்தர்யாமியே என்கிறாள்;
கடிகமழ் கொன்றை சடையனே என்னும்	பரிமளம் மிக்க கொன்றைமாலையைச் சடையிலணிந்த சிவனுக்கு அந்தர்யாமியே என்கிறாள்;
நான்முகக்கடவுளே என்னும்	பிரமதேவனுக்குஅந்தர்யாமியே! என்கிறாள்;
வடிவு உடை வானோர் தலைவனே என்னும்	தன்னோடொத்த வடிவுடையரான நித்ய ஸூரிகளுக்கு நாதனே! என்கிறாள்;
வண் திரு அரங்கனே என்னும்	ஸ்ரீரங்கநாதனே! என்கிறாள்;
அடி அடையா தாள்போல் இவள்	திருவடிகளைக் கிட்டமாட்டாள் போலும் என்னும்படி யிருந்தவிவள்
முகில் வண்ணன் அடி	மேகவண்ணனை அவனது திருவடிகளை
அணுகி அடைந்தனள்	கிட்டியடையப்பெற்றாள்;

* * * இவள்—இப்பராங்குச நாயகியானவள், தனக்கொரு முடிவு காண்கிறிலேனென்கிறாள் என்று தாய் சொல்லுகிறபடி. தனக்கு முடிவாவது—தான் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கு முடிவு. நான் ஆத்மாவுள்ளதனையும் இங்ஙனே கஷ்டப்பட வேண்டியதுதானோ? இதற்கொரு நாளும் பரிஹாரமில்லையோ வென்கிறாள். தனக்கு முடியும் நாள் இல்லையோ வென்கிறாள் என்றுமாம். [மூவுலகாளியேயென்னும்] மூவுலகாளியென்று இங்கு தேவேந்திரனைச் சொன்னபடியாய், அவனுக்கு அந்தர்யாமியானவனே! என்றதாகிறது. [கடிகமழ் கொன்றைச் சடையனே!] கொன்றைமாலையை அணியுமவன் பரமசிவன்; அவனுக்கு அந்தர்யாமியானவனே! என்றவாறு. நான்முகக் கடவுளே! என்றதும் அப்படியே. [வடிவுடை வானோர் தலைவனே] எம்பெருமானை இடைவீடின்றி அநுபவிப்பதனாலுண்டான மகிழ்ச்சி வடிவிலே தோற்றும்படியிருக்கிற நித்யஸூரிகளுக்கு நாதனானவனே! என்கிறாள். [வண்திருவரங்கனே! என்னும்] நித்யஸூரிகளே அநுபவித்துப்போகையன்றிக்கே நித்ய ஸம்ஸாரிகளும் இழவாமைக்கன்றோ திருவரங்கத்திலே வந்து திருக்கண்வளர்ந்தருளுகிறது; இங்குச் சாய்ந்தருளினதின் பலன் நான் பெற வேண்டாவோ வென்கிறாள்.

ஈற்றடியின் கருத்து;—“இனிப் பெருமாள் திருவடிகளைச் சேர்ந்து முடியமாட்டாள், போய் முடிந்தாள் என்னும்படி துர்த்தசாபன்னையானவிவள்....இந்த துக்கமெல்லாம் விஸ்ம்ருதமாம்படி தான் ஆசைப்பட்டபடியே பெரியபெருமாள் திருவடிகளையே ஸம்ச்லேஷிக்கப் பெற்றாளென்று இவளுடைய திருத்தாயார் ப்ரீதையாகிறாள்” என்பது ஆறாயிரப் படியருளிச்செயல். .... (௧௦)

முகில்வண்ணனடியையடைந்தருள் சூடியுய்ந்தவன் மோய்புனற்பொருநல்*
துகில்வண்ணத்தூநீர்ச்சேர்ப்பன் வண்பொழில்சூழ்வண்குருகூர்ச்சடகோபன்*
முகில்வண்ணனடிமேல்சொன்னசொல்மாலை ஆயிரத்திப்பத்தும்வல்லார்*
முகில்வண்ணவானத்திமையவர்சூழவிருப்பர் பேரின்பவெள்ளத்தே. (௧௧)

முகில்வண்ணன் அடியை அடைந்து	மேகவண்ணனை எம்பெருமானுடைய திருவடிகளை யடைந்து
அருள் சூடி உய்ந்தவன்	அவனுடைய திருவருளைத் தலைக்கொண்டு உஜ்ஜீவித்தவரும்,
மொய் புனல் பொருநல்	உத்தமதீர்த்தமான தாமிரபர்ணியினுடைய
துகில் வண்ணம் தூ நீர் சேர்ப்பன்	துகிலின் நிறம்போலே பரிசுத்தமான ஜலத்தின் கரையிலே சேர்ந்திருப்பவரும்,
வண் பொழில் சூழ் வண் குருகூர் சடகோபன்	வளம்மிக்க சோலைகள் சூழ்ந்த திருநகரிக்குத் தலைவருமான ஆழ்வார்
முகில்வண்ணன் அடி மேல் சொன்ன	மேகவண்ணனை எம்பெருமானது திருவடிகளை நோக்கி யருளிச்செய்த
சொல் மாலை ஆயிரத்து இப்பத்தும் வல்லார்	சொல் தொடையான ஆயிரத்தினுள் இப்பதிகத்தை ஓதவல்லவர்கள்
முகில் வண்ணம் வானத்து	முகில் வண்ணனுடைய நிழலீட்டாலே முகில் வண்ணமாயிருக்கின்ற பரமபதத்திலே
இமையவர் சூழ	நித்தியசூரிகள் புடைசூழ
பேர் இன்பம் வெள்ளத்தே	ப்ரஹ்மானந்த ப்ரவாஹத்தில்
இருப்பர்	மூழ்கியிருக்கப்பெறுவர்கள்.

* * *—பெரியபெருமாள் திருவடிகளைச் சேர்ந்து ஸர்வப்ரகார ஸம்ச்லேஷமும் பண்ணப் பெறுகையாலே உஜ்ஜீவனம் பெற்றவராய் தாம்ரபர்ணீ தீரவாஸியான ஆழ்வார் முகில்வண்ணனடிமேற் சொன்ன சொல்மாலையாயிரத்துள் இப்பத்தும் வல்லவர்கள் திருநாட்டிலே அயர்வறு மமரர்கள் சூழ ஆனந்தக்கடலிலே ஆழ்ந்திருக்கப் பெறுவர்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

முகில்வண்ணனடிமேற் சொன்ன சொல்மாலையாயிர மென்றவிதனால்—திருவாய்மொழியாயிரமும் ஸ்ரீரங்கநாதன் விஷயமாகவே அருளிச்செய்த தென்பது விளங்குமென்பர். ஆனதுபற்றியே * வான்திகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ்மறைகளாயிரமும்* என்று திருவாய்மொழித் தனியன் அவதரித்தபடி. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தியுங் காண்மின்;—"பெரியபெருமாள் திருவடிகளிலே திருவாய்மொழியாயிரமுஞ் சொல்லிற்று. * திருமோகூர்க்கு ஈத்தபத்து* *திருவேங்கடத்துக் கிவைபத்து* என்று பிரித்துக் கொடுத்தவித்தனை. பெருமாள் திருப்பலகையில் அமுதுபடியிலே மற்றைத் திருப்பதிகள் நாயன்மார்க்கும் அளந்து கொடுக்குமாபோலே என்று பிள்ளையருளிச் செய்வர்."

முகில்வண்ணவானத்து—முகில்வண்ணனை எம்பெருமானுடைய திருநாட்டிலே யென்று பொருள் கொள்ளலாமாயினும், அங்கிருக்கிறவனுடைய நிழலீட்டாலே அவன்படியாயிருக்கிற வானம் என்று பொருள் கொள்வது சிறக்கும். ஸ்ரீரங்கவிமானத்தை அநுபவியாநின்றபட்டர் *அபி பணிபதிபாவாத் ஸுப்ரமந்தச் சயாலோர் மரகதஸுகுமாரை: ரங்கபர்த்துர் மயூகை:, ஸகல்ஜலதிபாநச்யாப ஜீமூதஜைத்ரம் புலகயதி விமாநம் பாவநம் லோசநே ந:* என்றருளிச்செய்த ச்லோகம் இங்கே அநுஸந்திக்கவுரியது. ஆதிசேஷனுடைய அவதாரமான ஸ்ரீரங்கவிமானம் வெண்ணிறத்ததாயினும் உள்ளுக்கிடக்கிற பச்சைமாமலைபோல் மேனியனுடைய திருமேனிநிழலீட்டாலே சாமளமாகவே தமக்கு ஸேவைஸாதிப்பதாக அருளிச்செய்தவாறு. .... (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம். நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

திருவாய்மொழியில் ஏழாம்பத்து இரண்டாந் திருவாய்மொழி
உரை முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி-ஏழாம்பத்து-மூன்றாந் திருவாய்மொழி

வெள்ளைச்சுரிசங்கு.

உரையவதாரிகை:—கீழ்த் திருவாய்மொழியிலே ஆழ்வாருடைய அரதி பேச்சுக்கு நிலமல்லாமேயிருந்தது. பெரியபெருமாளுடைய திருக்குணங்களையும் வடிவழகு முதலான வற்றையும் பராங்குசநாயகியான தான் வாய்வெருவியும் திருத்தாயார் சொல்லக்கேட்டும் சிறிது தரிக்கும்படியாயிற்று. மோஹமும் தெளிந்தது. பின்பு அவனைச்சென்று கிட்டியே தீர்வேன் என்னுமாற்றாமை பிறந்து, தென்திருப்பேரையில் வீற்றிருந்த மகரநெடுங் குழைக் காதனிடம் போகவேணுமென்று புறப்பட, பழையபடியே தோழிமாரும் தாய்மாரும் சூழ்ந்துகொண்டு 'உனக்கு இத்தனை ப்ராவண்யமாகாது; நமக்கு இது பழியாய் விளையும்' என்ன, நீங்கள் தடை சொல்லுகிறவற்றால் ஒரு பயனுமுண்டாகமாட்டாது. நான் மகரநெடுங்குழைக் காதனாலே நெஞ்சு பறியுண்டேன்; ஆனபின்பு நானே போனதாகாமே நீங்கள் என்னோடு உடன்பட்டு அங்கே கொண்டுபோய்ச் சேர்க்கப்பாருங்கள் என்று, பராங்குச நாயகி தனக்குப் பிறந்த துணிவை அவர்களுக்குச் சொல்லுகிறதாகச் செல்லுகிறது இத்திருவாய்மொழி.

திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய ஆறாயிரப்படியில் அவதாரிகை பேரின்ப வெள்ளமாயிருக்கும். அந்த ஸ்ரீஸூக்திகள் பரமபோக்யமென்று அவையே ஈண்டு எடுத்துக் காட்டப்படுகின்றன;—"இப்பிராட்டியோடே பெரியபெருமாள் ஸம்ச்லேஷரஸத்தை யநுபவித்து அந்த ஸம்ச்லேஷரஸம் உள்ளடங்காதபடி பெருகினவாறே அது ஸாத்மிக்கைக்காகவும் ஆச்ரித ப்ரதிகூல ம்ருக ம்ருகயார்த்தமாகவும் தென்திருப்பேரையிலே யெழுந்தருளத் திருவுள்ளத்தே கோலியருளி இவளுடைய ஸம்வாதார்த்தமாக இவளிடத்திலே அதிமாத்ர ஸம்மானத்தைப் பண்ணியருளி தென் திருப்பேரையிலே வேட்டைக்குப் போய்வருகிறோமென்றருளிச் செய்ய, இப்படி பதிஸம்மாநிதையானவிவள் அவ்யுத்பந்நவிச்லேஷையாகையாலும் இவனெழுந்தருளுகை இவனைக் காணுதொழிகைக்கு ஹேதுவென்னுமிடமறியாமையாலும் எழுந்தருள ஸம்வதித்து விஜயத்தை ஆசாஸித்து திவ்யாயுதங்களைக் கொடுத்தருளி * ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந்யபிதத்யுஷீ* என்னும் ப்ரக்ரியையாலே திருப்பல்லாண்டு பாடிக் கொண்டு திருவணுக்கன் திருவாசலளவும் பின்னே யெழுந்தருள, பெரியதிருவடி திருத்தோளிலே யேறியருளி ஒரு தாமரைத் தடாகம் மலர்ந்தாற் போலேயிருந்த திருக்கண்களாலே இவளைப் புரிந்து பார்த்தருளி இவளாலே அநுஜ்ஞாதனாய்த் தென்திருப்பேரையிலே யெழுந்தருள, இவள் அவனைக் காணாமையாலே அத்யந்தம் அவஸந்நையாய் அவனெழுந்தருளியிருந்த தென்திருப்பேரையிலே யெழுந்தருள உத்யோகிக்க, இவளுடைய திருத்தாயாரும் தோழிமாரும் மற்றுமுள்ள பந்துக்களும் இவளை ப்ரதிபந்திக்க, 'நான் போகை தவிரேன், தனியே போனாளென்னும் பழி உங்களுக்கு வாராமே நீங்களே யென்னைத் தென்திருப்பேரையிலே மீண்டெனக் கொண்டுபோய் விடுங்கோளென்கிறாள்." என்று.

வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தித் தாமரைக்கண்ணன் என்னெஞ்சினூடே*
புள்ளைக்கடாகின்றவாற்றைக்காணீர் என்சொல்லிச்சொல்லுகேன் அன்னைமீர்காள் *
வெள்ளச்சுகமவன்வீற்றிருந்த வேதவொலியும்விழாவொலியும் *
பிள்ளைக்குழாவிளையாட்டொலியுமறாத் திருப்பேரெயில்சேர்வன்நானே. (க)

அன்னைமீர்காள் — தாய்மார்களே!
வெள்ளை சுரி சங்கொடு ஆழி ஏந்தி — வெண்ணிறத்தையும் சுரியையுமுடைய ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் ஸுதர்சநத்தையும் ஏந்திக்கொண்டு
தாமரைக் கண்ணன் — செந்தாமரைக் கண்ணனான பெருமான்
என் நெஞ்சின் ஊடே — எனது நெஞ்சினுள்ளே
புள்ளை — கருடப்பறவையை
கடாகின்ற ஆற்றை — நடத்துகிறபடியை
காணீர் — நீங்கள் அறிகின்றீர்களில்லையே!
என் சொல்லி சொல்லுகேன் — இவ்வநுபவத்துக்கு என்ன பாசுரமிட்டு நான் சொல்லுவேன்;

(இனி நான் செய்ய நினைத்ததாவது)

வெள்ளம் சுகம் அவன் வீற்றிருந்த — ஆனந்த வெள்ளமே வடிவெடுத்தவனான பெருமான் வீற்றிருக்கு மிடமாயும்
வேதம் ஒலியும் விழா ஒலியும் பிள்ளை குழாம் விளையாட்டு ஒலியும் அறா — வேதகோஷமும் உத்ஸவ கோஷமும் சிறுபிள்ளைகளின் விஹார கோலாஹலமும் இடையறாமலிருக்கப் பெற்றதாயுமுள்ள
திரு பேர் எயில் — திருப்பேரெயில் என்னுந் திருப்பதியிலே
நான் சேர்வன் — நான் சென்று சேரக்கடவேன்.

* * * பராங்குசநாயகியானவள் தனது உள்ளத்தினுள்ளே ஒரு பெரியதிருவடித்திருநாள் நடந்து செல்லுகிறபடியைப் பேசி, தென்திருப்பேரையிலே போகவேணுமென்று தனக்குப் பிறந்த துணிவைத் தாய்மாரிடம் கூறுகின்றாள்.

கீழ்த் திருவாய்மொழியில் இவள் * சங்குசக்கரங்களென்று கைகூப்பும் * என்று திருவாழி திருச்சங்கிலே பாவபந்தம் காட்டினபடியாலும், * தாமரைக்கண்ணென்றே தளரும் * என்று தாமரைக் கண்களிலே யீடுபாடு காட்டினபடியாலும் அந்த திவ்யாயுதங்களை ஏந்திக்கொண்டு * வாத்யாவ்யாலோலத் கமல தடாக தாண்டவேந—வாத்யா வ்யாலோலத் கமல தடாக தாண்டவேந* [ஸ்ரீரங்கராஜஸ்தவம். 2—59] என்றும் * வன்காற்றறையவொருங்கே மறிந்து கிடந்தலர்ந்த மென்கால்கமலத் தடம்போல் பொலிந்தன—எம்பிரான தடங்கண்களே* என்றும் பேசலாம்படியான திருக்கண்ணழகுடனே வந்து உள்ளே காட்சி தந்தனன்போலும்; அது முதலடியில் பேசப்படுகிறது. கீழே முகில்வண்ணனென்று ப்ரஸ்தாவித்தாள்; அந்த நிறத்துக்குப் பரபாகமான வெளுப்பையுடைத்தான சங்கையும், ஒரு விசேஷணமிட்டுச் சொல்லவேண்டாதபடியான அழகையுடைத்தான திருவாழியையுமேந்திக்கொண்டு தாமரைக்கண்கள் பிறழவந்து பெரியதிருவடி திருத்தோளிலே யேறிச் சாரிகை வந்து என்னெஞ்சினுள்ளே யுலாவுகிறபடியைக் காணுங்கோளென்கிறாள்.

என்சொல்லிச் சொல்லுகேன்—என்ன பாசுரமிட்டு எத்தைச் சொல்வது என்கை, உங்கள் கண்ணுக்கு இலக்காகாதாப்போலே என் வாக்குக்கும் இலக்காகிறதில்லையே! என்கிறாள். "புள்ளைக் கடாகின்றவாற்றைக் காணீர்" என்று பேசியாயிற்றே; இன்னமும் பேச வேண்டியது என்ன இருக்கிறதென்னில்; அதைப்பற்றி ஒரு மஹாபாரதம் பேசவேண்டாவோ? அது மாட்டுகிறிலேனென்கிறாள்.

இனித் தான் செய்ய நினைத்த காரியத்தைப் பின்னடிகளிலே கூறுகின்றாள். வேதவொலியும் விழாவொலியும் பிள்ளைக்குழா விளையாட்டொலியும் நிரந்தரமாகச் செல்லாநிற்கிற திருப்பேரையிலே சென்று சேர்வதே என்னுடைய பணியென்கிறாள்.

'வெள்ளச்சுகமவன்' 'வெள்ளைச் சுகமவன்' என்று இருவகையான பாடங்களையும் ஆசிரியர் திருவுள்ளம் பற்றுகிறார். முந்தின பாடத்தில் சுக வெள்ளத்தை யுடையவன்

என்று பொருள். ஆனந்தவெள்ளத்தைத் தானுடையவன், (அல்லது) அதை எனக்கு அளித்தவன் என்க. பிந்தின பாடத்தில் வெள்ளை என்றது—மறுவற்ற என்றபடி. துன்பங் கலசாத இன்பமாயிருப்பவனென்றவாறு.

பிள்ளைக்குழாவிளையாட்டொலியுமறு என்றது இத்திருப்பதிக்குச் சிறப்பானதொரு விசேஷணம். சிறுபிள்ளைகள் திரண்டு விளையாடுவதென்பது எங்குமுண்டு; இவ்வூரில் அப்பிள்ளைகள் விளையாடுவது கோயில் திருமுன்பேயாயிருக்கும். எம்பெருமான் தானும் அந்த விளையாட்டின் சுவையைக்காண ஆசைப்பட்டானும்; எதிரே பெரியதிருவடி ஸந்நிதியிருந்தது இடைச்சுவராயிருந்தபடியாலே அந்த விளையாட்டைக்காண மறைவாயிருக்கிறதே யென்று வருந்தி 'கருடா! அப்பால்போ' என்று பெருமாள் வெறுத்துரைதாராம்! இந்த நிலைமை நாளைக்குங் காணலாம்.

இந்த திவ்ய தேசத்தின் திருநாமத்தைப் பற்றினவொரு ஆராய்சசி;—இப்பதிகத்தில் பாட்டுத்தோறும் 'தென் திருப்பேரை' என்றே பல புத்தகங்களிற் பதிப்பித்திருக்கக் காண்கிறோம். இத்தலத்தின் பரிபூர்த்தியான திருநாமம் 'திருப்பேரெயில்' என்பதாம். இப்பதிகத்தின் ஒன்பதாவது பாட்டில் *ஏர்வளவொண்கழனிப்பழனத் தென் திரும்பேரெயில் மாநகரே* என்றிருப்பதும், அங்கு வியாக்கியானங்களில் "திருப்பேரெயிலாகிற மாநகரிலே" என்று வ்யக்தமாக அருளிச்செய்யப்பட்டிருப்பதும் காணத்தக்கது. அன்றியும், ஐந்து ஆறு ஏழாம் பாட்டுக்களில் 'பேரெயிற்கே' என்று மூலம் அமைந்திருக்கின்றது. இவ்விடங்களில் 'பேரையிற்கே' என்றே பலரும் பதிப்பித்துள்ளார்களானாலும் அது பொருந்துமாவென்று விமர்சிக்கவேணும். 'பேரை' என்று தலத்தின் திருநாமமாய்விட்டால் அதனோடு வேற்றுமையுருபுசேர்ந்தால் "பேரைக்கு' என்றாகுமேயல்லது இன்சாரியை வந்து 'பேரையிற்கு' என்றாகாது. ஐகாரவீற்றதான சொல்லின் பக்கத்தில் இன்சாரியை வருவதில்லை. நங்கை+கு, நங்கைக்கு, நாரை+கு, நாரைக்கு, வாழை+கு, வாழைக்கு என்றிப்படி வருவதுண்டேயல்லது 'நங்கையிற்கு' 'நாரையிற்கு' 'வாழையிற்கு' என வருவதில்லையன்றோ. ஆகவே 'பேரையிற்கு' என்கிற பாடம் ஸம்பாவிதமென்று தோன்றவில்லை. 'பேரெயிற்கே' என்றே ஆழ்வார் திருவாக்கில் திருவவதரித்த பாடமென்று அறுதியிடத்தட்டில்லை. தென் திருப்பேரை என்று ஐகாரவீற்றதாக வழங்கிவருமதிலும் குற்றமில்லை. நாங்கூரை நாங்கையென்றும், தஞ்சாவூரைத் தஞ்சை யென்றும், குடமூக்கூரைக் குடந்தையென்றும், அழுந்தூரை அழுந்தை யென்றும், நெல்வேலியை நெல்லை யென்றும் அயிந்திரபுரத்தை அயிந்தை யென்றும் இங்ஙனே ஐகாரவீற்றதாக்கி வழங்கிவரும் முறைமையுண்டாதலால் திருப்பேரெயிலூரைத் திருப்பேரையென வழங்கிவந்தது ஒக்கும். நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியிலும் ஈடு முதலிய வியாக்கியானங்களிலும் திருப்பேரை யென்று காண்பதில் குற்றமொன்றுமில்லாமையினாலே திருத்தம் வேண்டா. திருவாய்மொழி மூலத்தில் மாத்திரம் பாசுரந்தோறும் 'பேரெயில்' என்பதே சுத்தபாடம். பேரை என்றில்லை.

இங்குச் சில மஹான்கள் கூறுவதாவது—இத்தலத்தின் திருநாமம் பேரெயில் என்பதே யென்னுமிடத்தில் விவாதமில்லை. ஆனாலும் இத்திருவாய்மொழியில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, எட்டு, பத்து-ஆம் பாட்டுக்களில் 'தென்திருப்பேரையில்' என்று பாடங்கொள்வதில் விரோதமில்லாமையாலே இந்தப்பாட்டுக்களில் மாத்திரம் திருப்பேரையென்றே பாடங்கொள்ளலாமே யென்பதாம். இதை நிஷ்கர்ஷிப்பதில் பெரியார்களின் திருவுள்ளமே பிரமாணம்.

மணவாளமாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில் இத்திருவாய்மொழிக்கு இட்ட பாசுரத்தில் 'தெள்ளியமால் தென்பேரை சென்றுபுக' என்றருளிச்செய்யலாயிருக்கச் செய்தேயும் அங்ஙனம் அருளிச்செய்யாது 'தெள்ளியமால் தென் திருப்பேர் சென்றுபுக' என்றருளிச் செய்திருப்பதும் உற்று நோக்கத்தக்கது. சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான அப்பக்குடத்தான் ஸந்நிதிக்கே தென் திருப்பேர் என்று திருநாமம். இதுவோ பாண்டியநாட்டுத் திருப்பதி. இதையும் தென் திருப்பேரென்று மணவாளமாமுனிகளருளிச் செய்தது 'திருப்பேரெயில்' என்பதன் ஏகதேசக்ரஹணமாகவாயிற்று. ... (1)

நானக்கருங்குழல்தோழிமீர்காள்! அன்னையர்காள் ! அயற்சேரியீர்காள்*
நானித்தனிநெஞ்சம்காக்கமாட்டேன் என்வசமன்றிது இராப்பகல்போய்*
தேன்மொய்த்தபூம்பொழில்தண்பணைசூழ் தென்திருப்பேரெயில்வீற்றிருந்த*
வானப்பிரான்மணிவண்ணன்கண்ணன் செங்கனிவாயின்திறத்ததுவே. (உ)

நானம் கரு குழல் தோழிமீர்காள் } ஸுகந்தமணிந்த கருங்குழலை யுடைய தோழிகளே!
அன்னையர்காள் தாய்மார்களே!
அயல் சேரியீர்காள் (செய்தி வினவ வந்த) அக்கம் பக்கத்தவர்களே!
இத்தனி நெஞ்சம் நான் காக்க மாட்டேன் } ஸ்வதந்திரமான இந்த நெஞ்சை நான் அடக்கியாள மாட்டுகின்றிலேன்;
இது என் வசம் அன்று } இந்த நெஞ்சு எனக்கு விதேயமன்று;
இரா பகல் இரவும் பகலும்

போய் என்னை விட்டுப்போய்
தேன் மொய்த்த பூ பொழில் } வண்டுகள் மொய்த்த பூஞ்சோலைகளை யுடைத்தாய்
தண் பணை சூழ் } குளிர்ந்த நீர் நிலங்கள் சூழ்ந்திருக்கிற
தென் திருப்பேரெயில் வீற்றிருந்த—;
வானம் பிரான் பரமபத நிலயனும்
மணி வண்ணன் நீலமணி வண்ணனுமான
கண்ணன் கண்ணபிரானுடைய
செம் கனி வாயின் திறத்தது } சிவந்த கனிபோன்ற அதரத்திலே படிந்திட்டது.

* * *—தாய்மார் முகம் பார்த்துச் சொன்னாள் கீழ்ப்பாட்டில்; அவ்வளவிலே இத்தலைமகளுக்கு ஹிதஞ் சொல்லுகைக்காகத் தாய்மாரும் தோழிமாரும் அயற் சேரியுள்ளாரு மாகத் திரண்டு வந்து சேர்ந்து நிற்க, உங்களுடைய ஹிதவார்த்தைகளைக் கேட்க அவகாச மில்லாதபடி மகரநெடுங்குழைக்காதன் பக்கலிலே அவகாஹித்த என்னெஞ்சை மீட்கமாட்டு கின்றிலேன்காண்மின் என்கிறாள். என்னெஞ்சைக் கடல் கொண்டது காண்மினென்கிறாள்.

நானக்கருங்குழலென்கிற அடைமொழி தோழிமார்களிடத்துப்போல அன்னையர்களிடத்தும் அயற் சேரியர்களிடத்தும் அந்வயிக்கக்கடவது. நானம்—ஸுகந்த த்ரவ்யங்களாலுண்டான பரிமளம். அது பொருந்திய கருங்குழலையுடையீர்காள்! என விளித்தது அவர்களைப் பழிக்கிறபடியாம். நான் எம்பெருமானைப்பிரிந்து தலை சருகாய் வாடி வருந்திநிற்க நீங்கள் பூ முடித்து நறுமணங்கமழவந்து நிற்கின்றீர்களே! இதுவோ தகுதி யென்று பழிபிட்டுப் பேசுகிறபடி.

இவளோடொத்த இன்பதுன்பங்களையுடையவர்களாயிருக்க ப்ராப்தமாக, இவள் வாடிக்கிடக்கிற நிலைமையிலே அவர்கள் பூச்சூடி நறுமணங்கமழவந்து நிற்பது ஸம்பாவிதமோ வென்று இங்கே ஒரு சங்கையை நம்பிள்ளை தாமே எடுத்துக்கொண்டு இரண்டுபடியாகப் பரிஹாரமருளிச்செய்கிறார் காண்மின்;—

(ஈட்டு ஸ்ரீஸூக்தி.) "* ஏகம் துக்கம் ஸுகஞ்ச நௌ * என்று இவளுடைய ஸுக துக்கங்களே தங்களுக்கும் ஸுகதுஃக்கமாம்படியிருக்கையிறே தோழிமாராகையாவது;

இவள் மயிர்முடி பேணாதே பரிமளம் காணில் முடியும்படியாயிருக்க, இவர்கள் குழல் பேணிப் பரிமளங்கொண்டு காரியங் கொள்ளப்போகுமோவென்னில்; கலவியில் இவளோடு அவன் நெருங்க நெருங்க சாத்திக்கழித்தபடியே ஸர்வஸ்வதானம் பண்ணுவது இவர்களுக்கே; அப்போது அவன் பண்ணின ப்ரஸாதாதிசயத்தாலே, அது சருகானாலும் அவர்கள் மாறாதே வைத்துக்கொண்டிருப்பர்களே, அது இவளுக்கு ஸ்மாரகமாய் நலிகிறபடி. அன்றிக்கே இவர்கள் தாம் பரிமளங்கொண்டு காரியம் கொள்ளவும் வல்லவர்கள்: அதாவது தாங்கள் தளர்ந்து காட்டில் இவள் மிகவும் தளருமென்று ஒப்பித்துக்கொண்டிருப்பர்கள். தந்தாமுடைய பொறுமையும் பாரார்களாயிற்று இவளை உஜ்ஜீவிப்பிக்கைக்காக. ....பெருமாளிலும் க்லேசம் விஞ்சியிருக்கச்செய்தே பெருமாளுடைய ரக்ஷணத்துக்காக இளையபெருமாள் தம்மைப் பேணிக்கொண்டு தரித்திருந்தாப்போலே." இத்யாதி.

நான் இத்தனி நெஞ்சம் காக்கமாட்டேன்—உங்களுடைய ஹித வசனத்தை நான் கேட்கமாட்டேனென்பது இதனாலே காண்மின்; என்சொற் கேளாதே என்னைவிட்டகன்று திரிகிற எனது நெஞ்சை நான் மீட்கமுடிந்தாலன்றோ உங்கள் ஹிதவசனங்கேட்கலாவது. 'உனக்கும் நமக்கும் இனி உறவில்லை' என்று ஸம்ந்யஸித்து நெஞ்சு போகாநிற்க, என்ன பரிகரங்கொண்டு நான் உங்கள் ஹிதவசனங் கேட்பது? என்கிறாள். இவ்விடத்தில் ஈட்டு ஸ்ரீஸூக்தி;—"ஸம்ஸாரிகள் சப்தாதி விஷயங்களில் நின்றும் மீளமாட்டாதாப்போலேயிறே இவர் பகவத் விஷயத்தில் நின்றும் மீளமாட்டாதபடி.'

நெஞ்சம் காக்கமாட்டேனென்று சொல்லிவிடுவது ஒரு வார்த்தையோ? விதேயமான நெஞ்சை வசப்படுத்திக்கொள்ள முயலவேண்டாவோ வென்ன, என்வசமன்று இது என்கிறாள். நெஞ்சுக்கு நான் வசப்பட்டிருக்கவேண்டியதாயிற்றேயல்லது எனக்கு நெஞ்சு வசப்பட்டிருப்பதென்பதில்லை யென்றபடி.

நெஞ்சு வசமல்லாதபடி செய்கிற காரியம் ஏதென்னச் சொல்லுகிறது மேல் இராப்பகல் போய் என்று தொடங்கி. வண்டுகள் படிந்த பூப்பொழிலையும் குளிர்ந்த நீர்நிலங்களையுமுடைய தென் திருப்பேரையில் வீற்றிருந்த எம்பெருமானது திருப்பவளத்தழகிலேயே இரவும் பகலும் ஈடுபட்டதன்றோ என்னெஞ்சு. இதை நான் மீட்டு ஹிதஞ்சொல்லி வசப்படுத்திக்கொள்ளலாமளவு இல்லையே யென்கிறாள். தென் திருப்பேரை யெம்பெருமான் திறத்திலேயே யீடுபட்டிருக்கின்ற நான் உங்களால் திருத்தமுடியரதவள் காண்மின் என்றவாறு. ... ... (௨)

செங்கனிவாயின்திறத்ததாயும் செஞ்சுடர்நீண்முடித்தாழ்ந்ததாயும் *
சங்கோடுசக்கரம்கண்டுகந்தும் தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்தும்*
திங்களும்நாளும்விழாவறாத தேன்திருப்பேரெயில்வீற்றிருந்த*
நங்கள்பிரானுக்கென்னெஞ்சம்தோழி! நாணும் நிறையுமிழந்ததுவே. (௩)

தோழீ	வாராய் தோழியே!,
என் நெஞ்சம்	எனது நெஞ்சானது
செம் கனி வாயின் திறத்தது ஆயும்	செவ்விய கனி போன்ற திருப்பவளத்திலே அபிநிவேசம் கொண்டதாயும்
செம் சுடர் நீள் முடி தாழ்ந்தது ஆயும்	செவ்விய சுடரையுடைய நீண்ட கிரீடத்திலே ஈடுபட்டதாயும்
சங்கொடு சக்கரம் கண்டு உகந்தும்	திருவாழி திருச்சங்குகளைக் கண்டு உவந்ததாயும்
தாமரை கண்களுக்கு அற்று தீர்ந்தும்	தாமரை போன்ற திருக்கண்களுக்கு அநந்யார்ஹமாகியும்
திங்களும் நாளும் விழா அறாத	மாஸோத்ஸவங்களும் நித்யோத்ஸவங்களும் இடையறாத
தென் திருப்பேரெயில் வீற்றிருந்த	தென் திருப்பேரைப் பதியிலே யெழுந்தருளியிருக்கின்ற
நங்கள் பிரானுக்கு	எம்பெருமான் விஷயத்திலே
நாணும் நிறையும் இழந்தது	வெட்கமும் அடக்கமும் தொலையப் பெற்றது.

* * * நங்காய்! இப்படியும் நாணமற்றுச் சொல்லுவது தகுதியோவென்று தோழி கேட்க; தோழி! நான் என்செய்வேன்? எனது நெஞ்சானது தென் திருப்பேரை யெம்பெருமானுடைய திருப்பவளத்தழகிலே போய்ப்படிந்தும் திருவபிஷேகத்தினழகிலே தாழ்ந்தும், திருவாழி திருச்சங்குகளை யேந்தியிருக்குமழகுகண்டு உகந்தும், மற்றோரழகுக்கு உரித்தல்லாதபடி தாமரைக்கண்களுக்கு அற்றுத்தீர்ந்தும் நங்கள் பிரானுக்கு நாணும் நிறைவு மிழந்தது; இனி யெனக்கு நாணும் நிறைவுமுண்டாவதற்கு வழி யேது? என்கிறாள் தலைவி.

கீழ்ப்பாட்டில் "தோழிமீர்காள் அன்னையர்காள் அயற் சேரியீர்காள்" என்று எல்லாரையும் விளித்துக்கூறியவள் இப்பாட்டில் தோழியைமாத்திரம் விளித்துக் கூறுகை யாலே, மற்ற பேர்களெல்லாரும் இவளைத் திருத்த நம்மாலாகாதென்று கைவாங்கி அப்பால் போய்விட்டார்களென்பது தெரிகின்றது. தோழி அங்ஙனே போகமாட்டாதவளாகை யாலே உடனிருந்து ஹிதஞ் சொல்லவே, அவளுக்கு மறுமாற்ற முரைக்கிறபடி.

செங்கனிவாய், திருமுடி, சங்கு சக்கரம், திருக்கண் ஆகிற நான்கிலே நெஞ்சு அகப் பட்டமை முன்னடிகளிற் கூறப்படுகின்றது. செங்கனிவாய் முதலான நான்கையும் ஒரு சேரச்சொல்லி இவற்றிலே யென்னெஞ்சு ஈடுபட்டது என்னாதே * செங்கனி வாயின் திறத்த தாயும் * என்று ஒரு வாக்கியமாகவும் * செஞ்சுடர் நீண்முடித்தாழ்ந்ததாயும் * என்று மற் றொரு வாக்கியமாகவும் இங்ஙனே பல வாக்கியங்களாகச்சொன்னது என்னென்னில்; "தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற்கமலமன்ன தாள்கண்டார் தாளே கண் டார் தடக்கை கண்டாருமஃதே" என்றாற்போல ஆழ்வார் திருவுள்ளமானது தனித்தனி வடிவுகொண்டு ஒவ்வொரு அவயவந்தன்னிலும் தனித்தனியே சுழியாறுபட்டதென்னுமிடம் இதனால் விளங்கும். இங்கே நம்பிள்ளையீடு;—"ஸௌபரியென்பானொருத்தன் ஒரு ஸங்க் ருதமடியாக ஐம்பது வடிவுகொண்டானிறே; அவ்வளவல்லவிறே இவள் கலந்த விஷயம் பண்ண வல்லது. அவன் வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாபோலேயாயிற்று இது வும் அவயவங்கள் தோறும் தனித்தனி அகப்பட வல்லபடி."

ஸௌபரி விருத்தாந்தம்:—ஸௌபரி என்கிற ஒரு மாமுனிவன் நீர்நிலையிலிருந்து கொண்டு தவம்புரியா நின்றவளவில் அங்கு மீன்களெல்லாம் கூடிக்களித்து விளையாடா நின்றமையைக் கண்ணுற்று 'நாமும் இப்படி குடும்ப வாழ்க்கையிற் கூடிநின்று சிற்றின்பம் நுகர்ந்து களிக்கவேணும்' என்று ஆவல் கொண்டு மாந்தாதா என்னும் அரசனுக்குப் பல பெண்கள் இருப்பதாக உணர்ந்து அவனிடம்சென்று தனக்குக் கன்னிகாதானஞ் செய்யு மாறு வேண்ட, அரசன் இவருடைய கிழத்தனத்தையும் குரூபத்தையுங் கண்டு இசையகில் லாமல் 'பெண் கொடுக்க முடியாதென்று நம் வாயாற் சொன்னால் முனிவர் முனிந்து சபித்து விடக்கூடும்; பெண்களிருக்கு மிடத்திற்கு இவரை அனுப்புவோம்; இவரைக் கண்டு பெண் காமுற்றார்களாகில் விவாஹம் செய்து கொள்ளட்டும்; இல்லையாகில் அவர்களே மறுத்து விடட்டும்; நம் தலையில் பழி வேண்டா' என்றெண்ணி முனிவரைப் பெண்களிருக்குமிட மனுப்ப முனிவர் அங்குச் செல்லும்போதே தமது தவ வலிமையால் திவ்ய ஸுந்தரமான ரூபத்தை ஏன்றுகொண்டு போய் அவர்கள் முன்னே நின்றவளவில் அங்கிருந்த ஐம்பது பெண்களும் 'நானே இவரை மணந்துகொள்வேன், நானே இவரை மணந்துகொள்வேன்' என்று போட்டி போட்டுக்கொண்டு மேல்விழுந்தவாறே, முனிவர் அத்தனை பெண்களையும் மணந்து கொள்ள விரும்பித் தமது தவவலிமையால் ஐம்பது வடிவமெடுத்து அப்பெண்க ளனைவரையும் விவாஹம் செய்துகொண்டு மகிழ்ந்திருந்தாரென்று புராணங்களில் இதிஹாஸம்.

ஆழ்வார் திருவுள்ளம் முதலிலே செங்கனி வாயில் ஈடுபட்டதாம்; 'நங்காய்! நான் உன்னோடு கூடியிருந்தாலென்ன? பிரிந்திருந்தாலென்ன? நான் உன் சரக்கன்றோ' என்று சொல்லத்தொடங்கி தழதழத்து வருகிற திருவாயிலே மூந்துற முன்னம் அகப்பட்டதாயிற்று. அனந்தரம், பிரிவை ப்ரஸங்கித்துப் பேரநின்றபோது ஆதிராஜ்யஸூசகமாய் உபய விபூதிநாதனென்று தோற்றும்படியிருக்கிற திருவபிஷேகத்தைக்கண்டு தரைப்பட்டதாயிற்று. பின்னை * இன்னாரென்றறியேன் அன்னேயாழியொடும் பொன்னார்சார்ங்கமுடைய வடிகளை யின்னாரென்றறியேன் * என்று மதிமயக்கவல்ல திருவாழி திருச்சங்குகளினழகிலே மூண்டது. * பெருங்கேழலார் தம் பெருங்கண்மலர்ப்புண்டரீகம் நம்மேலொருங்கே பிறழ வைத்தார்.* (திருவித்தம்) என்னும்படி தம்மை இவ்வளவும் ஈடுபடுத்திக்கொண்டது திருக்கண்களேயென்றறிந்து அந்தத் தாமரைக்கண்களுக்கு அநந்யார்ஹமாயிற்று.

திங்களும் நாளும் விழாவறாத—நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்களென்று திவ்யதேசங்களிலே நடைபெறும் உத்ஸவங்களுக்கு எல்லையில்லையே; அப்படிப்பட்ட உத்ஸவங்கள் அங்கே குறையற்றுச் செல்லாநிற்க அங்கே வாழ்வதைவிட்டு இங்கே துயருற்றிருக்குமோ என்னெஞ்சு என்கிறாள்.

"வீற்றிருந்த நங்கள் பிரானுக்கு" என்கிற சொற் சேர்த்தியழகைத் திருவுள்ளம்பற்றி நம்பிள்ளை யருளிச்செய்வது பாரீர்;—"இவ்விருப்பு நமக்காகக்கொண்டிருக்கிற உபகாரகனுக்கு. பரத்வம் நித்யமுக்தர்க்கு; வ்யூஹம் முக்தப்ராயர்க்கு. விபவம் புண்ணியம் பண்ணினார்க்கு. இவ்விருப்பு பாபம் பண்ணின ஸம்ஸாரிகளுக்காகவிறே."

என்னெஞ்சம் நாணும் நிறையுமிழந்தது—நான் தன்னை யிழந்தேன்; தாய்மார் தோழிமார்கள் என்னை யிழந்தார்கள்; நெஞ்சு நாணுநிறையுமிழந்தது. இப்படியெல்லாம் இழவேயாயிருக்கிறது. ... ... (ரு)

இழந்தவெம்மாமைதிறத்துப்போன என்னெஞ்சினாருமங்கேயொழிந்தார்*
உழந்தினியாரைக்கொண்டென்னுசாகோ? ஓதக்கடலொலிபோல * எங்கும்
எழுந்தநல்வேதத்தொலிநின்றோங்கு தென்திருப்பேரெயில்வீற்றிருந்த*
முழங்குசங்கக்கையன்மாயத்தாழ்ந்தேன் அன்னையர்காள்! என்னை யென்முனிந்தே? (சு)

அன்னையர்காள்	தாய்மார்களே!,	ஓதம் கடல் ஒலி போல	அலையெறியும் கடலின் ஒலி போல
இழந்த எம் மாமை திறத்து போன	ஏற்கெனவேயிழந்த எனதுமேனி நிறத்தைத் திருப்பிக் கொணர்வதாகப் புறப்பட்டுச் சென்ற	எங்கும் எழுந்த நல் வேதத்து ஒலி	எல்லாவிடத்திலும் கிளர்ந்த ஸாமவேத கோஷமானது
என் நெஞ்சினாரும்	எனது நெஞ்சென்கிற பெரியாரும்	நின்று ஓங்கு	நிரந்தரமாகக் கிளர்ந்து வருமிடமான
அங்கே ஒழிந்தார்	அத்தலைக்கே அற்றுத் தீர்ந்தார்;	தென் திருப்பேரெயில் வீற்றிருந்த—	
இனி	அந்தரங்கமான நெஞ்சையுமிழக்கப் பெற்ற பின்பு	முழங்கு சங்கம் கையன் மாயத்து	முழங்குகின்ற சங்கத்தைத்திருக்கையிலேயுடையனான பெருமானது மாயச்செயல்களிலே
உழந்து	வருந்தி		
ஆரை கொண்டு என் உசாகோ	யாரைத் துணையாகக் கொண்டு எந்த வார்த்தையைச் சொல்லித் தரிப்பேன்!;	ஆழ்ந்தேன்	அவகாஹித்தேன்;
		என்னை முனிந்து என்	(இனி) என்னைச் சீறுவதனால் என்ன பலனுண்டாம்?

* * * தனது நெஞ்சு அங்கே போனதற்கு ஒரு காரணஞ் சொல்லுகிறாள் முதலடியில். * கொங்கலர் தண்ணந்துழாய் முடியானுக்கு என் மங்கையிழந்தது மாமைநிறமே* என்று ஏற்கெனவே என் தாய் வருந்திக்கிடந்தாளன்றோ. இழந்த அந்த மாமை

சானதுதானும் அங்கே கையொழிந்து நின்றது. 'எம்பெருமானிடத்திலுள்ளதை நாம் கொள்ளைகொள்ளவேணுமேயல்லது நம்மிடத்திலுள்ளதொன்றை அவன்கொள்ளைகொள்ளுகையாவதென்? இதோ நான் போய் அதைக் கவர்ந்து வருகிறேன் காண்மின்' என்று வீரவாதஞ் செய்துபோன என்னெஞ்சு என்ன காரணமோ! அங்கே தகர்ப்புண்டது என்கிருள்.

நெஞ்சு என்ன வேண்டுமிடத்து நெஞ்சினர் என்று உயர்வாகக் கூறியது பகவத் விஷயத்திலே யீடுபட்ட அதிசயத்தைப் பற்ற. * அன்னஞ் செல்வீரும்.........கண்ணன் வைகுந்தனோடு என்னெஞ்சினரைக் கண்டாலென்னைச்சொல்லி அவரிடை நீரின்னஞ் செல்லீரோ இதுவோ தகவென்றிசைமின்களே * என்ற திருவிருத்தப் பாசுரம் இங்கே நினைக்கத் தகும்.

இழந்த மாமை நிறத்தை மீட்டுக்கொண்டு வருவதாகச் சொல்லி நெஞ்சு போயிற்று என்கிறவிதற்கு ஒரு கருத்துச் சொல்லவேணுமே; என் சொல்லலாமென்னில்; மாமை நிறத்தை அப்பெருமான் கவர்ந்ததுபோலவே என்னெஞ்சத்தையும் கவர்ந்தான்காணும் என்பதுவே இங்குக் கருத்து.

உழந்தினியாரைக்கொண்டு என் உசாகோ?—நெஞ்சு நம்மோடே யிருந்தாலன்றோ யாரோடாவது எதையாவது பேசிப் போதுபோக்கலாம். நெஞ்சு பறியுண்டார்க்குக் காலக்ஷேபம் பண்ண விரகுண்டோ வென்கிருள். உழந்து என்றது வருந்தியென்றபடி. சிரமப்பட்டாகிலும் ஏவரோடேயாவது வார்த்தை சொல்லிப் போது போக்கலாமென்று நான் நினைப்பதுண்டு; நெஞ்சை யிழந்த பின்பு இனி துக்கப்பட்டு ஆரோடேகூட எத்தைச் சொல்லி நான் காலம் போக்குவதென்கிருள். அசோகவனத்திலே பிராட்டிக்கு த்ரிஜடை ஸரமை என்ருகிலும் சிலர் உசாத் துணையாயினர்; எனக்காவார் இந்நிலத்தில் ஒருத்தருமில்லையே யென்கிருள். "ஆரைக்கொண்டு என்னுசாகோ" என்றவிடத்து நம்பிள்ளையீடு காண்மின்;–"தேஹாத்மாபிமாநிகளான ஸம்ஸாரிகளைக் கொண்டு போது போக்கவோ? ஈச்வரோஹமென்றிருக்கிற ப்ரஹ்மேஶாநாதிகளைக்கொண்டு போது போக்கவோ? பகவதநுபவத்திலே அந்யபரராயிருக்கிற நித்யஸூரிகளைக்கொண்டு போது போக்கவோ? இத்தலையை * உரிசூறைகொண்டு போனவனைக் கொண்டு போது போக்கவோ? ஆரைக்கொண்டு எத்தையுசாவுவது?" [உரிசூறைகொண்டு—அரைத்துணியையுமகப்படக் கொள்ளைகொண்டு.]

தன்னுடைய காலக்ஷேபமிருக்கும்படியைச் சொல்லுகிருள் ஓதக்கடலொலி யென்று தொடங்கி. ஓதங்கிளர்ந்த கடல்போலே இருந்துள்ள வேதகோஷமானது எங்கும் பரம்பா நின்ற தென்திருப்பேரையில் வீற்றிருந்த முழங்கு சங்கக் கையனுன எம்பெருமானுடைய ஸ்மித வீக்ஷணாதிகளிலே மீள வொண்ணுதபடி அகப்பட்டேன்; இவை இருக்கும்படியென்! என்று எப்போதும் நினைத்துருகியிருப்பதே என்னுடைய காலக்ஷேபம் என்ருளாயிற்று.

அன்னையர்காள் என்னைமுனிந்து என்?=ஸ்வாதீனரை முனிந்தாலன்றோ ப்ரயோஜனமுள்ளது; அவனுடைய மாயத்திலே ஆழ்ந்தவென்னை முனிந்து ப்ரயோஜனமில்லையே. நீங்கள் கடிந்து சொல்லுஞ்சொல் என் செவியில் புகுமளவிலே நான் நிற்கவில்லையே யென்கை.

நல்வேதமென்றது ஸாமவேதத்தை; *வெதாநாம் ஸாமவெதொஸ்மி—வேதாநாம் ஸாமவேதோஸ்மி * என்று கீதையில் அப்பெருமான் தானே யருளிச்செய்தது காண்க. (ச)

முனிந்துசகடமுதைத்து மாயப்பேய்முலையுண்டுமருதிடைபோய் *
கனிந்தவிளவுக்குக்கன்றெறிந்த கண்ணபிரானுக்கென்பெண்மைதோற்றேன் *
முனிந்தினியென்செய்தீர்? அன்னைமீர்காள்! முன்னியவன்வந்துவீற்றிருந்த *
கனிந்தபொழில்திருப்பேரெயிற்கே காலம்பெறவென்னைக்காட்டுமினே. (ரு)

அன்னைமீர்காள்	தாய்மார்களே!
முனிந்து சகடம் உதைத்து	கோபத்தினால் சகடாசுரனை யுதைத் தொழித்தவனும்
மாயம் பேய் முலை உண்டு	வஞ்சகப் பேய்வடிவாக வந்த பூதனையின் முலையை யுண்டு அவளை முடித்தவனும்
மருதிடை போய்	இரட்டை மருதமரங்களினிடையே தவழ்ந்து சென்றவனும்
கனிந்த விளவுக்கு கன்று எறிந்த	விளங்கனியின் மீது வத்ஸாஸுரனை வீசி யெறிந்தவனுமான
கண்ணபிரானுக்கு	கண்ணபிரான் விஷயத்திலே
என் பெண்மை தோற்றேன்	எனது பெண்மைக்குரிய அடக்கம் முதலானவற்றை இழக்கப் பெற்றேன்;
இனி	இப்படியான பின்பு
முனிந்து என் செய்தீர்	என்னைச் சீறுவதனால் என்ன லாபம் பெறப் பார்க்கிறீர்கள்;
அவன் முன்னி வந்து வீற்றிருந்த	அப்பெருமான் முற்கோலி வந்து எழுந்தருளியிருக்குமிடமான
கனிந்த பொழில் திரு பேரெயிற்கே	பரிபக்குவமான சோலைகளையுடைய திருப்பேரெயில் தலத்திற்கே
என்னை	என்னை
காலம்பெற காட்டுமின்	காலதாமதமில்லாமல் கொண்டு போய்க் காணச் செய்மின்.

* * *—தென்திருப்பேரெயிலிலே என்னைக் கடுகக் கொண்டுசென்று சேர்ப்பதே தாய்மாரான வுங்களுக்கு உற்றது என்கிறாள். எம்பெருமானுடைய சில சேஷ்டிதங்களிலே தான் ஈடுபட்டமையை யுரைக்கின்றாள் முன்னடிகளில். அஸுரனால் ஆவேசிக்கப்பட்ட சகடத்தைத் தானே நிமிர்த்துச் சாடியதென்ன, நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்லவந்த பூதனையை முடித்ததென்ன, இரட்டை மருதமரங்களினிடையே தவழ்ந்து சென்று செய்த சேஷ்டையென்ன, வத்ஸாஸுரனைக்கொண்டு கபித்தாசுரனை முடித்ததென்ன ஆக இந்த அபதானங்களிலே நெஞ்சைச் செலுத்திப் பெண்மையை யிழந்த நான் உங்கள் முனிவுக்கு இலக்காகிப் பயனென்கொல்? என்கிறாள். எம்பெருமான் அந்த சேஷ்டிதங்களைச் செய்தது தன்னை யீடுபடுத்திக் கொள்வதற்காகவே யென்றிருக்கிறாள்.

என் பெண்மை தோற்றேன் என்றது—பெண்கள் நிற்கவேண்டிய நிலையிலே நிற்கமுடியாத படியாய்விட்டேன் என்றவாறு. நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்னுமிவை நான்கும் பெண்டிர்க்கு உரிய இலக்கணமாதலால் இவை தவிரப் பெற்றேனென்கை. ப்பு தவிரப் பயிர் போகாதாகிலும் மற்ற மூன்றும் தவிர்ந்தமைக்குக் குறையில்லை.

அன்னைமீர்காள்! இனி முனிந்து என்செய்தீர்—இனிமேல் என்னை மீட்கலாமென்றோ நீங்கள் நினைக்கின்றது? சகடமுதைத்தது முதலான அவனது திவ்ய சேஷ்டிதங்களிலே நான் ஈடுபடுவதற்கு முன்னம் முனிந்ீர்களாகிலும் பயனுண்டாம்; இனி முனிந்து பயனென்? நாங்கள் செய்யவேண்டுவது என்னென்ன; அதற்குச் சொல்லுகிறாள் முன்னியவன் வந்து வீற்றிருந்த வென்று தொடங்கி. தண்ணீர் பெருகிச்சென்ற பின் அணைகட்டப் பாராதே முந்துறமுன்னம் என்னை அத்தலத்திலே கொண்டு சேர்க்கப் பாருங்கோ ளென்கிறாள். “அவன் முன்னிவந்து வீற்றிருந்த” என்றும், “என்னை முன்னிக் காட்டுமினே” என்றும் அந்வயிக்கலாம். ‘என்னைப் பெறுகைக்கு அவஸரப்ரதீக்ஷனாய்க் கொண்டு அவன் முன்னாடி வந்திருக்குமிடமான’ என்பது முந்தின யோஜனையில் பொருள். நான் முடிவதற்கு முன்னமே என்னைக்கொண்டு சேருங்கோளென்பது பிந்தின யோஜனையின் பொருள். .... (ரு)

காலம்பெறவென்னைக்காட்டுமின்கள் காதல்கடலின்மிகப்பெரிதால் *
நீலமுகில்வண்ணத்தெம்பெருமான் நிற்கும்முன்னேவந்தென்கைக்குமெய்தான் *
ஞாலத்தவன்வந்துவீற்றிருந்த நான்மறையாளரும்வேள்வியோவா *
கோலச்செந்நெற்கள்கவரிவீசும் கூடுபுனல்திருப்பேரெயிற்கே. (சா)

(அன்னைமீர்காள்)	தாய்மார்களே!;
நீலம் முகில் வண்ணத்து எம் பெருமான்	நீலமேக நிறத்தனான எம்பெருமான்
முன்னே வந்து நிற்கும்	என் கண்முன்னே வந்து நிற்பதாகக் காண்கின்றான்; (ஆனால்)
என் கைக்கும் எய்தான்	என் கைக்கு எட்டாதபடி தூரஸ்தனாகவே யிராநின்றான்;

காதல் கடலின் மிக பெரிது	எனது காதலோவென்னில் கடலிற் காட்டிலும் மிகவும் பெரிதாக வுள்ளது;
ஆல்	அந்தோ!;
அவன்	அப்பெருமான்
ஞாலத்து வந்து வீற்றிருந்த	இந்நிலவுலகத்தில் வந்து எழுந்தருளி யிருக்குமிடமாய்
நால் மறையாளரும் வேள்வி ஓவா	நான்கு வேதங்களையும் கரை கண்டவர்கள் வைதிகாநுஷ்டானங்களை நிரந்தரமாக நிகழ்த்துமிடமாய்
கோலம் செந்நெற்கள் கவரி வீசும்	அழகிய செந்நெற்பயிர்கள் கவரீ போலே அசையப் பெற்றதாய்
கூடு புனல்	தீர்த்த ஸம்ருத்தியையுடையதான
திருப்பேரெயிற்கே	திருப்பேரெயில்தலத்திற்கே
காலம்பெற என்னை காட்டுமின்கள்	சீக்கிரமாக என்னைக் கொண்டு போய்க் காட்டுங்கள்.

* * * கீழ்ப்பாட்டில் 'காலம்பெற வென்னைக் காட்டுமினே' என்றாள். அது கேட்டவர்கள் 'நங்காய்! அவர் இப்போதே யன்றோ வேட்டைக் கெழுந்தருளினது; இப்போது நீ பதறிப் பயனென்?' என்று சொல்ல, ஐயோ! எனக்கோ அபிநிவேசம் மீதூர்ந்து செல்லா நின்றது; எனக்கு இங்குத் தரிப்பு அரிது; வீணாக எதையுஞ் சொல்லிப் போது போக்காதே இப்போதே யென்னைத் தென் திருப்பேரையிலே கொண்டுபுக்கு மகர நெடுங்குழைக் காதனைக் காட்டி ஸமாதானப்படுத்துங்கோளென்கிறாள். "[காலம்பெற வென்னைக்காட்டுமின்கள்] குடிக்குப் பரிஹாரமன்றாகிலும் எனக்குப் பரிஹாரம் இதல்லதில்லை" என்பது நம்பிள்ளையீடு. அப்பெருமானை நான் காலதாமதமின்றிக் காணும்படி செய்யுங்கோளென்றபடி. அதற்குக் காரணம் கூறுகின்றது "காதல் கடலின் மிகப் பெரிதால்" என்று. கீழே ஐந்தாம்பத்தில் *காதல் கடல் புரைய விளைவித்த காரமர் மேனி* என்று தனது காதலைக் கடலோடொத்ததாகச் சொன்னாள்; இங்குக் கடலினும் விஞ்சியதாகச் சொல்லுகின்றாள்; மேலே எட்டாம்பாட்டில் *என்காதல்—மண்டிணி ஞாலமுமேழ் கடலும் நீள் விசும்புங் கழியப் பெரிதால்* என்கிறாள்; முடிவில் *சூழ்ந்ததனிற் பெரிய என்னவா* என்று தத்வத்ரயத்தையும் விளாக்குலைகொண்ட காதலென்கிறது. இப்படி கனத்தகாதலையுடைய நான் எங்ஙனே பதறாது ஆறி யிருக்கும்படி யென்கிறாள் போலும்.

நங்காய்! கடலின் மிகப்பெரிதாக வளர்கின்ற காதலை ஒருவாறு அடக்கி அளவு படுத்த வேண்டாவோ? நாங்கள் சொல்லுகிற வார்த்தையைக் கேட்டு எங்களோடே ஒழுக வேண்டாவோ? என்று தாய்மாரும் தோழிமாரும் சொல்ல, 'நீலமுகில் வண்ணத் தெம்பெருமான் முன்னே வந்து நிற்கும்' என்கிறாள். அழகிய வடிவைக்கொண்டு அவன்முன்னே வந்து நிற்க, காதல் வளருகைக்கு வழியுண்டாயிருந்ததே யல்லது அளவு படுகைக்கு வழியுண்டோ? அவன் முன்னேவந்து நின்றிலனாகில் நான் காதலையடக்கி உங்கள் வார்த்தையைக் கேட்க மாட்டேனா? என்கிறாள்.

நங்காய்! நீலமுகில் வண்ணத்தெம்பெருமான் உன் முன்னே வந்து நின்றானாகில் அவனது கையைப் பிடித்துக்கொண்டு அவன் பின்னே நீ போகலாமே, 'காலம் பெற வென்னைக் காட்டுமின்கள்' என்று சொல்லுவதென்? என்று தாய் தோழியர் கேட்க, 'என் கைக்கும் எய்தான்' என்கிறாள். உருவெளிப்பாடேயல்லது வேறொன்றில்லையே; வார்த்தை சொல்லுதல் அணைத்தல் செய்யாமையேயன்று, என் கைக்கும் எட்டுகிறிலன்; ஆகையாலே சொல்லுகிறேனென்றாள். எங்கே கொண்டுபோய்க் காட்டச் சொல்லுகிறாயென்ன, அதற்குப் பின்னடிகளாலே விடை கூறுகின்றாள். வெறும் உருவெளிப்பாடன்றியே கண்ணாலே கண்டநுபவிக்கலாம் திருப்பதியிலே போகப் பார்த்தேனென்கிறாள்.

அவன் ஞாலத்து வந்து வீற்றிருந்த—நெடுந்தூரஞ் சென்று காணவேண்டாதே பரமபதத்துச் செல்வமெல்லாம் இங்கே தோற்றும்படி வந்து வீற்றிருக்குமிடமன்றோ தென் திருப்பேரை. அவ்வளவேயோ? நான்மறையாளரும் வேள்வி ஓவா—வேத வித்துக்களான

பரமபாகவதர்களின் ஸமாராதனமும் நிரந்தரமாகச் செல்லுமிடமன்றே. இவையொன்று மில்லையாகிலும் திவ்யதேசத்தின் நிலவளமும் நீர்வளமுமே கண்ணாரக்கண்டு கொண்டிருக்கப் போதுமேயென்கிறாள் ஈற்றடியால். ... . (௫)

> பேரெயில்சூழ்கடல்தென்னிலங்கை செற்றபிரான்வந்துவீற்றிருந்த *
> பேரெயிற்கேபுக்கென்னெஞ்சம்நாடிப் பேர்த்துவரவெங்கும்காணமாட்டேன் *
> ஆரையினியிங்குடையம் தோழீ என்னெஞ்சம்கூவவல்லாருமில்லை *
> ஆரையினிக்கொண்டென்சாதிக்கின்றது? என்னெஞ்சம்கண்டதுவேகண்டேனே. (௰)

பேர் எயில் சூழ்	பெரிய மதில்களாலே சூழப்பட்டு	இனி இங்கு யாரை உடையம்	இனி இந்நிலைமையில் யாரைத் துணையாக வுடையோம்?
கடல்	கடலிடத்தே யுள்ளதான		
தென் இலங்கை	தென்னிலங்காபுரியை	என்னெஞ்சம் கூவ வல்லாரும் இல்லை	(என்னை விட்டுப்போன) எனது நெஞ்சை அழைத்துத் தரவல்லாருமில்லை;
செற்ற	நீறாக்கி யொழித்த		
பிரான்	எம்பெருமான்		
வந்து வீற்றிருந்த	வந்து எழுந்தருளியிருக்குமிடமான	இனி	நெஞ்சம் உதவாதே நீயும் தளர்ந்தபின்பு
பேர் எயிற்கே	திருப்பேரெயில் தலத்திற்கே	ஆரை கொண்டு என் சாதிக்கின்றது	யாரைத்துணைகொண்டு என்ன பிரயோஜனம் ஸாதிக்கத்தக்கதாயிருக்கின்றது? (ஒன்றுமில்லையே)
என் நெஞ்சம்	எனது நெஞ்சானது		
புக்கு	புகுந்து		
நாடி	அவனைத்தேடி		
பேர்த்து எங்கும் வர காணமாட்டேன்	மீண்டும் ஓரிடத்திற்கும் வரக் காணேன்;		(ஆகையாலே.)
தோழீ	வாராய் தோழீ!.	என் நெஞ்சம் கண்டதுவே கண்டேன்	எனது நெஞ்சு கண்ட விஷயத்தையே நானும் கடைப்பிடித்தேன்.

* * * நங்காய்! உனக்கு அவன் பக்கலுள்ள ஆசாபாசம் அளவுகடந்திருந்தாலும் அவனே யெழுந்தருளுமளவும் இங்கேயிருக்க ப்ராப்தமேயல்லது அங்குச் செல்லுகை யுக்த மன்றென்று தோழி சொல்ல, அதற்கு விடையிறுக்கிறது இப்பாசுரம். இராவணனைக் கொன்ற விஜயலக்ஷ்மியோடே தென்திருப்பேரையிலே யெழுந்தருளியிருக்கிற இருப்பைக் கண்ட நெஞ்சு இன்னமும் மீண்டு வாராது; எனக்கு இங்கொரு துணையுமில்லை. துணையான எனது நெஞ்சை அழைக்கவல்லாருமில்லை; இங்கு ஆரைக்கொண்டு என்ன புருஷார்த்தம் ஸாதிப்பது? இனி என்னெஞ்சு போய்ச் சேர்ந்த தேசத்திலேயே நானும் போய்ச் சேருவதே தகுதியென்கிறாளாயிற்று.

ஈட்டு ஸ்ரீ ஸூக்தி காண்மின்;—“ ஸஹம் ஆநந்தயிஷ்யாமி முக்ஷணே ந மதாம் மதிம் என்ற பெருமாளைப் போலே இப்பிராட்டியும் என்னெஞ்சு தரிக்கைக்கு விரகு பார்த்துத் திருப்பேரையிலே புக்காப்போலே நானும் அங்கே புகுமத்தனை யென்கிறாள்” என்று. இராமபிரான் பதினோராயிரமாண்டு இவ்விபூதியிலே யெழுந்தருளியிருந்து பிறகு நித்யவிபூதி யேறச் செல்ல நினைத்து முன்னம் இளையபெருமாளைப் பிரித்து பின்னை தம்பி போனவழியே நானும் போகிறேனென்று உடனெழுந்தருளினதாக உத்தர ஸ்ரீராமாயணத்திலுள்ள கதை இங்கே அநுஸந்தேயம்.

தென்னிலங்கை செற்றபிரான் வந்து வீற்றிருந்த என்றது—பெருமாள் விரோதிநிரஸநம் பண்ணின விடாய்தீர இங்கேவந்தார்; அவருடைய விடாய்கெட * ஹதசாந்தம் வஸிஷ்வஜே* என்றாப்போலே அணைத்து உபசாரங்கள் செய்ய என்னெஞ்சு எற்கெனவே போயிற்றென்றபடியாம். இரண்டாமடிக்கு நம்பிள்ளையருளிச் செய்யுமது பாரீர்;—“மீளவொண்ணாத லங்கையிலே புக்க திருவடியும் மீண்டுவந்தான்; அணித்தான இவ்வூரிலே புக்க நெஞ்சு மீண்டு வரக் காண்கிறிலேன். நெஞ்சுங்கூட வாராத பின்பு அவன் வாராமை சொல்ல வேண்டா விறே.” நிறத்தை நான் மீட்டுக்கொணர்கிறேன் காண்மின் என்று சொல்லிப்போன நெஞ்

சானது மீண்டு வரவில்லை யென்றது தம் திருவுள்ளத்தின் ப்ராவண்யாதிசயம் சொன்னபடி.

எம்பெருமானுக்குத் தூதுவிட வேண்டியதுபோக, தமது நெஞ்சுக்கே தூதுவிட விடவேண்டும்படியான நிலைமையுண்டு ஆழ்வார்க்கு; திருவிருத்தத்தில் * அன்னஞ் செல்வீரு மென்கிறபாட்டிலே * என்னெஞ்சினரைக் கண்டாலென்னைச்சொல்லி......இதுவோ தக வென்றிசைமின்களே * என்று நெஞ்சைக் குறித்துத் தூதுவிட்ட படியுமுண்டே; அங்ஙனே இப்போதும் தூதுவிடப்பார்த்து * ஆரையினியிங்குடையம் தோழீ * இத்யாதி பணித்தபடி.

தூது செல்வார் கிடைத்து நெஞ்சு இங்கு மீண்டுவந்தாலும், அப்பெருமானும் இங்கு வந்து சேர்ந்தாலும், இங்கே ஸாதிக்கக்கூடிய பயன் என்கொல்? நானுண்டாகவேணுமே: இங்கு வெறுஞ்சரையாயன்ளே கிடக்கிறது என்கிருள் ஈற்றடியின் முற்பகுதியினல். ஆகவே நெஞ்சு போனவழியே நானும் போகப் பார்க்கிறேனென்று தலைக்கட்டினளாயிற்று. (எ)

கண்டதுவேகோண்டேல்லாரும்கூடிக் கார்க்கடல்வண்ணனேடேன்திறத்துக்
கோண்டு * அலர்தூற்றிற்றதுமுதலாக் கோண்டவேன்காதலுரைக்கில்தோழீ! *
மண்டிணிஞாலமுமேழ்கடலும் நீள்விசும்பும்கழியப்பேரிதால் *
தேண்டிரைசூழ்ந்தவன்வீற்றிருந்த தேன்திருப்பேரெயில்சேர்வன்சென்றே. (அ)

கண்டதுவே கொண்டு	வெளியில் காணக்கூடிய எனது மேனி நிறம் மாறுதல் முதலிய வற்றையே கொண்டு
எல்லாரும்	தாய்மார் ஊரார் ஆகிய எல்லாரும்
கூடி	ஒன்றுசேர்ந்து
கார் கடல்வண்ணனேடு என் திறத்து கொண்டு	கருங்கடல் வண்ணனுன எம்பெருமானுக்கும் எனக்கும் சேர்க்கை யுண்டானதாகக் கொண்டு
அலர் தூற்றிற்றது முதல் ஆ கொண்ட	பழி தூற்றினதுவே முதலாக இடங்கொண்ட
என் காதல் உரைக்கில்	எனது காதலைப் பாசுரமிட்டுச் சொல்லப்பார்க்கில்
தோழீ	தோழியே!;
	(என்காதல் எப்படிப்பட்டதென்னில்)
மண் திணி ஞாலமும்	மண் செறிந்த பூமியும்
ஏழ் கடலும்	(அதைச் சூழ்ந்த) ஸப்த ஸாகரங்களும்
நீள் விசும்பும்	இதெல்லாவற்றுக்கும் இடங்கொடுக்கும் மஹாவகாசமான ஆகாசமும் ஆகிய இத்தனைக்கும்
கழிய	அவ்வருகுபட்டதாய்
பெரிது ஆல்	பெருத்திராநின்றது;
	(ஆனபின்பு)
தெண் திரை சூழ்ந்து	தெளிந்த அலைகளாலே சூழப்பட்டு
அவன் வீற்றிருந்த	அப்பெருமான் வீற்றிருக்குமிடமான
தென் திரு பேர் எயில்	தென் திருப்பேரைப் பதியை
சென்று சேர்வன்	(எனது தாபம் தீரும்படி) சென்று சேரக்கடவேன்.

* * *—ஊரார் பழி சொல்வதே யெருவாக எனக்கு வளர்ந்துசெல்லுகின்ற காதலானது ஸகலலோகங்களையும் கபளீகரித்துச் செல்லாநின்றது; ஆனபின்பு அவனிருக்கிற திருப்பேரையிலே சென்றல்லது நிற்க மாட்டேனென்கிருள்.

கண்டதுவே கொண்டு என்பதற்கு அப்பெருமானை நான் கண்ணாலே கண்ட மாத்திரத்தையே கொண்டு' என்று பொருள் தோன்றக்கூடுமாணுலும் அதுவன்று பொருள்; வெளியில் காணும் என்செயல்களையே கொண்டு என்று பொருள். அதாவது என்னெஞ்சினுள்ளே ஓடுகின்ற ஆசைப்பெருக்கை ஒருவருங்காணமுடியாதே; நான் வாயாற் சொல்லுகிற சில வார்த்தைகளையும் தொழுவது அழுவதான சிலபடிகளையுமன்ளே இவ்வுலகர் காண்பது; என் மேனி மெலிந்திருப்பதையும் இவர்கள் காணக்கூடும். ஆக இவர்கள் காணுமிவ்வளவையே கொண்டு என்றவாறு. இந்த ப்ரத்யக்ஷ பரிகலித நிமித்தங்களாலே எம்பெருமானுக்கும்

எனக்கும் சேர்த்தியுண்டானதாகக் கூறி உலகர் பழிதூற்றுகின்றார்களே, இப்பழி தூற்று தலே விளைநீராக என்காதல் வளரத் தொடங்கிற்று; அங்ஙனம் வளர்ந்த காதலானது ஞாலமும் கடலும் விசும்பும் ஆகிய இவையெல்லாம் ஏகதேசமென்னும்படி வளர்ந்திட்டது; இப்படிப்பட்ட பசியைக் கொண்டு நான் எங்ஙனே ஆறியிருக்கும்படி; தென்திருப்பேரையில் சென்று சேர்ந்தே காதல் தீர அனுபவித்துக் களிப்பேனென்றதாயிற்று.

கீழே (5-3-4) * ஊரவர் கவ்வையெருவிட்டு என்ற பாசுரத்தின் உரையையும் இங்கே நோக்கிக் கொள்வது. .... (அ)

சேர்வன்சென்றேன்னுடைத்தோழிமீர்காள்! அன்னையர்காளேன்னைத்தேற்றவேண்டா *
நீர்களுரைக்கின்றதேன்னிதற்கு? நெஞ்சும்நிறைவுமெனக்கிங்கில்லை *
கார்வண்ணன்கார்க்கடல்ஞாலமுண்ட கண்ணபிரான்வந்துவீற்றிருந்த. *
ஏர்வளவொண்கழனிப்பழனத் தென்திருப்பேரெயின்மாநகரே. (கூ)

என்னுடை தோழி மீர்காள்	எனக்கு ஹிதஞ் சொல்லுகின்ற தோழிமார்களே!	கார் கடல் ஞாலம் உண்ட	கருங்கடல் சூழ்ந்த ஜகத்தை (ப்ரளயங்கொள்ளாதபடி) அமுது செய்தவனுமான
அன்னையர்காள்	அப்படிப்பட்ட தாய்மார்களே!	கண்ணபிரான்	ஸ்ரீக்ருஷ்ணபகவான்
என்னை தேற்ற வேண்டா	(எல்லை கடந்த) என்னைத் தேற்றுவதில் நீங்கள் முயல வேண்டா;	வந்து வீற்றிருந்த	நித்ய ஸந்நிதி பண்ணியிருக்குமிடமாய்
இதற்கு	எனது இந்த நிலைமைக்கு	ஏர் வளம்	எரினுடைய மிகுதியையுடைத்தாய்
நீர்கள் உரைக்கின்றது என்	நீங்கள் சொல்லக்கூடியவார்த்தை என்ன இருக்கிறது?	ஒண் கழனி பழனம்	அழகிய கழனிகளையும் நீர்நிலங்களையுமுடைத்தான
எனக்கு நெஞ்சும் நிறைவும் இங்கு இல்லை	எனது நெஞ்சும் அடக்கம் முதலிய குணங்களும் இங்கில்லையன்றோ; (ஆதலால்)	தென் திரு பேர் எயில் மா நகர்	தென்திருப்பேரெயிலென்கிற திருப்பதியை
கார் வண்ணன்	நீலவண்ணனும்	சென்று சேர்வேன்	சென்று சேரக்கடவேன்.

* * *—கீழே தென்திருப்பேரெயில் சென்று சேர்வனென்று கூறின தலைவியை நோக்கித் தோழிமாரும் தாய்மாரும் 'இங்ஙனே பதறவேணுமோ? அப்பெருமானே சடக்கென இங்கு எழுந்தருள்வன் காண்; நீ புறப்பட்டுச் செல்லுகை தானும் யுக்தமன்று' என்று சொல்ல, அதற்கு 'நீங்கள் என்னை யொன்றும் தேற்றவேண்டா; போகைக்கு நீங்கள் சொல்லுகிற விரோதமென்? போனால் என்ன விரோதம் விளையும்?' என்று இவள் சொல்ல, 'உன்னுடைய தைர்ய சாதுர்யாதிகளுக்குப் போராது' என்று அவர்கள் சொல்ல, அவனுடைய ஸௌந்தர்ய ஸௌசீல்ய காருண்யாதி குணங்களாலே என்னுடைய தைர்ய சாதுர்யாதிகள் அபஹரிக்கப்பட்டுப் போயினவாதலால் உங்கள் வார்த்தை கேட்கும் நிலைமையில் நானில்லை; என்னோடு கலக்கைக்காக அவன் வந்தெழுந்தருளியிருக்கி தென்திருப்பேரையே சென்று சேர்வேன் காண்மின் என்கிறாள்.

கீழே 'சேர்வன் சென்று' என்றதையே இங்கு மீண்டும் அநுபாஷித்திருக்கையாலே தோழிமாரும் தாய்மாரும் அதை ஆக்ஷேபித்துக் கூறினமை புலப்படும். என்னுடைத் தோழிமீர்காள் அன்னையர்காள் என்றது-க்ஷேபித்துச் சொல்லுகிறபடி. நீங்கள் எனக்குத் தோழிமாராகவும் தாய்மாராகவும் வாய்த்தது அழகிதாயிருந்தது!, இதுவோ நீங்கள் எனக்கு ப்ரியமும் ஹிதமும் பார்ப்பது! என்று க்ஷேபிக்கிறபடி. என்னைத் தேற்றவேண்டா என்கையாலே அவர்கள் இவளைத் தேற்றினது தெரிகின்றது; 'அம்மா! நீ இங்ஙனம் பதறலாகாது, வருந்தலாகாது, அவன்தானே சடக்கென வருவான்காண்; வந்தபோது ஸேவிக்கப்ராப்தமென்றிருப்பதன்றோ தகுதி' என்றிங்ஙனே பல சொல்லித் தேற்றினார்கள் போலும்; இங்ஙனே

தேற்றுதல் வேண்டா வென்கிறாளாயிற்று. நானே திண்ணிய அத்யவஸாயமுடையவள்; என் திறத்தில் அறிவிலிகளான உங்களது பேச்சு பயன்படாதென்றவாறு.

இதற்கு நீர்களுரைக்கின்றதேன்? என்னுடைய நிலைமை உங்கட்குத் தெரியாமையில் லையே; எப்படிப்பட்ட நிலைமைக்கு எப்படிப்பட்டவார்த்தை சொல்லவேணு மென்பதுங்கூட அறியாத நீங்கள் அந்தோ! என் சொல்லுகிறீர்கள்? என்கிறாள். நீங்கள் சொல்லுமதைக் கேட்பதற்கு நெஞ்சு வேணுமே; மநஸ்ஸஹகாரமில்லாதவர்க்கு நீங்கள் பேசி என்ன பயன்? என்னெஞ்சு எங்கே புக்கதோ அங்கே போய்ச் சொல்லுங்கோளென்கிறாள்.

அம்மா! நெஞ்சு இங்கில்லை யென்கிறாயே, நெஞ்சில்லையாகில் இந்த வார்த்தை தானும் நீ சொல்லமுடியாதன்றோ; எங்களைக் கண்டித்து நீ இங்ஙனே பலவார்த்தைகள் சொல்லும்போதைக்கு நெஞ்சு உடனிருந்துதானே யாகவேண்டும் என்று அவர்கள் சொல்ல, நிறைவு எனக்கில்லை என்கிறாள். அடக்கம் குடிபோயிற்றென்கை. உங்களோடு பேசுவதற்குரிய நெஞ்சு வேறு; உங்கள் பேச்சைக் கேட்பதற்குரிய நெஞ்சு வேறு. பேசுகைக்குரிய செஞ்சு இருந்தாலும் உங்கள் பேச்சுக் கேட்கைக்குரிய நெஞ்சு இல்லை காண்மினென்கிறாள் என்றுங் கொள்க.

நெஞ்சும் நிறையும் போனவிடம் சொல்லுகிறது பின்னடிகளில். கார்வண்ணன் என்பதற்கு நம்பிள்ளையீடு; "தாய்மார் தோழிமாரானவர்கள் வார்த்தை கேளாதபடியாம் வடிவு படைத்தவன்" என்று. அப்பெருமானது திருமேனி நிறத்தில் நான் ஈடுபட்டவளாதலால் உங்கள் பேச்சு கேட்கமாட்டேனென்றவாறு. வெறும் வடிவழகு மாத்திரமேயல்ல; ஆபத்து வந்தால் ரக்ஷித்து விடுமவன் என்கிறது கார்க்கடல் ஞாலமுண்ட என்பதனால்.

இப்படிப்பட்ட எம்பெருமான் தன் பெருமையெல்லாம் தோற்றவந்து எழுந்தருளியிருக்குமிடமான நீர் நிலவளம் மிக்க திருப்பேரெயிலாகிற மாநகரிலே சென்று சேர்வேனத்தனை; உங்கள் தடைக்கு மீளமாட்டேன், அவ்வழியிலும் நிற்கமாட்டேன் என்றாளாயிற்று.(அ)

நகரமும்நாடும்பிறவும்தேர்வேன் நாணெனக்கில்லையென்தோழிமீர்காள்! *
சிகரமணிநெடுமாடநீடு தென்திருப்பேரெயில்வீற்றிருந்த *
மகரநெடுங்குழைக்காதன்மாயன் நூற்றுவரையன்றுமங்கநூற்ற *
நிகரில்முகில்வண்ணன்நேமியான் என்னெஞ்சம்கவர்ந்தெனையூழியானே. (௯)

என் தோழிமீர்காள்	எனது தோழிகளே!
சிகரம் மணி நெடு மாடம்	சிகரங்களையுடைத்தாய் மணிமயமாய் ஓங்கின மாடங்களையுடைத்தாய்
நீடு	நெடுங்காலம் விளங்குமதான
தென் திருப்பேரெயில்வீற்றிருந்த	தென் திருப்பேரைப்பதியிலே எழுந்தருளியிருக்கின்ற
மாயன்	ஆச்சர்யகுண சேஷ்டிதங்களையுடையனாய்
அன்று	பாரதயுத்தம் நடந்தவக்காலத்தில்
நூற்றுவரை	துரியோதநன் முதலிய நூறுபேர்களை
மங்க நூற்ற	தொலையும்படி ஸங்கல்பித்தவனும்
நிகர் இல் முகில் வண்ணன்	ஒப்பற்ற காளமேக வண்ணனும்
நேமியான்	திருவாழியை யுடையனுமான
மகரநெடுங்குழைக்காதன்	மகரபூஷணப் பெருமான்
என் நெஞ்சம் கவர்ந்து	எனது நெஞ்சை அபஹரித்துக்கொண்டு
எனை ஊழியான்	எத்தனைகாலத்தான்! (அவன் என்னெஞ்சைக் கவர்ந்தது இன்று நேற்றோ?) (ஆனபின்பு)
நகரமும் நாடும் பிறவும் தேர்வேன்	நகரங்களிலும் நாடுகளிலும் மற்றுமுள்ள விடங்களிலும் (நானே சென்று) ஆராயக்கடவேன்;
எனக்கு நாண் இல்லை	அதுபற்றிஎனக்கு லஜ்ஜையில்லை.

* * *—சென்று சேர்வேன், சென்று சேர்வேனென்று பலகாலுஞ் சொன்ன பராங்குச நாயகியை நோக்கி 'அம்மா நீயே சென்று சேர்ந்தையாகில் ஊரும் நாடும் மற்றுமெல்லாரும் உன்னைப் பழி சொல்லாரோ' என்று தோழிமார் சொல்ல, 'அப்படி பழி சொல்லுவாரையன்றோ நான் தேடுகிறது' என்று இவள் சொல்ல, 'பழி சொன்னால் உனக்கு லஜ்ஜையாகாதோ?' என்று பின்னையும் தோழிமார் கேட்க, அவனுடைய அழகினாலும் ஆச்சர்ய திவ்ய சேஷ்டிதங்களாலும் என்னுடைய நெஞ்சும் லஜ்ஜையும் அபஹரிக்கப்பட்டு எத்தனையோ காலமாயிற்றே!, ஆதலால் இனித் தென்திருப்பேரையிலே நானே போகத்தடையென்? என்கிறாள்.

நகரமும் நாடும் பிறவும் தேர்வேன்—என்பதற்கு நகரம் முதலான விடங்களிலே சென்று எம்பெருமானைத்தேடுவேன் என்று பொருள்படவுங் கூடும்; அதுவன்று பொருள். "படைவீட்டிலும் நாட்டிலும் பத்தநாதிகளிலும் பழி சொல்லுவாரைத் தேடுவேன்" என்பது பூருவர்களின் வியாக்கியானம். எம்பெருமானை நான் தேடுகிறேனல்லேன், பழி சொல்லுவாரையே தேடுகிறேனென்கிறாள். அதாவதென்னென்னில்; பழிசொல்லுகிறவர்கள் அவனையும் இவளையும் சேர்த்தன்றோ பழி சொல்லுவது; அதுதானே இவளுக்குப் பரமோத்தேச்யமென்று காட்டினபடி. அவனோடு எனக்குச் சேர்த்தியில்லையேயாகிலும் பழிசொல்லுவாருடைய கருத்தாலேயாகிலும் சேர்த்தி நேர்கின்றதே, அதுவேயெனக்கு உவப்பு என்கிறாள் போலும்.

பழிக்கு அஞ்சவேண்டியிருக்க, பழி சொல்லுவாரைத் தேடுகிறேனென்கிறவிது ஸ்த்ரீத்வகுணத்திற்குப் பொருந்துமோ வென்ன, நாணெனக்கில்லை யென்கிறாள்.

அப்படியா? இந்த நிலைமை எப்போது முதற்கொண்டு? என்றார்கள்; அதற்கு விடையளிக்கிறாள் மேல் மூன்றடிகளால். மகரநெடுங் குழைக்காத னென்று இத்தலத்தெம்பெருமான் திருநாமம். மகராயத கர்ணபாஶ: என்று வடமொழி வழக்கு. இங்கே ஒரு சிறிய ஆராய்ச்சி; மகரநெடுங்குழைக்காதன் என்று ஆழ்வாரருளிச் செய்ததனால் அத்திருநாமம் வழங்கலாயிற்றா? அல்லது, ஏற்கெனவே வழக்கத்திலிருந்த திருநாமத்தை ஆழ்வார் எடுத்துரைத்தாரா? என்று சிலர் கேட்பதுண்டு. இரண்டுபடியும் ஸம்பாவிதமேயென்பர் பெரியோர். இந்த விசாரம் இத்தலத்தெம்பெருமான் திறத்தில் மாத்திரம் செய்வதன்று. மற்றும் பலதலத் தெம்பெருமான்களின் திருநாமங்களும் அருளிச் செயலிலுள்ளபடியே வழங்கி வருகின்றன. எம்பெருமான் திருநாமங்கள் மாத்திரமன்று; திருமோகூரில் தடாகத்தைத் தாளதாமரையென்றும், வானமாமலையில்தடாகத்தைச் சேற்றுத் தாமரையென்றும், அவ்விடத்துச் சோலையொன்றைப் தேனமாம் பொழிலென்றும், திருக்குடந்தையில் புஷ்கரிணியைப் பொற்றாமரை யென்றும், திருக்குறுங்குடியில் புஷ்கரிணியைக் கரண்டமாடு பொய்கையென்றும்..........இங்ஙனேயுள்ள பல வழக்குக்களிலும் இந்த ஆராய்ச்சி ஒக்கும். ஆழ்வார் திருவாக்குகளை மூலமாகக்கொண்டே இவ்வழக்குக்கள் தோன்றின வென்னலாம்.

"நூற்றுவரையன்று மங்க நூற்ற" என்ற சொற்சேர்த்தியை நோக்கி இங்கு நம்பிள்ளையருளிச் செய்வது பாரீர்—"துர்யோதநாதிகளை வெல்ல எண்ணினாற்போலே என்னெஞ்சை அபஹரிக்கைக்கு எத்தனை காலமெண்ணினானோ?" ... ... (கO)

ஊழிதோறூழியுருவும்பேரும் செய்கையும்வேறவன்வையம்காக்கும் *
ஆழிநீர்வண்ணனையச்சுதனை அணிகுருகூர்ச்சடகோபன் சொன்ன *
கேழிலந்தாதியோராயிரத்துள்ளிவை திருப்பேரெயில்மேயபத்தும் *
ஆழியங்கையனையேத்தவல்லாரவர் அடிமைத்திறத்தாழியாரே. (கக)

ஊழி ஊழி தோறு	கல்பங்கள் தோறும்
பேரும் உருவும் செய்கையும்	நாமம் ரூபம் வியாபாரம் ஆகிய இவற்றை
வேறவன்	வேறாகவுடையனாய்க்கொண்டு
வையம் காக்கும்	உலகங்களைக் காத்தருள்பவனாய்
ஆழி நீர் வண்ணனை	கடல்வண்ணனாய்
அச்சுதனை	அடியார்களை ஒருகாலும் நழுவ விடாதவனான பெருமானைக் குறித்து
அணி குருகூர் சடகோபன் சொன்ன	நம்மாழ்வார் அருளிச் செய்த
கேழ் இல்	ஒப்பில்லாத
அந்தாதி ஓர் ஆயிரத்துள்	அந்தாதித் தொடையான ஆயிரத்தினுள்ளும்
திருப்பேரெயில் மேய இவை பத்தும்	தென் திருப்பேரைப்பதி விஷயமான இப்பதிகத்தைக்கொண்டு
ஆழி அம் கையனை ஏத்த வல்லார் அவர்	கையுந் திருவாழியுமான எம் பெருமானைத் துதிக்கவல்லவர்கள்
அடிமை திறத்து	நித்ய கைங்கர்யத்திலே
ஆழியார்	ஆழ்ந்தவராவர்.

* * *—இத்திருவாய்மொழி கற்பார்க்கு பகவத் கைங்கர்யத்திலே அவகாஹனம் பலிக்குமென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். எம்பெருமானுக்கு ஸ்வத: நாமம் ரூபம் ஒன்றுமில்லையாயினும் ஆச்ரிதர்க்காக அவற்றைப் பரிக்ரஹிப்பதுண்டே; அங்ஙனம் பரிக்ரஹிப்பதுதான் ஒவ்வொரு யுகத்திலே ஒவ்வொரு வகையாயிருக்கும். யுகந்தோறும் ஆச்ரித ரக்ஷணத்துக்கீடான ரூபநாம சேஷ்டைகளை வெவ்வேறேயுடையனாய்க் கொண்டு ஜகத்தை ரக்ஷிக்குமவனான ஆழிநீர்வண்ணனை யச்சுதனைப் பற்றி ஆழ்வாரருளிச் செய்த ஒப்பிலாத ஆயிரத்தினுள் இவை பத்தையுங் கொண்டு ஸர்வேச்வரனைத் துதிக்க வல்லவர்கள் நித்ய கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தில் அபிஷிக்தராவர்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டிற்றாயிற்று.

வியாக்கியானங்களெல்லாவற்றையும் ஊன்றி நோக்குமிடத்து மூன்றாமடியில் "மேய பத்தால்" என்கிற பாடம் சிறக்குமென்று தோன்றுகிறது. "அடிமைத் திறத்து ஆழியாரே" என்பதற்கு இரண்டு வகையான பொருள் கூறுவர்; ஆழியார்—ஆழ்ந்தவர்கள். (அல்லது) திருவாழியாழ்வானைப் போன்றவர்கள். * கருதுமிடம் பொருது—கைவந்த சக்கரத்தன் * என்கிறபடியே திருவாழியாழ்வான் எம்பெருமான் திருவுள்ளம் பற்றுமிடமெங்குஞ் சென்று பணிசெய்து வருமா போலே விடுத்த திசைக்கருமந்திருத்துமவர்களென்றபடி. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம். நம்பிள்ளை திருவடிகளே சரணம்.
வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து—நான்காந் திருவாய்மொழி ஆழியெழ.

உரையவதாரிகை: கீழ்த் திருவாய்மொழியிலே ஆழ்வாருடைய பதற்றம் அளவுகடந்திருந்தது. * மண்திணி ஞாலமுமேழ்கடலும் நீள் விசும்புங் கழியப் பெரிதாகத் தாங்கொண்டகாதலை வெளியிட்டு, இப்படி கரைபுரண்ட காதலையுடைய நான் இங்கேயிருக்கில்லேன், தென் திருப்பேரையில் சென்று சேர்வேனத்தனையென்று சொல்ல, தோழிமார் தாய்மார் முதலானார் இது ஸ்வரூபஹானியென்று சொல்லித் தடுத்தவளவிலும் கேட்கமாட்டாதவராய்ப் பதறியே நின்றாராழ்வார்.

* தென் திருப்பேரெயில் சேர்வன் நானே * என்றும் * சேர்வன் சென்றே * என்றும் திண்ணமாகக் கூறின ஆழ்வார் புறப்பட்டுச் செல்லப்பார்த்தார். * காலாழும் நெஞ்சழியுங் கண்சுழலும் * என்னும்படியான நிலைமையிலே நின்றிருந்தாராகையாலே புறப்பட்டுச்செல்ல வலிமையற்றிருந்தார். வாய்கொண்டு பேசவும் முடியாதபடி பலமழிந்து கிடந்தவிவர்க்கு ஒரு வழியாலே பலமுண்டாக்க வேணுமென்று பார்த்தானெம்பெருமான். தன்னுடைய விஜயாபதான பரம்பரைகளைக் காட்டிக் கொடுத்தால் அவற்றைக்கண்டு பலம் மிக்குத் தரித்திருப்பர் என்று கருதி, உலகளந்தது, கடல் கடைந்தது, நிலமிடந்தது, பிரளயத்திலே உலக முண்டது முதலான அபதானங்களைக் காட்டிக் கொடுத்து, ஆழ்வீர்! இவற்றை யநுஸந்தித்துத் தரித்து வாழும்' என்ன, ஆழ்வாரும் அவ்பதானங்களை ஸமகாலத்திற் போலே கண்டு பாசுரந்தோறும் ஒவ்வொரு அபதானமாகப் பேசித்தரிக்கிறார் இத்திருவாய்மொழியில்.

ஆறுயிரப்படியில் பிள்ளானருளிச் செய்யும் அவதாரிகை பேரின்பமே வடிவெடுத்தது; அவ்விடத்து ஸ்ரீஸூக்திகள் வருமாறு;—

"இப்படி தென் திருப்பேரையிலே தாமே போக அத்யவஸித்திருந்த சமயத்தில் * யதா வ்ரஜதி ஸம்ஹ்ருஷ்ட: ஸம்ஹ்ருஷ்டோ நரஸ்ஸ்வா । முக்தாவாளிதிஸஹிதோ நாஸ்ஜிதீ நிவர்த்ததே ॥ ஸம்ஹ்ருஷ்டாஸ் வ நரர்ஹத் க ஜயேண ஸ்யேந வா । வளாரு ஸ்ஜநவஸ்ஸ்தி தஸ்ம் கஸஸ்ம் வஸிவஜ்ஜூதி என்னும் ப்ரக்ரியையாலே தென் திருப்பேரையிலே ம்ருகயார்த்தமாக வெழுந்தருளின பெரியபெருமாள் விஜயலக்ஷ்மீ பரிவ்ருதராய்க்கொண்டெழுந்தருளின படியைக் கண்டு நிரதிசயப்ரீதியுக்தராய் ஸம்ப்ராந்த மானஸராய்க்கொண்டு, * தஂஷ்ட்ரா ஸ்ஷா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் । பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே ॥ என்னும் ந்யாயத்தாலே ப்ரதிகூல நிரஸன ஜநிதச்ரமத்துக்கு சிசிரோபசாரமாகப் பெரியபெருமாளோடே ஸம்ச்லேஷித்து, ததீய திவ்யசேஷ்டிதங்களைச் சொல்லி; என்னப் பண் செய்தருளினபடியென்? பிரான் செய்தருளினபடி யென்? என்றநுபவிக்கிறார்".

ஆழியெழச் சங்கும்வில்லுமெழ * திசை
வாழியெழத் தண்டும்வாளுமெழ * அண்டம்
மோழையெழ முடிபாதமெழ * அப்பன்
ஊழியெழ உலகம்கொண்டவாறே. (க)

ஆழி எழ	திருவாழியாழ்வான் முன்னே உயர்ந்து தோன்றவும்	முடி பாதம் எழ	(வளர்ந்த விரைவிலே) திருமுடியும் திருவடியும் ஒக்கக்கிளம்பும்படியாகவும்
சங்கும் வில்லும் எழ	பாஞ்சஜந்யமும் சார்ங்கமும் தோன்றவும்	ஊழி எழ	(மாவலியால் துன்பப் பட்ட காலம்போய்) நல்ல காலம் வந்து தோன்றும்படியாகவும்
தண்டும் வாளும் எழ	கதையும் நாந்தகமும் தோன்றவும்	அப்பன்	ஸர்வேச்வரன்
திசை வாழி எழ	திசைகள் தோறும் மங்களாசாஸனகோஷம் கிளம்பவும் (உயர வளர்ந்தபடியாலே)	உலகம் கொண்ட ஆறு எ	(திரிவிக்ரமனாய்) உலகங்களையளந்து கொண்டபடி என்னே!.
அண்டம் மோழை எழ	அண்டகபாலம் பிளந்து ஆவரண ஜலம் குமிழி கிளம்பும்படியாகவும்		

* * *—முதன் முதலாக உலகளந்த விஜயாபதானத்தை அநுஸந்தித்து உகக்கிறார். உலகில், தலைவனை அரசனுக்கு ஒரு காரியம் ஆகவேண்டியிருந்தால் பரிகரங்கள் முன்னின்று காரியஞ் செய்து தலைவனுக்கு வெற்றியை யுண்டாக்கப் பார்ப்பதென்கிற ஒரு முறை

யுண்டே; அந்த ரீதியிலே, ஆயுதங்களில் தலைவனான திருவாழியாழ்வான் முந்துற முன்னம் வியாபரித்தபடியைப் பேசுகிறார் ஆழியெழ வென்று, பெருமாள் காட்டுக்கெழுந்தருளப் புறப்படுவதற்கு முன்னே இளைய பெருமாள் தாம் முற்பட்டதுபோல, எம்பெருமானுடைய திருவடி உலகளக்க நிமிர்வதற்கு முன்னே திருவாழியாழ்வான் தான் முன்னே உயர்ந்து தோற்றினானாயிற்று.

* கருதுமிடம் பொருது - கைந்நின்ற சக்கரத்தன் * என்கிறபடியே எம்பெருமான் நினைப்பிட்டவிடத்திலே சடக்கெனச் சென்று காரியம் தலைக்கட்டித் திரும்புமாற்றல் படைத்தவனான திருவாழியாழ்வான் 'இந்த மாவலியின் செருக்கை யடக்க தேவரீர் வேணுமோ? அடியேனுக்கு நியமித்தருளினால் ஒரு நொடிப் பொழுதில் நிறைவேற வேண்டிய காரியமன்றோ இது' என்று அவலீலையாகப் பேசுவான்போலே தான் முன்னே யெழுந்தானாயிற்று. எம்பெருமான் எந்த அவதார மெடுத்தாலும் திருவாழியாழ்வான் தான் முன்னிருந்து காரியஞ் செய்பவன். இதை ஸுதர்சநசதகத்தில் * [illegible] * என்கிற ஸ்ரீஸூக்தியாலே நன்குணரலாம். ராமாவதாரம் வராஹாவதாரம் நரஸிம்ஹாவதாரம் பரசுராமாவதாரம் முதலியவற்றில் திருவாழியாழ்வானுடைய ப்ரஸ்தாவம் இல்லையானாலும், ராமாவதாரத்தில் அம்பிலே ஆவேசித்தும், வராஹாவதாரத்தில் கோரப்பல்லிலே ஆவேசித்தும், நரஸிம்ஹாவதாரத்தில் திருவுகிரிலே ஆவேசித்தும், பரசுராமாவதாரத்திலே மழுவிலே ஆவேசித்தும் இப்படி ஒரோரவதாரந்தன்னிலே ஒரொருவஸ்துவாக இருந்து காரியஞ் செய்தவன் திருவாழியாழ்வானே யென்கிறது மேற்குறித்த ஸுதர்சநசதக ச்லோகம். * [illegible] * என்கிற அதற்கு முந்திய பாதமானது எம்பெருமானுடைய ஸங்கல்பமே தான் திருவாழியாழ்வானென்கிறது.

த்ரிவிக்ரமாவதாரத்திற்கு முந்தியதான வாமநாவதாரம் முதற்கொண்டே திருவாழியாழ்வான் காரியஞ் செய்து வருகிறானென்பதும் இங்கு அறியத்தக்கது. அது என்னென்னில்; வாமன மூர்த்தியின் வடிவழகாலும் மழலைச் சொல்லாலும் மனமகிழ்ந்த மஹாபலி மூவடி மண்ணைக்கொடுக்க யத்தனித்தவளவிலே, அவனுடைய ஆசாரியனான சுக்கிரன் எம்பெருமானது வடிவையும் வந்த வகையையும் பேச்சையும் ஊன்றிப்பார்த்து 'இவன் ஸர்வேச்வரன், தேவகார்யம் செய்யும் பொருட்டு உன் செல்வத்தை யெல்லாம் பறித்துப்போக வந்தான்; ஆகையால் நீஇவனுக்கு ஒன்றும் தரத்தகாது' என்று தானத்தைத்தடுக்க, அவன் அதை ஆதரியாமல் தாரைவார்த்து தத்தம் செய்யப்புக, ஜல பாத்திரத்தின் (திருக்காவிரியின்) த்வாரத்திலே அந்த சுக்ரன் புகுந்து கொண்டு தீர்த்தம் விழவொட்டாமல் தடுக்க, ஸ்ரீ விஷ்ணு த்வாரம் சோதிப்பவன் போல, தன்னுடைய திருக்கையிலணிந்த தர்ப்ப பவித்ரத்தின் நுனியால் அவனது கண்ணைக் குத்திக் கலக்க, அவனும் கண் கெட்டு அங்கு நின்றும் வெளிப்பட, பின்பு மாவலியினிடத்தில் நீரேற்றுப் பெற்றனனென்பது வரலாறு. இக்கதையை யருளிச் செய்யா நின்ற பெரியாழ்வார் * மிக்க பெரும் புகழ் மாவலி வேள்வியில் தக்கதிதன்றென்று தானம் விலக்கிய சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய சக்கரக்கையன் * என்றருளிச் செய்திருத்தலால் [அதாவது, துரும்பாற் கிளறிய சக்கரம் என்ற சொல்லாற்றலால்] *கருதுமிடம் பொருது-கைந்நின்ற சக்கரத்தன் * என்றபடியே திருமால் விரும்பிய இடங்களில் விரும்பின வடிவங் கொண்டு செல்லும் தன்மையுடைய திருச்சக்கரமே பவித்ரத்தின் வடிவத்துடன் நின்று சுக்கிரன் கண்ணைக் கலக்கியதாக ஆசிரியர் நிர்வஹிப்பதுண்டு. அஃது இங்கு அறியத்தக்கது.

ஈட்டு ஸ்ரீ ஸூக்தி;—"(ஆழியேழ.) இவன் வளர்ந்தருளுகைக்குக் கணிசித்தப்படியைக் கண்டு, தனியாக வொண்ணுதென்று பயப்பட்டுத் திருவாழியாழ்வான் ஒரு கையிலேயேறினர்."

சங்கும் வில்லுமேழ=தங்களுக்குள்ளே தலைவனை வொருவன் எழுந்து காரியஞ் செய்தால் மற்ற அநுசரர்கள் வாளாவிருக்க வொண்ணுமோ? அவர்களுமெழுந்து காரியஞ் செய்ய நேருமன்றோ; ஆகவே திருவாழியெழுந்தது கண்டு சங்கும் வில்லுமெழுந்தன. இங்கே, * இடங்கை வலம்புரி நின்றார்ப்ப, எரிகான்றடங்காரொடுங்கு வித்ததாழி, விடங்காலுந் தீவாயரவணைமேல் தோன்றல் திசையளப்பான், பூவாரடி நிமிர்த்த போது, * என்ற பூதத்தாழ்வார் பாசுரமும் அநுஸந்தேயம். சுக்கிரன் கண்ணைத் துரும்பாற் கிளரியும் மன்னுநமுசியை வானிற் சுழற்றியும் இப்படி எம்பெருமான் வெற்றி பெற்று உலகங்களை யளக்கப்பெற்ற ஸந்தோஷமிகுதியினால் திருச்சங்காழ்வான் இடத்திருக்கையிலிருந்துகொண்டு பகைவர் அஞ்சி நடுங்கும்படி பெருமுழக்கஞ் செய்தான். திருவாழியாழ்வான் வலத்திருக்கையிலிருந்து கொண்டு சத்துருக்கள் மண்ணுண்ணும்படி பெருஞ்சுடர் விட்டு ஜ்வலித்தான்—என்று தாற்பரியம்.

திசைவாழியேழ—திசைகள் தோறும் அநுகூலருடைய 'வாழி வாழி' யென்கிற மங்களாசாஸநத்வநி கிளர்ந்ததாயிற்று. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"அவனுக்கு என் வருகிறதோ வென்றாயிற்று திவ்யாயுதங்கள் கிளருகிறது; அவை தனக்கு என் வருகிறதோ வென்று * வடிவார் சோதிவலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு, படைபோர்புக்கு முழங்குமப் பாஞ்சசன்னியமும் பல்லாண்டு * என்னு நிற்பர்களிறே. * நின்கையில் வேல் போற்றி * என்று வேல் தனக்கும் பரிய வேண்டியிருக்குமிறே." என்று.

தண்டும் வாளுமேழ—பஞ்சாயுதங்களினுடையவும் எழுச்சியைச் சொல்ல நினைத்த ஆழ்வார் முன்னம் 'ஆழியெழச் சங்கும் வில்லுமெழ' என்று மூன்று ஆயுதங்களின் எழுச்சியைச் சொல்லி இப்போது மற்றை யிரண்டாயுதங்களின் எழுச்சியைச் சொல்லுகிறார். இடையில் "திசைவாழி யெழ" என்றதனால் அந்த திவ்யாயுதங்களுக்கும் மங்களாசாஸனம் பண்ணுவாருளரென்று சொன்னதாயிற்று.

அண்டம் மோழை யெழ—தாழ்வின்றி வளர்ந்தபடியாலே அண்டகபாலம் பிளந்து ஆவரண ஜலம் குமிழி கிளம்பும்படியாக என்றபடி. தன்னுடைய வளர்ச்சிக்கு அண்டாந்தராளம் இடம் போராமையாலே விம்மி அண்டபித்தி பிளந்து ஆவரண ஜலம் உள்ளே வந்து புகும்படியாக வென்கை.

முடி பாதமேழ—திருமுடியும் திருவடிகளும் ஒரு சேர எழ என்று இதனால் வளர்ந்தருளின சடக்கு சொன்னபடி. ஊழியேழ—ஆஸுரப்ரக்ருதியான மஹாபலி அஹங்கரித்திருந்த கொடிய காலம் தொலைந்து நல்லடிக்காலம் தோன்ற என்றபடி. ஊழி என்பது பொதுவாகக் காலத்தைச் சொல்லுமதானாலும் இங்கு ப்ரகரணம் நோக்கி விலக்ஷணகாலமென்று பொருள்படும். ஆகவிங்ஙனேயாக, அப்பன் உலகங் கொண்டவாறே—மஹோபகாரகனை ஸர்வேச்வரன் உலகத்தை அளந்து கொண்டபடி யென்னே! என்று ஈடுபடுகிறார். ... (க)

ஆறுமலைக்கு எதிர்ந்தோடுமொலி * அர
வூறுசுலாய் மலைதேய்க்குமொலி * கடல்
மாறுசுழன்று அழைக்கின்றவொலி * அப்பன்
சாறுபட அமுதம்கொண்டநான்றே. (உ)

அப்பன்	ஸர்வேச்வரன்	அரவு ஊறு சுலாய்	வாஸுகி யென்கிற பாம்பினு டம்பைச் சுற்றி
சாறு பட	(தேவர்களுக்கு) மஹோத்ஸவ முண்டாம்படியாக	மலை தேய்க்கும் ஒலி	மந்தா மலையிலே தேய்க்கிற ஒலியும்
அமுதம் கொண்ட நான்று	(கடல் கடைந்து) அமுதங் கொண்ட காலத்திலே,	கடல் மாறு சுழன்று	கடலானது இடம் வலமாக மாறிச் சுழன்று
ஆறு	(கடலிலே சென்று சேர்வதற் காக வந்து கொண்டிருந்த) ஆறுகளானவை	அழைக்கின்ற ஒலி	கோஷிக்கிற கோஷமும் உண்டாயின.
மலைக்கு எதிர்ந்து ஓடும் ஒலி	தங்கள் பிறப்பிடமான மலைகளை யே நோக்கித் திரும்பி யோடு கிற ஒலியும்,		

* * *—கடல் கடைந்தபடியை யநுஸந்தித்து ஈடுபடுகிறார். துர்வாஸமுனிவனுடைய சாபத்தினால் தேவர்களினுடைய செல்வம் யாவும் ஒழிய, அசுரர் வந்து பொருது அமரரை வெல்ல, பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து அப்பிரான் அபயமளித்துக் கட்டளையிட்டபடி அசுரர்களையும் துணைகொண்டு மந்தரமலையை மத்தாக நாட்டி வாசுகியென்னும் மகாநாகத்தைக் கடைக்கயிறாகப் பூட்டிப் பாற்கடலைக் கடைந்ததாகப் புராண வரலாறு அறிக.

மஹா நதிகளெல்லாம் மலைகளினின்று பெருகிக் கடலிலே வந்து சேருமே; அப்படி சேருவதற்காக ஆறுகள் புறப்பட்டு வந்துகொண்டிருந்தனவாம். கடைகிறபோது மலைகளிற் காட்டில் கடல் உயருகையாலே ஆறுகள் எதிர்வெள்ளங் கோத்து மலைகளை நோக்கியே திரும்பியோடுகிற வோசை விலக்ஷணமாயிருந்ததென்று முதலடியாற் சொல்லுகிறது. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி;—'கடலிலே மந்தரத்தை நட்டவாறே கடல் கொந்தளித்து ஸஹ்யம் போய்த் தாழ்ந்து கொடுத்தது; நீரானது தாழ்ந்த விடத்தே ஓடக்கடவதிறே. ஆறுகளானவை மலையைக் குறித்து எதிரிட்டோடுகிற போதை த்வநியானது இவர்க்குச் செவிப்படுகிறபடி. இவர்க்குக் காலத்ரயத்திலுமுள்ள தெல்லாம் தெரியும்படியிறே அவன் வெளிச்சிறப்பித்தது."

அரவூறு சுலாய் மலை தேய்க்கு மொலி—'ஊறு' என்று பாம்பினுடம்புக்குப் பெயர்; வடமொழியில் (ஹொ:ம) என்பது போல. வாஸுகியினுடைய உடலைச் சுற்றிக் கடைகிற போதுண்டான சரசரவென்கிற த்வனியும். கடல்மாறு சுழன்றழைக்கின்ற வொலி—மந்தர மலை திரிந்து வருகிறபோது கடல் இடமும் வலமுமாக எதிராகச் சுழன்று தன்னிலே யெதிர்த்து கோஷிக்கிற கோஷமும். இவை யெப்போது உண்டாயின வென்னில்;

சாறுபட அப்பன் அமுதங் கொண்ட நான்று—தேவர்களுக்கு மஹோத்ஸவமுண்டாம்படியாக என்னப்பன் கடலைக் கடைந்து அமுதங் கொண்ட காலத்திலே. சாறு—உத்ஸவமும் ஸாரமும். சாறுபட—நீர்கோதாம்படியென்று ஆறாயிரம். .... (உ)

நான்றிலவேழ்மண்ணும் தானத்தவே * பின்னும்
நான்றிலவேழ்மலை தானத்தவே * பின்னும்
நான்றிலவேழ்கடல் தானத்தவே * அப்பன்
ஊன்றியிடந்து எயிற்றில்கொண்டநாளே. (ங)

அப்பன்	ஸர்வேச்வரன்	ஏழ் மலை	ஸப்த குலாசலங்களும்
ஊன்றி இடந்து எயிற்றில் கொண்ட நாள்	(பிரளயங்கதையான பூமியைக்) குத்தியிடந்தெடுத்து எயிற்றின் மேலே கொண்டகாலத்தில்	நான்றில	சலியாதவையாகி
ஏழ் மண்ணும்	ஏழு தீவுகளான பூமி பேதங்களானவை	தானத்த	தங்கள் ஸ்தானத்திலேயே யிருந்தன;
நான்றில	நழுவாதவையாய்	பின்னும்	மேலும்;
தானத்த	தங்கள் ஸ்தானத்திலேயே யிருந்தன;	ஏழ் கடல்	ஸப்த ஸாகரங்களும்
பின்னும்	மேலும்	நான்றில	உடைந்தொழுகாதவையாய்
		தானத்த	தங்கள் ஸ்தானத்திலேயே யிருந்தன;
		ஏ	ஆச்சரியம்!

* * *—மஹாவராஹ மூர்த்தியாகி நிலத்தை யிடந்தெடுத்த வரலாற்றை யநுஸந்திக்கிறார் இப்பாட்டில். ரஸாதலத்தில் கிடந்த பூமியை என்னப்பன் திருவெயிற்றாலே இடந்தெடுத்தருளின போது ஸப்தத்வீபங்களும் ஸப்த குலபர்வதங்களும் ஸப்த ஸாகரங்களும் தம் தம் ஸ்தானங்களிலே நிச்சலமாயிருக்கும்படி யெடுத்தருளினான், இதென்ன ஆச்சரியம்! என்கிறார். ஒரு வ்யாபாரத்தாலே செய்ததாயிராமல் ஸ்வஸங்கல்பத்தாலே ஆச்சரியமாகச் செய்த வித்தனையென்று ஈடுபடுகிறபடி. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"இவன் பெரிய வானைத் தொழிலைச் செய்யா நிற்கச் செய்தேயும் முன்பு போலே ஒரு குறையற உண்பாருடுப்பாராய்ச் செல்லுகிறபடி. ஆதாரமானவன் கூட நிற்கையாலே இவற்றுக்கு ஒரு குறை வாராதே."

முன் ஒரு காலத்தில் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக் கொண்டு கடலில் மூழ்கிப்போன ஹிரண்யாக்ஷனென்னுமசுரனைத் திருமால் மஹாவராஹமாகத் திருவவதரித்துக் கொன்று பூமியைக் கோட்டாற்குத்தியெடுத்திக் கொண்டு வந்து பழையபடி விரித்தருளினன் என்பது வராஹாவதார வரலாறு. அந்தக் கோலாஹலத்தில், ஸப்த த்வீபரூபமான பூமி பேதங்களும் குலாசலங்களும் ஏழ்கடல்களும் ஒரு மாறுபாடடையாதே நிச்சலமாகி ஸ்வஸ்வ ஸ்தானங்களிலே யிருந்தன வென்பது இங்கு ஆச்சரியம். .... (ரு.)

நாளுமெழ நிலநீருமெழ * விண்ணும்
கோளுமெழ எரிகாலுமெழ * மலை
தாளுமெழச் சுடர்தானுமெழ * அப்பன்
ஊளியெழ உலகமுண்டவூணே. (சு)

நாள் எழவும்	காலவ்யவஸ்தை பேரும்படியாகவும்	மலை தாள் எழவும்	மலைகள் அடிபெயர்ந்து போகவும்
நிலம் நீர் எழவும்	நிலமும் நீரும் நிலைகுலைந்து போகவும்	சுடர்தானும் எழ	நக்ஷத்திரம் முதலிய சுடர்ப் பொருள்கள் நிலைகுலையவும்
விண்ணும் கோளும் எழ	ஆகாசமும் க்ரஹங்களும் நிலைகுலைந்து போகவும்	அப்பன்	ஸர்வேச்வரன்
எரி காலும் எழ	நெருப்பும் காற்றும் நிலைகுலைந்து [போகவும்	ஊளி எழ உலகம் உண்ட ஊண்	ஆரவாரமுண்டாம்படி உலகங்களை உண்டருளின உணவு
		ஏ	என்ன ஆச்சரியம்!

* * *—மஹாப்ரளயத்தில் ரக்ஷித்தபடியை இப்பாட்டில் அருளிச் செய்கிறார். கலையென்றும் காஷ்டையென்றும் முஹூர்த்தமென்றும் நாழிகையென்றும் யாமமென்றும் இரவென்றும் பகலென்றும் சொல்லுகிற காலப்பகுப்புகள் ஒன்றுமின்றியே காலவ்யவஸ்தை நிலைகுலைந்து போகப்பட்டதாம் பிரளயத்தில்; அது சொல்லுகிறது நாளுமெழ என்று. கால நிபந்தனைக்குக் காரணம் ஆதித்யனுடைய கதியேயாதலால் பிரளயத்தில் அவ்வாதித்தியன் இலனாகவே காலவ்யவச்சேதங்களும் இல்லையாயினவென்க. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி

காண்மின்;—"ஆண்டென்றும் மாஸமென்றும் நாளென்றும் கலை யென்றும் காஷ்டை யென்றும் சொல்லுகிறவையெல்லாம் ஆதித்யனுடைய ஸஞ்சாரமதியாலே வருகிறவையிறே; வ்யவஸ்தாபகனான ஆதித்யன் உள்ளே புக்கால் வ்யவஸ்தாப்யமான இவையும் போமித்தனையிறே."

நிலம் நீரும் விண்ணும் கோளும் எரிகாலும் மலைசுடர் தானுமெழ ப்ருதிவி முதலான பஞ்ச பூதங்களும் ஸகலகுலாசலங்களும் நக்ஷத்ர ஜ்யோதிஸ்ஸுக்களும் ஆகிய இவையெல்லாம் உள்ளேபுக உண்டருளினனென்கிறது.

மலைதாளுமெழ என்ற விடத்து 'மலையும் தாளும்' என்று பொருளன்று; மலைகளானவை தாளோடே (அடியோடே) பறிந்து உள்ளே புக என்றபடி. வேர்க்குருத்தோடே பறிய வென்க.

ஊளியெழ—ஊளி யென்று ஓசைக்குப்பெயர்; கீழ்ச்சொன்னவற்றையெல்லாம் உறிஞ்சியுண்கிறபோது ஓசையுண்டாகுமே; அது சொன்னபடி. இனி, ஊளி யென்று பசிக்கும் பேருண்டு; அப்பொருளை முக்யமாகக் கொண்டார் பன்னீராயிரவுரைகாரர்; "பசித்துண்டானென்று தோன்றும்படியாக" என்பது உரை. .... (௪)

ஊணுடைமல்லர் ததர்ந்தவோலி * மன்னர்
ஆணுடைச்சேனை நடுங்குமோலி * விண்ணுள்
ஏணுடைத்தேவர் வெளிப்பட்டவோலி * அப்பன்
காணுடைப்பாரதம் கையறைபோழ்தே. (௫)

அப்பன்	ஆச்ரித பக்ஷபாதியான கண்ணபிரான்	ஆண் உடை சேனை	வீரபுருஷர்களை யுடைத்தான சேனைகளானவை
காணுடை பாரதம் கைஅறைபோழ்து	ஆச்சரியமான பாரதயுத்தத்தை அணிவகுத்தபோது;	நடுங்கும் ஒலி	நடுங்குகிற சத்தமும்
ஊண் உடைமல்லர் ததர்ந்த ஒலி	வலியை யூட்டும் உணவுகளைக் கொண்ட பெருமிடுக்கரான மல்லர்கள் (த்வந்த்வயத்தம் பண்ணி) நெரிந்துவிழுகிற ஓசையும்	விண்ணுள்	விண்ணுலகத்திலே
		ஏண் உடை தேவர்	மதிப்பாக எண்ணப்பட்ட தேவர்கள்
மன்னர்	அரசர்களினுடைய	வெளிப்பட்ட ஒலி	(யுத்த விநோதம் காண்கைக்காக) வெளிப்பட்ட ஓசையும் ஆயின

* * *—கண்ணபிரான் பாரதப்போர் நிர்வஹித்தருளின சதிரைப்பேசுகிறுரிப்பாட்டில். மல்லர்கள் ஒருவரோடொருவர் பொருது நெரிந்து விழுந்த வோசை அப்போது வலிதாயிருந்தது. வீரபுருஷர்கள் நிறைந்த ராஜஸேனைகளானவை "க்ருஷ்ணன் ஸாரதியாய் நிற்கிறுன்" என்று கேட்டவாறே குடல் குழம்பிக் கூப்பிட்ட வொலி மிகுந்திருந்தது. விண்ணவர்கள் இந்த யுத்தத்தின் அதிசயம் காண்கைக்காக வெளிப்பட்டு நின்று ஸ்தோத்ரம் பண்ணுகிற முழக்கம் விஞ்சியிருந்தது. ஆக இத்தகைய கோஷங்கள் நிரம்பப்பெற்று நடந்தது பாரதப்போர் என்றதாயிற்று.

மல்லர்—ஆயுதமொன்றும் கையிலின்றியே உடலோடு உடல் நெரியப்பொருபவர் மல்லர் எனப்படுவர். யுத்தத்திற்கென்றே அவர்கட்கு அதிகப்படியான உணவுகளையிட்டு வளர்ப்பர்களாதலால் 'ஊணுடை' என்று சிறப்படைமொழி கொடுக்கப்பட்டது.

ஆணுடைச்சேனை=பீஷ்மர் த்ரோணர் என்னும்படியான மஹாபுருஷர்களைத் தலைவராகக் கொண்ட சேனையாதலால் ஆணுடைச்சேனையென்றது. கண்ணபிரான் யுத்தத்தில்

ஒரு காரியமும் செய்யாமற்போனாலும் அவன் பாண்டவ பக்ஷபாதியாயிருக்கின்றானென்று கேட்டவாறே அந்த சேனையடங்கலும் நடுங்கும்படியாயிற்று. ஏனுடைத்தேவர் என்றது * ஸப்ஹஸ்ரவிவஸ்ஷூ: * என்பது முதலான பல தேவ வாக்கியங்களிலே ஒரு கோவையாக எண்ணப்பட்ட தேவர்கள் என்றபடி. காணுடைப்பாரதம்—விரும்பிக்காணவேண்டும்படியான ஆசையை விளைக்கவல்ல பாரதப்போர் என்பது கருத்து. கையறை போழ்து—தொடங்கின காலத்தில் என்பது தேர்ந்த பொருள். “கையுமணியும் வகுத்து அங்கோடிங்கோடுலாவிப் படைபொருத்தி நீங்களின்னபடி செய்யக்கடவிகோள் நாங்களின்னபடி செய்யக்கடவோமென்று கை தட்டிவிட்டபோது” என்பது ஈடு. .... (ரு)

போழ்துமேலிந்த புன்சேக்கரில் * வான்திசை
சூழுமேழுந்து உதிரப்புனலா * மலை
கீழ்துபிளந்த சிங்கமோத்ததால் * அப்பன்
ஆழ்துயர்செய்து அசுரைக்கோல்லுமாறே. (சு)

போழ்து மெலிந்த	போதுபோனவாறே	அசுரை கொல்லும் ஆறு	இரணியாசுரனைக் கொன்ற விதமானது
புன் செக்கரில்	செக்கர் வானமிடுகிறவளவிலே		
வான் திசை	ஆகாசமும் திக்குக்களும்		
சூழும் எழுந்து	சூழக்கிளம்பி	மலைகீழ்து பிளந்த சிங்க ஒத்ததும்	ஒரு மலையைக் கீழேயிட்டு அதன் மேலேயிருந்து அம்மலையைக் கீண்ட சிங்கம் போன்றிருந்தது,
உதிரம் புனல் ஆ	ரத்தவெள்ளமாம்படி		
அப்பன்	ஆச்ரித பக்ஷபாதியான நரஸிம்ம மூர்த்தியாய்		
ஆழ் துயர் செய்து	அளவிறந்த துன்பத்தை விளைத்து	ஆல்	ஆச்சரியம்

* * *—ப்ரஹ்லாதாழ்வானுக்காக இரணியனை வதைக்கும் போதுண்டான அதிசயத்தைக் கூறுவதிப்பாட்டு. தேவர் மனிதர் முதலிய எவ்வுயிர்களாலும் பகலிலும் இரவிலும் வானத்திலும் பூமியிலும் வீட்டின் அகத்திலும் புறத்திலும் தனக்கு மரணமுண்டாகாதபடி வரம்பெற்றவன் இரணியன். இவன் தேவர் முதலிய யாவர்க்கும் பல பல கொடுமைகளைப் பண்ணி அனைவரும் தன்னையே கடவுளாக வணங்கும்படி செய்து வருகையில், அவன் மகனை ப்ரஹ்லாதாழ்வான் இளமை தொடங்கி மஹா விஷ்ணு பக்தனாய்த் தந்தையின் கட்டளைப்படி முதலில் அவன் பெயரைச் சொல்லிக் கல்வி கற்காமல் நாராயணநாமம் சொல்லி வரவே கடுங்கோபம் கொண்ட இரணியன் ப்ரஹ்லாதனைத் தன் வழிப்படுத்துவதற்குப் பலவாறு முயன்றும் அங்ஙனம் வழிபடாதவனைக் கொல்வதற்கு என்ன வுபாயஞ் செய்தும் அவன் பகவானுடைய அநுக்ரஹ பலத்தினால் ஒரு கேடுமின்றியிருக்க, ஒரு நாள் சாயங்காலத்திலே அந்த ஹிரண்யன் தன் புத்திரனை நோக்கி ‘நீ சொல்லும் நாராயணனென்பான் எங்கேயுளன்? காட்டு என்ன; ‘தூணிலுமுளன், துரும்பிலுமுளன், எங்குமுளன்’ என்று அக்குமாரன் உறுதியாய்ச் சொல்ல, உடனே இரணியன் இங்கு உளனோவென்று சொல்லி எதிரில் நின்ற தூணைப் புடைக்க உடனே அதிலிருந்து திருமால் மநுஷ்யரூபமும் சிங்கவடிவுங் கலந்த நரசிங்க மூர்த்தியாய்த் தோன்றி இரணியனைப் பிடித்து வாசற்படியில் தன் மடிமீது வைத்துக்கொண்டு தன் திருக்கையில் நகங்களால் அவன் மார்பைப் பிளந்து அழித்திட்டு ப்ரஹ்லாதனுக்கு அருள் செய்தானென்ற வரலாறு அறிக.

பொழுதுபோய்ச் செக்கர் வானமிடுகிறவளவிலே [இரணியனது வரத்தில் அகப்படாத ஸந்த்யாகாலத்திலே] பள்ளங்கண்டவிடமெங்கும் வெள்ளம் பரக்குமாபோலே ஆகாசமும் திசைகளும் நிரம்ப ரக்த வெள்ளம் கொழித்துப் பரம்பும்படி, ஒரு மலையைக் கீழேயிட்டுக்

கொண்டு மேலேயிருந்து அத்தை ஒரு மலை பிளக்கின்றதோ வென்னலாம்படி வியாபரித்தபடி யென்னே! என்று வியக்கிறார்.

கீழ்து—கிழித்து என்றுமாம். ஈற்றடியில் 'அசுரரை' என்பது பாடமன்று; அசுரை என்றே பாடம். தொகுத்தல் விகாரம். அசுரனை யென்றபடி. .... (௬)

மாறுநிரைத்து இரைக்கும்சரங்கள் * இன
நூறுபிணம் மலைபோல்புரள * கடல்
ஆறுமடுத்து உதிரப்புனலா * அப்பன்
நீறுபட இலங்கைசெற்றநேரே. (எ)

அப்பன்	ஸ்வாமியான ஸ்ரீராமபிரான்	இனம் நூறு பிணம்	இனமினமாய் நூறு நூறான ராக்ஷஸப்பிணங்களானவை
இலங்கை நீறு பட செற்ற நேர்	லங்காபுரி பஸ்மமாம்படி த்வம்ஸம் பண்ணின நேர்த்தி (எங்ஙனே யிருந்ததென்றால்)	மலைபோல் புரள	மலை மலையாகப் புரண்டுவிழவும்
		கடல்	கடலானது
மாறு நிரைத்து இரைக்கும் சரங்கள்	எதிரெதிராக நிறைக்கப்பட்டு சப்திக்கிற சரங்களாலே	உதிரம் புனல் ஆ ஆறு மடுத்து	ரக்த வெள்ளத்தாலே நிரம்பி ஆறுகளிலே எதிர்த்தோடும் படியாகவுமிருந்தது.

* * *—இலங்கையைப் பாழ்படுத்தின விதம் வியந்து கூறப்படுகிறது இதில். ஓயாதே அம்புகளைப் பொழிகையாலே அம்புகளானவை ஒன்றோடொன்று தாக்கி அதனாலெழுந்த வொலி விசைத்திருந்தது. அரக்கர் பிணங்களானவை நூறு நூறு இனமினமாக மலைபோலே புரண்டு விழ்ந்தன. கடல் ரத்தவெள்ளத்தாலே நிரம்பி ஆறுகளிலே வரவெதிர்க்க நின்றது.

பிராட்டி *அசிரேணைவ லங்கேயம் ஶ்மஶாநஸத்ருஶீ பவேத் * என்று சொன்னபடியே சுடுகாடாயிற்றென்கிறார் இலங்கை நீறுபட வென்று. ... . (எ)

நேர்சரிந்தான் கொடிக்கோழிகொண்டான் * பின்னும்
நேர்சரிந்தான் எரியுமனலோன் * பின்னும்
நேர்சரிந்தான் முக்கண்மூர்த்திகண்டீர் * அப்பன்
நேர்சரிவாணன் திண்டோள்கொண்டவன்றே. (அ)

அப்பன்	ஸ்வாமியான கண்ணபிரான்	பின்னும்	அதற்குமேலே
நேர் சரி வாணன்	முதுகுகாட்டியோடின பாணாஸுரனுடைய	எரியும் அனலோன்	ஜ்வலித்துக்கொண்டிருந்த அக்நியும்
திண்தோள் கொண்ட அன்று	திண்ணிய தோள்களைத் துணித்து வென்றிகொண்ட அக்காலத்திலே	நேர் சரிந்தான்	எதிர்நில்லாமல் சரிந்தான்;
		பின்னும்	அதற்குமேலும்
கோழி கொடி கொண்டான்	மயிலைக் கொடியாகக் கொண்ட ஸுப்ரமணியன்	முக்கண் மூர்த்தி	முக்கண்ணனான சிவபிரானும்
நேர் சரிந்தான்	எதிர் நில்லாமல் சாய்ந்துபோனான்;	நேர் சரிந்தான் கண்டீர்.	அப்படியே முதுகிட்டுப் போனான் கிடீர்.

* * *—பாணாஸுரயுத்த விஜயவ்ருத்தாந்தம் கூறுவதிப்பாட்டு. பலிசக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்த பாணாசுரனுடைய பெண்ணாகிய உஷை யென்பவள் ஒரு நாள் ஒரு புருஷனோடு தான் கூடியிருந்ததாகக் கனாக்கண்டு அவனிடத்தில் மிகுந்த ஆசை பற்றியவளாய்

தன் உயிர்த்தோழியான சித்ரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து அவள் மூலமாய் அந்தப் புருஷன் க்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு 'அவனைப்பெறுதற்கு உபாயம் செய்யவேண்டும்' என்று அத்தோழியை வேண்ட, அவள் தன் யோகவித்தை மஹிமையினால் த்வாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டுவந்து அந்த:புரத்திலே விட, உஷை அவனோடு போகங்களை அநுபவித்துவர, இச்செய்தியைக் காவலாளராலறிந்த அந்தப்பாணன் தன் சேனையுடன் அநிருத்தனை யெதிர்த்து மாயையினால் பொருது நாகாஸ்திரத்தினாற் கட்டிப்போட்டிருக்க, துவாரகையிலே அநிருத்தனைக்காணாமல் யாதவர்களெல்லாரும் கலங்கியிருந்த போது, நாரத முனிவனால் நடந்த வரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீ கிருஷ்ண பகவான் பெரிய திருவடியை நினைத்தருளி, உடனே வந்துநின்ற அக்கருடாழ்வானது தோள்மேலேறிக்கொண்டு பலராமன் முதலானாரோடுகூடப் பாணபுரமாகிய சோணிதபுரத்திற்கெழுந்தருளும்போதே அப்பட்டணத்தின் சமீபத்தில் காவல் காத்துக்கொண்டிருந்த சிவபிரானது பிரமத கணங்கள் எதிர்த்துவர, அவர்களை யெல்லாம் அழித்து, பின்பு சிவபெருமானால் ஏவப்பட்டதொரு ஜ்வரதேவதை மூன்று கால்களும் மூன்று தலைகளுமுள்ளதாய் வந்து பாணனைக் காப்பாற்றும்பொருட்டு யுத்தஞ்செய்ய, தானும் ஒரு ஜ்வரத்தை யுண்டாக்கி அதன் சக்தியினாலே அதனைத் துரத்திவிட்டபின்பு, சிவபிரானது அநுசரர்களாய்ப் பாணாஸுரனது கோட்டையைச் சூழ்ந்துகொண்டு காத்திருந்த அக்நி தேவர் ஐவரும் தன்னோடெதிர்த்துவர, அவர்களையும் நாசஞ் செய்து பாணாஸுரனோடு போர்செய்யத்தொடங்க, அவனுக்குப் பக்கபலமாக சிவபெருமானும் ஸுப்ரம்மண்யன் முதலான பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போரிட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்த்ரத்தைப் பிரயோகித்துச் சிவன் ஒன்றும் செய்யாது கொட்டாவி விட்டுக் கொண்டு சோர்வடைந்துபோகும்படி செய்து ஸுப்ரம்மண்யனையும் கணபதியையும் உங்காரங்களால் ஒறுத்து ஓட்டி, பின்னர் அநேகமாயிரம் ஸூர்யர்க்கு ஸமானமான தனது சக்கராயுதத்தை யெடுத்துப்பிரயோகித்து அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரைதாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையும் சிதைப்பதாக விருக்கையில் பரமசிவன் அருகில் வந்து வணங்கிப் பலவாறு பிரார்த்தித்ததனால் அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளிப் பின்பு அவன் தன்னைத் தொழுது அநிருத்தனுக்கு உஷையைச் சிறப்பாக மணம்புரிவிக்க அதன்பின் மீண்டுவந்தனன் என்பது பாணாஸுரபங்க விருத்தாந்தம்.

கோடிக்கோழிகொண்டான்— கோழியென்று மயிலுக்கும் பெயர். மயூரத்வஜனை ஸுப்ரஹ்மண்யன் முந்துற முன்னம் பங்கப்பட்டானென்கிறார். [பின்னும் எரியுமனலோன் நேர்சரிந்தான்] ஈடு—"அவ்வளவிலே நாற்பத்தொன்பது அக்நிகளும் பெரிய கிளர்த்தியோடே யெரிந்து தோற்றிற்று; அவையுமெல்லாம் பின்னிட்டன."

பரிவாரங்களெல்லாம் பங்கப்பட்டொழிந்த பின்பு தலைவனும் தொலைந்தானென்கிறது மூன்றாமடி. .... (அ)

அன்றுமண்ணீரெரிகால் விண்மலைமுதல் *
அன்றுசுடர் இரண்டுபிறவும் * பின்னும்
அன்று மழையுயிர்தேவும்மற்றும் * அப்பன்
அன்றுமுதல் உலகம்செய்ததுமே. (கூ)

அப்பன் ஸ்வாமியான ஸர்வேச்வரன்
முதல் முந்துறமுன்னம்
உலகம் செய்ததும் உலகங்களைப் படைத்ததும்,
அன்று அந்தவொரு க்ஷணத்திலேயாம்;

மண் நீர் எரி கால் விண்	பஞ்ச பூதங்களையும்
மலை முதல்	மலைகள் முதலானவற்றையும்
செய்ததும்	படைத்ததும்
அன்று	அந்த க்ஷணத்திலேயாம்;
சுடர் இரண்டு	சந்திரன் ஸூர்யன் ஆகிற இரண்டு சுடர்ப்பொருள்களையும்
பிறவும்	மற்றுமுள்ள நக்ஷத்ராதி தேஜஸ் பதார்த்தங்களையும்
செய்ததும்	உண்டாக்கினதும்
அன்று	அந்த க்ஷணத்திலேயாம்;
பின்னும்	அதுக்குமேலே
மழை	மேகங்களையும்
உயிர்	மழையினால் பிழைக்கும் உயிர்களையும்
தேவும்	மழைக்குக் கடவர்களான தேவர்களையும்
மற்றும்	மற்றுமுள்ள திர்யக் ஸ்தாவரங்களையும்
செய்ததும்	உண்டாக்கினதும்
அன்று	அந்த க்ஷணத்திலே,

* * *— இப்பாட்டின் கருத்தை இரண்டு வகையாக நிர்வஹிப்பர்கள் பூருவாசாரியர்கள். ஆதிஸ்ருஷ்டியைச் சொல்லுகிறதாக ஒரு நிர்வாஹம். கீழே பாணாஸுரனை வென்றி கொண்ட விருத்தாந்தம் சொல்லியிருப்பதாலும் மேற்பாட்டிலும் க்ருஷ்ணாவதார சரிதமொன்று சொல்லியிருப்பதாலும் இப்பாட்டையும் கீழ்ப்பாட்டோடே சேஷமாக்கி பாணாஸுரனுடைய செருக்கையடக்கினவன்று தான் ஜகத்து உண்டாயிற்றென்று ஆழ்வாருளிச் செய்கிறார் என்பதாக மற்றொரு நிர்வாஹம். இந்த நிர்வாஹத்தின்படி 'அன்று' என்று இப்பாட்டில் அடிதோறும் வருவது வாணனை வென்ற வக்காலத்திலே என்ற பொருளிலாம். ஆத்ய ஸ்ருஷ்டியைச் சொல்லுகிறதாக நிர்வஹிக்கிற பக்ஷத்தில் அன்றே என்றது 'எல்லா ஸ்ருஷ்டிகளும் ஏக க்ஷணத்திலேயே' என்றபடி. "க்ரமஸ்ருஷ்டியன்று; யுகபத் ஸ்ருஷ்டியென்று கருத்து" என்பது பன்னீராயிரவுரை. ... ... (௯)

மேய்நிரைகீழ்புக மாபுரள * சுனை
வாய்நிறைநீர் பிளிறிச்சோரிய * இன
ஆநிரைபாடி அங்கேயொடுங்க * அப்பன்
தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே. (௧௦)

மேய் நிரை	மேய்கிற பசுக்களானவை
கீழ் புக	கீழே யொதுங்கும்படியாகவும்
மா புரள	(கீழது மேலதாக மலையைப் பிடிக்கையாலே மலையிலுள்ள) மிருகங்கள் புரண்டுவிழும்படியாகவும்
சுனை வாய் நிறை நீர்	சுனைகளினுடைய வாயளவும் நிறைந்த நீரானது
பிளிறி சொரிய	பெரிய ஆரவாரத்தோடு சொரியும்படியாகவும்.
இனம் ஆ நிரை பாடி அங்கே ஒடுங்க	மிகவும் ஸம்ருத்தமான திருவாய்ப்பாடியானது அங்கே அடங்கும்படியாகவும்
அப்பன்	கண்ணபிரான்
தீ மழை காத்து	விநாச ஹேதுவான மழையைத் தடுக்க
குன்றம் எடுத்தான்	கோவர்த்தன மலையைக் குடையாகத் தூக்கினான்.

* * *—திருவாய்ப்பாடியில் ஆயர்கள் வழக்கப்படி இந்திரபூஜைக்கென்று சமைத்த சோறு முதலியவற்றையடங்கலும் கண்ணபிரான் அவ்விந்திரனுக்கு இடவொட்டாமல் கோவர்த்தன மலைக்கு இடுவித்துப் பின்பு தானே ஒரு தேவதாரூபங்கொண்டு அவற்றை முற்றும் அமுது செய்துவிட, பிறகு இந்திரன் பசிக்கோபத்தினால் மேகங்களை ஏவி ஏழுநாள் விடாமழை பெய்விக்க, கண்ணபிரான் அக் கோவர்த்தனகிரியைக் குடையாகத் தூக்கிக் கோக்களையும் கோவலரையும் காத்தருளினனென்றவரலாறு ப்ரஸித்தம். அப்போதைய நிலைமையை இப்பாட்டில் அநுபவிக்கிறார்.

மேய்கிற பசுக்களானவை புல்லும் உமிழாதே அசையிட்டுக்கொண்டு கீழே புகவும், மலைமேலுள்ள மிருகங்களெல்லாம் மலைகுடையாகக் கவிந்தபடியாலே கீழேபுரண்டு

விழவும், சுனைகள் வாயளவும் நிறைந்த நீரைப் பெரிய கோஷத்தோடு சொரியவும், திருவாய்ப்பாடி யடங்கலும் அங்கே யொடுங்கவும் அப்பன் தீமழை காத்துக் குன்றமெடுத்தானென்றதாயிற்று. ... . (க0)

குன்றமெடுத்தபிரான் அடியாரோடும் *
ஒன்றிநின்ற சடகோபனுரைசெயல் *
நன்றிபுனைந்த ஓராயிரத்துள்ளிவை *
வென்றிதரும்பத்தும் மேவிக்கற்பார்க்கே. (கக)

குன்றம் எடுத்த பிரான்	கோவர்த்தன மலையை யெடுத்த கண்ணபிரானுடைய	ஓர் ஆயிரத்துள் நன்றி புனைந்த	ஆயிரத்தினுள்ளே நலம் மிக்கதான
அடியாரோடும்	அடியார்களோடு கூட	இவை பத்தும்	இத்திருவாய்மொழி
ஒன்றி நின்ற	ஒருமைப்பட்டிராநின்ற	மேவி கற்பார்க்கு	தன்னை விரும்பிக் கற்குமவர்களுக்கு
சடகோபன்	நம்மாழ்வாருடைய	வென்றி தரும்	பலவகையான விஜயத்தையுங் கொடுக்கும்,
உரை செயல்	அருளிச்செயலாய்		

* * *—எம்பெருமானுடைய விஜய பரம்பரைகளைத் தொடுத்த இத்திருவாய்மொழியை ஓதவல்லவர்கள் எல்லா வகையான விஜயமும் பெறுவார்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது.

"குன்ற மெடுத்த பிரானடியாரொடும் ஒன்றிநின்ற சடகோபன்" என்ற சொல்லமைப்பை நோக்கித் திருக்குருகைப் பிரான் பிள்ளான் ஆறாயிரப்படியில் அருளிச் செய்கிறார் "ஆழ்வார்தாமும் கோவர்த்தனத்தின் கீழே ஆயரோடே கூடி நின்று......" என்று. குன்றமெடுத்த பிரானுடைய அடியார்கள் குன்றமெடுத்த காலத்திலுமுண்டு, பிற்காலத்திலுமுண்டு. குன்றமெடுத்த காலத்தில் அக்குன்றத்தின் கீழே யொதுங்கி நின்றவர்களே அடியாராவர்; அவர்களோடு ஒன்றிநின்ற சடகோபன் என்றால், கீழே பிள்ளானுரைத்ததாக எடுத்துக்காட்டினதே பொருளாம். பிற்காலத்திலுள்ள அடியார்களைக் கொண்டு அர்த்தமருளிச் செய்கிறார் பெரியவாச்சான் பிள்ளை; "கோவர்த்தனோத்தாரணம் பண்ணின உபகாரகனான க்ருஷ்ணன் திருவடிகளையே தஞ்சமாக நினைத்திருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களிலே தம்மையும் அந்யதமராக நினைத்திருந்த ஆழ்வார் அருளிச் செய்தவிது. மலையை யெடுத்தவன்று மலைக்கீழே யொதுங்கினவர்களைப் போலே ஸம்ஸாரத்துக்கு அஞ்சி க்ருஷ்ணன் திருவடிகளிலே யொதுங்குமவர்கள் வைஷ்ணவர்கள்; அச்செயலுக்குத் தோற்று அடிமை புக்கவராயிற்று இவர்" என்பது இருபத்தினாலாயிரம். கீழே காட்டிய இரண்டு நிர்வாஹங்களுக்கும் பொதுவாகவுள்ளது ஈடு;—"கோவர்த்தனோத்தாரணம் பண்ணின நீர்மையிலும் அப்போதை யழகிலும் ஈடுபட்டிருக்குமவர்களோடே கூடிநின்று தாமும் ப்ரீதராய் ப்ரீதிக்குப் போக்குவீடாகச் சொன்ன பாசுரமாயிற்று" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி.

"வென்றிதரும் பத்தும் மேவிக் கற்பார்க்கே" என்று ஆழ்வாரருளிய பலச்ருதிக்கேற்ப இற்றைக்கும் இத்திருவாய்மொழியை ஜபித்து விஜயஸித்தி பெறுவது அநுபவஸித்தம். (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம். நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி-ஏழாம்பத்து-ஐந்தாந் திருவாய்மொழி-கற்பாரிராமபிரானை

அவதாரிகை:—கீழ்த்திருவாய்மொழியில் எம்பெருமானுடைய சில விஜய சேஷ்டிதங்களைக் காணப்பெற்று அநுபவித்தவாழ்வார் அப்படிப்பட்ட மற்றுஞ் சில சரிதைகளையும் வாயாரப்பேசி, அந்தோ! இப்படிப்பட்ட பகவத் குணங்களை யநுபவிக்க இட்டுப் பிறந்தும் ஸம்ஸாரிகள் அந்யபரராயிருப்பது என்னோ வென்று வியந்தும் திருவுள்ளம் நொந்தும் பேசுகிறதாய்த்து இத்திருவாய்மொழி. ... . (*)

கற்பாரிராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ?*
புற்பாமுதலாப் புல்லெறும்பாதியோன்றின்றியே*
நற்பாலயோத்தியில்வாழும் சராசரம்முற்றவும்*
நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார்பெற்றநாட்டுளே. (க)

புல் பா முதல் ஆ	புல்லாகிற பதார்த்தம் முதலாகவும்	நான்முகனார் பெற்ற நாட்டுளே	பிரமன் படைத்த இவ்வுலகுக்குள்ளே
புல் எறும்பு ஆதி	மிக அற்பமான எறும்பு முதலாகவும்	நல் பாலுக்கு உய்த்தனன்	நல்ல ஸ்வபாவத்தையுடைத்தாம்படி பண்ணினான்;
நல் பால் அயோத்தியில் வாழும்	(ராமகுணங்கள் நடையாடுகிற) நல்ல தேசமான அயோத்யா புரியில் வாழ்கிற		(ஆதலால்)
சராசரம் முற்றவும்	ஸ்தாவர ஜங்கமங்களானவையெல்லாவற்றையும்	கற்பார்	(உலகில்) கற்க விரும்புமவர்கள்
ஒன்று இன்றியே	ஒருவிதமான ஸாதநாநுஷ்டானமுமில்லாமலிருக்கச் செய்தேயும்	இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ	(குணக்கடலாகிய) ஸ்ரீராமனைத் தவிர மற்றொரு வ்யக்தியைக் கற்க நினைப்பர்களோ?

* * *—இராமபிரானுடைய ஒரு விலக்ஷணமான தன்மையை யருளிச் செய்கிறாரிதில். தசரத சக்ரவர்த்தியின் கட்டளையின்படி இராமபிரானைத் தேரிலேற்றிக்கொண்டு போய்க் கங்கைக்கரையில் விட்டுத் திரும்பி வந்த ஸுமந்த்ரன் சக்ரவர்த்தியிடம் சொல்லுகிறான்—*[illegible] விஷயே தே மஹாராஜ! ராமவ்யஸநகர்சிதா:; அபி வ்ருக்ஷா: பரிம்லாநாஸ் ஸபுஷ்பாங்குர கோரகா:, உபதப்தோதகா நத்ய: பல்வலாநி ஸராம்ஸி ச, பரிசுஷ்கபலாசாநி வநாந்யுபவநாநி ச. * என்றான். மஹாராஜரே! உம்முடைய திருக்குமாரன் நாட்டைவிட்டுக் காட்டுக்குப் புறப்பட்டுச் செல்லுகிறானேயென்கிற துயரத்தினால் மரங்களெல்லாம் வாடியுலர்ந்து போயின; நதிகள், குளங்கள், குட்டைகளெல்லாப் கரையருகிலும் அடிவைக்க வொண்ணாதபடி கொதிப்படைந்தன; சிறிய தோட்டங்கள் பெரிய தோட்டங்களென்கிற வாசியின்றிக்கே பொழில்களெல்லாம் இலையுலர்ந்து அழகழியப்பெற்றன என்றான். இப்படி அசேதநவஸ்துக்களையுங் கூட விகாரப்படுத்திக் கொண்டே காட்டுக்கெழுந்தருளினவன் பதினாலாண்டு கடந்த பிறகு மீண்டும் திருவயோத்திக்கு எழுந்தருளுகையில் * [illegible]— அகால பலிநோ வ்ருக்ஷா: * என்னும்படியாயிற்று. ஆகவிப்படி தன்னுடைய

விச்லேஷத்தில் வாடியுலர்ந்தும் ஸம்ச்லேஷத்தில் செழிப்புற்றோங்கியும் நின்றன அசேதனங்களென்றால் அவன்றன்னுடைய குணப்பெருமையை என்னென்று சொல்லுவது!

கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் * வංஶං ரவொ ந--ஜிவ ுக்ஷ--ரிஹாவதீணெ-ஜாதிவெஷ்வ-ுவஷி-ுய தயாத்ரு ஹவஜ்--ணளவெ: । கவஜ்ஸ ஙிஙிவு ஹவஸெதஜ-ஷொய யாஹி வுக்ஷாஶு தாஙிஜமஹஜ ஹவஙியொசெ ॥—வம்சம் ரகோநுஜிக்ருக்ஷ--ரிஹாவதீர்ண: திவ்யைர் வவர்ஷித ததாத்ர பவத்குணௌகை:, த்வத்ஸந்நிதி ப்ரபவசைத்யஜு-ஷோ யதாஹி வ்ருக்ஷாச் ச தாந்திமலபந்த பவத்வியோகே * என்ற ச்லோகத்தினால் இக்குணத்திற்கு உருகினார். ஆசார்ய ஹ்ருதயத்தில் "கோஸல கோகுலசராசரம் செய்யுங்குண மொன்றின்றியே அற்புதமென்னக் கண்டோம்" என்ற சூர்ணையும் அதன் வியாக்கியானமும் ஸேவிக்க. இப்பாசுரத்தில் 'புற்பாமுதலா' என்று தொடங்கி மூன்றடிகளாலும் கீழே விவரித்த மஹாகுணமே அருளிச் செய்யப்படுகிறதாகப் பிள்ளான் முதலான ஸகல ஆசாரியர்களும் ஒருமிடறாக அருளிச்செய்தார்கள். ஸ்ரீவேதாந்ததேசிகர் ஒருவர் தாம் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் இத்திருவாய்மொழிக்கான ச்லோகத்தில் இப்பாசுரத்தின் பொருளாக "ஸாகெதெ உ-க்திஷா நாகு—ஸாகேதே முக்திதாநாத்" என்றருளிச் செய்தார்; *அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றிய கதையை இப்பாசுரத்திற்கு அர்த்தமாகக் கருதினார். அரும்பதப்படி ஸ்ரீஸூக்தி காண்மின்;—"ப்ராக்ருத வஸ்துக்களே தாரக போஷக போக்யமாயிருக்கக்கடவ இப்ராக்ருதி மண்டலத்திலே வைத்துக்கொண்டு திருவயோத்யையிலே வர்த்திக்கிற உவெ-ஜாதி நிகில ஜந்துக்களையும் கர்மயோகாத்யுபாயம் பண்ணுதிருக்கச் செய்தேயும் திருநாட்டிலுள்ளாரைப் போலே தன் திருவடிகளே தாரக போஷக போக்யமாக்கியருளின இம்மஹா குணத்தை யுடையனாயிருந்த இராமபிரானையல்லால் மற்றுங் கற்பரோ வென்று அவனுடைய குணங்களை யநுபவிக்கிறார்." என்று; இப்படியிருக்கவும் தேசிகன் வேறு வகையாகப் பொருள் கூறியது வாதிகேஸரியழகிய மணவாளச்சீயருடைய பன்னீராயிர வுரையில் ப்ரதிபத்தியின் கனத்தாலே யென்று தெரிகிறது. அவ்வுரையில் அங்ஙனே பொருளுரைக்கப்பட்டது.

"மற்றுங் கற்பரோ" என்ற விடத்து மற்றும் என்றது தேவதாந்தரங்களைக் கருதியன்று; ஸ்ரீராமாவதாரந்தவிர மற்றுள்ள விபவாவதாரங்களையும் பரத்வாதி நிலைகளையும். * ஹாவொ நாநத்ரு ஶஜ்ஜதி * என்று திருவடி சொன்னதும், * என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே * என்று திருப்பாணாழ்வார் அருளிச் செய்ததும் இங்கே நினைக்கத்தக்கன.

புற்பாமுதலா—பா என்று வஸ்துவைச் சொல்லுகிறது; புல்லாகிற வஸ்து முதற்கொண்டு என்றபடி. அன்றியே, பா—பரம்பின, புல் முதலா என்றும் யோஜிப்பதுண்டு. ஒன்றின்றியே—நிர்ஹேதுகமாகவென்றபடி.

நான்முகனார் பெற்ற நாட்டுளே நற்பாலுக்கு உய்த்தனன்—நற்பாலென்றது நல்ல பான்மையென்றபடி. விலக்ஷணமான ஸ்வபாவம்; அதாவது இராமபிரானுடைய குணங்களையே தாரகபோஷக போக்யமாகக் கொண்டிருக்கையாகிற வைலக்ஷண்யம். இப்படிப்பட்ட தன்மைக்கு ஆளாம்படி செய்தனன் என்கை. இங்கே 'நான்முகனார் பெற்ற நாட்டுளே' என்றதற்கு ப்ரயோஜனமென்? என்னில்; பிரமனை நியாமகனாக்கி அவனுக்கு வசப்பட்டதாம்படி செய்திருக்கிற இந்த நாட்டிலே புல்லெறும்பு முதலானவற்றுக்கு வேறே உணவுகள் நிய

தங்களாயிருக்கவும் அந்த நியதியை (நாட்டின் தன்மையை)த் தவிர்த்தருளினபடி சொல்லுகிறது. .... (௧)

நாட்டில்பிறந்தவர் நாரணற்காளன்றியாவரோ *
நாட்டில்பிறந்து படாதனபட்டுமனிசர்க்கா *
நாட்டைநலியுமரக்கரை நாடித்தடிந்திட்டு *
நாட்டையளித்துய்யச்செய்து நடந்தமைகேட்டுமே. (௨)

நாட்டில் பிறந்து	(தன்வாசியறியாத) இக்கொடிய உலகத்திலே வந்து பிறந்து	உய்ய செய்து	உஜ்ஜீவனப்படுத்தி
படாதன பட்டு	ஸம்ஸாரிகளும் அநுபவியாத கிலேசங்களை அநுபவித்து	நடந்தமை கேட்டும்	பின்பு திருநாட்டுக்கு நடந்த படியைக் கேட்டிருந்தும்
மனிசர்க்கு ஆ	செய்தநன்றியறியாத மனிசர்களுக்காக	நாட்டில் பிறந்தவர்	(அப்பெருமானுடைய திருக்குணங்கள் நடையாடுகிற) நாட்டிலே பிறந்தவர்கள்
நாட்டை நலியும் அரக்கரை நாடி தடிந்திட்டு	உலகத்தை ஹிம்ஸிக்கின்ற ராவணாதி ராக்ஷஸர்களை ஆராய்ந்து சென்று கொன்று	நாரணற்கு ஆள் அன்றி ஆவரோ	நாராயணனான அந்த ஸ்ரீராமனுக்கல்லது மற்றொருவர்க்கு ஆட்படுவர்களோ ?
நாட்டை அளித்து	(இப்படியாக) நாட்டை ரக்ஷித்து		

* * *—"அவதாரகார்யம் சமைந்தவளவிலே எழுந்தருளுகையன்றியே பதினோராயிரமாண்டு எழுந்தருளியிருந்து ரக்ஷித்த சீலாதிக்யத்தையருளிச்செய்கிறார்" என்பது பன்னீராயிரப்படியின் அவதாரிகை. "தன்னை யொழியச் செல்லாமையைப் பிறப்பித்து இங்கேயவர்களை யிட்டுவைத்து, தானே யெழுந்தருளுகையன்றிக்கே கூடக் கொண்டுபோனானென்று, கீழ்ச்சொன்னவதிற் காட்டில அதிக குணத்தை யருளிச்செய்கிறார்" என்பது பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி.

நாட்டில் பிறந்தவர் நாரணற்கன்றி ஆளாவரோ? ஸ்ரீராமகுணங்கள் நடையாடுகிற தேசத்திலே பிறந்த பாக்யசாலிகள் அந்த ஸ்ரீராமபிரானுக்கன்றி யாளாவரோ? என்றபடி. ராவணவதமானபிறகு நான்முகக்கடவுள் வந்து * ஭வாந் நாராயணோ தேவ:—பவாந் நாராயணோ தேவ: * என்றனனுதலால் இங்கு இராமபிரானை நாராயண சப்தத்தினாலருளிச்செய்கிறபடி. நாட்டில் பிறப்பது நாராயணனுக்கு [இராமபிரானுக்கு] ஆளாவதற்காகவே யென்பது முதலடியின் கருத்து. மேல் மூன்றடிகளாலே அவன் செய்த மஹோபகாரத்தைச் சொல்லுகிறது. கருமங்களுக்கு வசப்பட்ட ஸம்ஸாரிகளுங்கூட அருவருக்குப்படியான நாட்டிலே வந்து பிறந்தானே! என்று இதை நினைத்து உருகவேண்டாவோ? நாமெல்லாரும் பத்துமாஸம் கர்ப்பவாஸம் பண்ணினால் அவன் * ததஶ்ச த்வாதஶே மாஸே—ததச் ச த்வாதசே மாஸே* என்னும்படி பன்னிரண்டு மாஸம் கர்ப்பவாஸம் பண்ணினானே! என்று இதையும் நினைத்து உருகவேண்டாவோ? இப்படி பிறந்தது மாத்திரமேயோ? ஸம்ஸாரிகள் படாத பாடுகளையும் பட்டானே!, ஒருவன் பிறந்தால் இருக்கும் நாள் தானும் தன் மனைவியுமாகச் சேரவிருந்து ஜீவித்துப்போவதுண்டே. அப்படியன்றிக்கே பிராட்டி ஓரிடத்திலும் தான் மற்றோரிடத்திலுமாக வர்த்திக்கவேண்டினது முதலாகப் பட்ட பாடுகளையும் நினைத்து உருகவேண்டாவோ? இப்படி படாத பாடுகள் பட்டது யாருக்காக? [மனிசர்க்கா] தங்களுக்காக அநுக்ரஹத்தாலே படுகிற இந்த மஹா குணத்தை குண ஹாநியாகச் சொல்லி நிந்திக்கும் நன்றிகெட்ட நம்போல்வார்க்காகவன்றோ இத்தனை பாடு பட்டது என்று, இதை நினைத்தும் உருகவேண்டாவோ? இன்னமும் விரோதி நிரஸனங்கள் பண்ணின படிகளையும் நினைக்க வேண்டாவோ?

ஈற்றடிக்கு ஆறாயிரப்படி காண்மின்;—"இப்படி லோகத்தை ரக்ஷித்தருளி * தஶ்஦ஶரத: கருதம் கார்யம்—஗ச்ச ஹ்ருஷ்டோ தி஦வம் * என்று ப்ரஹ்மா விண்ணப்பஞ் செய்தபோதே

யெழுந்தருளாதே ஸ்வவிச்லேஷத்தாலே விநஷ்டப்ராயமான திருநகரியில் சராசர ஜந்து ஜாதத்தையெல்லாம் மீண்டெழுந்தருளியுய்யச் செய்து பின்னைத் திருநாட்டிலே யெழுந்தருளின இம் மஹாகுணத்தைக் கேட்டும் சேதனராயிருப்பார் *ஹவா ஞாராயணோ தெவஃ* என்று சொல்லப்படுகிற தசரதாத்மஜனை நாராயணனுக்கு அடிமையாகாதிருக்கும்படி யெங்ஙனே யென்கிறார்."

ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்,—"நிரபராதமான நாட்டை நலிகிற ராவணாதி கண்டகரை.........அவர்களிருந்த விடங்களிலே தேடிச் சென்று கொன்று லங்காத்வாரத்திலே விஜய ஸ்ரீபரிவ்ருதராய்க் கொண்டெழுந்தருளி நிற்க, அவ்வளவிலே ப்ரஹ்மாதி தேவர்கள் வந்து * தஜிஷம் நஃகூஜ தம் காயஷம்—ஷுஹஜஷோ திவஊ கூஉ * என்று நாங்கள் அர்த்திததவையடைய எங்களளவு பாராதே தேவரீர் செய்தருளிற்று; இனி தன்னுடைச்சோதியேற எழுந்தருளவமையும் என்ன; அவ்வளவிலே ருத்ரன் 'நாடடைய தேவரீருடைய விச்லேஷத்தாலே விநஷ்ட ப்ராயமாய்க் கிடக்கிறது; திருத்தாய்மாரையும் திருத்தம்பிமாரையும் திருப்படை வீட்டிலுள்ள ஜனங்களையும், மீண்டுபுக்குச் சில நாளெழுந்தருளியிருந்து ஈரக்கையாலே தடவி ரக்ஷித்தெழுந்தருள வேணும்' என்ன, * கடல் ஞாலத்துள் மிக்கானென்னும்படியே பதினோராயிரமாண்டு எழுந்தருளியிருந்து ரக்ஷித்தபடியைச் சொல்லுகிறது—நாட்டை யளித்தென்று."

உய்யச்செய்து நடந்தமை யென்றது—நெடுநாள் இருந்து, தன்னையல்லது செல்லாதபடி பண்ணி அவர்களை யெல்லாம் விட்டுப்போகாதே கூடவே கொண்டுபோனபடியைச் சொன்னவாறு. ... . (உ)

கேட்பார்கள்கேசவன்கீர்த்தியல்லால் மற்றும்கேட்பரோ *
கேட்பார்செவிசுடு கீழ்மைவசவுகளேவையும் *
சேட்பால்பழம்பகைவன் சிசுபாலன் * திருவடி
தாட்பாலடைந்த தன்மையறிவாரையறிந்துமே. (ந)

கேட்பார்	எம்பெருமானுடைய நிந்தைகளையே காதாரக்கேட்கவேணுமென்கிற விருப்பமுடையவர்களுக்குங் கூட	திரு அடி	ஸ்வாமியான கண்ணபிரானுடைய
செவி சுடு	கர்ணகடோரமான	தாள் பால் அடைந்த தன்மை அறிவாரை அறிந்தும்	திருவடிகளிலே ஸாயுஜ்யம்பெற்றபடியை யறிவாரை அறிந்து வைத்தும்;
கீழ்மை வசவுகளே வையும்	மிகத் தண்ணிய தூஷணைகளையிட்டு தூஷிக்குமவனாய்	கேட்பார்கள்	நல்லது கேட்க வேணுமென்றிருக்குமவர்கள்
சேண் பால் பழம் பகைவன் சிசுபாலன்	நெடுங்காலத்துப் பகைவனான சிசுபாலனுங்கூட	கேசவன் கீர்த்தி அல்லால் மற்றும் கேட்பரோ	எம்பெருமானுடைய கீர்த்திகளையொழிய வேறொன்று கேட்பாரோ?

* * *—நிச்சலும் நிந்திப்பது தவிர வேறொன்றுமறியாத சிசுபாலனையுமுட்படத் தன் திருவடிகளிலே சேர்த்துக்கொண்ட மஹாகுணத்தையறிந்தவர்கள் அப்படிப்பட்ட குணவானுடைய திருக்குணங்களையன்றோ காதாரக் கேட்கவேணுமென்கிறார்.

கேட்பார்கள் என்றது—செவிடராயிருக்கை யன்றிக்கே செவிப்புலனையுடையவர்கள் என்றபடி. கேசவன் கீர்த்தியைக் கேட்பதே காதுக்கு ப்ரயோஜனமென்றதாயிற்று. * தொண்டர்க்கு இனியானைக் கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே* என்றார் திருமங்கையாழ்வாரும். காது குளிரக் கேட்கவேண்டிய கேசவன் கீர்த்திகளில் ஒரு கீர்த்தியை யெடுத்துரைக்கின்றார் மேல் மூன்றடிகளில்.

எம்பெருமானை நிந்திப்பவர்கள் பலருளர் என்றாலும் சிசுபாலனைப்போல் நிந்திப்பவர்கள் இலர். அவன் நிந்திப்பது எங்ஙனேயிருக்குமென்னில்; [கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும்] இங்கே 'கேட்பார்' என்றதற்கு ஆசாரியர்கள் அருளிச்செய்யும் பொருள் ஆச்சரியமானது. ஈடு;—" பகவந்நிந்தைக்கு ஜீவனம் வைத்துக்கேட்கும் தண்ணியர்களுங் கூடப் பொறுக்கமாட்டாமை செவி புதைத்து 'இத்தனை அதிரச் சொன்னாய், இப்படி சொல்லப்பெறாய் காண், என்று சொல்லும் படியான வசவுகளே வைகை" என்பதாம். அதாவது பகவத் ஸந்நிதிகளிலே வேதபாராயணம் செய்தல் அருளிச் செயலோதுதல் மற்றும் ஸ்ரீராமாயண பகவத்கீதாதி பாராயணஞ் செய்தல் முதலானவற்றுக்காக மஹாதார்மிகர்கள் நிதியேற்படுத்தி உபகரிப்பது போலே' 'பகவானை இரவும் பகலும் நிந்திப்பவர்களுக்கு நாங்கள் நிதி வைத்திருக்கிறோம்' என்று சொல்லி மிகுந்த ஆதரத்தோடு பகவந்நிந்தனைகளைக் கேட்பாரும் சிலர் இருக்கக் கூடுமே; அப்படிப்பட்டவர்களுங் கூட சிசுபாலன் செய்யும் பகவந் நிந்தைகளைக் கேட்குமளவில் 'அப்பப்ப! இவ்வளவு கடோரமாக நிந்திக்கை தகுதியன்று; இது எங்களாலும் கேட்கப்போகவில்லை' என்று சொல்லிக் காதை மூடிக்கொள்ளும் படியிருக்குமாம். அப்படிப்பட்ட கொடிய நிந்தகனும் சிசுபாலன். அவன் இப்பிறவியில் மாத்திரமன்று பகைவனானது; மற்றும் பல ஜன்மங்களிலே இப்படிப் பகைவனாயிருந்தானென்கிறது சேட்பால்பழம்பகைவன் என்று. ஊதிஹவஊவாஹீ—ஃ—ப்ரதிபவமபராத்து: * என்றார் ஆளவந்தாரும். அவனுக்குங் கூட தன் திருவடிவாரத்தில் அத்தாணிச் சேவகத்தை யளித்திட்டானன்றோ அருட்கடலான எம்பெருமான். திருமழிசைப்பிரானும் திருச்சந்த விருத்தத்தில்* "வைது நின்னை வல்லவா பழித்தவர்க்கும் மாறில் போர் செய்து நின்ன செற்றத்தீயில் வெந்தவர்க்கும் வந்து உனையெய்தலாகுமென்பர்" என்றருளிச்செய்தார். சிசுபாலனிடத்தில் என்ன நன்மை கண்டு எம்பெருமான் இங்ஙனே அருள் செய்தானென்னில்; வைகிறவனுக்கும் பேர் சொல்லி வையவேணுமே; ஆகவே நாமஸங்கீர்த்தந ஸுக்ருதம் பெரிதுங்கண்டானாயிற்று எம்பெருமான்.

திருவடிதாட்பாலடைந்த—திருவடியென்றது ஸ்வாமி வாசகம். * பூதத்திருவடிதாள்கள்* என்ற இராமானுச நூற்றந்தாதியுங் காண்க.

" தாட்பாலடைந்த தன்மையறிந்துமே" என்றாலே போதுமாயிருக்க, "தன்மையறிவாரை யறிந்துமே' என்றது ஏதுக்காக வென்னில்; முதலடியிலே "கேட்பார்கள் மற்றுங் கேட்பரோ" என்று சொல்லியிருக்கையாலே, கேட்குமவர்கள் குணஜ்ஞர்களிடத்திலன்றோ கேட்கவேணும்; இப்படிப்பட்ட மஹாகுணஜ்ஞர்கள் இல்லாமற் போகவில்லையே. அன்னவர்கள் இருக்கிறார்களென்பதை யறிந்து வைத்தும் அவர்கள் பக்கலிலே சென்று இத்தகைய மஹாகுணங்களைக் கேளாதே மற்றுங் கேட்பரோ என்றபடி. .... (௫)

தன்மையறிபவர் தாமவற்காளன்றியாவரோ*
பன்மைப்படர்பொருளாதுமில் பாழ்நெடுங்காலத்து*
நன்மைப்புனல்பண்ணி நான்முகனைப்பண்ணி* தன்னுள்ளே
தோன்மைமயக்கிய தோற்றியசூழல்கள்சிந்தித்தே. (௬)

பன்மை படர் பொருள் ஆதும் இல் பாழ் நெடுங் காலத்து	பலவகைப்பட்ட விரிவான பதார்த்தங்கள் ஒன்றுமில்லாதபடி வெகுகாலம் சூந்யமாயிருந்த போது	நன்மை புனல் பண்ணி	நன்மைமிகுந்த காரண ஜலத்தை முந்துற முன்னம் ஸ்ருஷ்டித்து

(பிறகு)

நான்முகனை பண்ணி	பிரமனைப்படைத்து	சூழல்கள் சிந்தித்து	இப்படிப்பட்ட மஹாகுணங்களை சிந்தனை செய்து
தன் உள்ளே	தன்னுடைய ஸ்வரூபத்தின் ஏகதேசத்திலே	தன்மை அறிபவர் தாம்	அவனுடைய அஸாதாரண லக்ஷணத்தை அறியவல்லவர்கள்
தொன்மை மயக்கிய	பண்டுதான் ஸம்ஹரித்த பதார்த்தங்களை	அவற்கு அன்றி ஆள் ஆவரோ	அப்பெருமானுக்கொழிய வேறொருவனுக்கு அடிமைப் படலாகுமோ?
தோற்றிய	பழையபடி உண்டாக்கின		

* * *—ப்ரளயத்திலே மங்கிக்கிடந்த ஜகத்தை மீளவுமுண்டாக்கின மஹாகுணத்தை யறிந்துவைத்தால் இப்படிப்பட்ட குணசாலிக்கேயன்றோ ஆளாகப் பெறவேணுமென்கிறார்.

தன்மையறிபவர் — தத்வஸ்திதியை உள்ளபடியே யறியுமவர்கள் என்றபடி. ''விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும் பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதிஸம்யுதா ''—விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும் பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மங் ஹஸ்தபாதாதிஸம்யுதா'' என்கிறபடியே நம்முடைய கரணக்ராமங்கள் பகவத் விஷயத்தில் அந்வயிப்பதற்காகவே படைக்கப்பட்டன வென்கிற தத்துவத்தை யறியும் விவேகிகள் என்றதாயிற்று. மற்றும் பலவகையாகவும் நிர்வஹிப்பதுண்டு.

தன்னைப் படைத்தவனுக்குத் தான் அடிமையாகவேணுமென்பதை ஒருவர் சொல்ல வேணுமோ? ''கஸ்த்யேய:? காரணம் து த்யேய:'' என்றன்றோ ஓதிற்று. முதல் தனிவித்தாகிய மூலக் காரணப்பொருளை யறிந்து அதற்கன்றோ ஆட்படவேணும். தேவ மநுஷ்யாதி ரூபத்தாலே பலவகைப்பட்டு, கருமங்களுக்கேற்றவாறு விஸ்த்ருதமான பதார்த்தங்கள் ஒன்றுமில்லாத காலத்து, முற்பட ஜலஸ்ருஷ்டியைப் பண்ணி, பின்னே சதுர்முகனையும் ஸ்ருஷ்டித்து, தன் ஸங்கல்ப ஸஹஸ்ரத்தின் ஏக தேசத்திலே சேதநாசேதநஸமஸ்த வஸ்துக்களையும் ஸ்ருஷ்டித்தருளின இந்த மஹா குணத்தை யநுஸந்தித்தால் அந்த பரம காருணிகனுக்கன்றி மற்றுமொருவற்கு ஆளாக வழியுண்டோ வென்றாராயிற்று. ... . (௪)

சூழல்கள்சிந்திக்கில் மாயன்கழலன்றிச்சூழ்வரோ *
ஆழப்பெரும்புனல் தன்னுளழுந்தியஞாலத்தை *
தாழப்படாமல் தன்பாலொருகோட்டிடைத்தான்கொண்ட*
கேழல்திருவுருவாயிற்றுக் கேட்டுமுணர்ந்துமே. (௫)

பெரு புனல் தன்னுள் ஆழ அழுந்திய ஞாலத்தை	எல்லையற்ற பிரளய ஜலத்திலே மிக ஆழமாக அழுந்திக் கிடந்த பூமியை	கேட்டும் உணர்ந்தும்	இதிஹாஸ புராண முகங்களாலே கேட்டும் மனனம் பண்ணியும் வைத்து
தாழப்படாமல்	அநர்த்தப்படாதபடிக்கு	சூழல்கள் சிந்திக்கில்	தம்தம்முடைய அபிமதங்கள் ஸித்திப்பதற்கு விரகு பார்க்குமளவில்
தன் பால் ஒரு கோடு இடை தான் கொண்ட	தன் திருமேனியில் ஏகதேசமாயிருப்பதொரு கோட்டினிடத்திலே தானாகவே இடந்தெடுத்துக் கொண்ட	மாயன் கழல் அன்றி சூழ்வரோ	ஆச்சரிய சேஷ்டிதனான அப்பெருமானுடைய திருவடிகளையொழிய வேறொன்றை ஆச்ரயிப்பரோ?
கேழல் திரு உரு ஆயிற்று	ஸ்ரீ வராஹரூப மெடுத்த படியை		

* * *—அழிந்த ஜகத்தை யுண்டாக்கினவளவேயல்லாமல். அந்த ஜகத்தை ப்ரளயங்கொள்ள மஹாவராஹமாயெடுத்து ரக்ஷித்த மஹாகுணத்தை யநுஸந்தித்தால் அவன் திருவடிகளே தஞ்சமென்றிருக்க வேண்டாவோ வென்கிறார்.

சூழல்கள் சிந்திக்கில் —சூழலாவது உபாயம்; 'நமக்கொரு உஜ்ஜீவனோபாயம் சேமித்து வைத்துக் கொள்ள வேணுமே' என்று சிந்திப்பாருண்டே; அங்ஙனே சிந்தைசெய்யுமளவில் என்றபடி. மாயன் கழலன்றிச் சூழ்வரோ?—ரக்ஷ்யவர்க்கங்களை ரக்ஷிக்க வேண்டுமென்று நினைத்தவளவிலே தன்னையழியமாறியும் காரியஞ் செய்யத் துணியும் மாயவனது கழலையன்றி மற்றொன்றைப் பற்றுவாருண்டோ? * பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொரு நாள் மாசுடம்பில் நீர்வார மானமிலாப் பன்றியாந் தேசுடைய தேவர்* என்ற நாச்சியார் திருமொழிப் பாசுரம் நினைக்கத் தகும்.

ஆழப்பெரும்புனல் தன்னுளழுந்திய—ஆழமான மஹார்ணவத்திலே அழுந்திய என்றுவது, பெரும்புனல் தன்னுள் ஆழவழுந்திய என்றுவது யோஜிப்பது. தாழப்படாமல்—காலதாமதத்திலே உருமாய்ந்து போகாதபடி; தரைப்படாதபடி. ஒரு கோட்டிடை=கோடு தம்ஷ்ட்ரா.

கேட்டும் உணர்ந்தும்=கேட்பது ஒருகால்; அதனை மறவாமல் மேன்மேலும் ஸ்மரிப்பது உணர்வாம். .... (ரு)

கேட்டுமுணர்ந்தவர் கேசவர்க்காளன்றியாவரோ*
வாட்டமிலாவண்கை மாவலிவாதிக்கவாதிப்புண்டு*
ஈட்டங்கொள்தேவர்கள் சென்றிரந்தார்க்கிடர்நீக்கிய*
கோட்டங்கைவாமனனாய்ச் செய்தகூத்துக்கள்கண்டுமே. (சு)

வாட்டம் இலா வண் கை மாவலி வாதிக்க	ஒருகாலும் குறையாத ஔதார்யத்தையுடைய மஹாபலியானவன் (தன் செருக்காலே) நலிய	கோடு அம் கை வாமனன் ஆய் செய்த கூத்துக்கள் கண்டும்	ஏற்றகையையுடைய ஸ்ரீவாமனமூர்த்தியாய்ச் செய்தருளின மனோஹர சேஷ்டிதங்களை யநுஸந்தித்து வைத்தும்
வாதிப்பு உண்டு	ஹிம்ஸைபட்டு	கேட்டும் உணர்ந்தவர்	புராண முகத்தாலே கேட்டும் அறிவுடையராயிருந்தவர்கள்
ஈட்டம் கொள் தேவர்கள் சென்று இரந்தார்க்கு	திரண்டு சென்று ப்ரார்த்தித்த தேவர்களுடைய	கேசவற்கு அன்றி ஆள் ஆவரோ	அந்தப்பெருமானுக்கல்லது மற்றொருவற்கு அடிமையாவரோ?
இடர் நீக்கிய	இடரை நீக்குவதற்காக		

* * *—தன் மேன்மை பாராமல் தான் இரப்பாளனாய் வாமநப்ரஹ்மசாரியாய் மஹாபலியின் செருக்கையடக்கித் தேவர்களைக் காத்தருளின மஹா குணத்தையறிந்து வைத்து மற்றொருவர்க்கு ஆளாக வொண்ணுமோ வென்கிறார்.

"வாட்டமிலாவண்கை" என்று மாவலிக்கு விசேஷணமிட்டு அவனுடைய ஔதார்யத்தைச் சிறப்பித்துக் கூறினது—எம்பெருமானுடைய யாசகத்வத்திற்கு நிரூபகமாக. இந்திரனே மாவலியால் தகர்ப்புண்டு தன் பதவியை யிழந்து கண்ணுங் கண்ணீருமாய் நின்று யாசகனாயிரா நின்றான்; மஹாபலியோ யஜ்ஞத்திலே தீக்ஷிதனாயிருந்து யார் எது கேட்டாலும் கொடுக்கக் கடவேனென்று ஒப்புயர்வற்ற ஔதார்யம் கொண்டாடியிரா நின்றான்; இவ்விரண்டையும் பார்த்தானெம்பெருமான்; இந்த உதாரன் பக்கலிலே நாம் யாசகனாய்ச் சென்று இந்திரனுடைய அபேக்ஷிதத்தைப் பூர்த்தி செய்ய இயலுமென்று துணிந்து குறட்பிரமசாரியாய் பிக்ஷுகனாய் வந்தான்; ஆகவே இங்கு "வாட்டமிலா வண்கை மாவலி" என்றது நன்று. இந்த அழகை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே [illegible]—ஔதார்யேந்த்ராச்ஞாவிஹதிமபநயந் வாமனோர்த்தீ த்வமாஸீ:* என்றருளிச் செய்தார்.

வாதிக்க—பாதிக்க; வாதிப்புண்டு—பாதைப்பட்டு. பாயா என்கிற வடமொழிப் பகுதியுணர்க. ஈட்டங்கொள் தேவர்கள் சென்றிரந்தார்க்கு—சென்றிரந்த ஈட்டங்கொள் தேவர்கட்கு என்று யோஜித்துக்கொள்வது இவ்விடத்தில் பெரியவாச்சான் பிள்ளை யருளிச் செயல் காண்மின்;—"ஈச்வராபிமாநிகளாய் 'ஒருவர் பக்கல் செல்லக்கடவோமல்லோம்' என்றும் 'எல்லார்க்கும் இடுமதொழிய ஒருவர் பக்கல் ஒன்றுங் கொள்ளக்கடவோமல்லோம்' என்றுமிருக்குமவர்களாய் தம்மில் தாம் சேர்த்தியன்றிக்கேயிருக்கிற தேவர்கள் ஆபத்தின் மிகுதியாலே தம்மிலே யொருமிடருய் பக்நாபிமானிகளாய்ச் சென்று இரந்தவர்களுக்கு." என்று

நம்பிள்ளையீடு;—க்ராமணிகளைப் போலே ஒருவர் உச்ச்ராயம் ஒருவர் பொருதே தலையறுப்பாரும் தலையறுப்புண்பாருமாய்த் திரியக்கடவ ஜாதியிறே. இப்படி சேராச்சேர்த்தியாயிருக்கிறவர்கள். ஆபத்தமிக்கவாறே தந்தாம் அபிமானங்களைப் போகட்டு எல்லாருமொருமிடருய் வந்து விழுந்தார்கள்."

இடர்நீக்கிய='உங்கள் கோரிக்கையின்படியே உங்கள் அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டித் தருகிறேன்' என்கிற ப்ரதிஜ்ஞாவசனத்தாலே து:க்க நிவ்ருத்தியைப் பண்ணிக் கொடுத்த என்றபடி. [கோட்டங்கை] கோடு + அம் கை = கோட்டங்கை; கோடு என்று கொள்ளுகையைச் சொன்னபடி; அதாவது கையேற்கை. செய்த கூத்துக்கள் = கூத்துப்போலே மநோஹரமான சேஷ்டிதங்களை யென்றபடி. கண்டும் = கண்ணாலே காண்பது போலே சாஸ்த்ரங்களால் அறிகையும் ஆஸ்திகர்கட்கு ப்ரத்யக்ஷமேயாதலால் இங்ஙனே சொல்லக் குறையில்லை. (௬)

கண்டும்தெளிந்தும்கற்றார் கண்ணற்காளன்றியாவரோ *
வண்டுண்மலர்த்தொங்கல் மார்க்கண்டேயனுக்குவாழுநாள் *
இண்டைச்சடைமுடி யீசனுடன்கொண்டுசாச்செல்ல *
கொண்டங்குத்தன்னொடும் கொண்டுடன்சென்றதுணர்ந்துமே (எ)

வண்டு உண் மலர் தொங்கல் மார்க்கண்டேயனுக்கு	வண்டுகள் மதுபானம் பண்ணுகிற பூமாலையையுடைய (பாலகனான) மார்க்கண்டேயனுக்கு
வாழும் நாள்	ஆயுளுக்காக
இண்டை சடை முடி ஈசன்	நிபிடமான ஜடாமண்டலத்தையுடையவரான சிவபிரான்
உடன் கொண்டு உசா செல்ல	தன்னோடுகூட அவனை யழைத்துக்கொண்டு பேசிக்கொண்டே செல்ல
அங்கு	அந்நிலையிலே
கொண்டு தன்னொடும் கொண்டு	அவனை விஷயீகரித்து தன்னோடே கூட்டிக் கொண்டு
உடன் சென்றது	பிரியாதே யிருந்தபடியை
உணர்ந்தும்	புராணாதி முகத்தாலே யறிந்தும்
கண்டும் தெளிந்தும் கற்றார்	கண்ணாரக் கண்டும் நெஞ்சாரத் தெளிந்தும் கற்றவர்கள்
கண்ணற்கு அன்றி ஆள் ஆவரோ	கண்ணபிரானுக்கல்லது வேறொருவர்க்கு அடிமை யாவரோ?

* * *—தேவதாந்தர பஜநப் பண்ணிக் கிடந்த மார்க்கண்டேயனை விஷயீகரித்தலாகிற மஹா குணத்தை யநுஸந்தித்தால் அப்பெருமானுக்கன்றி யாளாவரோ வென்கிறார்.

"கண்டுந் தெளிந்துங்கற்றார்" என்றதை உருபு பிரித்துக் கூட்டி "கற்று தெளிந்து கண்டார்" என்று அந்வயிப்பர் நம்பிள்ளை. முதலிலே யொன்றைக் கற்பது; பிறகு அதிலே மனனத்தினால் தெளிவு பிறப்பது; பிறகு அவ்வர்த்தம் கண்ணாற் கண்ட மாதிரியேயாவது; ஆக விங்ஙனே முறையாதலால். ப்ரிய ஹிதங்களை ச்ரவணம் பண்ணித் தங்களிலே மனனம் பண்ணி அவற்றை ஸாக்ஷாத்கரித்தவர்கள் கண்ணனுக்கன்றி யாளாவரோ? என்கை.

ம்ருகண்டுவென்னும் முனிவர் பிள்ளையில்லாக் குறையால் பிரமனைக் குறித்துத் தவஞ்செய்தபோது, பிரமன் ப்ரத்யக்ஷமாகி 'முனிவரே! அறிவில்லாமையும் அங்கஹீநத்வமும் பெரும்பிணியும் தீய குணங்களுமுடையனாய் நூறு பிராயம் உயிர் வாழ்பவனான புத்திரனை விரும்புகின்றீரோ? அன்றி, கூர்மையான புத்தியும் அழகு பொலிந்த வடிவமும் ஆரோக்யமும் நற்குணமுமுடையனாய்ப் பதினாறுபிராயமே வாழ்பவனானகுமாரனை விரும்புகின்றீரோ? சொல்லும், என்ன; முனிவர் 'ஆயுள் சிறிதேனும் அறிவும் அழகும் குணமும் சிறந்து பிணியிலனாகும் ஸத்புத்ரனையே வேண்டுகின்றேன்' என்று தம் கருத்தைக்கூற, நான்முகக் கடவுள் அவ்வாறே ¶ அநுக்ரஹித்தனர். அங்ஙனம் ஊழ்வினையால் பதினாறு பிராயம் பெற்றுப்பிறந்த புத்திரனான மார்க்கண்டேயன் தனது அல்பாயுஸ்ஸைக் குறித்து வருந்திய தாய் தந்தையரைத் தேற்றித் தான் விதியைக் கடந்து வருவதாகச் சொல்லி, தீர்க்காயுள்ளைப் பெறுதற் பொருட்டுத் தினந்தோறும் சிவ பூஜை செய்து வருகையில், ஒரு நாள் யமன் தூதரை யனுப்ப, அவர்கள் மார்க்கண்டேயனது தவக்கனலால் அவனை அணுகமாட்டாது அவன் செய்யும் சிவ பூஜைச் சிறப்பைக் கண்டஞ்சி வெருண்டோடி யமனிடம் செய்தி சொல்ல, யமனும் கோபித்துத் தனது மந்திரியான காலனை ஏவ, அவன் வந்து நயபயங்களாலழைக்கவும் மார்க்கண்டேயன் வரமாட்டேனென்று சொல்லிவிட பிறகு யமன் மிகக் கொதித்துத் தானே நேரில் வந்து மார்க்கண்டேயனைக் காலபாசத்தாற் கட்டியிழுக்கத் தொடங்குகையில் அம்முனிகுமாரன் சிவலிங்கத்தைத் தழுவிக்கொள்ள, யமன் சிவலிங்கமுமுட்பட வலித்திழுக்கும்போது சிவபிரான் ஸ்ரீமந்நாராயணனைச் சிந்தை செய்து அவனது திருவருள் பெற்று அங்கு நின்று வெளிப்பட்டு யமனைக் காலாலுதைத்துத் தள்ளி முனி மகனுக்கு என்றும் பதினாறு பிராயமாகவே அனேக கல்பகாலமளவும் இனிது வாழும்படி தீர்க்காயுஸ்ஸைக் கொடுத்தருளினன் என்பதாகப் புராண வரலாறு.

இங்ஙனம் சிவபிரான் மார்க்கண்டேயனுக்கு அருள் செய்தது திருமாலினருளால் தான் பெற்ற சக்தியினாலேயே யென்பதும், அச் சிவபிரானுக்கு அந்தராத்மாவாய் நின்று தொழில் செய்தவன் ஸர்வேச்வரனான ஸ்ரீமந்நாராயணனே யென்பதுமாகிய உண்மைபற்றி அவ்வரலாற்றை ப்ரயோஜககர்த்தரவின் காரியம்போலத் திருமாலின் மேலேற்றிக் கூறுவதுமுண்டு. திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் * மன்னு நான் மறை மாமுனி பெற்ற மைந்தனை மதியாத வெங்கூற்றந் தன்னையஞ்சி, நின்சரணெனச் சரணாய்த் தகவில் காலனையுகமுனிந்தொழியா, பின்னையென்றும் நின் திருவடி பிரியாவண்ணமெண்ணிய பேரருள் எனக்கும் அன்னதாகுமென்றடியிணை யடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே * என்ற பாசுரத்தில் இக்கதையை சிவபிரானுடைய ப்ரஸ்தாவமேயில்லாமல் அருளிச்செய்துள்ளார்.

சில புராணங்களில் மேலெழுந்தவாரியாகப் பார்க்குப்போது, பரமசிவனே மார்க்கண்டேயனுக்கு அபயமளித்ததாகக் காணப்படினும், மஹாபாரதத்தில் ஆரண்ய பருவத்தில்

¶ புராணபேதத்தால் இக்கதை சிறிது பேதப்படுவதுமுண்டு. பிரமனுடைய அநுக்ரஹத்தினால் ம்ருகண்டு முனிவர்க்குப் பிள்ளை பிறந்ததாகவும், அப்பிள்ளை ஒரு நாள் வீதியில விளையாடிக் கொண்டிருக்கு மிருப்பைத் தாய் தந்தையர் ஆனந்தமாகக் கண்டுகொண்டிருக்குங்கால் 'இப்பிள்ளைக்கு ஆயுள் குறுகிற்று' என்று ஆகாசவாணி யொன்று செவிப்பட, அதனால் அத்தாய் தந்தையர் மிக்க வருத்தங் கொண்டதாகவும், அதுகண்ட மார்க்கண்டேயன் 'இதற்கு நீங்கள் வருந்தவேண்டா, அவ்வாபத்தை நானே போக்கிக் கொள்ளுகிறேன்' என்று அவர்களைத் தேற்றித் தான் சிவபூஜை செய்யத் தொடங்கினனென்பதாகவும் சில புராணங்கள் கூறும்,

நூற்றுத் தொண்ணூற்றிரண்டாமத்யாயத்தில் மார்க்கண்டேயன்தானே தருமபுத்திரரை நோக்கிச் சொல்லுமளவில் ஸ்ரீமந்நாராயணனுடைய வார்த்தைகளை அநுவதிக்குமிடத்து "பித்ருபக்தோஸி விப்ரர்ஷே மாஞ்சைவ ஶரணம் கத:" * [பித்ருபக்தோஸி விப்ரர்ஷே! மாஞ்சைவ சரணம் கத:] என்றுள்ள ச்லோகத்தினால் இவன் ஸ்ரீமந் நாராயணனைச் சரணம் புகுந்தவனென்பது நன்கு விளங்கும்.

ஸ்ரீ பாகவதத்திலும் பன்னிரண்டாம் ஸ்கந்தத்தில் எட்டாமத்யாயத்தில் "ஆராதயந் ஹ்ருஷீகேசம் ஜிக்யே ம்ருத்யும் ஸுதுர்ஜயம்" என்று ஸ்பஷ்டமாகச் சொல்லிற்று. ஸ்ரீமந் நாராயணனை ஆராதித்து, வெல்லவொண்ணாத யமனையும் வென்றொழித்தான் என்றது.

மார்க்கண்டேயன் இங்ஙனம் நெடுநாள் வாழ்ந்து வருகையில், மஹாப்ரளயத்தைத் தான் காணவேணுமென்று ஆசைகொண்டு எம்பெருமானைப்போற்றிப் பிரார்த்தித்து அங்ஙனம் காணும்போது, மஹாப்ரளயத்தில் ஸ்ரீமந்நாராயணனொருவனையன்றி மற்றைத்தேவரெவரையும் பிழைத்திருக்கக்காணாதவனாய் அப்பெருமானது திருவயிற்றினுள்ளே அனைவரையுங் கண்டு முடிவில் தான் நற்கதி பெறுதற்பொருட்டுத் திருமாலையே சரணமடைய, அப்பெருமான் அவனைத் தனது திருவடிகளிற் சேர்த்துக் கொண்டானென்பது மார்க்கண்டேய சரித்திரத்தின் முடிவு.

இப்பாட்டில் "இண்டைச்சடைமுடி யீசன்" என்றருளிச் செய்ததன் கருத்தை அடியறிந்து ஆசாரியர்கள் வெளியிட்டருளின அழகு வாசாமகோசரம். ஆறாயிரப்படி ஸ்ரீஸூக்தி காண்மின்,—"மாதா பிதாக்களாலே மஹாதபஸா லப்தனாய் அநவரதம் உபலாலிதனாயிருந்த மார்க்கண்டேயன் தன்னுடைய ஆயுரர்த்தமாக ருத்ரனை யாச்ரயிக்க, அவனும் 'மத்ஸமீஹித ஸித்திக்காக நானும் பரமபுருஷனை நோக்கி தவஸூர்யை பண்ணி வர்த்திக்கிறது' என்று சொல்லித் தன்னுடைய கபோவேஷத்தையுங் காட்டி அவனுடைய திருவடிகளையே ஆச்ரயிப்போம் வாவென்று அவனைக்கொண்டு ருத்ரன் வந்து ஆச்ரயிக்க."

உசாச்செல்ல=உசாவிச்செல்ல. உசாவுதல் வார்த்தையாடுதல். .... (எ)

செல்லவுணர்ந்தவர் செல்வன்றன்சீரன்றிக்கற்பரோ *
எல்லையிலாத பெருந்தவத்தால்பலசெய்மிறை *
அல்லலமரரைச் செய்யுமிரணியனாகத்தை *
மல்லலரியுருவாய்ச் செய்தமாயமறிந்துமே. (அ)

எல்லை இலாத பெரு தவத்தால்	அபரிமிதமான மஹாதபஸ்ஸுக்களாலே	மல்லல் அரி உரு ஆய் செய்த	பெரிய நரசிங்க வடிவையுடையனாய்க் கொண்டு இருபிளவாகச் செய்த
பல செய் மிறை	பலவகையாகச் செய்யப்பட்ட லோகபீடையை யுடையனாய்	மாயம் அறிந்தும்	ஆச்சரியத்தை யறிந்துவைத்தும்
அமரரை அல்லல் செய்யும்	(விசேஷித்து) தேவர்களுக்குத் துன்பங்களை யுண்டுபண்ணினவனான	செல்ல உணர்ந்தவர்	பூர்த்தியான ஞானத்தைப் பெற்றவர்கள்
இரணியன் ஆகத்தை	ஹிரண்யாஸுரனுடைய உடலை,	செல்வன் தன் சீர் அன்றி கற்பரோ	லக்ஷ்மீபதியான அப்பெருமானுடைய திருக்குணங்களையன்றி வேறொன்றைக் கற்பரோ?

* * *—நரசிங்க மூர்த்தியாய்த் தோன்றி ஆச்ரிதரக்ஷணம் பண்ணின மஹாகுணத்தைப் பேசுகிறாரிதில். செல்லவுணர்ந்தவர் என்றது=உணர்ச்சி எவ்வளவு தூரம் செல்லலாமோ அவ்வளவும் செல்ல விவேகிக்கவல்லவர்கள் என்றபடி. ஐச்வர்ய கைவல்யங்களில் மாத்திரம் நின்றுவிடாதே எல்லை நிலமான பகவதனுபவம் வரையினும் உணர்ச்சியைச் செல்லவிட்ட

வர்கள் என்றபடி. அன்னவர்கள் * திருவுக்குந்திருவாகிய செல்வனுடைய சீர்களையே யன்றோ கற்பார். இப்போது தாம் விவக்ஷித்த சீர் இன்னதென்கிறது மேல் மூன்றடிக ளில். அளவிறந்த தபஸ்ஸுக்களைச்செய்து அதனால் அபரிமிதமான வரங்களைப் பெற்று, அப் படி வரங்கொடுத்த தெய்வங்களையும் கண்ணீர்பாயவிட்ட இரணியனது உடலை, பெரிய வடிவு கொண்ட நரஸிம்ஹமூர்த்தியாய்த் தோன்றிப் பிளந்த ஆச்சரியத்தை யறிந்துவைத்தும் அந்த ஆச்ரிதவாத்ஸல்ய குணத்தையல்லது வேறொன்றைக் கற்பரோ?

மல்லல்=பெருமை; "அபரிமித பரிமாண ந்ருஸிம்ஹரூபதானைக் கொண்டு" என்பது ஆறாயிரப்படி. "* உஹாவிஷ்ணு என்னும்படியே ஹிரண்யன் ¶ குளப்படியாம்படியாகப் பெரிய வடிவைக்கொண்டு"என்பதீடு. ¶குளப்படி=குளம்பு அடி. வத்ஸமாத்ரமென்றபடி.

செய்தமாயம்—* நாரஸிம்ஹ தநூர் ஹளணீ ஸாலாலயஸாலூர்வஸ்ஹக்ருதிர: । ஹேஹ ஸம்ஹவஹை * என்று ஆழ்வான் காட்டின மாயங்கள். ... ... (அ)

மாயமறிபவர் மாயவற்காளன்றியாவரோ *
தாயம்செறுமொருநூற்றுவர்மங்க வோரைவர்க்காய் *
தேசமறியவோர்சாரதியாய்ச்சென்று சேனையை
நாசம்செய்திட்டு * நடந்தநல்வார்த்தையறிந்துமே. (கூ)

தாயம் செறும் ஒரு நூற்றுவர் மங்க	தாயாதி முறையில் சண்டை செய்து கிளர்ந்த துர்யோதநாதிகள் தொலைய	நடந்த நல் வார்த்தை அறிந்தும்	தன்னடிச் சோதிக்கெழுந்தருளினனென்கிற நல்வார்த்தையை யறிந்தும்
ஓர் ஐவர்க்கு ஆய்	விலக்ஷணர்களான பஞ்ச பாண்டவர்களுக்காகி	மாயம் அறிபவர்	மிகவும் ஆச்சரியமான பகவத் கதைகளை யறியுமவர்கள்
தேசம் அறிய ஓர் சாரதி ஆய் சென்று	ஸகலலோக ப்ரஸித்தமாம்படி ஒப்பற்ற ஸாரதியாகப் போய்	மாயவற்கு அன்றி ஆள் ஆவரோ	அப்பெருமானுக்கல்லது மற்றொருவர்க்கு அடிமை யாவரோ?
சேனையை நாசம் செய்திட்டு	எல்லாச் சேனைகளையும் அழியச் செய்து		

* * *—பஞ்சபாண்டவர்களுக்குக் கையாளாயிருந்து இழிதொழில் செய்து பார்த்த ஸாரதியென்று பேர்பெற்றுத் தாழநின்று அநிஷ்டவர்க்கங்களை அகற்றின மஹாகுணத்தைப் பேசுகிறார்.

தாயம் செறும்—தாயப்ராப்தியாலே செறுகிற என்றபடி. பங்காளிமுறையாலே சண் டை செய்தமையைச் சொன்னபடி.

தேசமறியவோர் சாரதியாய்ச் சென்று—இற்றைக்கும் அர்ச்சாவதாரத்திலுங்கூட அனை வருமறிந்துகொள்ளுமாறு பார்த்தஸாரதி என்று பேர்பெற்று நிற்கிறானன்றோ. தேசமறிய என்றவிடத்து நம்பிள்ளை யருளிச் செய்வது காணீர்;—' நாட்டில் ஸ்வாதந்த்ர்யபாரதந்த்ர்யங் கள் வ்யவஸ்திதமானவிடத்திலும் ரஹஸ்யத்திலேயிறே அவை ப்ரயோகிப்பது. பார்த்தாவும் பார்யையைக் காலைப்பிடிப்பது ரஹஸ்யத்திலேயிறே. இப்படியிருக்கச் செய்தேயிறே ஜகத் ப்ரஸித்தமாம்படி தன்னைத் தாழவிட்டது."

நடந்த—திருநாடேற வெழுந்தருளின என்றபடி. *க்ருஷ்ணாஹாராவதரணம் க்ருத்வா: க்ருஷ்ணோ அநக: । ஸோஹமீகா ஜகத்ஸ்வம் ஷத: ஸ்வம் ஸ்தாநமுத்தமம் ॥ என்ற மஹாபாரத ச்லோகம் இங்கே யநுஸந்திப்பது. .... (கா)

வார்த்தையறிபவர் மாயவற்காளன்றியாவரோ *
போர்த்தபிறப்பொடு நோயொடுமூப்பொடிறப்பிவை
பேர்த்து * பெருந்துன்பம்வேரறநீக்கித் தன்தாளின்கீழ்ச்
சேர்த்து * அவன்செய்யும் சேமத்தையெண்ணித்தெளிவுற்றே. (௧௦)

வார்த்தை அறிபவர்	சரமச்லோகமாகிற நல்வார்த்தையையறியுமவர்கள்,
போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடு இறப்பு இவை பேர்த்து	ஸ்வரூபவிளக்கத்தை மறைக்கின்ற பிறப்பு வியாதி கிழத்தனம் மரணம் முதலானவற்றை விட்டுக் கழியும்படி பண்ணி
பெரு துன்பம் வேர் அற நீக்கி	கைவல்யாநுபவமாகிற மஹாநர்த்தத்திலும் புகாமே காத்து
தன் தாளின் கீழ் சேர்த்து	தன்னுடைய திருவடிகளின் கீழே சேர்த்துக்கொண்டு
அவன் செய்யும் சேமத்தைஎண்ணி	இப்படியாக அவன் செய்தருளும் க்ஷேமங்களை யநுஸந்தித்து
தெளிவு உற்று	தெளிவு பெற்று வைத்து
மாயவற்கு அன்றி ஆள் ஆவரோ	அப்பெருமானுக்கல்லது வேறொருவர்க்கு அடிமை யாவரோ?

* * *—ஸர்வதர்மாந் பரித்யஜ்ய இத்யாதி சரமச்லோகமருளிச் செய்த மஹாகுணத்திலே யீடுபட்டுப்பேசுகிருர். வார்த்தை யறிபவர் என்றது—*மாமேகம் சரணம் வ்ரஜ—ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* என்ற வார்த்தையை யறியுமவர்கள் என்றபடி. முமுக்ஷுப்படியில் சரமச்லோக ப்ரகரணத்தின் முடிவில் இப்பாசுரத்தை சரமச்லோகார்த்தமாக நிர்வஹித்தருளினபடி காண்க. * ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி * என்றதின் அர்த்தமே மேல் மூன்றடிகளாலும் பேசப்படுகிறது.

போர்த்த பிறப்பு=ஆத்மஸ்வரூபம் தெரியாதபடி அறிவைக்கெடுக்கும் ஜன்மம். கருமமடியாகப் பிறக்கிறோமாதலால் பிறக்கப்பிறக்க ஒளிமழுங்கி "ஸம்ஸாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து" என்கிறபடியே கிடக்கிறோமன்றோ. [நோயொடு] அதற்கு மேலே * உடன் பிறந்தே கொல்லும் வியாதி * என்னும்படி பல பல நோய்களும் வந்து புகும். [மூப்பு] இடி விழுந்தாற்போலே வந்து நிற்குங் கிழத்தனம். [இறப்பு] இப்படியிருக்கச் செய்தே திடீரென்று ஒருநாள் நேரும் மரணம். இவற்றையெல்லாந் தொலைத்து. அதாவது மீண்டு மீண்டும் பிறந்து அநர்த்தப்படாதபடி செய்தருளி யென்றபடி. இதற்குமேல் பெருந்துன்பமாவது—ஜன்மம் தொலைந்த பின்பும் நேரக்கூடியதான கைவல்ய மோக்ஷமாகிற மஹாநர்த்தம். அதையும் ஸவாஸநமாகப் போக்குகையாவது அதிலே நசையறும்படி பண்ணுகை. ஆக இவ்வளவு நன்மைகளையுஞ் செய்து, தன் தாளின் கீழ் சேர்த்து—பாதரேகை போலே தன் திருவடிகளின் கீழ் அந்வயிப்பித்துக் கொண்டு. அவன் செய்யும் சேமத்தை யெண்ணி=இதற்குப் பெரியவாச்சான் பிள்ளையருளிச்செய்வது காணீர்;—"இவனுக்கு ஒன்றுஞ் செய்யாதாரைப் போலே என் செய்வோமென்றிருக்கு மென்னுசல், இச்சைங்கர்யத்துக்கு நிலவரான நித்யஸூரிகளோடே சேர்த்து யாவதாத்மபாவியாக்கு மென்னுதல்."

'எண்ணித் தெளிவுற்று வார்த்தை யறிபவர் மாயவற்காளன்றி யாவரோ?' என்று அந்வயிப்பது. ... . (௧௦)

தெளிவுற்றுவீவின்றிநின்றவர்க் கின்பக்கதிசெய்யும் *
தெளிவுற்றகண்ணனைத் தென்குருகூர்ச்சடகோபன்சொல் *
தெளிவுற்றவாயிரத்துள் இவைபத்தும்வல்லாரவர் *
தெளிவுற்றசிந்தையர் பாமருமூவுலகத்துள்ளே. (௧௧)

தெளிவு உற்று வீவு இன்றி நின்றவர்க்கு	ஸ்வரூபத்தில் தெளிவு பெற்று அந்தத் தெளிவுக்கு ஒரு நாளும் விச்சேதமில்லாமலிருப்பவர்கட்கு	தெளிவு உற்ற ஆயிரத்துள்	தெளிந்த ஆயிரத்தினுள்ளே
இன்பம் கதி செய்யும்	இன்பமே வடிவெடுத்ததான கதியைச் செய்விப்பவனாய்	இவை பத்தும் வல்லார் அவர்	இத்திருவாய்மொழியை ஓத வல்லவர்கள்
தெளிவு உற்ற கண்ணனை	தெளிவு தானே வடிவெடுத்திருப்பவனான எம்பெருமானைக் குறித்து	பா மரு மூ உலகத்துள்ளே	பாபபூயிஷ்டமான உலகத்திலிருந்துவைத்தே
தென் குருகூர் சடகோபன் சொல்	ஆழ்வார் அருளிச்செய்ததான	தெளிவு உற்ற சிந்தையர்	தெளிவு பெற்ற மனமுடையராவர்.

* * *—இத்திருவாய் மொழியைக் கற்பவர்கள் இவ்விருள் தருமாஞாலத்தில் இருக்கச் செய்தேயும் தெளிந்த சிந்தையராயிருப்பர் என்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது. தெளிவுற்று நின்றவர்க்கு, வீவு இன்றி நின்றவர்க்கு—உபாயமும் உபேயமும் அவனேயென்று தெளிந்திருக்குமவர்களுக்கு; இந்தத் தெளிவு இருக்கச் செய்தேயும் சிலர் ஆபாஸ புத்திகளைக் கொண்டு வாதங்கள் செய்து புத்திபேதத்தை யுண்டாக்க முயலக்கூடும்: அப்போதும் தளராதே யிருக்குமவர்கள் வீவின்றிநின்றவர்; ஆக, ஒருபடியாலும் சலிப்பிக்கவொண்ணாத திண்ணிய அத்யவஸாயமுடையார்க்கு என்றபடி. யுத்தம் செய்யமாட்டேனென்று நின்ற அர்ஜுநன் கீதையைக் கேட்டுத் தலைக்கட்டி "நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர் லப்தா த்வத் ப்ரஸாதாந் மயாச்யுத—ஸ்திதோஸ்மி கத ஸந்தேஹ: கரிஷ்யே வசனம் தவ." என்று தளும்புதல் தீர்ந்து நின்றானன்றோ; அப்படிப்பட்டவர்களைச் சொல்லுகிறது. இவ்விடத்தில் ஈடுமுப்பத்தாறாயிரத்தில் ஒரு ஸம்வாதம் அற்புதமாகவுள்ளது காணீர்;—"அர்ஜுநன் தான் எம்பெருமானைப் பெற்றானோ இல்லையோ?" என்று நம்பிள்ளை நஞ்சீயரைக் கேட்டாராம். அதற்கு நஞ்சீயரருளிச் செய்த உத்தரம்: அர்ஜுனன் பெற்றானா இல்லையா என்கிற விசாரம் உமக்கு எதற்காக? யார் யார் பெற்றார்கள் என்று அவர்களையெல்லாம் ஆராய்ந்துபார்த்தோ நாம் பற்றவேணும். எம்பெருமானுடைய அருளிச்செயல் என்று இவ்வளவே கொண்டு நாம் பற்றவேணுமேயொழிய, பெற்றவர்களைப் பார்த்தன்று காணும். குளிர்ந்த தண்ணீர் கண்டால் தாஹித்தவன் குடிக்கக் காணாநின்றோம்; இது குடித்து யார் யார் தாஹம் தீர்ந்தார்கள் என்று விசாரித்துப்பார்த்தா குடிக்கிறோம்; இல்லையே"—என்று அருளிச் செய்தாராம்.

இன்பக்கதி செய்யும் தேளிவுற்ற கண்ணனை—இன்பமயமான கதி—அர்ச்சிராதிகதி; அதைப் பண்ணித் தருமவனென்கை. சேதனன் தெளிவுறாமல் கலங்கியே கிடந்தாலும், இவன் தெளியாத இழவுதீர எம்பெருமான் தான் தெளிந்திருந்து காரியஞ் செய்வனென்கை. இப்படிப்பட்ட எம்பெருமான விஷயமாக ஆழ்வாரருளிச் செய்த, தேளிவுற்றவாயிரம்—இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"ஸஹ்யத்திலே கலங்கின நீரானது ஓரோ ப்ரதேசங்களிலே வந்து தெளிந்து உபயோக யோக்யமாமாப் போலே, அதிக்ருதாதிகாரமாய் கூளமும் பலாப்பிசினும்போலே ஒன்றை நிஷ்கர்ஷித்துப் பிரிக்கவொண்ணாதபடியாயிருக்கிற வேதார்த்தமானது ஸர்வாதிகாரமாய் ஸர்வஸம்சயங்களும் தீர்ந்து தெளிந்தது இவர் பக்கலிலே வந்தவாறே."

இப்படிப்பட்ட ஆயிரத்தினுள் இத்திருவாய்மொழியை வல்லார்கள் இவ்வாழ்வார் தம்மைப் போலவே தெளிவு படைத்த நெஞ்சுடையராவர் என்று பயனுரைத்துத் தலைக்கட்டிற்றாயிற்று. ... ... (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம். நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

திருவாய்மொழியில் ஏழாம்பத்து ஐந்தாந் திருவாய்மொழி உரை

முற்றுப்பெற்றது.

ஏழாம்பத்து ஆருந்திருவாய்மொழி பாமருமூவுலகும்.

உரையவதாரிகை:—கீழ்த்திருவாய்மொழியில் பரோபதேசம் ஸ்பஷ்டமாக இல்லையாயினும் பரோபதேசத்திலேயே முழுநோக்காயிருக்கும். * கற்பாரிராமபிரானையல்லால் மற்றுங் கற்பரோ * நாரணற்காளன்றியாவரோ * கண்ணற்காளன்றியாவரோ * என்று இங்ஙனே பாட்டுத்தோறும் படர்க்கையாகவே அருளிச் செய்திருந்தாலும் முன்னிலையாக அருளிச் செய்வதிலேயே ஆழ்வாருடைய திருவுள்ளம் ஊன்றியிருக்கும். பாவிகாள்! இழந்து போகிறீர்களே! என்று ஸம்ஸாரிகளை நோக்கிப் பரிதபித்துக் கூறுதலும், அப்படி இழவாதே கொள்ளுங்கள் என்று உபதேசித்ததுமே கீழ்த்திருவாய்மொழிக்கு ப்ரமேயமாயிருக்கும். அங்ஙனே பிறருடைய இழவுக்கு நொந்து பேசின ஆழ்வார் தம்மை நிரூபித்துப்பார்த்தார். பிறர் இழந்திருப்பது நாஸ்திக்யத்தாலே; அப்படிப்பட்ட இழவு தமக்கு இல்லையானாலும், எம்பெருமானைப் பரிபூர்ணமாக அநுபவிக்க வேணுமென்கிற விருப்பம் தமக்குக் குறையற உண்டாயிருக்கச் செய்தேயும் அவ்வநுபவம் பெறுமையினாலேயான இழவு பொறுக்கவொண்ணாதிருந்ததனால், தம்முடைய ஆர்த்தியெல்லாம் தோற்றப் பரமபத நாதனுடைய திருச்செவியளவும் படும்படியாகப் பெருமிடறு செய்து கூப்பிடுகிறார் இத்திருவாய்மொழியில்.

அம்மங்கியம்மாள் என்னுமாசிரியர் "இத்திருவாய்மொழியின் சப்தராசிகளை நாம் வாயாற்சொல்லவும் காதாற் கேட்கவும் அதிகாரிகளே தவிர, இதில் ஆழ்வார்க்குச் செல்லுகின்ற ஆர்த்தி இப்படிப்பட்டதென்று எடுத்துரைக்க நாம் அதிகாரிகளல்லோம்" என்பராம்.

பாமருமூவுலகும்படைத்த பற்பநாபாவோ *
பாமருமூவுலகுமளந்த பற்பபாதாவோ *
தாமரைக்கண்ணுவோ தனியேன்தனியாளாவோ *
தாமரைக்கையாவோ உன்னையேன்றுகோல்சேர்வதுவே. (க)

பா மரு மூ உலகும் படைத்த பற்பநாபா ஓ	பலவகைப் பொருள்களும் நிரம்பியுள்ள மூவுலகங்களுமுண்டாக்கின ஓ பத்மநாபனே!	தாமரை கண்ணு ஓ	செந்தாமரைபோன்ற திருக்கண்களையுடையவனே!
		தனியேன் தனி ஆளா ஓ	துணையற்றவனான என்னை அஸாதாரணமாக ஆள்பவனே!
பா மரு மூ உலகும் அளந்த பற்பம் பாதா ஓ	பரம்பின மூவுலகங்களையுமளந்துகொண்ட திருவடித்தாமரைகளையுடையவனே!	தாமரை கையா ஓ	செந்தாமரைக் கையனே!
		உன்னை சேர்வது என்று கொல்	உன்னை நான் சேரப்பெறுவது எந்நாளோ?

* * *—ஒவ்வோரவயவத்தாலும் ஒவ்வோர் அதிமாநுஷ சேஷ்டிதத்தைச் செய்தருளின பரமபோக்யனானவுன்னை நான் என்றைக்குக் கிட்டுவதென்கிறார். திருநாபிக்கமலம் செய்த காரியத்தை முதலடியில் அருளிச் செய்கிறார். *உய்யவுலகு படைக்கவேண்டி உந்தியில் தோற்றினாய் நான்முகனை * என்கிறபடியே மூவுலகங்களையும் படைக்குமவனான பிரமனை நாபிக்கமலத்தில் உண்டாக்கினது பற்றிக் கொப்பூழ்ச் செந்தாமரையே மூவுலகும் படைத்ததாகச் சொல்லுகிறபடி. பிரானே! உன்னுடைய பரத்வத்தை நிர்ணயிப்பதற்கு வேறு சில ப்ரமாணங்கள் தேடவேணுமோ? உனது திருநாபிக்கமலந்தான் போதாதோ? என்கிறார். *முதல்வா! நிகரிலகு காருருவா நின்னகத்ததன்றே புகரிலகு தாமரையின் பூ* என்று இவர் தாமே பெரிய திருவந்தாதியில் அருளிச்செய்தது காண்க. பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் *விஹொ நாபீவஷோ விபீஷிவ நிஷாநம் ஹுவதஃ தஷ நஷ்ஹஸ்ஹீவஷவதி தி ஷிஷாஜயதி நஃ* என்றருளிச் செய்ததுங் காண்க.

படைத்தவுலகங்களைப் பிறர் பறித்துக்கொள்ள, அவற்றை மீட்டுக்கொண்ட திருவடியின் செயலைச் சொல்லுகிறார் இரண்டாமடியில். *அடிச்சியோந்தலை மிசை நீ யணியாய் ஆழியங்கண்ணாவுன் கோலப்பாதம்* என்றும் *நின்பாதபங்கயமே தலைக்கணியாய்* என்றும் நான் ஆசைப்பட்டிருக்க, ஆசையில்லாதார் தலையிலே திருவடியை வைக்குமவனாயிருக்கின்றாயே! என்று நொந்து சொல்லுகிறபடி. இரண்டடிகளிலும் பாமரு என்பதற்குப் பலவகையாகப் பொருள் கொள்வர்; பா— பதார்த்தங்கள்; அவை மருவியிருந்துள்ள மூவுலகம். பா—பாபம்; அது மிக்கிருந்துள்ள மூவுலகம். பா வென்று பரம்புதலாய், அதையுடைத்தான மூவுலகம்.

தாமரைக்கண்ணாவோ! என விளித்தவுடனே 'தனியேன் தனியாளாவோ' என்றதனால், திருவிருத்தத்தில் "பெருங்கேழலார் தம்பெருங்கண்மலர்ப்புண்டரீகம் நம்மேல் ஒருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம், ஒருவர் நம்போல் வருங்கேழ்பவருளரே" என்று அருளிச்செய்தபடியே முதலிலே தம்மை விஷயீகரித்தவை இத்திருக்கண்களேயென்று காட்டினபடி. இவ்விருள் தருமாஞாலத்தில் நான் அத்விதீயனன்றோ; உன் திருக்கண்கள் என்னையாண்டது மற்றொருவர்க்கு நிலமோ? கண்ணழகைக்காட்டி என்னை வலையுளகப்படுத்தி இப்படியோ உபேக்ஷித்து வைப்பது என்கிறார்.

தாமரைக்கையாவோ! அக்ரூரனைக் கையால் தொட்டு அணைத்தாயே, கண்டாகர்ணனைக் கையால் தொட்டு விஷயீகரித்தாயே; அவ்வளவுக்கும் நான் உரியேனல்லேனோ? என்கிறார். இப்போது எனக்கு அதுவொன்றும் செய்யவேண்டா; இன்னநாள் என்னை நீ சேரப்பெறுவாய் என்று ஒரு நாளிட்டுக் கொடுக்கலாகாதோ வென்கிறார் உன்னை யென்றுகொல் சேர்வதுவே யென்று. ... ... (க)

என்றுகொல்சேர்வதந்தோ அரன்நான்முகனேத்தும் * செய்ய
நின்திருப்பாதத்தையான் நிலநீரெரிகால் * விண்ணுயிர்
என்றிவைதாம்முதலா முற்றுமாய் நின்றவெந்தாயோ *
குன்றெடுத்தாநிரைமேய்த்து அவைகாத்த எம்கூத்தாவோ. (உ)

நிலம் நீர் எரி கால் விண்	பஞ்ச பூதங்களும்
உயிர்	பிராணிவர்க்கமும்
என்ற இவை தாம் முதல் ஆ	ஆகிய இவை முதலாக
முற்றும்	ஸகல பதார்த்தங்களும்
ஆய் நின்ற எந் தாய் ஓ	தானே யென்னலாம்படி நின்ற ஸ்வாமியே!
ஆ நிரை மேய்த்து	பசுக்களின் கூட்டங்களை மேய்த்து
குன்று எடுத்து அவை காத்த	கோவர்த்தன மலையைக் குடையாக வெடுத்து அப்பசுக்களை ரக்ஷித்தருளின
எம் கூத்தா ஓ	குடக்கூத்து முதலிய கூத்துக்களில் வல்லவனான எம்பெருமானே!
அரன் நான் முகன் ஏத்தும்	சிவனும் பிரமனும் துதிக்கும்படியான
நின் செய்ய திரு பாதத்தை	உனது சேவடியை
யான் சேர்வது என்று கொல்	யான் சேரப்பெறுவது எந்நாளோ?
அந்தோ	ஐயோ!

* * *—மீண்டும் அதுவே வாய் வெருவுதலாய்ச் செல்லுகிறார். கீழ்ப்பாட்டில் 'என்றுகொல் சேர்வது' என்றாரே; அதற்கு ஒரு மறுமாற்றம் பெற்றிலர். அத்தோடு அந்தோ என்பதையுங் கூட்டியழுகிறார். நான் முடிந்தேனென்கிறார். திருவடிக்கு 'அரன் நான்முகனேத்தும்' என்ற அடைமொழி கொடுத்தது—அவர்கள் துதிப்பதனால் திருவடிக்கு ஒரு பெருமை என்கைக்காக வன்று; அழிப்பதும் ஆக்குவதுமே தொழிலாயிருக்கின்ற அவர்களுங்கூட

ஆசைப்படுந்திருவடியன்றே; நான் ஆசைப்படச் சொல்லவேணுமோ வென்றவாறு. அவர்கள் ஏத்துவது ப்ரயோஜநாந்தரத்துக்காக; நான் ஏத்துவது ஸ்வயம் ப்ரயோஜநமாக என்றுணராய்.

நில நீரெரிகால் என்று தொடங்கி, சேதநா சேதநாத்மகமான ஸமஸ்தவஸ்துக்களுக்கும் ஆத்மாவாயிருப்பவனே! என்கிறார். பிரானே! உலகில் எப்பொருளைக் கண்டாலும் அவற்றை நீயாகவே நினைத்து மகிழ்ச்சிகொள்ளும்படியானவனே நான்; ஆயினும் அஸாதாரணமானவுன் திருவடிகளைப் பெற்றாலல்லது என் ஆசை தீராதேயென்று காட்டுகிறபடி.

குன்றெடுத்து ஆநிரைமேய்த்து அவைகாத்த—ஆநிரைமேய்க்கைக்காகக் குன்றெடுக்க வேண்டிய அவசியமில்லையாதலால், 'ஆநிரைமேய்த்துக் குன்றெடுத்து அவை காத்த' என்று யோஜித்துக்கொள்வது. .... (உ)

காத்தவெங்கூத்தாவோ மலையேந்திக்கல்மாரிதன்னை *
பூத்தண்டுழாய்முடியாய் புனைகொன்றையஞ்செஞ்சடையாய் *
வாய்த்தவென்நான்முகனே வந்தென்னாருயிர்நீயானால் *
எத்தருங்கீர்த்தியினாய்! உன்னையெங்குத்தலைப்பெய்வனே. (௩)

மலை ஏந்தி கல் மாரி தன்னை காத்த எம் கூத்தா ஓ	கோவர்த்தன மலையைத் தாங்கி நின்று கல் மழையைத் தடுத்தவனும் கூத்தில் வல்லவனுமான எம்பெருமானே!	வாய்த்த என் நான்முகனே	பிரமனுக்கு அந்தர்யாமியே!
பூ தண் துழாய் முடியாய்	அழகிய குளிர்ந்த திருத்துழாய் மாலையைத் திருமுடியிலுடையவனே!	எத்த அரு கீர்த்தியினாய்	துதித்துத் தலைக்கட்ட முடியாத புகழையுடையவனே!
புனை கொன்றை அம் செம் சடையாய்	சிவந்த ஜடையிலே கொன்றை மாலையைப் புனைந்துள்ள சிவனுக்கு அந்தர்யாமியே!	நீ வந்து என் ஆர் உயிர் ஆனால்	நீயாகவே பரகதஸ்வீகாரமாக வந்து எனக்குத் தாரகனாக ஆனாயான பின்பு
		உன்னை எங்கு தலைப்பெய்வன்	உன்னை எங்கே கிட்டியநுபவிப்பேன்?

* * *—கீழே "குன்றெடுத்தாநிரை மேய்த்து அவை காத்த வெங்கூத்தாவோ" என்று கோவர்த்தந உத்தரண வ்ருத்தாந்தத்தைக் கூறிக்கூவின ஆழ்வார் மீண்டுமிப்பாட்டிலும் "காத்த வெங்கூத்தாவோ மலையேந்திக் கன்மாரிதன்னை" என்று அதுதன்னையே கூறிக்கூவுவது அந்தாதித்தொடையமைதிக்காகவன்று; ஈடுபாட்டின் மிகுதியாலாம். "மலையேந்திக் கல்மாரிதன்னை" என்ற சொல்தொடையை நோக்கி நம்பிள்ளையருளிச் செய்வது பாரீர்—"கல்லாலே வர்ஷிக்கையாலே மலையை யெடுத்துப் பரிஹரித்தான்; நீராலே வர்ஷித்தானாகில் கடலையெடுத்து நோக்குங்காணும்" என்று இதனால், இன்னதைக்கொண்டு இன்ன காரியஞ் செய்வதென்கிற நியதி எம்பெருமானுக்கில்லை யென்பதும் ஸர்வசக்தனென்பதும் விளக்கப்பட்டதாம். கல்வர்ஷத்திலகப்பட்டாரையோ ரக்ஷிக்கலாவது? *[illegible]* என்கிற ஸம்ஸாரதுக்கவர்ஷத்தில் அகப்பட்டாரை ரக்ஷிக்கலாகாதோ? ஒரு ஊராக நோவுபட்டாலோ ரக்ஷிக்கலாவது? அவ்வூராகப்பட்ட நோவை நானொருவன் பட்டால் ரக்ஷிக்கலாகாதோ? என்னுடைய ரக்ஷணத்துக்காகவும் ஏதேனும் மலையெடுக்க வேணுமோ? மலையெடுத்த தோளைக் காட்டினால் போதுமே யடியேனுக்கு.

"பூத்தண்டுழாய் முடியாய்! புனைகொன்றையஞ் செஞ்சடையாய்! வாய்த்த வென் நான்முகனே" என்ற விளிகள் மூன்றினாலும் * ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ: என்ற உபநிஷத்தை அநுவதித்தபடி. "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்றும் "அரியை அயனை யரனை" என்று மருளிச்செய்பவரன்றே இவ்வாழ்வார். த்ரிமூர்த்திகளின் ஸாம்யவாதமோ

ஐக்யவாதமோ ஆழ்வார்க்கு விவக்ஷிதம்போலும் என்று சிலர் நினைப்பது சிறிதும் பொருந்ாது, ஏனெனில், இவ்வாழ்வார்தாமே பெரியதிருவந்தாதியில் * முதலாந்திருவுருவம் மூன்றென்பர், ஒன்றே முதலாகும் மூன்றுக்குமென்பர் முதல்வா!, நிகரிலகு காருருவா! நின்னகத்ததன்றே, புகரிலகு தாமரையின் பூ * என்ற பாசுரத்தினால் ஸுவ்யக்தமாகப் பரதத்வ நிர்ணயம் செய்தருளியுள்ளாராதலால். [அப்பாசுரத்தின் திவ்யார்த்ததீபிகையுரையில் விரிவு காண்க.] ஸகல காரணபூதனான பெருமானே! பிரமன் விஷ்ணு சிவன் என்கிற திவ்யமூர்த்திகள் தலைவராவர் என்று சிலர் சொல்லுவர்; மேற்சொன்ன மூன்று மூர்த்திகளுக்கும் வேறொரு தத்துவம் தலையாயிருக்குமென்று மற்றுஞ் சிலர் சொல்லுவர்கள்; உன்னிடத்திலுள்ளதான திருநாபிக்கமலமே உனது பரத்வத்தை வெளியிட வல்லதாயிருக்கும்போது இந்த வாதங்கள் எங்ஙனே பொருந்தும்? என்பது மேற்குறித்த பாசுரத்தின் தாற்பரியமென்றுணர்க.

வந்து என்னுருயிர் நீ—எனக்கு அபேக்ஷையின்றியே யிருக்க நீயே வந்து என்னை விஷயீகரித்து உன்னாலல்லது செல்லாதபடி பண்ணி எனக்குத் தாரகமாயிருப்பவனே! என்றபடி.

உன்னையெங்குத் தலைப்பெய்வனே!—நீ உயிராய் நான் உடலாயிருக்கும்போது, உடல்தான் உயிரை வந்து கிட்டுவதென்று ஒன்றுண்டோ! நீயே பெறுவித்துக்கொள்ளவேணுமேயல்லது நானாகப் பெறுவதென்பதுண்டோ? என்றாராயிற்று. இங்கே ஈடு;—"நான் ஓர் உபாயாநுஷ்டானம் பண்ணி உன்னை யெங்கே வந்து கிட்டப்புகுகிறேன்? என்னாலே வந்து கிட்டுகையென்று ஒன்றுண்டோ?" ... ... (௩)

எங்குத்தலைப்பெய்வன்நான் எழில்மூவுலகும்நீயே *
அங்குயர்முக்கட்பிரான் பிரமபெருமானவன் நீ *
வெங்கதிர்வச்சிரக்கை யிந்திரன் முதலாத்தெய்வம் நீ *
கொங்கலர்தண்ணந்துழாய்முடி என்னுடைக்கோவலனே. (௪)

கொங்கு அலர் தண் அம் துழாய் முடி என்னுடை கோவலனே	மதுவோடு கூடி மலர்ந்த செவ்வித் துழாயையணிந்த மயிர் முடியையுடையனாய் எனக்குப் பரம போக்யனான கோபால கிருஷ்ணனே!	பிரமன் பெருமான் அவன் நீ	அப்படிப்பட்ட நான்முகக் கடவுளும் நீயிட்ட வழக்காயிருப்பர்கள்.
எழில் மூ உலகும் நீயே	விலக்ஷணமான மூவுலகமும் நீயிட்ட வழக்காயிருக்கும்,	வெம் கதிர் வச்சிரம் கை இந்திரன் முதலா தெய்வம் நீ	வெவ்விய பிரதாபம் பொருந்திய வஜ்ராயுதத்தைக் கையிலேயுடைய இந்திரன் முதலான தெய்வங்களும் நீயிட்ட வழக்கே; (ஆனபின்பு)
அங்கு உயர் முக்கண் பிரான்	அந்த லோகத்திலே உயர்ந்தவனான சிவபிரானும்	நான் எங்கு தலைப்பெய்வன்	நான் என் முயற்சியினாலேயே உன்னை வந்து கிட்டுவேனோ?

* * *—ஸர்வஸ்மாத்பரனாய் ஆச்ரிதபவ்யனாய் போக்யதை அளவிறந்திருப்பவனான வுன்னை அகிஞ்சனனான நான் எங்கே கிட்டுவதென்கிறார். எழில் மூவுலகும் நீயே—உலகத்தில் அவ்வோபதார்த்தங்களுக்குள்ள உயர்த்தியெல்லாம் நீயிட்ட வழக்கு என்றபடி. இப்படியே மேலடிகளிலுங் கொள்க. முக்கண்ணனுக்குள்ள ஏற்றமும் பிரமனுக்குள்ள ஏற்றமும் இந்திரனுக்கும் அவனைச்சேர்ந்த மற்றுமுண்டான தேவர்களுக்குமுள்ள ஏற்றமுமெல்லாம் நீயிட்ட வழக்கென்றபடி. பிரமன் சிவனிந்திரன் முதலானார்க்குண்டான ஐச்வரியமெல்லாம் பிரானே! உன்னதீனமாக வன்றோ விருப்பது; அப்படிப்பட்ட நீ என்னுடைய பிரதிபந்தகங்களையும் போக்கி என்னையுன் திருவடிகளிலே சேர்த்தருளவேணுமென்று கருத்து. (௪)

என்னுடைக்கோவலனே யென்பொல்லாக்கருமாணிக்கமே *
உன்னுடையுந்திமலருலகமவை மூன்றும்பரந்து *
உன்னுடைச்சோதிவெள்ளத்தகம்பாலுன்னைக்கண்டுகொண்டிட்டு *
என்னுடையாருயிராரெங்ஙனேகொல் வந்தெய்துவரே. (ரு)

என்னுடை கோவலனே	என்னுடையவனென்று அபிமானிக்கலாம்படியான கோபாலனே!	பரந்து	சாபல்யப்பட்டிருந்து,
என் பொல்லா கரு மாணிக்கமே	துளையாத மாணிக்கம் போன்று எனக்கு இனியனானவனே!	உன்னுடை சோதி வெள்ளத்து அகம்பால் உன்னை	உனக்கே யஸாதாரணமாய் விலக்ஷண தேஜோராசி ரூபமாயிருக்கிற ஸ்ரீவைகுண்ட லோகத்திலே யிருக்கிறவுன்னை
என்னுடை ஆருயிரார்	என் ஆத்மாவானவர்,	கண்டு கொண்டிட்டு	காணப்பெறுமாறு
உன்னுடை உந்தி மலர் உலகம் அவை மூன்றும்	உனது திருநாபியிலே மலர்ந்த மூவுலகங்களிலுமுள்ள விஷயங்களெல்லாவற்றிலும்	எங்ஙனே கொல் வந்து எய்துவர்	எப்படி வந்து சேருவர்?

* * *—லௌகிக விஷயங்களிலே கைகழிந்திருக்கிற என் ஆத்மா உன்னை எங்ஙனே கிட்டக்கடவதென்கிறார். ஈடு;—"பலன் உம்மதானபின்பு நீரும் சிறிது யத்நம் பண்ண வேணுங்காணுமென்ன; நீ ஸ்ருஷ்டித்த லோகங்களில் விஷயங்கள்தோறும் அகப்பட்டுக்கிடக்கிற நான் உன்னைப் பெறுகைக்கு ஒரு ஸாதனத்தை யநுஷ்டித்துவந்து பெறுகையென்று ஒன்றுண்டோ வென்கிறார்."

என்னுடைக் கோவலனே!—பாண்டவர்கள் என்னுடையவனென்று உன்னை யபிமானிக்கும்படி உன்னையவர்களுக்கு நீ விதேயனாக்கினதுபோல எனக்கும் விதேயனாக்கியிருக்கின்றாயன்றோ என்றபடி. எம்பெருமானுடைய சீலகுணத்தை யநுபவித்துச் சொல்லுகிறபடி.

என் பொல்லாக்கருமாணிக்கமே!—இது வடிவழகிலீடுபட்டுச் சொல்லுகிறபடி. பொல்லா என்பதற்கு இரண்டு படியாகப் பொருள்கொள்வர். எதிர்மறையிலக்கணையால் நல்ல கருமாணிக்கமே யென்னுதல்; பொல்லல்—துளைத்தல்; பொல்லா—துளைபடாத; அயலார் அநுபவியாத புதிய ரத்நம் போன்றவனே யென்னுதல்.

உன்னுடையுந்திமலருலகமவை மூன்றும் பரந்து="த்வந்நாபீகமலோத்பந்ந லோகத்ரயா— காஞவத்தி சர்வவிஷயங்களிலும் ப்ரவணமான என் ஆத்மா" என்பது ஆறாயிரப்படி யருளிச் செயல். உன்னுடைய திருநாபியிலே விஸ்த்ருதமாகாநின்றுள்ள ஸகல லோகங்களிலுமுண்டான சப்தாதிவிஷயங்கள்தோறும் ப்ரவணனாயிருப்பது என்னுடைய நிலைமை என்று தம்முடைய படியைப் பேசிக்கொள்ளுகிறாராழ்வார். நீயோ எட்டாத நிலத்திலிருக்கிறாய்; உன்னை எங்ஙனே கண்டுகொள்வது—என்கிறார் மூன்றாமடியினால்.

என்னுடை ஆருயிரார்—இது க்ஷேபித்துச் சொல்லுகிற வார்த்தை. * வயிறடித்திங்காரார் புகுதுவார் ஐயரிவரல்லால் * (சிறிய திருமடல்) என்ற விடத்திற்போல. மிகவும் துச்சமான என்னுடைய ஆத்மாவானது என்றபடி. பிரானே! உனக்கே அஸாதாரணமாய் நிரவதிகதேஜோரூபமாய் * அத்யர்கா நலதீப்தம் தத் ஸ்தாநம் என்று சொல்லப்படுமதான ஸ்ரீவைகுண்டத்தை யிருப்பிடமாகவுடையையாயிருக்கிற வுன்னை ப்ரக்ருதி ப்ராக்ருதங்களிலுண்டான ஸம்பந்தமும் ஊற்றமும் அற்று எங்ஙனே நான் வந்து சேரப்போகிறேனென்றாராயிற்று.

வந்தெய்துமாறறியேன் மல்குநீலச்சுடர்தழைப்ப *
செஞ்சுடர்ச்சோதிகள்பூத்தொரு மாணிக்கம்சேர்வதுபோல் *
அந்தரமேல்செம்பட்டோடு அடியுந்திகைமார்வுகண்வாய் *
செஞ்சுடர்ச்சோதிவிடவுறை யென்திருமார்பனையே. (௬)

மல்கு நீலம் சுடர் தழைப்ப	குறைவற்ற நீலமான புகாரனது மேன்மேலும் வளர,	செம் சுடர் சோதி விட	சிவந்தழகிய வொளியைப் பரப்ப
செம் சுடர் சோதிகள் பூத்த ஒரு மாணிக்கம் சேர்வதுபோல்	சிவந்த வொளியையுடைத்தான சில கிரணங்களைப் பரப்பின வொரு மாணிக்கம் சாய்ந்து கிடக்குமாபோலே,	உறை	கண்வளர்ந்தருள்கின்ற
		என் திருமார்பனை	எனது திருமாலை
அடி உந்தி கை மார்பு கண் வாய்	திருவடிகளும் திருவுந்தியும் திருக்கைகளும் திருமார்பும் திருக்கண்களும் திருப்பவள முமாகிய இவை	வந்து எய்தும் ஆறு அறியேன்	வந்து கிட்டும் வகை யறிகின்றிலேன்.

* * *—உன்னைப் பெறுகைக்கு என்பக்கல் ஓர் உபாயமில்லை; நீயே வந்து விஷயீகரிக்கவேணுமென்கிறார். 'உம்மால் ஒரு உபாயாநுஷ்டானம் பண்ணமுடியாதாகில் இழந்து நிற்கலாமே' என்ன, அந்தோ! இழக்கலாம்படியாயோ உன்படியிருப்பதென்கிறார். எம்பெருமான் திருவனந்தாழ்வான் மேலே சாய்ந்து கிடக்கும்போது திவ்யரூபத்தின் நீலச்சுடர் மல்காநின்றது; பீதகவாடை திருவடிகள் திருநாபிக்கமலம் திருக்கை திருமார்பு திருக்கண் திருப்பவளம் ஆகிய இவற்றினின்று சிவந்த சுடரையுடைத்தான தேஜஸ்ஸு ப்ரஸரியாநின்றது. இந்த நிலைமைக்கு ஒரு த்ருஷ்டாந்தமிடுகிறார் "செஞ்சுடர்ச் சோதிகள் பூத்தொரு மாணிக்கஞ் சேர்வதுபோல்" என்று. 'செஞ்சுடர்ச்சோதிகள்' என்றதற்கு விவரணம் மூன்று மடி. மாணிக்கத்தின் ஸ்தானத்தில் திருமார்பனைக் கொள்வது. கமலமலர்மேல் செய்யாளான பிராட்டி விளங்குந்திருமார்பையுடையனை பெருமான் பீதாம்பரம் முதலானவற்றிலிருந்து செவ்விய கிரணங்களைப் படரச் செய்துகொண்டு சாய்ந்திருப்பதானது செஞ்சுடர்ச் சோதிகள் பூத்த ஒரு மாணிக்கப்பாறை சாய்ந்துகிடப்பதுபோலுள்ளது என்று வருணித்தவாறு.

அந்தரம் என்று இடுப்பைச் சொல்லுகிறது. "செம்பட்டோடு" என்றவிடத்து, ஓடு—உம்மைப்பொருளது. செவ்விய பட்டாடையும் என்றபடி.

"கோயிலிலே கண்வளர்ந்தருளுகிறவுன்னை" என்றார் ஆறாயிரப்படியில் பிள்ளான் திருப்பாற்கடலிலே நீர் உறுத்தாதபடி திருவனந்தாழ்வானைப் படுக்கையாகக்கொண்டு அதிலே நாநாவர்ணமாயிருப்பதொரு மேல்விரியை விரித்தாப்போலே அவன் சாய்ந்தருள" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி .... (௬)

என்திருமார்பன்தன்னை யென்மலைமகள்கூறன்றன்னை *
என்றுமென்னுமகளை யகம்பால்கொண்டநான்முகனை *
நின்றசசீபதியை நிலங்கீண்டெயில்மூன்றெரித்த *
வென்றுபுலம்துரந்த விசும்பாளியைக்காணேனே. (௭)

என் திரு மார் பன் தன்னை	திருமாலாயிருக்கிற தன்மையை எனக்கு ப்ரகாசிப்பித்தவனும்	என்றும் நாமகளை அகம்பால் கொண்ட என் நான் முகனை	எப்போதும் ஸரஸ்வதியை அந்தரங்க மஹிஷியாகக் கொண்ட நான்முகனை ப்ரகாரமாகவுடையனாயிருக்கிறபடியை எனக்கு ப்ரகாசிப்பித்தவனும்
என் மலை மகள் கூறன் தன்னை	பார்வதீபதியை ப்ரகாரமாக வுடையனாயிருக்கிறபடியை எனக்குப்ரகாசிப்பித்தவனும்		

இப்பாட்டில், மூன்றாமடியின் முடிவில் 'எரித்த' 'எரித்து' என்கிற பாடபேதங்கள் காண்கின்றன. 'எரித்து' என்ற பாடங்கொள்வது சாலப்பொருந்தும். 'எரித்த' என்ற பாடங்கொள்வதானால், கீழே 'நிலங்கீண்டெயில்' என்றவிடத்து 'நிலங்கீண்ட' என்று பதம் பிரித்துக்கொள்க. தொகுத்தல் விகாரமென்க. ... ... (எ)

ஆளியைக்காண்பரியாய் அரிகாண்நரியாய் * அரக்கர்
ஊளையிட்டன்றிலங்கைகடந்து பிலம்புக்கொளிப்ப *
மீளியம்புள்ளைக்கடாய் விறல்மாலியைக்கொன்று * பின்னும்
ஆளுயர்குன்றங்கள்செய்து அடர்த்தானையும் காண்டுங்கொலோ. (அ)

ஆளியை காண் பரி ஆய்	யாளியைக் கண்ட குதிரை போலவும்	விறல் மாலியை கொன்று	பிரபலனான மாலியைக் கொன்று
அரி காண் நரி ஆய்	சிங்கத்தைக் கண்ட நரி போலவும்	பின்னும்	அவ்வளவிலும் விடாதே
அரக்கர்	ராக்ஷஸர்கள்	ஆள்	மிகவும் சூரர்களான ஆண் புலிகளை [க்கொன்று]
அன்று ஊளையிட்டு	அக்காலத்தில் அச்சத்தினாலே கதறிக்கொண்டு	உயர் குன்றங்கள் செய்து	பருப்பருத்த மலைகளாகக் குவித்து
இலங்கை கடந்து	லங்காபுரியை விட்டு	அடர்த்தானையும்	அவர்களை யழித்த பெருமானையும்
பிலம் புக்கு ஒளிப்ப	பாதாளத்திலே புகுந்து ஒளிக்கும்படியாக	காண்டும் கொல் ஒ	காணப்பெறுவோமோ?
மீளி அம் புள்ளை கடாய்	பெருமிடுக்கனாய் அழகியவனான கருடனை நடத்தி		

* * *—மாலி முதலான ,*ப்ரதிகூலவர்க்கத்தை நிரஸித்தருளின ஸர்வேச்வரனைக் காணப்பெறுவோமோ! என்கிறார்.

ஸுகேசனென்னும் இராக்கதனுக்கு மாலியவான், மாலி, ஸுமாலியென மூன்று பிள்ளைகள் பிறந்ததும், அவர்கள் தவம்புரிந்து பெருமைபெற்று இலங்கையிற் குடிபுகுந்து விவாஹம் செய்துகொண்டு பல மக்களைப் பெற்றதும், தேவர்கள் சிவபெருமானை அடைக்கலம் புகுந்து அவர் சொன்ன வுபாயத்தினால் ஸ்ரீமந்நாராயணனைச் சரணமடைந்ததும், அவர் அவர்கட்கு அபயமளித்ததும், அது தெரிந்த ராக்ஷஸர்கள் கோபங்கொண்டு படையெடுத்துத் தேவலோகஞ் சென்றதும், அப்பொழுது எம்பெருமான் கருடவாஹனத்திலேறி அங்கு வந்து தோன்ற, அவரைச் சூழ்ந்து அரக்கர் அம்பு மாரி பொழியப்புகுந்ததும், பிறகு அரக்கர்கட்கும் திருமாலுக்கும் பெருத்த யுத்தம் நடந்ததும், அதில் மாலி மரணமடைந்ததும், மற்ற மாலியவான் சுமாலி யென்னுமிருவரும் திருமாலுடன் போர் புரிந்து பராஜயமடைந்து மற்றுமுள்ள இலங்கையரையுங் கூட்டிக் கொண்டு பாதாளலோகம் போய்ச் சேர்ந்ததும் உத்தர ஸ்ரீராமாயணத்தில் (5, 6, 7, 8 ஸர்க்கங்களில்) விரிவாகக் கூறப்பட்டவை. அவ்வரலாறே இப்பாசுரத்தில் அநுஸந்திக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன மூவருள் ஒருவனான சுமாலியின் மகளான கைகஸிக்கு இராவணன் முதலியவர்கள் பிறந்தனரென்பதும் அறியத்தக்கது. இப்படி விரோதி நிரஸநம் செய்யுமியல்வினனான பெருமான் எனது விரோதிகளையடங்கலுஞ் செற்று எனக்குக் காட்சி தருவதென்றைக்கோ என்றாராயிற்று. ... ... (அ)

காண்டுங்கொலோநெஞ்சமே கடியவினையேமுயலும் *
ஆண்டிறல்மீளிமொய்ம்பினரக்கன் குலத்தைத்தடிந்து *
மீண்டுமவன்தம்பிக்கே விரிநீரிலங்கையருளி *
ஆண்டுதன்சோதிபுக்க அமரரரியேற்றினையே. (கூ)

நெஞ்சமே	மனமே !,	மீண்டும்	பின்னையும்
கடிய வினையே முயலும்	மிகக் கொடிய பரஹிம்ஸா ரூபமான தீவினைகளிலேயே முயற்சி செய்பவனாய்	அவன் தம்பிக்கே	அவனுடன் பிறந்தவனான விபீஷணாழ்வானுக்கே
ஆண்	பௌருஷம் மிக்கவனாய்	விரி நீர் இலங்கை அருளி	கடலிடத்துள்ள லங்கா ராஜ்யத்தை யருள் செய்து
திறல்	வீர சூர பராக்ரமசாலியாய்	ஆண்டு	அயோத்யையி லெழுந்தருளி நெடுங்காலம் அரசு புரிந்து
மீளி	சிங்கம் போன்றவனாய்	தன் சோதி புக்க	தன்னடிச்சோதியான பரமபதத்திலே சென்று சேர்ந்த
மொய்ம்பின்	பெருமிடுக்கையுடையனான	அமரர் அரி ஏற்றினை	நித்யஸூரிநாதனான பெருமானை
அரக்கன்	இராவணனென்னும் ராக்ஷஸனுடைய	காண்டும் கொல் ஓ	காணப்பெறுவோமோ?
குலத்தை	குடும்பத்தை		
தடிந்து	தொலைத்திட்டு		

* * *—விபீஷண பக்ஷபாதத்தாலே ராவண குலத்தை நிச்சேஷமாக முடித்து அவனுக்கு லங்காராஜ்யத்தையுங் கொடுத்துத் தானும் அபிஷிக்தனாய் ராஜ்யம் பண்ணித் தன்னடிச் சோதியேற வெழுந்தருளின ஸ்ரீராமபிரானை, அந்த மேன்மையோடேயிருக்கச் செய்தே நாம் காணவல்லோமோ நெஞ்சமே! என்று தமது திருவுள்ளத்தை நோக்கியருளிச் செய்கிறார். (௯)

ஏற்றரும்வைகுந்தத்தையருளும் நமக்கு * ஆயர்குலத்து
ஈற்றிளம்பிள்ளையொன்றாய்ப்புக்கு மாயங்களேயியற்றி *
கூற்றியல்கஞ்சனைக்கொன்று ஐவர்க்காய்க்கொடுஞ்சேனைதடிந்து *
ஆற்றல்மிக்கான் பெரியபரஞ்சோதிபுக்கவரியே. (௧௦)

ஈன்று இள பிள்ளை ஒன்று ஆய்	அப்போது பிறந்த விலக்ஷணமான பச்சைப்பசுங் குழந்தையாய்க்கொண்டு	கொடு சேனை தடிந்து	கொடிய ப்ரதிபக்ஷஸேனைகளை யழியச்செய்து
ஆயர் குலத்து புக்கு	திருவாய்ப் பாடியிலே சென்று சேர்ந்து	ஆற்றல் மிக்கான்	[இவ்வளவு செய்தும்] மிகுந்த நெஞ்சாறல் கொண்டவனாய்
மாயங்களே இயற்றி	பல பல அற்புதச் செயல்களையே செய்து	பெரிய பரம் சோதி புக்க அரி	பரமபதஞ் சென்று சேர்ந்த ஹரியான எம்பெருமான்
கூற்று இயல் கஞ்சனை கொன்று	யமன்போன்ற கம்ஸனையும் முடித்து [பிறகு]	ஏற அரு வைகுந்தத்தை	எப்படிப்பட்டவர்களுக்குங் கிடைக்க வரிதான பரமபதத்தை
ஐவர்க்கு ஆய்	பஞ்சபாண்டவர்களுக்குப் பக்ஷபாதியாயிருந்து	நமக்கு அருளும்	நமக்குத் தந்தருள்வன்.

* * *—ஆழ்வார் தமது திருவுள்ளத்திற்குத் தேறுதலாகக் கூறும் பாசுரமிது. நெஞ்சை நோக்கின விளி மூலத்தில் இல்லையாகிலும், முதலடியில் 'நமக்கு' என்றிருப்பது கொண்டு இங்ஙனே கொள்ளக் குறையில்லை. "தம் திருவுள்ளத்தை ஆச்வஸிப்பிக்கிறார்" என்பது ஆறாயிரப்படியருளிச்செயல். "ஏற்றரும் வைகுந்தத்தை யருளும் நமக்கு" என்கிற விது பாசுரத்தின் முடிவிலே அந்வயிக்கக்கடவது.

ஈற்றிளம்பிள்ளையொன்றாய் ஆயர்குலத்துப்புக்கு —'ஈறு இளம்பிள்ளை' என்றாவது 'ஈன்று இளம் பிள்ளை' என்றாவது பகுத்துக் கொள்ளலாம். இரண்டு வகையிலும் கருத்து ஒன்றே. மிக இளமை தங்கிய பிள்ளையென்றபடி. இங்கு இது சொல்லுவது எதற்காகவென்னில், அவன் நமக்குப் பரம புருஷார்த்தம் தரவேணுமானால் நம் பக்கலிலே ஏதேனும் கைம்முதல் இருக்கவேணுமே; அஃதில்லாமல் தந்தருளமாட்டானே; அஃதொன்றுமில்லையே என்று தளரவேண்டா; நம்முடைய படியைப் பார்க்கவறியாத பேதைக்குழவிகாண்! என்று அவனுடைய ஸௌஹார்த்தத்தைச் சொல்லுகிறது.

மாயங்களேயியற்றி—ஆயுதசாலையிலே புகுந்து ஆயுதங்களை முறிப்பது, வண்ணானைக் கொன்று பரிவட்டங்களணிந்து கொள்வது, குவலயாபீட மதயானையின் கொம்பை முறிப்பது, மல்லரைத் தகர்ப்பது ஆக இப்படிப்பட்ட ஆச்சரியங்களைச் செய்தமை சொல்லுகிறது. இச் செயல்களைச் செய்தபின்னர் அடுத்துச் செய்தது கம்ஸவதமாகையாலே "கூற்றியல் கஞ்சனைக் கொன்று" என்றது. உடலையுமுயிரையும் பிரிக்கும் ஸ்வபாவமுடைய யமனைப் போன்று ஸ்ரீ வஸுதேவ தேவகிகளுக்கு உயிரான கண்ணனைப் பிரித்ததனால் * கூற்றியல் கஞ்சனென்றார்.

பருவம் நிரம்புவதற்குமுன்பே செய்த செயல்களிவை; இனிப் பருவம் நிரம்பிய பின் செய்தது சொல்லுகிறது ஐவர்க்காய்க் கொடுஞ்சேனை தடிந்து என்று. இவ்வளவு செய்தும் ஒன்றுஞ் செய்யாதான்போல் அஸந்துஷ்டனானெனென்கிறது—ஆற்றல்மிக்கான் என்று. (௧௦)

* புக்கவரியுருவாய் அவுணனுடல் கீண்டுகந்த *
சக்கரச்செல்வன்றன்னைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
மிக்கவோராயிரத்துளிவை பத்தும்வல்லாரவரை *
தோக்குப்பல்லாண்டிசைத்துக் கவரிசெய்வரேழையரே. (௧௧)

அ அரி உரு ஆய் புக்கு	அப்படிப்பட்ட சிங்க வடிவையுடையனாய்த்தோன்றி	இவை பத்தும் வல்லாரவரை	இத்திருவாய்மொழியை ஓத வல்லவர்களை
அவுணன் உடல் கீண்டு உகந்த	இரணியாசுரனுடைய உடலை இருபிளவாக்கித் திருவுள்ள முகந்த	ஏழையர்	திருநாட்டிலுள்ள திவ்யாப்ஸரஸ்ஸுக்கள்
சக்கரம் செல்வன் தன்னை	திருவாழியையுடைய திருமாலைக்குறித்து	தொக்கு	திரள் திரளாக விருந்து
குருகூர் சடகோபன் சொன்ன	ஆழ்வார் அருளிச்செய்த	பல்லாண்டு இசைத்து	மங்களாசாஸனம் பண்ணி
மிக்க ஓர் ஆயிரத்துள்	மிகச் சிறந்த ஆயிரத்தினுள்ளே	கவரி செய்வர்	சாமரை வீசுதல் முதலிய கிஞ்சித்காரங்களைச் செய்வர்கள்.

* * *—இத்திருவாய்மொழியைக்கற்றார் * மதிமுகமடந்தையர் விரும்பிப் பல்லாண்டு பாடி ஸத்கரிக்கும்படியான பெருமையைப் பெறுவர்களென்று பலன் சொல்லித் தலைக்கட்டுகிற பாசுரமிது.

புக்கவரியுருவாய்—அவ்வரியுருவாய்ப்புக்கு என்று அந்வயிப்பது. அகரச்சுட்டு விலக்ஷணப் பொருளது; வாசாமகோசரமம்படி பரம விலக்ஷணமான ஸிம்ஹ விக்ரஹத்தைப் பரிக்ரஹித்தவனாய் சத்ரு விஷயத்திலே புகுந்து என்றபடி. அவுணனுடல் கீண்டு உகந்த—இரணியனுடலைப் பிளந்தொழித்து 'சிறுக்கனுடைய விரோதி தொலையப்பெற்றோம்' என்று திருவுள்ள முகந்தபடி. [சக்கரச் செல்வன் தன்னை] இரணியனுடலைக் கீண்டகாலத்தில் ஸ்ரீஸுதர்சனாழ்வானுடைய பணியொன்றுமில்லையே; அப்படியிருக்க இங்கே சக்கரச் செல்வனென்பானேன்? என்னில்; எந்த ஸமயத்திலும் சக்கரத்தாழ்வானுடைய பணி இருந்தே தீரும். அவனது பணியில்லாமல் ஒரு காரியமும் நடைபெறாது; ஸுதர்சந சதகத்தில் * [illegible] என்பதனால் இவ்வர்த்தம் வ்யக்தமாகும். ராமாவதாரத்தில் அம்புகளிலும், வராஹாவதாரத்தில் தம்ஷ்ட்ரையிலும், நரஸிம்ஹாவதாரத்தில் நகங்களிலும், பரசுராமாவதாரத்தில் மழுவிலும்............இப்படியே ஒவ்வோரவதாரத்திலும் ஒவ்வொரு வஸ்துவில் திருவாழியாழ்வானுடைய சக்தியாவேசமுளதென்பர்.

ஏழையர் கவரி செய்வர்—ஏழையரென்று ஸ்த்ரீகளுக்குப்பெயர்; * சூழ்விசும்பணி முகில் திருவாய்மொழியில் "மதிமுகமடந்தையரேந்தினர் வந்தே" என்னப்பட்ட திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் இங்கே விவக்ஷிதர்கள். அவர்கள் திரண்டுகொண்டு இப்பதிகம் வல்லார்களைப் பொலிக பொலிக வென்று மங்களாசாஸனம் பண்ணிச் சாமரை வீசுதல் முதலான கைங்கரியங்களையும் செய்வர்களென்றதாயிற்று. ... . (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம் நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து—ஏழாந்திருவாய்மொழி—ஏழையராவி.

உரையவதாரிகை:—கீழ்த் திருவாய்மொழியிலே ஆழ்வார் கூப்பிட்ட கூப்பீடு பரமபதத்தளவுஞ் சென்று பரவாஸுதேவனுடைய திருச்செவியில் விழுந்திருக்குமே. அது கேட்ட அப்பெருமான் ஆழ்வாரை ஒருவாறு தேற்றுவிக்க உருவெளிப்பாடு தோன்றச் செய்தருளினன். அதாவது அவனுடைய திவ்யாவயவங்களை மானஸஸாக்ஷாத்கார விஷயமாகப் பெற்றாராழ்வார். கண்ணுக்கு ப்ரத்யக்ஷமாகத் தோற்றுமே நெஞ்சுக்கு மாத்திரம் ஸாக்ஷாத்கார விஷயமாகை உருவெளிப்பாடாம். அது இத்திருவாய்மொழியில் செல்லாநின்றது. இது பிராட்டிநிலைமையிலே நின்று பேசுந் திருவாய்மொழி. தாய்மார்களையும் தோழிமார்களையும் நோக்கி "எம்பெருமானுடைய வடிவழகு எனக்கு ப்ரத்யக்ஷ ஸமானாகாரமாய்த் தோற்றித் தனித்தனியும் திரளவும் ஒருமுகஞ்செய்து நலியா நின்றதே! இந்த நலிவுக்கு ஆற்றுவேனோ? என்று அலமந்து பேசுகிறாளாயிற்று பராங்குச நாயகி.

கீழ் ஐந்தாம்பத்தில் * எங்ஙனேயோ வன்னைமீர்காள் * என்கிற திருக்குறுங்குடிப் பதிகமும் உருவெளிப்பாடாய்ச் சென்றது; அதிற்காட்டில் இத்திருவாய்மொழிக்கு வாசியென்னென்னில்; அங்கு ப்ரீதியும் அப்ரீதியும் ஒரு நிகராயிருக்கும்; இங்கு அப்ரீதி தலையெடுத்திருக்கும். தொடங்கும்போதே "இணைக்கூற்றங் கொலோ!" என்கையாலே வ்யஸநத்தினுறைப்பு தெரியவரும். ... . (*)

* ஏழையராவியுண்ணுமிணைக் கூற்றங்கோலோவறியேன் *
ஆழியங்கண்ணபிரான் திருக்கண்கள்கோலோவறியேன் *
சூழவும்தாமரைநாண்மலர்போல் வந்துதோன்றுங்கண்டீர் *
தோழியர்காளன்னைமீரேன்செய்கேன் துயராட்டியேனே. (க)

தோழியர்காள்	தோழிமார்களே!	அறியேன்	அறிகின்றிலேன்;
அன்னைமீர்	தாய்மார்களே!	சூழவும்	நாற்புறமும்
ஏழையர் ஆவி உண்ணும் இணை கூற்றம் கொலோ	பெண் பிறந்தாருடைய உயிரை முடிக்கவல்ல இரண்டு ம்ருத்யுக்களோ இவை!	தாமரை நாள் மலர்போல்	அப்போதலர்ந்த செந்தாமரைப் பூப்போலே
அறியேன்	அறிகின்றிலேன்; (அன்றியே)	வந்து தோன்றும் கண்டீர்	வந்து தோன்றா நின்றன காண்மின்;
ஆழி அம் கண்ண பிரான்	கடல்வண்ணனான கண்ணபிரானுடைய	துயராட்டியேன் என் செய்கேன்	துயருறுகின்ற நான் (துயர் தீர்வதற்கு) என்ன செய்வேன்?
திரு கண்கள் கொலோ	திருக்கண்கள் தானோ!		

* * *—எம்பெருமானுடைய திருக்கண்களிலழகு வந்து தன்னை நலிகின்றபடியைப் பேசுகிருள். * கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப்பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே* என்று திருப்பாணாழ்வாரைத் துடிக்கப் பண்ணின திருக்கண்கள் தம்மையும் துடிக்கப் பண்ணுகிறபடி சொல்லுகிருர். மற்றுமுள்ள அவயவங்கள் கிடக்க முதலிலே திருக்கண்கள் வந்து நலிவானேன்? என்னில்; ஆசார்யஹ்ருதயத்திலே "அதுக்கு ஹேது ஊழிதோறும் சோம்பாது ஒன்றிப் பொருளென்றளி மகிழ்ந்து முற்றுமாய் நின்று நூலுரைத்து யோகு புணர்ந்து கண்காண வந்து ஆள் பார்க்கிறவன் உலகினதியல்வை நல்வீடு செய்ய இணைக்குப் பார்வை தேடிக் கழலலர்ஞான முருவின முழுதுமோட்டின பெருங்கண் எங்குமிலக்கற்று அன்பொடு நோக்கான திசையிலே ஆக்கையில் புக்குழன்று மாறிப்படிந்து துளங்குகிறவர் மேலே படப்பக்கநோக்கறப் பண்ணின விசேஷகடாக்ஷம்" என்று பரக்கவருளிச் செய்தபடியும், ஆழ்வார் தாமே (திருவிருத்தத்தில்) "பெருங்கேழலார்தம் பெருங்கண் மலர்ப்புண்டரீகம் நம்மேல் ஒருங்கே பிறழவைத்தார்" என்றருளிச் செய்தபடியும் இவரை முதன் முதலாக விஷயீகரித்தவை திருக்கண்களேயாதலால் அந்த வுறவு கொண்டு அவை முதலிலே வந்து தோன்றினபோலும். பெண்களின் உயிரைக் கொள்ளை கொள்கின்ற இரண்டு ம்ருத்யுக்களோவிவை!" என்று சொல்லுவானேன்? உகந்து அநுபவிக்கலாகாதோ வென்னில்; அவயவியான அப்பெருமான் தானே ஸாக்ஷாத்தாக வந்து தோன்றினனாகில் உகந்து அநுபவிக்கலாம்; அப்படியில்லையே. அவன்தான் ஒரு விநோதம் செய்வான்போன்று தனது திவ்யாவயவங்களைத் தனித்தனியே போகவிட்டுக் கூத்து பார்க்கிருனகையாலே உகப்பின்றிக்கே நலிவேயாயிற்று; அதனால் "ஏழையராவி யுண்ணுமிணைக் கூற்றங்கொலோ!" என்று அலறிப் பேசுகிறபடி. ஏழையரென்று ஸ்த்ரீகளுக்குப் பொதுவான பெயர்.

ஆழியங்கண்ணபிரான் திருக்கண்கள் கோலோ—எம்பெருமானுடைய திருக்கண்களேயிவை என்று ஆழ்வார்க்குத் தெரியாமையில்லை; அது முந்துறமுன்னம் தெரிந்திருக்கச் செய்தேயும் 'ஏழையராவியுண்ணுமிணைக் கூற்றங்கொலோ' என்பதும் 'திருக்கண்கள் கொலோ அறியேன்' என்பதும் அத்திருக்கண்கள் ஹிம்ஸிக்கிற ஹிம்ஸை சொல்லுவிக்கும் பாசுரமாயிற்று. *உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக் கண்ணன்* என்று கேட்டிருக்க, அந்தோ! இப்படி கொலைசெய்யுங் கண்களாவதே! என்று திருவுள்ளம் நொந்து சொல்லுகிறபடி.

இத்திருக்கண்களுக்குத் தப்பிப் பிழைக்கலாகாதோவென்ன; ஐயோ! அவை ஏதேனுமொரு பக்கத்திலே தோன்றினல் வேறு பக்கம் நோக்கி உய்யலாமே; அப்படிக்கில்லாதபடி மூலபலத்தினன்று பார்த்த பார்த்தவிடமெல்லாம் பெருமாளேயானுப்போலே எந்தப் பக்கமாகத் திருப்பி நின்றுலும் இவையேயாய் வேறொரு பொருள் தோன்றுதபடியாயிற்றே; தோழிமார்களே! தாய்மார்களே! உங்களுடைய ஹிம்ஸைக்கு நான் ஆற்றுவேனே? இத்திருக்கண்களின் ஹிம்ஸைக்கு ஆற்றுவேனே? என்ன செய்வேன் சொல்லுங்களென்கிருளாயிற்று. ... . (௧)

ஆட்டியுந்தூற்றியும்நின்றுஅன்னைமீரென்னைநீர்நலிந்தேன் *
மாட்டுயர்கற்பகத்தின் வல்லியோகொழுந்தோவறியேன் *
ஈட்டியவெண்ணெயுண்டான் திருமூக்கெனதாவியுள்ளே *
மாட்டியவல்விளக்கின் சுடராய் நிற்கும்வாலியதே. (௨)

அன்னைமீர்	தாய்மார்களே!
நீர்	நீங்கள்
என்னை ஆட்டியும் தூற்றியும் நின்று	என்னை யலைத்தும் அலர் தூற்றியும் நின்று
நலிந்து என்	நலிகிறவிதனால் என்ன பலனுண்டு?
மாடு உயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ	(அக்கண்களின்) அருகே ஓங்கியிருப்பதொரு கற்பகத்தினுடைய கொடியோ கொழுந்தோ!
அறியேன்	அறிகின்றிலேன்;

ஈட்டிய வெண்ணெய் உண்டான் திருமூக்கு	திரட்டி வைத்திருந்த வெண்ணெயை(க் களவு வழியாலே) அமுது செய்த கண்ணனுடைய திருமூக்கானது
எனது ஆவி உள்ளே	எனது நெஞ்சினுள்ளே
மாட்டிய	ஏற்றிய
வாலியது வல் விளக்கின் சுடர் ஆய் நிற்கும்	பெருத்து ஸ்திரமான தீப ஜ்வாலைபோலே விளங்காநின்றது.

* * *—கண்ணழகு நலிந்தது போராமே மூக்கழகும் நலியும்படியைச் சொல்லியழுகிறாள். பராங்குசநாயகி எம்பெருமானுடைய திவ்யாவயவ ஸௌந்தர்ய லாவண்யங்களைச் சொல்லி அடிக்கடி வாய்வெருவுவதுண்டு; *செந்தாமரைத் தடங்கண் செங்கனிவாய் செங்கமலம் செந்தாமரையடிகள் செம்பொன் திருவுடம்பே* என்றும், *செக்கமலத்தலர்போலும் கண்கைகால் செங்கனிவாய் அக்கமலத்திலைபோலும் திருமேனி * என்றுமிப்படி பலகாலுமலற்றுவள். அதுகண்ட தாயானவள் 'சாண்ணீளச் சிறுக்கி இப்படியும் வாய்வெருவலாகுமோ?' என்று இனைய பலவுஞ் சொல்லி முனிவதும் பழிதூற்றுவதுமாயிருப்பதுண்டு; அங்ஙனமலர் தூற்றும் தாயை நோக்கிச் சொல்லுகிறாள்; தாய்மார்களே நீங்கள் சிக்ஷிக்கவும் அதற்கு நான் உடன்படும்படியாகவும் விஷயமில்லையே; எம்பெருமானுடைய ஒவ்வோரவயவமும் முந்தி முந்தி மேல்விழுந்து நலியாநின்றதே! இதற்கு நான் என்செய்வேனென்கிறாள். அந்த அவயவங்களுள் திருமூக்கைப்பற்றி இங்குச் சொல்லுமிவள் 'மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ' என்கிறாள். கற்பகக்கொடியோ! அல்லது கற்பகக் கொழுந்தோ! என்றே சொல்லலாம்படியுள்ளது. தீர விமர்சித்துப் பார்த்தால் பிறகுதான் எம்பெருமானுடைய திருமூக்கென்னலாயிருந்தது.

ஈட்டியவெண்ணெயுண்டான் திருமூக்கு என்கையாலே இதற்கிணங்க நம்பிள்ளையருளிச் செய்கிறபடி பாரீர்;—"அநுகூலஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தாலல்லது தரிக்கமாட்டாதே வெண்ணெய் களவு காணப்புக்குக் கொண்டியிலே பிடியுண்டு, பின்பு அத்தை இல்லை செய்கைக்காக முகத்திலே தடவிக்கொள்ளுமே; அவ்வெண்ணெய் முடைநாற்றமும் உருவு வெளிப்பாட்டிலே தோற்றுகிறதாயிற்று இவளுக்கு." என்பன ஈட்டு ஸ்ரீஸூக்திகள். இவ்விடத்தில் * [illegible] * என்ற ஆழ்வானுடைய ஸுந்தரபாஹுஸ்தவ ஸ்ரீஸூக்தியும் சேர்த்து அநுஸந்திக்கத்தகும்.

நங்காய்! நீ சொல்லுகிறவிது எங்களுக்குத் தெரிகிறதில்லையே!, அது எங்கேயிருக்கின்றது? காட்டாய் என்று தாய்மார்கேட்க "எனதாவியுள்ளே மாட்டிய வல்விளக்கின் சுடராய் நிற்கும்" என்கிறாள். எனது ஹ்ருதயத்தினுள்ளே சுடர்வெட்டின பெருவிளக்கினொளியையுடைத்தாய் வலிதாய் நலியாநின்றது என்கை. ... ... (௨)

வாலியதோர்கனிகொல் வினையாட்டியேன்வல்வினைகொல் *
கோலந்திரள்பவளக் கொழுந்துண்டங் கொலோ வறியேன் *
நீலநெடுமுகில்போல் திருமேனியம்மான்தொண்டைவாய் *
ஏலும்திசையுளெல்லாம் வந்துதோன்றுமென்னின்னுயிர்க்கே. (௩)

வாலியது ஓர் கனி கொல்	விலக்ஷணமாயிருப்பதொரு பழமோ?	அறியேன்	அறிகின்றேனில்லை;
வினையாட்டியேன் வல் வினை கொல்	இப்பழத்தை இப்போதேயநுபவிக்கப் பெறாத பாவத்தையுடையேனான வென்னுடைய வலிய பாவமே ஒரு வடிவு கொண்டதாயிருக்கிறதோ?	நீலம் நெடுமுகில் போல் திருமேனி அம்மான்	கறுத்துப் பெருத்த மேகம் போன்ற திருமேனியையுடைய பெருமானது
		தொண்டை வாய்	தொண்டைக்கனியின் நிறத்தையுடைத்தான அதரமானது
கோலம் திரள்	ஸௌந்தர்யம் ஸௌகுமார்யம் முதலான நலங்களெல்லாம் ஒருசேரத் திரண்ட	ஏலும் திசையுள் எல்லாம்	பார்த்த பார்த்த திசையெல்லாம்
பவளம் கொழு துண்டம் கொலோ	பவளத்தினுடைய கொழுவியதொரு முறியோ?	என் இன் உயிர்க்கு வந்து தோன்றும்	எனது இனிய உயிரை நலிகைக்காக வந்து தோன்றாநின்றது.

* * *—எம்பெருமானது திருப்பவளத்தினழகு வந்து நலிகிறபடியைச் சொல்லுகிறாள். முன்பு பிஞ்சாய்ப் பிறகு பக்குவமாய்ப் பின்பு அநுபவயோக்யமல்லாமற் போகுஞ் சில பழங்களுண்டே; அப்படியல்லாமல் எப்போதும் ஒருபடிப்பட்டேயிருக்கும் கனியோ? என்பது வாலியதோர் கனிகோல் என்பதன் கருத்து.

வினையாட்டியேன் வல்வினைகோல்?—பாபத்தைப் பண்ணின வென்னுடைய பாபமானது பக்குவமாகி அங்கே குடியேறிற்றோ? அம்ருதமே விஷமாம்படியான பாபத்தைப் பண்ணினேன் நானன்றோ. போக்யவஸ்துவே பாதகமானால் போக்தாக்களின் பாபமேயன்றோ வலிதாயிருக்கவேணும்.

கோலந்திரள் பவளக்கொழுந்துண்டங்கோலோ?—ஸௌந்தர்ய ஸாரஸமுதாயமே வடிவெடுத்ததோ வென்னலாம்படியுள்ள பவளத்தினுடைய கொழுவிய துண்டமென்னலாயிருக்கிறதோ? இங்ஙனே பலவாறாகச் சங்கித்து, அவையெல்லாமல்ல; நீலமுகில் வண்ணனுடைய திருப்பவளமேயென்று துணிந்து கூறுகின்றாள் மூன்றாமடியில். இது என்னை முடிக்கைக்காக எல்லாத்திசைகளிலும் வந்து தோன்றாநின்றதே! என் செய்வேனென்கிறாள். (௩)

இன்னுயிர்க்கேழையர்மேல் வளையுமிணைநீலவிற்கோல்
மன்னியசீர்மதனன் கருப்புச்சிலைகோல் * மதனன்
தன்னுயிர்த்தாதை கண்ணபெருமான் புருவமவையே *
என்னுயிர்மேலனவாய் அடுகின்றன வென்றுநின்றே. (௪)

இன் உயிர்க்கு	இனிமையான உயிரைக் கவர்வதற்காக	மதனன் தன் உயிர் தாதை கண்ணன் பெருமான்	மன்மதனுக்கு அபிமதனான பிதாவாகிய கண்ணபிரானுடைய
ஏழையர்மேல் வளையும்	பெண்பிறந்தார் மேலே தானே வளைந்து நலிவதான		
நீலம் இணை வில் கொல்	நீல நிறத்தையுடைய இரண்டு விற்களோ?	புருவம் அவையே	அந்தத் திருப்புருவங்களே
மன்னிய சீர் மதனன்	அழியாவழகுடையனான மன்மதனுடைய	என் உயிர் மேலன ஆய்	எனது உயிரையே கணிசித்து
கரும்பு சிலை கொல்	கரும்புமயமான வில்தானோ?	என்றும் நின்றே அடுகின்றன	என்றும் ஒருபடிப்பட நின்று நலியாநின்றன.

* * *—எம்பெருமானுடைய திருப்புருவத்தினழகு வளைந்து கொண்டுவந்து நலிகிறபடியைக் கூறுகின்றாள். "தன்கைச் சார்ங்கமதுவேபோல் புருவ வட்டமழகிய" என்ற ஆண்டாள் பாசுரத்தின்படியே புருவத்திற்கு வில்லை உவமை கூறுவதுண்டாதலால், காமிநீ ஜனத்தின் பிராணனையே இலக்காகப் பெற்ற இரண்டு விற்களோவிவை! என்கிறாள். அல்

வது மன்மதனுடைய ஸௌந்தர்ய நிகேதனமான இக்ஷு கோதண்டமோ? என்கிறாள். இவனும் * ஸக்ஷாந்மந்மத மந்மதனேயன்றோ. இவையெல்லாமல்ல; ஸௌந்தர்ய ஸாரனை மதனனுக்கு ஜன்மபூமியான கண்ணபிரானுடைய புருவங்களேயிவை. இவற்றுக்கு என்னுயிரை மாய்ப்பதொன்றே கருமம்; இவற்றுக்கு எங்ஙனே தப்பிப்பிழைப்பேனென்கிறாள்.

ருக்மிணிப் பிராட்டியினிடத்து மன்மதனுடைய அம்சமாக ப்ரத்யும்நன் பிறந்தனனாதலால், மன்மதன் கண்ணபிரானுடைய புதல்வனென்பது நூற்கொள்கை. "காமர்தாதை" "காமன்றன்தாதை" என்ற அருளிச் செயல்களுங் காண்க. .... (௪)

என்றுநின்றேதிகழும் செய்யவீன்சுடர் வெண்மின்னுக்கோல் *
அன்றியென்னுவியடுமணிமுத்தங்கோலோ வறியேன் *
குன்றமெடுத்தபிரான் முறுவலெனதாவியடும் *
ஒன்றுமறிகின்றிலேனன்னைமீரேனக்குய்விடமே: (௫)

என்றும் நின்றே திகழும்	எப்போதும் ஒருபடிப்பட நின்று விளங்குமதாய்	குன்றம் எடுத்த பிரான் முறுவல்	கோவர்த்தனமலையைக் குடையாகவெடுத்த பெருமானுடைய மந்தஹாஸமானது
செய்ய சுடர் ஈன்	சிவந்த சுடரை வெளிப்படுத்துமதான	எனது ஆவி அடும்	என் ஆத்மாவைத் தபியாநின்றது;
வெண் மின் கொல்	வெண்ணிறமான மின்னலோ!;	அன்னைமீர்	தாய்மார்களே !
அன்றி	அல்லது	எனக்கு உய்வு இடம்	நான் பிழைக்கு முபாயம்
என் ஆவி அடும் அணி முத்தம் கொலோ	என்னுயிரை மாய்க்கின்ற அழகிய முத்துநிரையோ!;	ஒன்றும் அறிகின்றிலேன்	சிறிதும் அறிகிறேனில்லை.
அறியேன்	அறிகின்றிலேன்;		

* * *—எம்பெருமானுடைய புன்முறுவலின் அழகு வந்து நலிகிற படியைக் கூறுகின்றாள். தோன்றி மாயும் மின்னல் போலல்லாமல் எப்போதும் மாறாதே விளங்கா நிற்பதாய் செய்ய சுடரை வெளிப்படுத்தா நின்ற மின்னலோவென்று முதலடியால் உல்லேகிக்கிறபடி. திருமுத்து நிரை வெண்ணிறமுடைத்தாதலால் அது மின்னாகக் கூறப்பட்டது. திருப்பவளத்தின் சிவப்பு நிறமும் முன்னேடுகிறபடியால் செய்யசுடரைச் சேர்த்துக்கூறியபடி. என் பிராணனை முடிக்கவந்த திருமுத்து நிரைதானேயோ வென்பது இரண்டாமடி.

குன்றமெடுத்த பிரான் முறுவல்—இந்திரன் பசிக்கோபத்தினால் ஏழுநாள் விடாமழை பெய்விக்க, கோவலரையும் கோநிரையையுங் காத்தருள வேண்டிக் கோவர்த்தன மலையைக் குடையாக வெடுத்துத் தாங்கி நின்றபோது * கொடியேறு செந்தாமரைக் கைவிரல்கள் கோலமுமழிந்தில வாடிற்றில வடிவேறு திருவுகிர் நொந்துமில மணிவண்ணன் மலையுமோர் சம்பிரதம் * என்னும்படி அவலீலையாக நின்ற நிலையை நோக்கி 'அப்பா! நீ தேவதையா? யக்ஷனா? கந்தர்வனா?' என்று இடையர்கள் கேட்க, * ஸஹம் வொ பாந்யவொ ஜாதः— * என்று சொல்லிச்சிரித்த நிலைதன்னை இப்போது உருவெளிப்பாட்டில் கண்டாள் போலும். (௫)

உய்விடமேழையர்க்குமசுரர்க்குமரக்கர்கட்கும் *
எவ்விடமென்றிலங்கி மகரம்தழைக்கும்தளிர்கோல் *
பைவிடப்பாம்பணையான் திருக்குண்டலக்காதுகளே *
கைவிடலொன்றுமின்றி அடுகின்றனகாண்மின்களே. (௬)

ஏழையர்க்கும் அசுரர்க்கும் அரக்கர்கட்கும்	பெண்டுகளுக்கும் அஸுர ராக்ஷஸர்களுக்கும்	பைவிடம் பாம்பு அணையான்	படமெடுப்பதும் விஷத்தைக்கக்குவதுமான பாம்பைப் படுக்கையாகவுடைய பெருமானுடைய
உய்வு இடம் எவ்விடம் என்று இலங்கி	பிழைக்கும் விரகு ஏது? என்னும்படி விளங்கிக்கொண்டு	திருக்குண்டலம் காதுகளே	திரு மகரகுண்டலங்களையுடைய காதுகள் தானே
		கைவிடல் ஒன்றும் இன்றி	ஓய்வில்லாமல் நிரந்தரமாக
மகரம் தழைக்கும் தளிர்கொல்	மகரவடிவாய்த் தழைத்தன சில தளிர்களோ?	அடுகின்றன காண்மின்கள்	நலியாநின்றன; காணுங்கோள்.

* * *—அவனுடைய திருமகரகுண்டலங்களும் திருக்காதுகளும் நலிகிறபடி சொல்லுகிறாள். அஸுரராக்ஷஸர்களுக்கும் அபலைகளுக்கும் தப்பிச் சென்று பிழைக்குமிடமேது! என்று சொல்லுவனபோல் விளங்கி மகராகாரமாய்த் தழைத்தன சில தளிர்களோ இவை! என்கிற உல்லேகம் முன்னடிகளிற் போதரும். இதனால் திருக்காதுகள் பல்லவம்போல் திகழுமாறு சொல்லிற்றாயிற்று.

ஏழையர்க்கும் அசுரர்க்கும் அரக்கர்கட்கும்—அஸுரராக்ஷஸர்களையும் அபலைகளையும் சேரவெடுத்தது அவயவசோபையைக் கண்டு பாதைப்படுவதில் வாசியற்றிருக்கையாலே. அசுரரும் அரக்கரும் அழகு கண்டால் பொறுக்கமாட்டாதே முடிவர்கள்; அபலைகள் அநுபவிக்கப்பெறாதே முடிவர்கள்.

விரோதிகளுக்குக் கிட்ட வொண்ணாதபடி விஷத்தை உமிழ்பவனான திருவனந்தாழ்வான்மேலே சாய்ந்தருளின எம்பெருமானுடைய குண்டலக் காதுகளே இவை. அந்தோ! இவை இடையில் சிறிது விட்டு நலிகையன்றிக்கே ஓய்வின்றி நலிகின்றனவே! என் செய்வேனென்கிறாள். ... ... (சு)

காண்மின்களன்னையர்காளென்று காட்டும்வகையறியேன் *
நாள்மன்னுவெண்திங்கள்கொல் நயந்தார்கட்குநச்சிலைகொல் *
சேண்மன்னுநால்தடந்தோள் பெருமான்றன்திருநுதலே *
கோள்மன்னியாவியடும் கொடியேனுயிர்கோளிழைத்தே. (எ)

அன்னையர்காள் காண்மின்கள் என்று	தாய்மார்களே! காணுங்கோள் என்று சொல்லி	சேண் மன்னு நால் தட தோள் பெருமான் தன்	உயர்த்தி பொருந்திய நான்கு பருத்த திருத் தோள்களையுடைய எம்பெருமானது
காட்டும் வகை அறியேன்	(உங்களுக்கு) காட்டும் விதமறிகின்றிலேன்	திரு நுதலே	திருநெற்றியே
நாள் மன்னு வெண்திங்கள் கொல்	பூர்வ பக்ஷத்து அஷ்டமீ சந்திரனோ!	கோள் மன்னி	மிடுக்குப்பொருந்தி
		கொடியேன் உயிர் கோள் இழைத்து	பாவியான வென்னுடைய பிராணனை முடிக்கையிலே துணிந்து
நயந்தார்கட்கு நஞ்சு இலை கொல்	ஆசைப்பட்டவர்களுக்கு நஞ்சாயிருப்பதொரு இலையோ!	ஆவி அடும்	என் ஆத்மாவை நலியாநின்றது.

* * *—திருநெற்றியினழகுவந்து நலிகிறபடியைச் சொல்லுகிறாள். அவ்வழகை எல்லார்க்கும் காட்டவேணுமென்றும், அதைக்கண்டு தான் படுகிற பாட்டை எல்லாரும் படவேணுமென்றும் இவளுக்கு ஆசையுள்ளது; ஆனால் அவ்வழகு எடுத்துக்காட்டத்தக்கதாக இல்லையே; தனக்குப்போலே அவர்களுக்கும் உரு வெளிப்பாடு உண்டானாலாவது காண்மின்களென்று சொல்லிக்காட்டலாம். அதுவுமில்லை. ஆகவே "அன்னையர்காள்! காண்மின்க

ளென்று காட்டும் வகையறியேன்'' என்று தளர்கின்றாள். அவ்வழகு என் கைக்குப்பிடி படவில்லை; உங்களுக்கோ உரு வெளிப்பாடு உண்டாகவில்லை; எங்ஙனே காட்டுவேன்? நானே யனுபவித்து நானே நலிவுபடுவேனித்தனை என்றாளாயிற்று.

நீங்கள் கண்டாலென்ன? காணாவிடிலென்ன? உங்களுக்குக் காட்டவேண்டிய அவசியந்தான் எனக்கென்ன? நான் அனுபவிக்கிறேன் போங்கள் என்று சொல்லி இரண்டாமடியிலே அநுபவிக்கிறாள். [நாள்மன்னு வெண்திங்கள் கோல்! நயந்தார்கட்கு நச்சிலைகோல்!] அஷ்டமியளவான நாளோடே மன்னி அர்த்தாகாரனாகையாலே களங்கமற்று வெளுத்த சந்திரனோ? அல்லது நச்சுவடிவாயிருப்பதொரு இலையோ! என்கிறாள். இவ்விடத்து ஈட்டிலே— "மேல்காற்றிலே காட்டப் பரிஹாரமாம் மருந்தாயிற்று இது'' என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. உலகில் வியாதிக்ரஸ்தர்மேல் மேல்காற்றுப்பட்டவாறே ரோகம் அபிவிருத்தியடையும் என்று சொல்லுவர்கள். பகவத் விஷயமாகிற மருந்து அதற்கு எதிர்த்தட்டாயிருக்கும்; மேல்காற்றுப் பட்டால் தீரும் என்கை. அபத்யங்களையும் ஸஹிக்கும்படியான ஔஷதம் என்றபடி.

கீழிரண்டடிகளால் பேசப்பட்ட வஸ்து இன்னதென்கிறது மூன்றாமடி. திருத்தோளழகாலே என்னை யீடுபடுத்திக்கொண்ட பெருமானுடைய திருநெற்றியே என்னை யிப்பாடு படுத்தாநின்றதென்கிறாள். [கொடியேனுயிர் கோளிழைத்து—கோள்மன்னி ஆவியடும்] பாவியேனை யென்னுடைய உயிரினழகை அழித்துக்கொள்கையிலே விருப்பத்தைப்பண்ணி மிடுக்கையவலம்பித்து என்னாத்மாவை நலியாநின்றது என்றபடி. தோற்புரையே போகையன்றிக்கே ஸத்தையை யழியாநின்றதென்கை. ... ... (எ)

கோளிழைத்தாமரையும் கோடியும்பவளமும்வில்லும் *
கோளிழைத்தண்முத்தமும் தளிரும்குளிர்வான்பிறையும் *
கோளிழையாவுடைய கொழுஞ்சோதிவட்டங்கொல் * கண்ணன்
கோளிழைவாள்முகமாய்க் கொடியேனுயிர்கொள்கின்றதே. (அ)

கோள் இழை தாமரையும்	தன்னுடைய வொளியே தனக்கு ஆபரணமாகப் போரும்படியான தாமரையும் [திருக்கண்களும்]
கொடியும்	கற்பகக் கொடியும் [திருமூக்கும்]
பவளமும்	பவளமும் [திருவதரமும்]
வில்லும்	வில்லும் [திருப்புருவங்களும்]
கோள் இழை தண்முத்தமும்	தன்னுடைய தேஜஸ்ஸையே தனக்கு ஆபரணமாகவுடைத்தான குளிர்ந்த முத்தும் [தந்தபங்க்தியும்]
தளிரும்	தளிரும் [திருக்காதும்]

குளிர் வான் பிறையும்	குளிர்ந்து பெருத்த பிறையும் [நெற்றியும்] ஆகிய இவற்றோடே கூடி
கோள் இழையா உடைய	தன்னழகே தனக்கு ஆபரணமாயிருக்கிற
கொழு சோதி வட்டம்கொல்	பூர்ணமான ஜ்யோதிர் மண்டலமோ!
கண்ணன்	கண்ணபிரானது
கோள் இழை வாள்முகம் ஆய்	தன்னொளி தானே தனக்காபரணமான அழகிய முகமென்றொரு வியாஜத்தையிட்டு
கொடியேன் உயிர் கொள்கின்றது	கொடியேனை யென்னுடைய உயிரைக் கொள்ளை கொள்ளாநின்றது.

* * *—கீழே எழு பாட்டுக்கள் கடந்தன. அவ்வேழு பாட்டுக்களிலும் எழு அவயவங்கள் நலிந்தமை சொல்லிற்று. அவையெல்லாம் திருமுகமண்டலத்தினுள்ளே அடங்கியவையாதலால் அவையெல்லாம் ஒன்றுசேர்ந்து திருமுகமண்டலமென்று பேர்பெற்று நலிகிற படியைச் சொல்லுகிறாளிப்பாட்டில்.

அலங்கார சாஸ்த்ரத்தில் ரூபகாதிசயோக்தி யென்றொரு அலங்காரமுண்டு; *𑌪𑌶𑍍𑌯 𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌨𑌿𑌸𑍍𑌸𑌰𑌨𑍍𑌤𑌿 𑌶𑌿𑌤𑌾𑌶𑍍𑌶𑌰𑌾𑌃—பச்ய நீலோத்பலத்வந்த்வாத் நிஸ்ஸரந்தி சிதாச் சரா:* என்று வட நூலார் உதாஹரணம் காட்டுவர். இரண்டு கருநெய்தல் பூக்களிலிருந்து

கூர்மையான அம்புகள் புறப்படுகிறபடி பாராய் என்று இதனால் சொல்லுகிறது. இரண்டு கண்களிலிருந்து கடாக்ஷபாதங்கள் விழுகிறபடியைச் சொன்னவாறு. இந்த வகையிலே இப்பாட்டில் முன்னிரண்டடிகள் அமைந்துள்ளன. தாமரை, கொடி, பவளம், வில், முத்து, தளிர் பிறை என்று சொல்லப்பட்டவை உபமேயத்தை மறைத்து உபமானத்தை மாத்திரம் சொன்னபடி. முதற்பாட்டில் "ஆழியங் கண்ணபிரான் திருக்கண்கள்—தாமரை நாண்மலர் போல் வந்து தோன்றும்" என்றபடியே இங்குக் கண்களைத் தாமரையாகச் சொல்லிற்று. இரண்டாம்பாட்டில் "மாட்டுயர்கற்பகத்தின் வல்லி—ஈட்டிய வெண்ணெயுண்டான் திரு மூக்கு" என்றபடியே இங்கு மூக்கைக் கொடியாகச் சொல்லிற்று. மூன்றும் பாட்டில் "கோலந்திரள் பவளக் கொழுந்துண்டம்—அம்மான் தொண்டைவாய்" என்றபடியே இங்கு அதரத்தைப் பவளமாகச் சொல்லிற்று. நாலாம்பாட்டில் "இன்னுயிர்க் கேழையர்மேல் வளையுமிணைநீலவில்—கண்ணபெருமான் புருவம்" என்றபடியே இங்குப் புருவத்தை வில்லாகச் சொல்லிற்று. ஐந்தாம் பாட்டில் "என்னுவியடுமணிமுத்தம்—குன்றமெடுத்த பிரான் முறுவல்" என்றபடியே இங்கு முறுவலை முத்தாகச் சொல்லிற்று. ஆறும்பாட்டில் "மகரந் தழைக்குந்தளிர்—திருக்குண்டலக் காதுகள்" என்றபடியே இங்குக் காதுகளைத் தளிராகச் சொல்லிற்று. ஏழாம்பாட்டில் நாண்மன்னு வெண்திங்கள்—பெருமான் தன் திருநுதல்" என்றபடியே இங்குத் திருநெற்றியைப் பிறையாகச் சொல்லிற்று. ஆகிய இவற்றையெல் லாம் சேர்த்துக் காணும்போது "சோதிகளெல்லாம் ஒன்று சேர்ந்த சேர்த்தியோ! (அதாவது, ஜ்யோதிர்மண்டலமோ!) என்னலாம்படி யிருக்கையாலே மூன்றுமடியில் 'கோழுஞ்சோதி வட்டங்கோல்' என்றாள். உண்மையில் இவையெல்லாம் ஒன்று சேர்ந்து எம்பெருமானுடைய திருமுகமண்டலமென்று காண்கிறபடியால் அது ஈற்றடியால் சொல்லப்பட்டது ... (அ)

கொள்கின்றகோளிருளைச் சுகிர்ந்திட்டகொழுஞ்சுருளின் *
உள்கொண்டநீலநன்னூல் தழைகோலன்றுமாயன்குழல் *
விள்கின்றபூந்தண்டுழாய் விரைநாறவந்தென்னுயிரை *
கள்கின்றவாறறியீரன்னைமீர் கழறுநிற்றிரே. (கூ)

கொள்கின்ற கோள் இருளை	உலகத்தை யெல்லாம் வியாபிக்கின்ற மிடுக்கையுடைய இருளை
சுகிர்ந்திட்ட கொழு சுருளின்	பன்னிப் பன்னிச் சுருட்டப் பெற்ற சிறந்த வொரு சுருளினுடைய
உள் கொண்ட நீலம் நல் நூல் தழை கொல்	(கையழுக்குப் படாமல்) உள்ளே நூற்கப்பட்ட நீல நிறத்தையுடைய அழகிய நூல்திரளோ!
அன்று	அதுவன்று
மாயன் குழல்	எம்பெருமானுடைய திருக்குழல் கற்றை என்றிவ்வளவே சொலத்தகுமத்தனை;

(அத்திருக்குழலானது)

விள்கின்ற பூ தண் துழாய் விரை நாறவந்து	அலர்ந்தழகிய குளிர்ந்த திருத்துழாயின் பரிமளம் வீசும்படி வந்து
என் உயிரை	என் ஆத்மாவை
கள்கின்ற ஆறு	கொள்ளை கொள்ளும் விதத்தை
அன்னைமீர் அறியீர்	தாய்மார்களே! நீங்கள் அறிகின்றீர்களில்லை;
கழறு நிற்றிர்	வீணை ஏதேனுமொன்றைச் சொல்லிப் பொடிகின்றீர்களே!

* * *—திருக்குழல் கற்றையினழகு வந்து நலிகிற படியைச் சொல்லுகிறாள். இதில் முன்னடிகள் வெகு விலக்ஷணமானவை. திருக்குழலை ஒருவாறு உல்லேகம் பண்ணுவதும், அந்த உலலேகமும் உரியதன்று என்று உதறித்தள்ளுவதும் திருக்குழலின் ஒப்பில்லாமையைக் காட்டுதற்காகவென்க. உல்லேகம் செய்தபடி எங்ஙனே யென்னில், பிரளயகாலத்தில் பிரபஞ்சத்தையெல்லாம் வியாபியா நின்ற இருள் உண்டே, அதைப் பிடித்துக்கொணர்ந்து அதில் அஸாரமான அம்சத்தைக் கழித்துப் பரமஸாரமான பாகத்தை நூல்நூற்ப

தற்காகக் கொள்ளும் ஒரு பஞ்சுச் சுருளை போலே சுருளையாக்கி அதில் நின்றும் நூற்கப் பட்டதொரு நீல நன்னூல் தழையோ! என்று சொல்லலாமென்று பார்த்தார்; இந்த அபூதோபமையையும் ஸஹியாதபடியன்றோ திருக்குழலிருப்பது; ஆகையாலே உடனே அன்று என்று தாமே மறுத்துவிட்டார்; பின்னை என்னவென்று சொல்லலாமென்ன, மாயன் குழல் என்றிவ்வளவே [உபமேயந்தன்னையே] சொல்லவேணுமென்று முடித்தபடி.

திருமாலிருஞ்சோலையழகருடைய திருக்குழல் கற்றையை வருணிக்கின்ற கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்திலே—"[illegible]" என்றருளிச் செய்தது இப்பாசுரத்திற்கு ப்ரதிச்சந்தமாகவேயிருக்கும்.

அப்படிப்பட்ட திருக்குழலினழகானது திருத்துழாய் நறுமணத்தோடு கூட வந்து என்னுயிரைக் கொள்ளை கொள்ளா நின்றவிதம் அன்னைமீர்! உங்களுக்குத் தெரிந்திருந்தால் என்னை நீங்கள் கடிந்து பொடிந்து வார்த்தை சொல்லமாட்டீர்கள்; அஃதறியாமையே இங்ஙனம் திரஸ்கரித்துப் பேசுகின்றீர்கள் என்றாளாயிற்று. கழறுதல்—மனம் நோகும்படி பேசுதல். .... (௯)

நிற்றிமுற்றத்துளென்று நெரித்தகையராய் * என்னைநீர்
சுற்றியும்சூழ்ந்தும்வைதிர் சுடர்ச்சோதிமணிநிறமாய் *
முற்றவிம்மூவுலகும் விரிகின்றசுடர்முடிக்கே *
ஒற்றுமைக்கொண்டதுள்ளம் அன்னைமீர்நசையென்னுங்கட்கே. (௧௦)

அன்னைமீர்	தாய்மார்களே!	இம் மூவுலகு முற்றவும் விரிகின்ற	உலகமடங்கலும் வியாபிக்கிற
நீர்	நீங்கள்		
என்னை	என்னைக்குறித்து		
முற்றத்துள் நிற்றி என்று	'(பெண்ணே!) கூசாமல் முற்றத்திலே வந்து நிற்கிறாயே! என்று அதட்டி	சுடர்	தேஜஸ்ஸையுடைத்தான
நெரித்த கையர் ஆய் சுற்றியும் சூழ்ந்தும்	கையை நெரித்துக் கொண்டு இடை விடாது சூழ்ந்து கொண்டு	முடிக்கே	திருவபிஷேகத்தின் பக்கலிலேயே
வைதிர்	நிந்திக்கின்றீர்கள்;	உள்ளம் ஒற்றுமை கொண்டது	என்து நெஞ்சானது ஒருமைப்பட்டது;
சுடர் சோதி மணி நிறம் ஆய்	சுடராய்ப் பரம்பின வொளியையுடைத்தான ரத்னங்களினுடைய நிறத்தையுடைத்தாய்க் கொண்டு	நுங்கட்கு நசை என்	இனி உங்களுக்கு என் பக்கலில் ஆசை வீண்தான்.

* * *— திருவபிஷேகத்தினழகிலே என்னுள்ளமகப்பட்டது. இனி யென்னைப் பொடிந்து உங்களுக்கொரு பலனில்லையென்று திண்ணிதாகப்பேசித் தலைக்கட்டுகிறாள். இப்படி வெட்டிதாகச் சொல்லாவிடில் அவர்கள் விடார்கள் போலேயிருந்தது; ஆகவே வெட்டொன்று துண்டிரண்டாகச் சொல்லி முடிக்கிறாள்.

* முற்றத்தூடு புகுந்து நின்முகங்காட்டிப் புன்முறுவல் செய்து * என்றும் * முற்றம் புகுந்து முறுவல் செய்து நின்றீர் * என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமான் முற்றத்திலே வந்து முறுவல் செய்து நிற்கிற வழக்கமுண்டாகையாலே அதிலாசை கொண்டு பராங்குச நாயகி முற்றத்திலே வந்து நின்றாள் போலும்; அதுகண்ட அன்னைமார் "அந்தோ! இப்படியும் ஒரு துணிவுண்டோ? நாண்மடமச்சங்கொண்டு பதுங்கி யடங்கியிருக்க வேண்டிய சிறுக்கி வெட்கமின்றி வெளிப்புறப்பட்டு முற்றத்திலே வந்து நிற்கையாவதென்?" என்று

கை நெரித்து வைதார்களாம்; இப்போது இப்படிப்பட்ட வசவுகளுக்கு இறையும் பயனில்லை போமின் என்கிருளாயிற்று. * கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண் முடியிலே எனது நெஞ்சு ஐக்கியப்பட்டதானபின்பு என்னை மீட்கையிலே உங்களுக்குண்டான நசை ஊமனார் கண்ட கனவிலும் பழுதாமத்தனை யென்று தலைக்கட்டினாள். .... (கஂ)

கட்கரியபிரமன் சிவனிந்திரனென்றிவர்க்கும் *
கட்கரியகண்ணனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
உட்குடையாயிரத்து ளிவையுமோருபத்தும் வல்லார் *
உட்குடைவானவரோடுடனா யென்றும்மாயாரே. (கக)

கட்கு அரிய	மனிதர் முதலானுருடைய கண்ணுக்கு இலக்காகாத	உட்கு உடை ஆயிரத்துள்	எம்பெருமானை உள்ளபடி பேசும் வல்லமைவாய்ந்த ஆயிரத்தினுள்ளே
பிரமன் சிவன் இந்திரன் என்ற இவர்க்கு	பிரமன் சிவன் இந்திரன் என்று சொல்லப்பட்ட இவர்களுடைய	இவையும் ஒரு பத்தும் வல்லார்	இப்பத்துப்பாசுரங்களையும் ஓத வல்லவர்கள்
கட்கும் அரிய	கண்ணுக்கும் காணவரியனான	உட்கு உடை வானவரோடுஎன்றும் உடன் ஆய்	ஆற்றல் மிக்க நித்யஸூரிகளோடு கூடினவர்களாய்
கண்ணனை	எம்பெருமானைக் குறித்து	மாயார்	ஒருநாளும் பிரியாதிருக்கப் பெறுவர்கள்.
குருகூர் சடகோபன் சொன்ன	நம்மாழ்வாரருளிச்செய்த		

* * *—இத்திருவாய்மொழியை ஓதுமவர்கள் எம்பெருமானைப்பிரிந்து வருந்ாதே நித்யஸூரிகளோடே கூடி நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்களென்று பயனுரைத்துத் தலைக் கட்டுகிறார். "மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்குந் தேவாவோ" என்றருளிச் செய்த பாசுரத்தின் படியே இதில் ஒன்றரையடிகள் அமைந்திருக்கின்றன. பிரமன் சிவனிந்திரன் முதலானர் நம்முடைய கட்புலனுக்கு இலக்காகாதாப்போலே அவர்களுடைய கட்புலனுக்கு இலக்காகாதவன் எம்பெருமான்; அவன்றன்னைக் குறித்து ஆழ்வாரருளிச்செய்தவாயிரம்.

உட்கு உடை ஆயிரம்—உட்கு—சக்தி; எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதி சேஷ்டிதங்களை உள்ளபடியே யுரைக்கவல்ல சக்திவாய்ந்த ஆயிரம் என்றபடி. மேலே, உட்குடை வானவர்—எம்பெருமானை இடைவீடின்றி அநுபவிக்கவல்ல சக்தியுடையார் என்க. (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம் நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து—எட்டாந்திருவாய்மொழி—மாயாவாமனனே.

உரையவதாரிகை:— கீழ்த்திருவாய்மொழியிலே ஆழ்வார் உருவெளிப்பாட்டாலே நோவுபட்டார். அந்த நோவைப் பரிஹரிக்க எம்பெருமானல் ஆகாததன்றே. ஆனாலும் சில காரணங்களாலே அவன் திருவுள்ளம் ஒரு ஸமய விசேஷத்தை எதிர்பார்த்திருந்த படியாலே தாமதிக்கலாயிற்று. அந்தத்திருவுள்ளத்தை ஆழ்வார்தாம் அறியாதவரல்லரே. அறிந்து

ணவத்தும் ஆறியிருக்குமியல்வினரல்லரே. உயிர் துறந்து முடியவேண்டும்படியான நிலைமை நேர்ந்திருக்கச் செய்தேயும் எம்பெருமான் தம்மை முடியவொட்டாதே நடத்துகிறபடியைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். இப்படியொரு ஆச்சரியமிருந்தபடியென்! என்று எம்பெருமானையே நோக்கிக்கூற, ஆழ்வீர்! இந்தவொரு ஆச்சரியந்தானே என்னிடத்தில் நீர் அறிந்தது? என் விசித்திரங்களையெல்லாம் காட்டுகிறேன் பாரும் என்று சொல்லி எம்பெருமான் தன்னுடைய வருத்த விபூதித்வத்தைக் காட்டியருள, அது கண்டு ஆழ்வார் விஸ்மிதராய்ப் பேசுகிறார் இத்திருவாய்மொழியில். .... (*)

மாயாவாமனனே மதுசூதாநீயருளாய் *
தீயாய்நீராய்நிலனாய் விசும்பாய்க்காலாய் *
தாயாய்த்தந்தையாய்மக்களாய் மற்றுமாய்முற்றுமாய் *
நீயாய்நீநின்றவாறிவையென்ன நியாயங்களே. (க)

மாயா	ஆச்சரியமான செயல்களை யுடையவனே!	தாய் ஆய் தந்தை ஆய்	மாதா பிதாக்களாய்
வாமனனே	வாமநாவதாரஞ் செய்தவனே!	மக்கள் ஆய்	வயிற்றில் பிறந்த பிள்ளைகளாய்
மதுசூதா	மதுகைடபர்களைத் தொலைத்தவனே!	மற்றும் ஆய்	அல்லாதவையுமாய்
நீ அருளாய்	உன்படிகளை நீயே அருளிச் செய்யவேணும்;	முற்றும் ஆய்	சொல்லிச்சொல்லாத எல்லாமுமாய்
தீ ஆய் நீர் ஆய் நிலன் ஆய் விசும்பு ஆய் கால் ஆய்	பஞ்ச பூதங்களுமாய்	நீ ஆய்	அஸாதாரணமான தன்மை வாய்ந்த நீயாய்
		நீ நின்ற ஆறு இவை	நீ நிற்கிற இந்தத் தன்மைகள்
		என்ன நியாயங்கள்	என்ன வகைகளோ!

* * *—விசித்ரமான காரியங்களையும் காரணங்களையுமெல்லாம் விபூதியாகவுடையனாயிருக்கிறபடியை யநுஸந்தித்து இவையென்ன படிகளென்று வியப்புக்கொண்டு அவனையே கேட்கிறார். இத்திருவாய்மொழியில் சொல்லுகிற ஆச்சரியங்களுக்கெல்லாம் ஸங்க்ரஹமாக தொடங்கும்போதே மாயா! என்று விளிக்கிறார். அதற்கொரு லக்ஷியங்காட்டுகிறார் வாமனனே! என்று. அன்றே பிறந்து அன்றே வளர்ந்து மாவலி பக்கலிலே சென்று அவன் முன்னே நின்று தான் சொன்னவையெல்லாம் செய்யவேண்டும்படி வார்த்தை சொல்லி, சிற்றடியைக் காட்டிப் பெரியவடியாலே யளந்துகொண்டு சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறி மன்னு நமுசியை வானிற் சுழற்றி இப்படி செய்த செயல்களொவ்வொன்றும் ஆச்சரியமன்றோ மதுசூதா—விரோதிநிரஸனத்தில் மதுகைடபர்களைக் கொன்றது ஆச்சரியமான செயலாயிருக்கும். ஒரு ஸமய விசேஷத்திலே மதுகைடபர்கள் எம்பெருமானையெதிர்த்துப் பெரும்போர்புரிய, எம்பெருமான் இவர்களைத் துடையாலிடுக்கிக் கொன்றருளினானென்று ப்ரஸித்தம். ஆழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் திருமாலிருஞ்சோலையழகருடைய திருத்துடைகளுக்கு விசேஷணமிடும்போது "விஷ்உஷயகெடிஹகீடிள" என்றார். பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே அழகியமணவாளனுடைய திருத்துடைகளை வருணிக்கும்போது "உஉலிவஉயகெடிஹரெ ஸஹாகஸஹகஸீரு கஸாஹிஸ அவஉஉவழ। ஸெடிஉிவ வஸிஹஅயஹவஉஹவெஉா....ஸஹகஜஸொவெஉா" என்றருளிச் செய்தார். இதுவொரு ஆச்சரியமான செயலாதலால் இங்கு மதுசூதா! என்றது.

நீயருளாய் என்றது—நீ க்ருபை பண்ணவேணுமென்றபடியன்று; எனக்குத் தெளியவருளிச்செய்யவேணுமென்றபடி. மேலிற் பாசுரங்களிலுமிப்படியே பொருள் காண்க.

தீயாய் நீராய் நிலனாய்—தீயாயிருப்பது நீராயிருக்கமுடியாது; நீராயிருப்பது தீயாயிருக்கமுடியாது; அவ்வவற்றின் தன்மை வெவ்வேறுபட்டதாதலால் ஒன்று வேறொன்றாயிருக்கமுடியாது. எனினும், எம்பெருமானொருவனே தீயாயும் நீராயும் நிலனாயும் விசும்பாயும் வாயுவாயுமிருப்பது ஆச்சரியமே. இப்படியே, தாயாயிருப்பவன் தந்தையாயிருக்கமுடியாது; தந்தையாயிருப்பவன் தாயாயிருக்கமுடியாது; இவர்கள் தாம் மக்களாயிருக்கமுடியாது, எனினும் எம்பெருமானொருவனே தாயாயும் தந்தையாயும் மக்களாயும் ஸகலவித பந்துக்களாயுமிருப்பது ஆச்சரியமே.

நீ நீயாய் நின்றவாறு—தீயாயும் நீராயும் தாயாயும் தந்தையாயுமிருக்கிற விருப்பு ஸாதாரணாகாரமெனப்படும். அஸாதாரணவிக்ரஹத்தோடு கூடியிருக்கும் திவ்யமான விருப்பானது 'நீயாய் நின்றவாறு' எனப்படுகிறது. ஈடு—"பரமபதத்திலே ஸூரிபோக்யனாயிருக்கிற விருப்போடு ஜகதாகாரனாய் நிற்கிற நிலையோடு வாசியற போக்யமாம்படியிறே இவர்க்குப் பிறந்த ஜ்ஞாநவைசத்யம்."

இவை என்ன நியாயங்களே!—இது விஸ்மயப்பட்டுச் சொல்லுகிற வார்த்தை; இது இன்னபடியென்று எனக்குத் தெரிகிறதில்லையே; தெரியவருளிச் செய்யவேணுமென்றாராயிற்று. .... (க)

அங்கண்மலர்த்தண்டுழாய்முடி அச்சுதனேயருளாய் *
திங்களும்ஞாயிறுமாய்ச் செழும்பல்சுடராயிருளாய் *
பொங்குபொழிமழையாய்ப் புகழாய்ப்பழியாய்ப்பின்னும்நீ *
வெங்கண்வெங்கூற்றமுமாய் இவையென்னவிசித்திரமே. (உ)

அம் கள் மலர் தண் துழாய் முடி	அழகிய மதுவைக்கொண்ட பூக்களையுடைத்தான குளிர்ந்த திருத்துழாய் மாலையை யணிந்த மயிர்முடியையுடைய	இருள் ஆய்	இருளாயும்
அச்சுதனே	எம்பெருமானே!	பொங்கு பொழி மழை ஆய்	பொங்கிப்பொழியும் மழையாயும்
அருளாய் நீ	அருளிச்செய்யவேணும்;	புகழ் ஆய் பழி ஆய்	கீர்த்தியாயும் அபகீர்த்தியாயும்
திங்களும் ஞாயிறும் ஆய்	சந்திரனும் ஸூர்யனுமாயும்	பின்னும்	இன்னமும்
செழு பல் சுடர் ஆய்	விலக்ஷணமாயும் பலவாயுமுள்ள நக்ஷத்திரங்களாயும்	வெம் கண் வெம் கூற்றமும் ஆய் இவை	க்ரூரமான கண்களையும் க்ரூரஸ்வபாவத்தையுமுடைய ம்ருத்யுவாயும் நிற்கிற இந்த ப்ரகாரங்கள்
		என்ன விசித்திரம்	என்ன வேடிக்கைகளோ!

* * *—கீழ்ப்பாட்டில் 'நீ நீயாய் நின்றவாறு' என்று அஸாதாரணமான ஆகாரத்தை அநுஸந்தித்தாரே; அதனை வாய்விட்டுப்பேசி யநுபவிக்கிறார்—அங்கண்மலர்த்தண்டுழாய் முடியச்சுதனே! என்று. திங்களும் ஞாயிறுமாய்—"யதா ஸூஹ்லாதநாச்சு: ஸூதாவாதவநே யதா" என்றபடியே இருவர்க்கும் இரண்டு காரியங்கள் நியதங்களாயிருக்குமே; தாபத்தையாற்றுவதும் தாபத்தை விளைப்பதும். இவையிரண்டுமவனிட்ட வழக்கு. செழும்பல் சுடராய்—அவரவர்களுக்கு வரக்கூடிய நன்மை தீமைகளுக்கு ஸூசகங்களாய்க்கொண்டு நக்ஷத்திரங்கள் க்ரஹங்கள் முதலியவற்றுக்கும் நிர்வாஹகனென்றபடி. இருளாய்—சுடராயிருப்பவனும் தானே, சுடர்க்கு எதிரான இருளாயிருப்பவனும் தானே. உலகில் ஒளியைத் தேடுவார் சிலரேயாவர்; இருளைத் தேடுமவர்களே பலராவர்; காமுகர்க்கும் கள்ளர்க்கும் இருள் தேட்டமாயிருக்குமே; அன்னவர்கட்கும் உதவியாம்படி இருளாயிருப்பவன்.

பொங்குபோழிமழையாய்—ஸகல ப்ராணிகளுக்கும் ஜீவிக்கலாம்படி பயிர்களை யுண்டாக்கி வளர்க்கும் மழையும் தானுயிருக்கும். புகழாய்ப்பழியாய்—* தோன்றில் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று * (திருக்குறள்) என்றபடி எல்லாரும் விரும்பக்கூடிய புகழும் தானுய், வேண்டாத பழியும் தானுய். வெங்கண் வெங்கூற்றமுமாய்—இவ்வுலகங்கள் அதிப்ரவ்ருத்தியில் கைவளர்ந்தபோது குளிர நோக்குமது தவிர்ந்து வெவ்விய நோக்கையுடைய யமன்போன்று ஸம்ஹாரகனுய். யமனுக்கும் யமனுயிருக்கிறபடியைச் சொல்லுகிறது. உபநிஷத்தில் * [illegible] * என்று ஓதிற்று. பகவானுக்கு யமன் ஊறுகாய் என்றது. உலகில் ஊறுகாயின் தன்மை எப்படிப்பட்டதென்று பார்க்கவேணும். ப்ரஸாதம் முதலியவற்றை உட்கொள்வதற்கு ஸாதனமாயிருக்கும் அது; ப்ரஸாதங்களெல்லாம் உட்கொள்ளப்பட்டபிறகு அது மிச்சப்பட்டிருந்தால் அதையுமெடுத்து உட்கொள்ளுகிறோம். இதுபோல ம்ருத்யுவைக் கருவியாகக்கொண்டு எல்லாவற்றையும் அந்தமடைவித்து, பிறகு அந்த ம்ருத்யு தன்னையும் லயமடைவிக்குந்தன்மை இதனால் தெரியவரும்.

இவையென்ன விசித்திரமே அருளாய்—இப்படி சேராச்சேர்த்தியான பதார்த்தங்களெல்லாமுமாயிருக்கிற தன்மை மிக விசித்திரமாயிராநின்றது, இதனைத் தெரியவருளிச் செய்யவேணும். .... (௨)

சித்திரத்தேர்வலவா திருச்சக்கரத்தாயருளாய் *
எத்தனையோருகமும் அவையாயவற்றுள்ளியலும் *
ஒத்தவோண்பல்போருள்கள் உலப்பிலனவாய்வியவாய் *
வித்தகத்தால்நிற்றிநீ யிவையென்னவிடமங்களே. (௩.)

சித்திரம் தேர் வலவா	விசித்திரமாகத் தேரை நடத்த வல்லவனே!	ஒத்த விய ஒண் பல் உலப்பு இல்லன பொருள்கள் ஆய்	ஒருபடியாலே ஒத்தும் மற்றொருபடியாலே வேறுபட்டுமிருக்கிற அழகிய பல எண்ணிறந்த பதார்த்தங்களுமாய்
திரு சக்கரத்தாய்	திருவாழிப்படையை யுடையவனே	வித்தகத்தால் நீ நிற்றி	ஆச்சரியப்படத்தக்க தன்மையோடே நீ நிற்கின்றாய்;
அருளாய்	நீயருளிச் செய்யவேணும்;	இவை என்ன விடமங்கள்	இவையென்ன சேராச் சேர்த்திகளோ!
எத்தனை ஓர் உகமும் அவை ஆய்	க்ருதம் முதலான யுகங்களுக்கெல்லாம் நிர்வாஹகனுய்		
அவற்றுள் இயலும்	அந்த காலங்களுக்குள்ளே நடப்பதாய்		

* * *—கீழ்ப்பாட்டில் 'வெங்கண் வெங்கூற்றமுமாய்' என்றாரே; மண்ணின் பாரம் நீக்குவதற்கு வடமதுரையிற் பிறந்த பிறவியிலேயே, * மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர் குலைய நூற்றுவரும் பட்டழியப் பார்த்தன் சிலைவளையத் திண்தேர்மேல் முன்னின்று அதனை நடத்தின விசித்திரம் நினைவுக்குவர, சித்திரத்தேர்வலவா திருச்சக்கரத்தாய்! என்று விளிக்கிறார். தேரை நடத்தும்போது விசித்திரமான பலபல காரியங்கள் செய்ததுமையுண்டு. பெரியாழ்வார் தமது திருமொழியில் (4-2-7.) *மன்னர் மறுகமைத்துனன்மார்க்கொரு தேரின்மேல், முன்னங்குநின்று மோழையெழுவித்தவன் * என்கிற பாசுரத்தினல் ஒரு விசித்திரமான இதிஹாஸமருளிச்செய்கிறார்; அதாவது—அர்ஜுனனுடைய தேர்க்குதிரைகள் தண்ணீர்க்கு விடாய்த்து இளைத்தவளவில், அவன் பக்கல் பக்ஷபாதியான கண்ணபிரான், கடினமான ஸ்தலத்திலும் நீர்நரம்பு அறியவல்லவனாதலால், அங்கு வாருணாஸ்த்ரத்தைப் பிரயோகித்துக் கீழுள்ள நீரை வெளிக்கிளப்பிக் குதிரைகளைவிட்டு நீரூட்டிப்புரட்டியெழுப்பிக்கொண்டு போந்து பூட்டிக்கொண்டுவந்து முன்னே நிறுத்த, இதைக்கண்ட மாற்

றாசரெல்லாம் 'இக்கண்ணனுக்கு அர்ஜுனன்பக்கல் பக்ஷபாதமிருந்தபடியென்! இனி நாம் இவனை வெல்லுகையென்று ஒன்றுண்டோ?' என்று குடல்மறுகினராம். இப்படியாகச் செய்த பல பல விசித்திரங்கள் காணத்தக்கன. பாரதப்போரில் பீஷ்மாசார்யர் ஒரு அரிய பெரிய வார்த்தை சொல்லுகிறார்—நான் ஓர் அம்பினாலேயே பாண்டவர்கள் ஐவரையும் அவர்களது சேனைத்தொகையையும் அவலீலையாகச் சாடிவிடுவேன்; ஆனால் மாயவனான கண்ணபிரான் அங்குத் தேர்ப்பாகனாய் அமைந்ததனால் என் வல்லமை சிறிதும் பயன்படாதொழிகின்றது; அவன் தேரை நடத்துகிற விதம் விசித்திரமாயன்றோ விராநின்றது என்று. அப்படி எதிரிகளும் வியக்கும்படியான திறமையைத் திருவுள்ளம்பற்றிச் சித்திரத்தேர்வலவா வென்றருளிச்செய்கிறார்.

'சித்திரத்தேர்வலவா!' என்றதற்கு அடுத்தபடியாகத் திருச்சக்கரத்தாய்! என்கையாலே சக்கரத்தாழ்வானைக்கொண்டு செய்த விசித்ரமும் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. அர்ஜுனன் பதின்மூன்றாநாட்போரில் தன்மகனை அபிமந்யுவைக்கொன்ற ஜயத்ரதனை [துரியோதனனது உடன்பிறந்தவள் கணவனை] 'நாளை அஸ்தமிப்பதற்குமுன்னே கொல்லாவிடின் தீக்குதித்து உயிர்விடுவேன்' என்று ப்ரதிஜ்ஞைபண்ண, அதனையறிந்த பகைவர்கள் பதினன்காநாளாகிய மறுநாட்பகல் முழுவதும் ஜயத்ரதனை வெளிப்படுத்தாமல் ஸேனையின் நடுவே நிலவறையில் மறைத்துவைத்திருக்க, அர்ஜுனனது சபதம் பொய்த்துவிடுமேயென்று சிந்தித்த கண்ணபிரான் ஸூர்யனை அஸ்தமிப்பதற்குச் சில நாழிகைக்கு முன்னமே தன் சக்கரப்படையினால் மறைத்துவிட, அப்பொழுது எங்கும் இருளடைந்ததனால் அர்ஜுனன் அக்நிப்ரவேசஞ் செய்யத்தொடங்க, அதனைக் களிப்போடு காணுதற்குத் துரியோதனாதியருடனே ஜயத்ரதன் வந்து எதிர்நிற்க, அச்சமயத்தில் கண்ணன் திருவாழியை வாங்கிவிடவே பகலாயிருந்ததனால் உடனே அர்ஜுனன் ஜயத்ரதனைத் தலைதுணித்தனன் என்ற விசித்திர சரித்திரம் இங்கு நினைக்கத்தக்கது. இக்கதையில் ஒரு சங்கை தோன்றும்; * ஸுதர்சனம் பாஸ்கரகோடிதுல்யம் * என்கிறபடியே கோடிஸூர்யப்ரகாசமுடையவனன்றோ திருவாழியாழ்வான்; அன்னவனைக்கொண்டு ஸூர்யப்ரகாசத்தை மறைத்து இருளையுமுண்டாக்கினனென்றால் இது ஸம்பாவிதமோ வென்று. விலக்ஷண ஸங்கல்பத்தாலே இப்படியாக்கினதும் ஒரு விசித்திரமென்று கொள்வது. மற்றும் பரிஹாரவகை வல்லார் வாய்க் கேட்டுணர்க.

எத்தனையோருகமுமவையாய்—க்ருதம் முதலிய யுகங்களுக்கெல்லாம் நிர்வாஹகனே! "த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞைஸ் த்ரேதாயாம் த்வாபரேऽர்ச்சயந், யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேசவம்" [Grantha script]

கலௌ ஸங்கீர்த்ய கேசவம்—த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞைஸ் த்ரேதாயாம் த்வாபரேர்ச்சயந், யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேசவம்." என்கிறபடியே நான்கு யுகங்களுக்கும் தருமங்களான த்யானம், யஜநம், அர்ச்சனம், நாமஸங்கீர்த்தனம் ஆகிய இவற்றால் ஆராதிக்கப்படுபவன் என்பது உள்ளுறை. "எத்தனையோர்" என்கையாலே இப்படிப்பட்ட சதுர்யுகங்கள் அனேகமாயிரம் சென்றமை பெறப்படும்.

[அவற்றுள்ளியலும் இத்யாதி.] இப்படி நடக்கின்ற காலகலைகளுக்குள்ளேயுள்ள பொருள்களுக்கு அவதியில்லையே; அவை ஒரொரு படியாலே யொத்தும் வேறொரு படியாலே வேறுபட்டுமிருக்கும். தேவர்கள் மனுஷ்யர்கள் விலங்குகள் என்கிற வகைகளினாலே யொத்திருக்கையும் வ்யக்திபேதத்தாலே வேறுபட்டிருக்கையும் உணரத்தக்கன. இப்படி பலவகைப்பட்ட பதார்த்தங்கள் எண்ணிறந்தவற்றை விபூதியாக வுடையையாய்.

"வித்தகத்தால்" "வித்தகத்தாய்" என்று பாடபேதங்களுள்ளனவாகக் காட்டுகின்றார், சிலர். ஏதேனுமொரு பாடமே பூருவர்களனைவர்க்குமுடன்பாடென்று கொள்ளலாம்.

இவையென்னவிடமங்களே!—இவையென்ன சேராச்சேர்த்தியான செயல்கள்! விஷம மென்ற வடசொல் விடமமெனத் திரிந்தது. ஸமமல்லாதது விஷமம். ... . (௩)

கள்ளவிழ்தாமரைக்கட்கண்ணனே எனக்கோன்றருளாய் *
உள்ளதுமில்லதுமாய் உலப்பில்லனவாய்வியவாய் *
வெள்ளத்தடங்கடலுள் விடநாகணைமேல்மருவி *
உள்ளப்பல்யோகுசெய்தி இவையென்னவுபாயங்களே. (௪)

கள் அவிழ் தாமரை கண் கண்ணனே	மதுவொழுகுகின்ற தாமரை போன்ற கண்களையுடைய கண்ணபிரானே!
எனக்கு ஒன்று அருளாய்	அடியேனுக்கு இவ்விஷயமொன்று அருளிச்செய்ய வேணும்;
உள்ளதும் இல்லதும் ஆய் உலப்பு இல்லன ஆய் வியஆய்	நித்யமாகையாலே உள்ளதுமாய் வேறு அவஸ்தையையடைகையாலே இல்லாததுமாய் எண்ணிறந்தவையுமான வேறுவேறு வகைப்பட்ட சேதநாசேதநப் பொருள்களுக்கு நிர்வாஹகனாய்
வெள்ளம் தட கடலுள்	விசாலமான திருப்பாற்கடல் வெள்ளத்திலே
விடம் நாகணை மேல் மருவி	(விரோதிகள் அணுகவொண்ணாமைக்காக) விஷத்தை உமிழ்கிற திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே பொருந்தி
உள்ளம்	திருவுள்ளத்திலே
பல் யோகு செய்தி	பலவகைப்பட்ட ரக்ஷணோபாயங்களைச் சிந்தியா நின்றாய்;
இவை என்ன உபாயங்களே	இவையென்ன விரகுகள்!

* * *—முதன் முதலிலே தம்மை விசேஷகடாக்ஷம் பண்ணி இவ்வளவு அதிகாரத்திலே கொண்டு நிறுத்தினவை திருக்கண்களேயன்றோ; "பெருங்கேழலார் தம் பெருங்கண் மலர்ப் புண்டரீகம் நம்மேலொருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம்" (திருவிருத்தம்) என்று தாமே யருளிச் செய்துவைத்தாரே. அப்படிப்பட்ட திருக்கண்ணழகிலே யீடுபட்டுப் பேசுகிறார். தேனொழுகும் தாமரை போன்ற திருக்கண்களையுடைய கண்ணனே! நீ வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை மெத்தையாக விரித்து அதன்மேலே கள்ளநித்திரை கொள்கின்றாயே, இஃது என்னவென்று எனக்கருளிச்செய்ய வேணுமென்கிறார்.

உள்ளதும் இல்லதுமாய்—நம்முடைய ஸித்தாந்தத்தில் எல்லாம் உள்ள வஸ்துக்களே யன்றி இல்லாத வஸ்து ஒன்றுமேயில்லையே * ஸதேவ நீயதே வ்யக்திமஸதஸ்ஸம்பவ: குத: * என்கிற சாஸ்த்ரார்த்தம் ப்ரஸித்தமன்றோ. அப்படியிருக்க, இல்லது என்பதேன்? எனில்; கேண்மின்; இங்கு இல்லது என்றதற்கு அடியோடு இல்லாதது என்றாவது பொய்யானது என்றாவது பொருளில்லை, 'அழியுந்தன்மையுடையது' என்று பொருள். உள்ளது என்றது அழியாத பொருள் என்றபடி. அசித்தையும் சித்தையும் சொன்னபடி. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் இரண்டாவது அம்சத்தில் பன்னிரண்டாவது அத்யாயத்தில் "ஜ்யோதீம்ஷி விஷ்ணுர் புவநாநி விஷ்ணு: வநாநி விஷ்ணுர் கிரயோ திசச் ச, நத்யஸ் ஸமுத்ராச் ச ஸ ஏவ ஸர்வம் யதஸ்தி யந்நாஸ்தி ச விப்ரவர்ய!" என்றுள்ள ச்லோகத்தில் அஸ்தி சப்தத்தாலே சித்தையும் நாஸ்தி சப்தத்தாலே அசித்தையும் சொல்லியிருக்கையாலும், தைத்திரீய உபநிஷத்தில் * ஸத்யம் சாந்ருதம் ச ஸத்யமபவத் * என்றவிடத்து ஸத்ய சப்தத்தால் சித்தையும் அந்ருத சப்தத்தால் அசித்தையும் சொல்லியிருக்கையாலும் அவற்றையடியொற்றி ஆழ்வாரும் உள்ளது இல்லது என்ற சப்தங்களினால் சித்தையும் அசித்தையும் குறித்தனரென்க.

இனி, உள்ளது—உள்ளேயிருப்பது [சரீரத்தினுள்ளேயிருப்பது] என்று பொருளாய் ஆத்மாவைச் சொல்லிற்றாகி, இல்லது—(இல்—வீடு) வீடாகவுள்ளது [ஆத்மாவுக்கு இருப்பிடமாகவுள்ளது] என்று பொருளாய் உடலைச் சொல்லிற்றாகி ஆக இவ்வழியாலே சித்தையும் அசித்தையும் சொல்லிற்றாகவுங் கொள்ளலாம்.

இவ்விடத்தில் ஆறாயிரப்படியருளிச் செயல் காண்மின்;—"நித்யமாயிருக்கையாலே உண்டென்று சொல்லலாம்சேதநனும், பரிணமஸ்வபாவமாய்க்கொண்டு ப்ரதிக்ஷணம் அவஸ்தாந்தர ஹாக்காகையாலே இல்லையென்னலாம் ப்ரக்ருதியுமாய்." என்று. சேதநா சேதந ஸகல பதார்த்த நிர்வாஹகத்வம் சொன்னபடி. 'உலப்பில்லன' என்கையாலே இவை எண்ணிறந்தவை யென்பதும், 'விய' என்கையாலே இவை பரஸ்பரம் வேறுபாடுற்றவை யென்பதும் சொல்லிற்றாகும்.

[வெள்ளத்தடங்கடலுள் இத்யாதி] திருப்பாற்கடலிலே, ப்ரதிகூலர்க்குக் கிட்டவொண்ணுதபடி விஷத்தை உமிழாநின்றுள்ள திருவனந்தாழ்வான்பேலே பொருந்தித் திருவுள்ளத்திலே பல ரக்ஷண சிந்தைகளைப் பண்ணா நின்றாய்; நீயும் இங்ஙனே உபாய சிந்தை பண்ண வேணுமோ! ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாயிருக்குமவனுக்கு உபாய சிந்தை வேணுமோ?

இவை என்னவுபாயங்களோ ?—இன்னமும் அவதரிக்க உபாயம் பார்க்கிறபடியா? அநிஷ்ட நிவ்ருத்திக்கு உபாயம் பார்க்கிறபடியா? இஷ்டப்ராபணத்திற்கு உபாயம் பார்க்கிறபடியா ? சிலரை வசப்படுத்திக் கொள்ளுதற்கு உபாயம் பார்க்கிறபடியா ? ஒன்றை நிஷ்கர்ஷித்து அருளிச் செய்யவேணுமென்கிறார் போலும். ... ... (ச)

பாசங்கள்நீக்கியென்னை உனக்கேயறக்கொண்டிட்டு நீ *
வாசமலர்த்தண்டுழாய்முடி மாயவனேயருளாய் *
காயமும்சீவனுமாய்க் கழிவாய்ப்பிறப்பாய்ப்பின்னும்நீ *
மாயங்கள்செய்துவைத்தி இவையென்னமயக்குக்களே. (ரு)

வாசம் மலர் தண் துழாய் முடி மாயவனே	நறுமணம் மிக்க பூவையுடைய செவ்வித் திருத்துழாயை யணிந்த மயிர் முடியை யுடைய ஆச்சரியனே!;	கழிவு பிறப்பு ஆய்	இவற்றுக்கு வரக்கூடிய விநாசமும் உத்பத்தியும் நீயிட்ட வழக்காம்படியாயிருக்க.
நீ	இப்படிப்பட்ட நீ	பின்னும்	பின்னையும்
என்னை பாசங்கள் நீக்கி	எனக்குத்தகாத விஷய ஸங்கங்களைக் கழித்து	நீ மாயங்கள் செய்து வைத்தி	அவித்யா கர்மவாஸநாருசிகளாகிற வஞ்சனங்களைப் பண்ணி வையா நின்றாய்;
உனக்கே அற கொண்டிட்டு	உனக்கே அற்றுத்தீரும்படி அங்கீகரித்து வைத்து	இவை என்ன மயக்குக்கள்	இவை என்ன வ்யாமோஹகங்களாயிருக்கின்றன!
காயமும் சீவனும்	பந்தகமான சரீரமும் பத்த ஜீவனும்	அருளாய்	அருளிச் செய்யவேணும்.

* * *—இப்பதிகத்தின் ப்ரமேயத்திற்குத் தலையான பாசுரமிது. என்னை ஆதியிலே விசேஷ கடாக்ஷம் பண்ணிவைத்துப் பின்னையும் எனக்குப் பொருந்தாதபடியான ஸம்ஸாரத்திலே வைத்து நடத்திக்கொண்டு போருகிற இவ்வாச்சரிய மிருந்தபடியை எனக்கருளிச் செய்யவேணுமென்கிறார்.

பாசங்கள் நீக்கி யென்றது—* மயர்வறமதிநலமருளியென்றபடி. உனக்கே அறக்கொண்டிட்டு—* துயரறுசுடரடிதொழுதெழு * என்னும்படி பண்ணி யென்றபடி.

வாசமலர்த்தண்டுழாய்முடிமாயவனே!—புறம்புண்டான பற்றுக்களை யறுத்ததும் தனக்கேயற்றுத் தீரும்படி பண்ணினதும் திருமுடியிலே சாத்தின திருத்துழாய் மாலையினழகைக் காட்டியன்றோ வென்கை. அருளாய்—என்னையிப்படி யீடுபடுத்திக்கொண்டது இங்கே வைத்து நலிவதற்காகவோ, அருளிச்செய்யவேணும்.

மூன்றாமடியின் கருத்து;—தேஹமோ ஆத்மாவோ உத்பத்தி விநாசங்களோ எல்லாம் நீயிட்டட வழக்கன்றோ. இப்படி ஸர்வநிர்வாஹகனான நீ அவித்யாதிகளாகிற வஞ்சனங்களைப் பண்ணி வைக்கின்றாயே ! இவையென்ன தெரியாச் செயல்கள் ! ... ... (௫)

மயக்காவாமனனே மதியாம்வண்ணமொன்றருளாய் *
அயர்ப்பாய்த்தேற்றமுமாய் அழலாய்க்குளிராய்வியவாய் *
வியப்பாய்வென்றிகளாய் வினையாய்ப்பயனாய்ப்பின்னும்நீ *
துயக்காய்நீநின்றவாறு இவையென்னதுயரங்களே. (௬)

மயக்கா	எப்படிப்பட்டவர்களையும் மதி கெடும்படி பண்ணுமவனே!
வாமனனே	(அந்த சக்தியை) வாமநாவதாரத்தில் காட்டினவனே!
மதி ஆம் வண்ணம் ஒன்று அருளாய்	எனக்குக் கலக்கந் தீர்ந்து அறிவுண்டாம்படி அருளிச்செய்ய வேணும்;
அயர்ப்பு தேற்றமும் ஆய்	மறப்பும் தெளிவும் நீயிட்ட வழக்காய்
அழல் குளிர் ஆய்	தாபமும் குளிர்ச்சியும் நீயிட்ட வழக்காய்
விய வியப்பு ஆய்	விஸ்மயநீயமும் விஸ்மயமும் நீயிட்ட வழக்காய்
வென்றிகள் ஆய்	(உலகில்) விஜய வித்திகளும் நீயிட்ட வழக்காய்
வினை பயன் ஆய்	புண்ய பாபரூப கருமங்களும் அவற்றின் பலன்களும் நீயிட்ட வழக்காய்
பின்னும்	அதுக்குமேலே
துயக்கு நீ ஆய்	இவற்றிலே சேதநர் கலங்குகிற கலக்கமும் நீயிட்டவழக்காய்
நீ நின்ற ஆறு இவை	நீ நிற்கிற இந்த ப்ரகாரங்கள்
என்ன துயரங்கள்	என்ன கஷ்டங்களாயிருக்கின்றன!

* * *—மயக்காவாமனனே!—வடிவழகாலும் நடையழகாலும் பேச்சின் இனிமையாலும் மஹாபலியைப் பிச்சேற்றி, நினைத்தது முடித்துக்கொள்ளவல்ல விரகனன்றோ நீ; தேவர்களின் காரியம் செய்யப்போந்த நீ அந்த தேவர்களை நெருக்கின மஹாபலி தானே நெஞ்சு நெகிழ்ந்து உன் கையிலே நீரைவார்த்துத் தானே யிசைந்து தரும்படி மயங்கப்பண்ணினாயே!. * மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி "என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடிமண் மன்னா தருக" என்றவாறே தந்தேன் என்னப் பண்ணினாயே!; மதியாம் வண்ணம் ஒன்றருளாய்—அநுகூலர் பிரதிகூலர் என்கிற வாசியின்றிக்கே எல்லாரையும் மயங்கப் பண்ணுகை உரியதோ? நான் தெளிவை யுடையேனாம்படி என்னைப் பண்ணியருளவேணும் என்கிறார்.

அயர்ப்பாய்த் தேற்றமுமாய்—பகவத்கீதையில் பதினைந்தாமத்யாயத்திலே "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸம்நிவிஷ்டோ மத்தஸ் ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ் ச" என்கிறான். ஒன்றையறிவதோ மறப்பதோ எல்லாம் நானிட்ட வழக்கென்கிறான். அழலாய்க் குளிராய்—சீதமும் உஷ்ணமும் தானிட்ட வழக்கு. வியவாய் வியப்பாய்—ஆச்சர்யப்படத்தக்க பொருள்களும் ஆச்சர்யமென்கிற தருமமும் தானிட்ட வழக்கு. வென்றிகளாய்—வெற்றியைச் சொன்னது—பிரதிகோடியான தோல்வியையும் தெரிவிக்கும். ஜயாபஜயங்கள் தானிட்ட வழக்கென்கை. வினையாய்ப் பயனாய்—வினையென்று புண்யபாப ரூபங்களான கருமங்களிரண்டையுஞ் சொல்லுகிறது. பயனென்று அவற்றின் பயனான ஸுக துக்கங்களைச் சொல்லுகிறது.

பின்னும் நீதுயக்காநின்றவாறு—அதற்குமேலே, உன்னையடிபணிந்தாரும் மதிமயங்கும்படி நீ நிற்கிறவிதம் என்னே !. இவை என்ன துயரங்களே !—இவையுனக்கு லீலையாயிருந்தாலும் உலகுக்குத் துயரமாயிருக்கின்றதே யென்கிறார். ... ... (சு)

துயரங்கள்செய்யும்கண்ணா சுடர்நீண்முடியாயருளாய் *
துயரம்செய்மானங்களாய் மதனாகியுகவைகளாய் *
துயரம்செய்காமங்களாய்த் துலையாய்நிலையாய்நடையாய் *
துயரங்கள்செய்துவைத்தி இவையென்னசுண்டாயங்களே. (எ)

துயரங்கள் செய்யும் கண்ணா	துக்கங்களையுண்டாக்குகிற கண்ணனே !	துயரம் செய் காமங்கள் ஆய்	துக்கங்களை விளைக்கிற காமங்களாய்
சுடர் நீள் முடியாய்	ஒளிமிக்கு ஓங்கின திருவபிஷேகத்தை யுடையவனே!	துலை ஆய் நிலை ஆய் நடை ஆய்	பரிமாணங்களாய் ஸ்தாவரஜங்கமங்களாய்
துயரம் செய்	துக்கத்தை விளைக்கிற	துயரங்கள் செய்துவைத்தி	(இப்படி சேதனர்களுக்கு) துக்கங்களைப் பண்ணிவைக்கிறாய்;
மானங்கள் ஆய்	பலவகைப்பட்ட துரபிமானங்களாய்	இவை என்ன சுண்டாயங்கள்	இவை என்ன விளையாட்டுக்களோ !
மதன் ஆகி	செருக்குமாய்	அருளாய்	அருளிச்செய்யவேணும்.
உகவைகள் ஆய்	ப்ரீதிகளுமாய்		

* * *—இங்கு * துயரங்கள் செய்யுங்கண்ணா ! என்று எம்பெருமானை விளிக்கின்றார்; *ஏஷஹ்யே வாநந்தயாதி * என்று உபநிஷத்து ஓதுகின்றது; ஆனந்தப்படுத்துகிறவனாக வோதப்பட்ட எம்பெருமானை நோக்கி 'துயரங்கள் செய்யுங்கண்ணா' என்னலாமோ வென்னில், ஆழ்வார்க்குக் கண்ணன் செய்யும் துயரம் இன்னதென்பது "சுடர்நீண்முடியாய்" என்ற அடுத்த வார்த்தையினால் விளக்கப்பட்டது. ஈடு—"முடிச்சோதியிற்படியே திருவபிஷேகத்திலழகைக் காட்டியாயிற்று துக்கங்களைப் பண்ணுவது." ஆறாயிரப்படி—"உன்னுடைய திருவபிஷேகத்திலழகாலே நலியும் க்ருஷ்ணனே!." திருக்குரவையிலே ஆய்ச்சியரோடு குழைந்து கலந்து பிரிந்தபோது அவர்கள் பேசுகிற பேச்சாயிருக்குமிது வென்றுணர்க.

மதனாகி உகவைகளாய்—'மதம்' என்கிற வடசொல் மதன் என்று கிடக்கிறது; மகரனகரப்போலி. மதமாவது பொருள்முதலியவை கிடைப்பதால் வரும் களிப்பு. உகவை—ப்ரீதி. துயரம் செய் காமம்—காமமானது ஹேயமாகவும் உத்தேச்யமாகவுமுண்டு. விஷயாந்தரங்களைப் பற்றின காமம் ஹேயம்; பகவத்விஷயத்தைப் பற்றின காமம் உத்தேச்யம். இராமாநுச நூற்றந்தாதியில் * சேமநல்வீடும் பொருளுந் தருமமும் சீரிய நற்காமமும் என்றிவை நான்கெனபர், நான்கினுங் கண்ணனுக்கேயாமது காமம் * என்றதுங் காண்க.

துலை—பதார்த்தங்களின் தாரதம்யத்தை நிரூபிக்குமதான எடை. நிலை—நிலைத்து நிற்கும் ஸ்தாவர பதார்த்தங்கள். நடை—நடந்து செல்லும் ஜங்கம பதார்த்தங்கள் அல்லது, ஸ்தாவர ஜங்கம பதார்த்தங்களிலுள்ள ஸ்திதி கமனங்களாகிற தருமங்களைச் சொன்னதாகவுமாம்.

துயரங்கள் செய்துவைத்தி—இப்படிப்பட்ட விருத்த விபூதிகளைச் சிந்திக்கும்போது நெருக்குப்படவேண்டியிருத்தலால் 'துயரங்கள் செய்து வைத்தி' எனகிறார். .... (எ)

என்னசுண்டாயங்களால் நின்றிட்டாயென்னையாளும்கண்ணா *
இன்னதோர்தன்மையையென்றுன்னை யாவர்க்கும்தேற்றரியை *
முன்னையமூவுலகுமவையாய் அவற்றைப்படைத்து *
பின்னுமுள்ளாய்புறத்தாய் இவையென்னவியற்கைகளே. (அ)

என்னை ஆளும் கண்ணா	என்னை அடிமைகொள்ளுகிற கண்ணனே!,	முன்னைய மூவுலகும் அவை ஆய்	நித்தியமான மூவுலகங்களுக்கும் நிர்வாஹகனாய்
என்ன சுண்டாயங்களால் நின்றிட்டாய்	என்ன லீலைகளையுடையையாய் நிற்கிறாய் !	அவற்றை படைத்து பின்னும்	அவற்றை ஸ்ருஷ்டித்து அதுக்குமேலே
இன்னது ஓர் தன்மையை என்று	இன்னபடிப்பட்ட ஸ்வபாவத்தையுடையையாயிரா நின்றாயென்று	உள் ஆய் புறத்தாய்	உள்ளிலும் வெளியிலும் வியாபித்திருக்கிறவனே!
உன்னை யாவர்க்கும் தேற்ற அரியை	ஒருவர்க்கும் நிர்ணயித்துக்காட்ட முடியாதவனாயிரா நின்றாய்;	இவை என்ன இயற்கைகள்	இவை என்ன ஸ்வபாவங்களாயிருக்கின்றன !.

* * *—இப்பாட்டின் முதலடியில் பாடபேதம் காண்கிறது; "என்னசுண்டாயங்களால் எங்ஙனே நின்றிட்டாயென்கண்ணா" என்பது சில ஆசாரியர்களின் பாடம்; "என்ன சுண்டாயங்களால் நின்றிட்டாயென்னையாளுங் கண்ணா" என்பது சில ஆசாரியர்களின் பாடம். அடுத்த பாசுரத்தின் முதலடியிலும் இது மாறிவரும்.

என்னையாளுங்கண்ணா ! என்ன சுண்டாயங்களால் நின்றிட்டாய்—என்னையடிமை கொள்ளுகிற கண்ணபிரானே என்ன லீலைகளையுடையையாய் நிற்கிறாய்! என்று வியக்கிறார். இன்னதோர் தன்மையை யென்றுன்னை யாவர்க்குந் தேற்றரியை—உன்னுடைய ஸ்வபாவமின்னதென்று எப்படிப்பட்ட ஞானிகளாலும் அறுதியிட முடியாதபடியிருக்கின்றதே! *கதம் த்வம் யத்ஸ்வபாவோ ந நிரூபயிதுமிஹ [illegible]* என்ற ஸுதர்சநசதக ஸ்ரீஸூக்தி இங்கே அநுஸந்தேயம்.

உள்ளாய் புறத்தாய்—*அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:* என்கிறபடியே உள்ளும் புறமுமொக்க எங்கும் வியாபித்திரா நின்றாய்; அப்படி வியாபிக்குமிடத்தில் அணுபதார்த்தங்களிலும் உள்ளே வியாபித்திருக்கிறாயென்றும் ஒவ்வொரு பொருளிலும் பரிஸமாப்ய வர்த்திக்கிறாயென்றும் வேதாந்தங்கள் கூறுகின்றன; பிரானே! அணுவான பதார்த்தங்களிலே உள்ளீடாக வ்யாப்தி உனக்கு எப்படி ஸம்பவிக்கின்றதென்று ஆலோசித்தால் புத்திக்கு ஒன்றுமே யெட்டவில்லை. அன்றியும் உன்னுடைய ஸ்வரூபம் ஓரிடத்தில் பரிஸமாப்ய வர்த்திக்குமானால் அது மற்றோரிடத்தில் இருக்க ப்ரஸக்தியில்லையே; ஒவ்வொரு வஸ்துவிலும் உன் ஸ்வரூபம் பரிஸமாப்ய வர்த்திப்பதாக சாஸ்த்ரம் ஓதுகின்றதே, இது எப்படி ஸம்பாவிதமென்று ஆலோசித்தால் இதுவும் புத்திக்கு எட்டுகிறதில்லை பிரானே ! ஆனால் எதையும் நீ அவலீலையாகச் செய்து போருகிறாய்; இவை எங்களுக்கு ஆச்சரியமாயிராநின்றன என்றாராயிற்று. ... ... (அ)

என்னவியற்கைகளால் எங்ஙனேநின்றிட்டாயென்கண்ணா *
துன்னுகரசரணம்முதலாக எல்லாவுறுப்பும் *
உன்னுசுவையொளியூறொலி நாற்றமுற்றும்நீயே *
உன்னையுணரவுறில் உலப்பில்லைநுணுக்கங்களே. (௯)

என் கண்ணு	எனது கண்ணபிரானே!,	சுவை ஒளி ஊறு ஒலி நாற்றம் முற்றும் நீயே	ரஸம் ரூபம் ஸ்பர்சம் சப்தம் கந்தம் இவையாகிற ஸகல விஷயங்களும் நீயே;
என்ன இயற்கைகளால் எங்ஙனே நின்றிட்டாய்	என்ன ஸ்வபாவங்களோடே என்ன ப்ரகாரத்திலே நின்ருய்;	உன்னை உணர உறில்	இப்படிப்பட்ட வுன்னை நிரூபிக்க நினைக்கில்
துன்னு கரம் சரணம் முதல் ஆக எல்லா உறுப்பும் உன்னு	நெருங்கிய கரசரணுதிகளான எல்லாக்கரணங்களும் விரும்பத்தக்க	நுணுக்கங்கள் உலப்பு இல்லை	உன்னுடைய நுட்பத்திற்கு முடிவில்லை.

* * *—கைகால் முதலான வுறுப்புகளிஞல் உலகில் அவரவர்கள் செய்யும் ஸகல காரியங்களும் உன் ஸங்கல்பத்தாலாமவை. ஜலதத்வத்தின் குணமாகிய சுவையும், தேஜஸ் தத்வத்தின் குணமாகிய ரூபமும், வாயுதத்வத்தின் குணமாகிய ஸ்பர்சமும், ஆகாச தத்வத்தின் குணமாகிய சப்தமும், பூமிதத்வத்தின் குணமாகிய கந்தமும் ஆகிய இந்த ஸகல விஷயங்களும் நீயிட்ட வழக்கு. அதாவது, இப்பொருள்களெல்லாவற்றிலும் நீயே அநுப்ரவேசித்திருந்து அவ்வக் காரியங்களை நிர்வஹித்தருளாநின்ருயென்றபடி. உன்னுடைய பெருமையையும் அநுஸந்திக்கப் புக்கால் உன்னுடைய வைலக்ஷண்யத்துக்கு முடிவில்லை என்ருராயிற்று. .... (கூ)

இல்லைநுணுக்கங்களே இதனில்பிறிதென்னும்வண்ணம் *
தொல்லைநன்னூலில்சொன்ன உருவுமருவும் நீயே *
அல்லித்துழாயலங்கலணிமார்ப என்னச்சுதனே *
வல்லதோர்வண்ணம்சொன்ஞல் அதுவேயுனக்காம்வண்ணமே. (கo)

இதனில் பிறிது நுணுக்கங்கள் இல்லை என்னும் வண்ணம்	இதிற்காட்டில் வேறு நுட்பமில்லை யென்னும்படி	அல்லி துழாய் அலங்கல் அணி மார்ப என் அச்சுதனே	பூந்தாரையுடைத்தான திருத்துழாய் மாலையணிந்த திருமார்பையுடைய என் அச்சுதனே !
தொல்லை நல்நூலில் சொன்ன	அநாதியான வேதசாஸ்த்ரத்திலே சொல்லப்பட்ட	வல்லது ஓர் வண்ணம் சொன்ஞல்	கூடுமானவரையில் (யார் எது) சொன்ஞலும்.
உருவும்அருவும் நீயே	அசித்தும் சித்தும் நீயே;	உனக்கு அதுவே வண்ணம் ஆம்	சொன்னவவ்வளவே உனக்கு வடிவாம்.

* * *—ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்டப்ரஹ்மம், ஸ்தூலசிதசித்விசிஷ்டப்ரஹ்மம் என வேதாந்திகள் வழங்குவர்கள். காரணுவஸ்த ப்ரஹ்மத்திற்கு ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டப்ரஹ்மமென்று பெயர்; கார்யாவஸ்தப்ரஹ்மத்திற்கு ஸ்தூலசிதசித்விசிஷ்டப்ரஹ்மமென்று பெயர். *ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்* என்று ஓதப்பட்ட நிலை காரணுவஸ்த ஸூக்ஷ்மநிலை. *தானாமரூபே வ்யாகரவாணி ஸதாயாம் ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத் யதிதம் கிஞ்ச தஸ்மிந்த்ஸத்யமித்யாசக்ஷதே* இத்யாதிகளால் ஓதப்பட்ட நிலை கார்யாவஸ்த ஸ்தூல நிலை. ஆக இவ்விரண்டு நிலைமைகளும் ஒரு ப்ரஹ்மத்துக்கேயாதலால் "தொல்லைநன்னூலிற் சொன்ன உருவு மருவும் நீயே" என்கிறது. தொல்லை நன்னூலென்கிறது ப்ரமாணச்ரேஷ்டமான வேதத்தை.

ஈற்றடியை இரண்டு வகையாக நிர்வஹிப்பர்கள்;— வேதங்களும் ஸநகாதியோகிகளும் உன்னுடைய ஸ்வரூபகுண விபூதிகளைப் பேசப் புகுந்தால் ஏதோ சில பாகம் பேசிஞர்கள் என்று கொள்ளலாமே தவிர, எல்லாம்பேசி முடித்திட்டார்களென்பதில்லை; அவர்களும் பேசாததாய் இன்னமும் பேசவேண்டுவது அளவு கடந்திருக்குமென்கை. அன்றிக்கே, உனக்கு நல்லராய் உன் குணங்களிலே யீடுபட்டிருக்குமவர்கள் உன்னை ஏதேனுமொருபடி

பேசினுல் அதையே தன்படியாக நினைத்திருக்குமவன் என்றதாகவுமாம். அன்பர்கள் பேசுகிறபடிக்கெல்லாம் தான் இணங்கியிருக்குமவனென்பது பரம தாற்பரியம். .... (கo)

ஆம்வண்ணமின்னதோன்றேன்று அறிவதரியவரியை *
ஆம்வண்ணத்தால் குருகூர்ச்சடகோபனறிந்துரைத்த *
ஆம்வண்ணவோண்டமிழ்கள் இவையாயிரத்துளிப்பத்தும் *
ஆம்வண்ணத்தாலுரைப்பார் அமைந்தார்தமக்கென்றைக்குமே. (கக)

ஆம் வண்ணம் இன்னது ஒன்று என்று	இன்னபடிப் பட்டிருப்பதொரு ஸ்வபாவமென்று	ஆம் வண்ணம் ஒண் தமிழ்கள் இவை ஆயிரத்துள்	தகுதியான சந்தஸ்ஸையுடைய அழகிய தமிழினுலான இவ்வாயிரத்துள்
அறிவது அரிய அரியை	(ஒருவராலும்) அறியமுடியாத ஸர்வேச்வரனை	இ பத்தும்	இப்பதிகத்தை
குருகூர் சடகோபன்	நம்மாழ்வார்	ஆம் வண்ணத்தால் உரைப்பார்	இயன்றவளவு சொல்லவல்லவர்கள்
ஆம் வண்ணத்தால் அறிந்து உரைத்த	உள்ளபடியறிந்து அருளிச்செய்த	என்றைக்கும்	ஆத்மாவுள்ளவரைக்கும்
		தமக்கு அமைந்தார்	க்ருதக்ருத்யர்கள்.

* * *—[ஆம்வண்ணம்] ஒருவராலும் ! ஒரு வகையுமறியவொண்ணுத எம்பெருமானை உள்ளபடியே யறிந்து அவனுக்கு ஏற்றவாறு ஆழ்வாருளிச் செய்த ஆயிரத்தினுள்ளும் இத்திருவாய்மொழியை யதாசக்தி பயிலுமவர்கள் என்றைக்கும் க்ருதக்ருத்யரென்று அவர்களைச் சிறப்பித்துக் கூறுகிறபடி. க்ருதக்ருத்யதா ப்ராப்தியே பலனென்று பயனுரைத்தவாறு.

முதலடியில், எம்பெருமானுடைய படி இன்னதென்று ஒருவராலுமறியவொண்ணுதது என்று கூறியிருப்பது பொருந்துமா? அவனுடைய படிகளைப் பரக்கப் பேசுவதற்கன்றோ சாஸ்த்ரங்கள் தோன்றியுள்ளன; அவைதாம் அவனுடைய படிகளை நிஷ்கர்ஷித்துக் கூறியிருக்கவில்லையோ? என்று சிலர் சங்கிக்கக்கூடும். இஃது உண்மையே; பிராட்டியைப் புருஷகாரமாகக் கொண்டு என்னை யடிபணிவார்க்கு நான் ப்ராப்யன் என்று பலவிடங்களிற் கூறுமெம்பெருமானே ஓரிடத்தில் “நாஹம் வேதைர் ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா। கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந ॥” என்கிருன். புருஷகாரபலத்தைக் கொண்டும் மற்று எந்த ஸாதனங்கொண்டும் என்னை வசப்படுத்த முடியாது; எனக்காகத் தோன்றுகிறபோது நானுகவே ஒரு அதிகாரிவிசேஷத்தைத் திருவுள்ளம்பற்றுவேனத்தனை— என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. இங்ஙனே மற்ருென்றும் காணலாம்; * ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே। ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ: ॥ * என்கிற எம்பெருமான் தானே * அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாம் அநந்யபாக்। ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ: * என்றும், * க்ஷிபாமி ந க்ஷமாமி ... ஸம்ஸ்ராவம் ந த்யஜேயம் கதஞ்சந। தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம் ॥ * என்றுமருளிச்செய்கிருன். தன்னுடைய கட்டளையான ச்ருதிஸ்ம்ருதிஸரணிகளைக் கடந்து துஷ்டனுனவன் தன்னளவில் எவ்வளவு பக்தி செய்யினும் பயனில்லை, தனக்கு அவன் த்ரோஹியே என்று ஓரிடத்தில் சொல்லிவைத்து, மற்றும் பலவிடங்களில், எவ்வளவு துஷ்டனுனவனும் என்னைக் கபடமாகவாவது அடிபணிந்தானுயின் அவனை என்னேடொப்ப பஹுமானிக்கக்கடவது என்று சொல்லிவைக்கின்ருனெம்பெருமான். எதை நம்புவது?

ஆனுலும் சாஸ்த்ரார்த்தம் இப்படி பரஸ்பரம் வ்யாஹதமாயிருக்குமோ? சாஸ்த்ரத்தை உந்மத்த ப்ரலபிதமாக்கவொண்ணுமோ? ஒன்ருேடொன்று முரண்படாதபடி ஸமந்வயம்

செய்து பொருத்தவல்ல மஹான்களில்லையோ? ஸமந்வயம் செய்திருக்கவில்லையோ வென்னில்; ஏன் இல்லை; ஸமந்வயம் பெறாதது எதுவுமில்லை. ஆனால் அல்பப்ராஜ்ஞர்களுக்கு ஸமந்வயம் அஸாத்யமாகையாலே அதையிட்டு "ஆம்வண்ணமின்னதொன்றென்று அறிவதரியவரியை" என்கிறது. முதலடியிலே இப்படி சொல்லிவைத்து உடனே இரண்டாமடியிலே "குருகூர்ச் சடகோபன் ஆம்வண்ணத்தாலறிந்துரைத்த" என்றதன்றோ. இதனால் ஆழ்வார் போன்ற * மயர்வற மதிநலமருளப் பெற்றார்க்கு அறியவரியனல்லன் என்பது காட்டப்பட்டது. * பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரிய வித்தகன் * [illegible] * என்றாற்போல.

அமைந்தார் தமக்கு என்றைக்கும் என்றது—காலமுள்ளதனையும் தங்களுக்கு வேண்டிய அநுபவத்திற்குத் தாங்கள் குறையற்றவர்களென்றபடி. அதாவது, ஸ்வயம் க்ருதக்ருத்யர்கள் என்கை. இங்கே நம்பிள்ளையீடு காண்மின்;—"அவர்களுக்கு இவ்வாத்மா வுள்ளதனையும் ஈச்வரன் முழங்கைத் தண்ணீர் வேண்டா, ஆழ்வார் பரிக்ரஹமானதுவே போரும். என்றைக்கும் தந்தாமுக்குத் தாமே யமைந்தார்களாயிருப்பர்கள்" (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம். நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து—ஒன்பதாந்திருவாய்மொழி—என்றைக்கும்

உரையவதாரிகை:—கீழ்த்திருவாய்மொழி சென்றது எம்பெருமானுடைய ஒரு ஆச்சர்ய சாதுரியத்தாலேயாயிற்று. ஆழ்வார் ஒன்று கேட்க, எம்பெருமான் ஒன்றைச் சொல்லி அவர் கேட்டதை மறப்பிக்குமியல்வினனாகையாலே ஒவ்வொரு ஸமயத்திலே ஒவ்வொரு குணாவிஷ்காரத்தைப் பண்ணுவதும் அதை ஆழ்வார் அநுபவிக்குமாறு செய்வதும் அத்தாலே சிறிது போது கழியும்படியாகச் செய்வதும் ஆக இப்படியே நடந்து வாராநின்றது. இப்படிப்பட்ட எம்பெருமானை இன்று மடிபிடித்துக் கேட்டு உத்தரம் பெற்றேயாக வேணுமென்கிற தீவ்ரமான ருசி ஆழ்வார்க்கு உண்டாயிற்று. அதனால் எம்பெருமானை வலியப் பிடித்துக்கொண்டு 'பிரானே! என்னுடைய க்ருபையில் குறைகண்டாயோ? உன்னுடைய சக்தியில் குறைகண்டாயோ? எதுக்கு இப்படி யென்னை நலியுமவற்றின் நடுவே வைத்து நலியாநின்றாய்? * பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்புமாய் இந்நின்ற நீர்மையிலே மிக்க அருவருப்புக் கொண்ட வென்னை இக்கொடிய நிலத்திலே வைத்துக் குமைப்பது பரமகாருணிகனான உனக்குப்பொருந்துமோ? என்ன திருவுள்ளங்கொண்டு என்னையிங்கு இட்டு வைத்திராநின்றாய்? இது தன்னை இன்று நீ சொல்லியேயாகவேணும்' என்றாராழ்வார். அதுகேட்ட எம்பெருமான் 'ஆழ்வீர்! என் கருத்தை நீர் தாம் அறியீரோ? அறிந்துவைத்தும் அறியாதவர் போலக் கேட்கின்றீரே; நமக்கும் நம்முடையவர்க்கும் போதுபோக்குக்கு உரித்தான செவிக்கினிய செஞ்சொற்களைப் பாடித்தருகைக்காகவன்றோ நாம் உம்மை இந்நிலத்திலே வைத்திருப்பது; அப்படியிருக்க ஏன் பதறுகிறீர்?' என்ன,

அதுகேட்ட ஆழ்வார் 'பிரானே! இதுவோ உன் கருத்து? ஸர்வேச்வரனாய் அவாப்தஸமஸ்த காமனாயிருந்துள்ள உனக்கும் ஒரு குறையுண்டாகி அக்குறையை என்னாலே தீர்த்துக் கொள்ளப் பார்ப்பதாகிறவிது நன்றாயிருந்தது! உனக்குச் சில ப்ரபந்தங்கள் வேண்டினால் அவையியற்றுதற்குரிய அறிவு ஆற்றல் முதலியவை நிரம்பிய வ்யாஸபராசர வால்மீகி முதலானோரைக் கொண்டும் * இன்கவிபாடும் பரமகவிகளான முதலாழ்வாரைக்கொண்டும் பாடுவித்துக் கொள்ளலாகாதா? நீசனேன் நிறையொன்றுமிலேனைக் கொண்டு பாடுவித்துக்கொள்ளத் திருவுள்ளம் கொண்டபடி என்னே! இது என்ன நீர்மை! இது என்ன வாத்ஸல்யம்! என்று பெருநன்றி பாராட்டி, இதற்கீடாக நான் செய்வதொரு கைம்மாறு கண்டிலேனே! என்று தடுமாறுவதாய்ச் செல்லுகிறது இத்திருவாய்மொழி.

என்றைக்குமென்னை உய்யக்கொண்டுபோகிய *
அன்றைக்கன்றென்னைத் தன்னாக்கியென்னால்தன்னை *
இன்தமிழ்பாடியவீசனை யாதியாய் *
நின்றவென்சோதியை என்சொல்லிநிற்பனோ. (க)

என்னை	நெடுநாளாக எம்பெருமானுடைய விஷயீகாரம் பெறாதிருந்த வடியேனை	என்னால்	என்னை உபகரணமாகக்கொண்டு
என்றைக்கும்	முதலிலேயே சாச்வதமாக அங்கீகரித்து (அவ்வளவேயன்றிக்கே	தன்னை	வேதங்களுக்கு மெட்டாத பெருமை பொலிந்த தன் விஷயமாக
போகிய அன்றைக்கு அன்று	நிகழ்கின்ற நாள்தோறும்	இன் தமிழ் பாடிய	இனிய தமிழ்ப் பிரபந்தத்தைப் பாடுவித்துக் கொள்கின்ற
உய்யக் கொண்டு	விசேஷ கடாக்ஷம் பண்ணி	ஈசனை	ஸ்வாமியாய்
என்னை தன் ஆக்கி	இப்படி விஷயீகரிக்கப்பட்ட வென்னைத் தன்னோடொத்த ஜ்ஞான சக்திகளுடையேனாம்படி யாக்கி	ஆதி ஆய் நின்ற என் சோதியை	இத்திருவாய்மொழிக்கு மூலகாரணமாயிருந்து எனக்கு வடிவழகைக் காட்டிக்கொடுத்த பெருமானைக் குறித்து
		என் சொல்லி நிற்பன்	எத்தைச் சொல்லித் தரிப்பேன்!

* * *—மிகவும் நீசனாயிருக்கிறவென்னை ஞானம் சக்தி முதலியன வுடையேனாம்படி பண்ணி என்னையிட்டுத் திருவாய்மொழி பாடுவித்துக் கொண்ட வுபகாரத்தை நினைக்கத் தரித்திருக்ககில்லேனே! என்கிறார். என்றைக்கும், போகிய அன்றைக்கன்று என்னை உய்யக்கொண்டு என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை இன்தமிழ் பாடியவீசனை ஆதியாய்நின்றவென் சோதியை என் சொல்லி நிற்பன்! என்று அந்வயம். என் திறத்தில் ஒருநாள் பண்ணின விஷயீகாரமே காலமுள்ளதனையும் உஜ்ஜீவிக்கப் போரும் என்னும்படியாகவன்றோ விஷயீகரித்தது. முதல் தன்னில் விஷயீகரிக்கும்போதே தம்மை ஆத்மாந்த கிங்கரனாக விஷயீகரித்தபடியை என்றைக்கும் என்றதனால் அருளிச் செய்தபடி. ஒருகால் பண்ணிவிட்ட விஷயீகாரமேயன்றிக்கே, கழிகிற நாள்சோறும் நாள்தோறும் இப்படியேயன்றோ விஷயீகரித்தது! என்று வியக்கிறார் இரண்டாமடியில்.

என்னைத் தன்னாக்கி யென்பதற்கு இரண்டு படியாக நிர்வஹிப்பர்கள்; * தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையேயொக்க அருள்செய்வர் * என்கிற கணக்கிலே ஜ்ஞான சக்திகளால் தன்னோடொக்கும்படி பண்ணி யென்னுதல். தனக்கேயாம்படி விஷயீகரித்து என்னுதல்.

என்னால் தன்னை இன்தமிழ்பாடிய—ஐயோ! என்னிலைமையென்ன? தன்னிலைமையென்ன? ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணாதிகளுக்கும் எட்டாத தன்னை அல்பசக்திகனான

என்னைக்கொண்டு இனிய தமிழ் நூலைக் கவிபாடுவித்துக் கொள்ளுகையாகிறவிது என்னே! என்று ஈடுபடுகிறார்.

இன் தமிழ் பாடிய வீசனை—இனிமையான தமிழ்ப்பாஷையென்று பொதுவாகத் தமிழின் இனிமை சொல்லுகிறதன்று இங்கு; தமிழ் என்றது—தமிழினாலாகிய இத் திருவாய்மொழிப் பிரபந்தத்தைச் சொன்னபடியாய், இன் என்கிற அடைமொழி அதிலே அந்வயிக்கும். * இளையபுன்கவிதை * என்றாற்போலே இழித்துச் சொல்லவேண்டியிருக்கப் புகழ்ந்து கூறலாமோ வென்று சங்கிக்கவேண்டா; இது எம்பெருமானுடைய திருவாக்சேயன்றி என் வாக்கன்று என்று ஒரு தடவைக்குப் பத்துதடவை சொல்லுகிறாராதலால் தம் வாக்கைப் புகழ்தலாகிற குற்றம் தோன்ற இடமில்லையென்க. பாடிய என்பதற்கு - பாடுவித்துக் கொண்ட என்கிற அர்த்தம் தவிர மற்றொரு இன்சுவைப் பொருளும் நம்பிள்ளையருளிச் செய்கிறார்—"* ஹா வு ஹா வு ஹா வு என்று முக்தன் ஸாமகானம் பண்ணுமாபோலே இவனும் இவரோட்டை யநுபவத்தால் வந்த ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு தென்னாவென்று பாடுமாயிற்று." என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி. திருவாய்மொழியை அவதரிப்பித்து அதன் போக்யதையிலே எம்பெருமான் தானே யீடுபட்டு ஆனந்தத்திற்குப் போக்குவீடாக ஆலபனையிட்டுப் பாடும்படியைச் சொன்னவாறு.

ஆதியாய் நின்ற என்பதற்கு - ஜகத் காரணபூதனாய் நின்றவென்கிற பொருள் சிலர்க்குத் தோன்றும்; அதுவன்று பொருள்; தமக்கு உள்ளீடாக நின்று பாடுகையாலே திருவாய்மொழிக்கு மூலபூதனென்றபடி.

என் சோதியை—தம்முடைய கவிக்கு அவனுடைய வடிவழகே ஊற்றுவாய் என்கிறது. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி—பிடாத்தை விழவிட்டுத் தன் வடிவழகைக் காட்டினான்; திருத்திரை யெடுத்தால் கூப்பிடுமாபோலே கூப்பிட்டேன், அது கவியாய்த் தலைக்கட்டிற்று வடிவழகைக் காட்டியாயிற்று கவிக்கு உள்ளுறை கொடுத்தது." என்று. [பிடாத்தை விழவிட்டு—தன் போர்வையை நீக்கி என்றபடி.]

என் சொல்லி நிற்பனே?—பெற்ற உபகாரத்திற்குப் பெருநன்றி பாராட்டுதலாகச் சில வார்த்தைகள் சொல்லுவதென்பது உலகவியற்கை; தாம் பெற்ற மஹோபகாரத்திற்கு ஈடு பெடுப்புமில்லாமையாலே என்ன பேச்சுப்பேசி நன்றி பாராட்டுவதென்று தடுமாடுகிறார்.(க)

என்சொல்லிநிற்பன் என்னின்னுயிரின்றொன்றாய் *
என்சொல்லால்யான்சொன்ன இன்கவியென்பித்து *
தன்சொல்லால்தான்தன்னைக் கீர்த்தித்தமாயன் * என்
முன்சொல்லும்மூவுருவாம் முதல்வனே. (உ)

என் இன் உயிர்	என்னுடைய ஹேயமான ஆத்ம வஸ்துவானது	தான் தன்னை கீர்த்தித்த	தானே தன்னைக் கவிபாடிக் கொண்டவனாய்
இன்று ஒன்று ஆய்	இன்று தனக்கொரு வஸ்துவாக	என் முன் சொல்லும் மாயன்	எனக்குள்ளே யிருந்து முன்னுருச்சொல்கின்ற ஆச்சர்யபூதனாய்
என் சொல்லால் யான் சொன்ன இன் கவி என்பித்து	என்னுடைய சொல்லாலே நான் கர்த்தாவாகச்சொன்ன இனிய பிரபந்தமென்று நாட்டிலே பிரஸித்தமாக்கி	மூ உரு ஆம் முதல்வன்	த்ரிமூர்த்தியா யிருப்பவனை காரணபூதனைக் குறித்து
தன் சொல்லால்	தன்னுடைய உக்திகளாலே	என் சொல்லி நிற்பன்	எதைச் சொல்லித் தரிப்பேன்?

* * *—தானே தன்னைக் கவி பாடுவித்து நான் தன்னைக் கவிபாடினதாக உலகில் ப்ரஸித்தமாக்குவதே! இது என்கொல்! என்று தலைசாய்க்கிறார். பாசுரம் தொடங்கும்போதே என் சொல்லி நிற்பன்! என்கிறார். நெடுங்காலமாக விமுகனாய்ப் போந்தவென்னை நிர்ஹேதுகமாக விஷயீகரித்தபடியை நினைத்தால் நான் எத்தைச் சொல்லித் தரையில் கால்பாவுவதென்கிறார். பொருளல்லாத வென்னையுமொரு பொருளாகக் கொண்டு என் சொல்லால் யான் சொன்ன பாசுரமென்று உலகத்தார் நம்பும்படியாக்கி, என்னைக் கருவியாகக்கொண்டு தன் சொற்களையிட்டே திருவாய்மொழி பாடியருளின இந்த மஹாகுணத்திற்கு என்ன பாசுரமிட்டுச் சொல்வது!

என் முன் சொல்லும்—அவன், முன்னே சந்தையிட, பின்னே சொன்னேன். உபாத்யாயர்கள் சிஷ்யர்களுக்கு வேதமோதுவிக்க, அவர்கள் ஓதுகிறாப்போலே நடந்ததாயிற்றிது.

மூவுருவாம் முதல்வனே—தான் அயனுக்கும் அரனுக்கும் அந்தர்யாமியாயிருந்து சில காரியங்களைச் செய்ய, அக்காரியங்கள் அவர்கள் தாமே செய்ததாக ப்ரஸித்தமானாப்போலே இத்திருவாய்மொழியிலும் எனக்கு கர்த்ருத்வப்ரஸித்தியுண்டாயிற்று என்கை இந்த வாக்கியத்தின் பரம தாற்பரியம். இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து அவனை அத்யயநம் பண்ணுவித்து தேவர்களுக்கு வெளிச் சிறப்பைப் பண்ணுவித்து 'அது தன்னை ப்ரஹ்மா செய்தான்' என்று அவன் தலையிலே யேறிட்டும், ருத்ரனுக்கு அந்தராத்மாவாய்ப் புக்கு நின்று த்ரிபுரதஹநத்தைப் பண்ணுவித்து ருத்ரன் செய்தானென்று அவன் தலையிலே யேறிட்டும் விருது பிடிக்கப் பண்ணினாப்போலே தானே ப்ரபந்தத்தைப் பண்ணி நான் பண்ணினேனென்று என் தலையிலே யேறிட்டு எனக்கொரு ப்ரஸித்தியைத் தந்தான். தானே கார்யஞ்செய்து பிறர் தலையிலே யேறிடுகை அவனுக்குப் பண்டே ஸ்வபாவங்கிடீர்." ... ... (உ)

ஆம்முதல்வனிவனென்று தற்றேற்றி * என்
நாமுதல்வந்துபுகுந்து நல்லின்கவி *
தூமுதல்பத்தர்க்குத் தான்தன்னைச்சொன்ன * என்
வாய்முதலப்பனை யென்றுமறப்பனோ. (௩)

இவன் முதல்வன் ஆம் என்று	'குருகூர்ச்சடகோபனாகிய இவன் ப்ரபந்நஜநகூடஸ்தனுக்க் கடவன்' என்று திருவுள்ளம்பற்றி	தூ முதல் பத்தர்க்கு	முமுக்ஷுக்களுக்கு அநுபவிக்கலாம்படி
தன் தேற்றி	தன் விஷயமான தெளிவை எனக்குப் பிறப்பித்து	தான் தன்னை சொன்ன	தானே தன்னைப்பாடின
என் நா முதல் வந்து புகுந்து	என்னுடைய நாவிலே தானே வந்து புகுந்து	என் வாய் முதல் அப்பனை	என் வாக்குக்கு முதல்வனான மஹோபகாரகனை
நல் இன் கவி	பரமபோக்யமான சொல் தொடைகளை	என்று மறப்பனோ	என்றைக்காவது மறப்பனோ? [ஒருநாளும் மறக்கமாட்டேன்.]

* * *—அன்பர்களுக்காக என்னைக்கொண்டு தான் தன்னைக் கவிபாடின மஹோபகாரகனை ஒருநாளாவது மறக்கப்போமோ வென்கிறார்.

ஆம் முதல்வனிவனென்று—இதற்கு இரண்டு வகையாக நிர்வாஹம்; முதல்வன் என்கிறவிது எம்பெருமானிடத்திலே அந்வயிப்பதாக ஒரு நிர்வாஹம். அது ஆழ்வாரிடத்திலே அந்வயிப்பதாக மற்றொரு நிர்வாஹம். இந்த எம்பெருமானே ஜகத்காரணபூதனென்று தன்

பக்கலிலே யெனக்குத் தெளிவு பிறக்கும்படியாகப் பண்ணி என்பது முதல் நிர்வாஹத்தின் பொருள். குருகூர்ச்சடகோபனுகிற இவன் ஸம்ஸாரிகளைத் திருத்திப் பணிகொள்ளும் விஷயத்திலே முதல்வனுகக் கடவன்—தலைவனுகக்கடவன் என்று திருவுள்ளம்பற்ற என் பக்கலிலே தன் ஸ்வரூபாதிகளைத் தெளியப்பண்ணி என்பது இரண்டாம் நிர்வாஹத்தின் பொருள்.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகள்; "காரண வாக்யங்களில் உபாஸ்யனுகச் சொல்லப்படுகிறுன் தானேயென்று தன் பக்கலிலே தெளியும்படி பண்ணியென்னுதல்; அன்றிக்கே, பரமபதத்தோபாதி ஸம்ஸாரத்தையும் திருத்த நினைத்தோம்; அதுக்கு இவன் முதலாம்—அடியாமிவனென்று என் பக்கலிலே தன் ஸ்வரூபாதிகளைத் தெளியப் பண்ணி யென்னுதல். இங்கேயருளிச் செய்யும் வார்த்தை—திருப்புற்றுக்குக் கிழக்கே கரியமாணிக்காழ்வார் திருமுன்பின் ஸோபானத்திலே ஆளவந்தார் எழுந்தருளியிருக்க, உடையவர் திருப்புற்றுக்குக் கிழக்காக எழுந்தருளி நிற்கக்கண்டு * ஆமுதல்வனிவன் * என்றருளிச் செய்தாராம் என்று."

ஸ்ரீ காஞ்சீ ஹஸ்திகிரியின் திருமடைப்பள்ளி ப்ரதக்ஷிண வீதியிலே ஆளவந்தார் யாதவப்ரகாசனேடே யிருந்த எம்பெருமானுரைத் திருக்கச்சி நம்பிகள் மூலமாகத் தெரிந்துகொண்டு 'ஆம்முதல்வனிவன்' என்று குளிரக் கடாக்ஷித்தருளின ஐதிஹ்யத்தையருளிச் செய்தபடி. இதனுல், இரண்டாவது நிர்வாஹம் ஆளவந்தார் திருவுள்ளத்திற்கு மிகவுமிணங்கினதென்று காட்டினபடி. "ஸ்ரீசைலேசம் ஸஹாஸவஸேவிதி" என்கிற அதிகரண ஸாராவளி ச்லோகத்தில் (ஸஹாஸவௌ) என்றதும் இப்பொருளதே.

என் நாமுதல் வந்து புகுந்து—ஸ்ரீராமாயணத்திற் காட்டில் திருவாய்மொழிக்குண்டான ஏற்றஞ் சொல்லுகிறது இதனுல். எம்பெருமான் நான்முகனுக்கு நியமிக்க, அவன் தன் மஹிஷியான ஸரஸ்வதியை ப்ரேரிக்க, அவள் வால்மீகி பகவானுடைய நாவிலே ஆவேசித்து அவதரித்ததாயிற்று ஸ்ரீராமாயணம். அங்ஙனம் ஓர் இடையீடின்றிக்கே என்னுடைய நாவிலே தானே முற்பாடனுய் வந்து புகுந்து தானே பேசினுனென்கிருர்.

தூமுதல் பத்தர்க்கு—நித்யஸூரிகளுக்கும் போக்யமாக, அல்லது முமுக்ஷுக்களுக்கென்றபடியுமாம். இப்படிப்பட்ட மஹோபகாரகனை என்றேனும் மறக்க விரகுண்டோ? (௩)

அப்பனையென்று மறப்பனென்னுகியே *
தப்புதலின்றித் தனைக்கவிதான்சொல்லி *
ஒப்பிலாத்தீவினையேனை உய்யக்கொண்டு *
செப்பமேசெய்து திரிகின்றசீர்கண்டே. (௪)

என் ஆகியே	என்னைக்கொண்டே	உய்ய கொண்டு	உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளம் பற்றி
தப்புதல் இன்றி	ஒருவகையான அவத்யமும் தட்டாதபடி	செப்பமே செய்து திரிகின்ற	எனக்கு ரக்ஷணமே பண்ணிக் கொண்டு போருகிற
தனை தான் கவி சொல்லி	தன்னைத்தானே கவிபாடி	சீர்கண்டு	சீலத்தைக் கண்டுவைத்து
ஒப்பு இலா தீ வினையேனை	ஒப்பற்ற பாபியான என்னை	அப்பனை என்று மறப்பன்	அப்பெருமானை என்றைக்காவது மறக்க முடியுமோ?

* * *—தானே தன்னைக் கவி பாடிக்கொண்டானாகில் ஓர் ஆச்சரியமில்லை; பாடுகைக்குப் யாங்கின்றியே யிருக்கிற வென்னைக் கொண்டு தப்புதலில்லாமல் கவி பாடின இந்த மஹோபகாரத்தை நான் எங்ஙனே மறக்கமுடியுமென்கிறார்.

"அப்பனையென்று மறப்பன்" என்றவிடத்து ஈட்டில்—"உபகாரகனானவனை நான் என்று மறப்பன்? இனி அவன் உபகாரம் பண்ணினால்தான் மறக்கப்போமோ?" என்று (பழைய தெலுங்கு பதிப்பில்) பாடம் காண்கிறது, "இனி அவன் அபகாரம் பண்ணினால் தான்" என்று திருத்தவேணும். இருபத்தினாலாயிரப்படியில்—"இவ்வுபகாரம் பண்ணினவனை, இனி அபகாரம் பண்ணினால் தான் மறப்பனோ?" என்கிற ஸ்ரீஸூக்தி காண்க. அப்பன் என்பதற்கு உபகாரகனென்று பொருள். "என்னாகியே தப்புதலின்றித் தனைக் கவிதான் சொல்லி" என்றவிடத்திற்கு எம்பார் அருளிச் செய்வராம்—"தான பாடினானாகில் ஒரு தப்புமில்லாமல் தலைக்கட்டும்; நான் பாடினேனாகிலும் வருந்தி ஒருவிதமாகத் தலைக்கட்டலாகும்; இவ்விரண்டுமல்லாமல் என்னை உபகரணமாகக்கொண்டு கவிபாடாநிற்கச் செய்தேயும் என் ஸம்பந்தத்தால் வந்த தோஷம் தட்டாதபடி கவிபாடித் தலைக்கட்டினான்." என்று.

ஒப்பிலாத் தீவினையேனை—ஸர்வஜ்ஞத்வம் ஸர்வசக்தித்வம் முதலானவற்றில் தான் ஒப்பிலாதவனாயிருக்குமாபோலே தீவினையில் நான் ஒப்பில்லாதவனாயிருந்தேன். அப்படிப்பட்டவென்னை அடியோடு தீவினையின் நாற்றமே யறியாதவர்கள் பெறும் பேறு பெறுவித்தருளினானே! இஃதென்ன ஔதார்யமென்று ஈடுபடுகிறார். ... . (ச)

சீர்கண்டுகொண்டு திருந்துநல்லின்கவி *
நேர்படயான்சொல்லும் நீர்மையிலாமையில் *
ஏர்விலாவென்னைத்தன்னாக்கி என்னால்தன்னை *
பார்பரவின்கவி பாடும்பரமரே. (ரு)

சீர் கண்டு கொண்டு	பகவத்குணங்களில் அவகாஹித்து	ஏர்வு இலா என்னை தன் ஆக்கி	தகுதியற்ற வென்னைத் தன்னோடொக்கக் கடாக்ஷித்து
திருந்து நல் இன் கவி	திருத்தமுற்று விலக்ஷணமாய் மதுரமான பாசுரங்களை	என்னால்	அப்படி கடாக்ஷிக்கப்பெற்ற அடியேனைக்கொண்டு
		தன்னை	தன் விஷயமாக
யான் நேர்பட சொல்லும் நீர்மை இலாமையில்	நேர்த்தியாகப் பாடுகைக்குரிய சக்தி எனக்கில்லாமையாலே	பார் பரவு இன் கவி பாடும் பரமர்	நிலவுலகம் முழுதும் கொண்டாடும்படியான இனிய பாசுரங்களைப்பாடும்பரமபுருஷராயிராநின்றார்!

* * *—தன்னைக் கவிபாடுகைக்குத் தக்க ஆற்றலும் ஆசையுமில்லாதிருந்த வென்னைக் கொண்டு, உலகமெல்லாங் கொண்டாடும்படியான பாசுரங்களைப் பாடுவித்துக் கொண்டானே! என்ன ஸர்வேச்வரனோ வென்கிறார். எம்பெருமான் விஷயமாகக் கவிபாட வேணுமானால் முந்துற முன்னம் அவனுடைய திருக்கல்யாண குணங்களைக் கண்டுகொள்ள வேணுமே; கடல்போன்ற அக்குணங்களில் ஒரு திவலையும் கண்டறிந்தவனல்லனே நான் என்கிறார். குணஜ்ஞானமில்லையாகிலும், கட்டளைப்பட்டு லக்ஷணோபேதமான கவியை யியற்றும் பெற்றியாவது இருக்கவேணுமே; அதுவுமில்லையே யெனக்கு. இவை யில்லாமையாலே கவி பாடுகைக்குத் தகுதியற்றவன் நான். இப்படிப்பட்டவென்னை தன்னைப்போலே ஹேய ப்ரத்யநீகத்வ ஸர்வஜ்ஞத்வாதி குணவிசிஷ்டனாக்கி என்னைக்கொண்டு உலகமெல்லாம் கொண்

டாடும்படியான பாசுரங்களைப் பாடுவித்துக்கொண்டு இப்பாசுரங்களினாலே தன்னைப் பராத்பரனாக அபிமானிக்கின்றானே! என்று உள் குழைகின்றார்.

இரண்டாமடியின் முடிவில் "நீர்மையிலாமையில்" என்பதற்கு 'யோக்யதையில்லாமலிருக்கச் செய்தேயும்' என்று பொருள். அன்றிக்கே இதனை ஏழாம் வேற்றுமையாகக் கொண்டு, நீர்மையிலாமையில் ஏர்விலாவென்னை—யோக்யதையின் அபாவத்தில் ஒப்பற்றிருக்கிறவென்னை என்று பொருள் கொள்ளவுமாம். ஒப்பற்ற அயோக்யனை யென்றபடி. இது ஆறாயிரப்படி நிர்வாஹம். .... (ரு)

இன்கவிபாடும் பரமகவிகளால் *
தன்கவிதான்தன்னைப் பாடுவியாது * இன்று
நன்குவந்தென்னுடனாக்கி என்னால்தன்னை *
வன்கவிபாடும் என்வைகுந்தநாதனே. (சா)

என் வைகுந்த நாதன்	பரமபதநாதனான எம்பெருமான்	இன்று நன்கு வந்து என் உடன் ஆக்கி	இப்போது எனக்கருள் செய்ய வேணுமென்று வந்து என்னைக்கருவியாகக்கொண்டு
இன் கவி பாடும் பரம கவிகளால்	மதுரமான கவிகளைப் பாடவல்ல முதலாழ்வார்களைக் கொண்டு	என்னால்	என் வாயிலாக
தன் கவி தான் தன்னை பாடுவியாது	தனக்குத் தகுதியான பாசுரங்களைத்தான் பாடுவித்துக்கொள்ளாமல்	தன்னை வன் கவி பாடும்	தன் விஷயமான சிறந்த பாசுரங்களைப் பாடிக்கொள்கிறான்!.

***—தனக்குச் சில பாசுரங்கள் வேணுமானால் அவற்றைப் பாடவல்ல மஹாகவிகள் பலருமுண்டே; வ்யாஸபராசரவால்மீகிப்ரப்ருதிகளான மஹர்ஷிகளும் முதலாழ்வார்களுமுண்டாயிருக்க, அவர்களைக்கொண்டு கவி பாடுவித்துக்கொள்ளாதே என்னைக் கருவியாகக் கொண்டு கவி பாடுவதே யென்று தலைசீய்க்கிறார்.

இன் கவி பாடும் பரமகவிகளென்பதற்கு ஸம்ஸ்க்ருத கவிகளையும் தமிழ்க்கவிகளையும் அர்த்தமாகக் கொள்வர். வ்யாஸபராசரவால்மீகிப்ரப்ருதிகளான வடசொற்கவிவரர்களும் முதலாழ்வார்கள் திருமழிசைப்பிரான் போல்வாரான செந்தமிழ்க் கவிவரர்களுமுண்டாயிருக்க, அவர்களைக்கொண்டு தனக்குவேண்டிய பிரபந்தங்களை எவ்வளவும் பாடுவித்துக் கொள்ளலாமே; அது செய்யாதே என்னைக்கொண்டு கவி பாடுவித்துக்கொள்ளுபதவே ப்ரயோஜனமாகவந்து, தான் ஸ்ரீவைகுண்டநாதனான பெருமையை எனக்குத் தோற்றுவித்து, வைகுந்தநாதனென்று என் வாயினாற் சொன்னாலொழியத் தன்னை வைகுண்டநாதனாக நினையாதவனாய், என் பாட்டினாலேயே தனக்கு வைகுண்டநாதத்வம் ஸித்தித்ததாக நினைக்குமவனாய் இப்படி பாடுவித்துக்கொண்டானே, இது என்ன நீர்மை! என்று உருகுகிறார்.

மூன்றாமடியில், நன்கு வந்து, என்றும்; நன்கு உவந்து என்றும் பிரிப்பர். (சா)

வைகுந்தநாதன் எனவல்வினைமாய்ந்தற *
செய்குந்தன்றன்னையென்னாக்கி என்னால்தன்னை *
வைகுந்தனாகப் புகழவண்டீங்கவி *
செய்குந்தன்றன்னை எந்நாள்சிந்தித்தார்வனே.

வைகுந்தநாதன்	பரமபதநாதனான எம்பெருமான்	குந்தன்	பரிசுத்தி பெற்றவனாய்
என வல் வினை மாய்ந்து அற செய்	என்னுடைய பிரபல பாபங்கள் தொலையும்படி செய்பவனாய் (அதனால்)	தன்னை என் ஆக்கி	என்னோடு ஒரு நீராகக் கலந்து

என்னால் தன்னை வைகுந்தன் ஆக புகழ	என்னைக்கொண்டு தன்னை வைகுண்டபதியாகப் புகழும்படி	செய் குந்தன் தன்னை	செய்யும்படியான உபகாரஸ்வபாவமுடைய தன்னை
வண் தீம் கவி	உதார மதுரங்களான பாசுரங்களை	சிந்தித்து எந்நாள் ஆர்வன்	அநுஸந்தித்து எப்போது த்ருப்தி பிறப்பது?

* * *—என்னைக்கொண்டு பரமபோக்யமான கவியைப் பாடுவித்துக்கொண்ட பரமோபகாரத்திற்கு இவனைக் காலமுள்ளதனையும் அநுபவித்தாலும் த்ருப்தி பெறமாட்டேனென்கிறார். *அயர்வறுமமரர்களதிபதியாயிருந்துவைத்து நித்ய ஸம்ஸாரியான என் பக்கலிலே வந்து மேல்விழாநின்றானே!, என்னுடைய வல்வினைகளையெல்லாம் போக்கி அதனால் குந்தனென்னும் திருநாமத்தையுடையவனாயினனே!, என்னைத் தன்னைப்போலே தூயனாக்கி என்னைக்கொண்டு தன்னை வைகுண்டநாதனாகப் புகழச்செய்து அதனால் தான் ஸந்துஷ்டனாகிறானே! இந்த நீர்மையை நான் எத்தனை நாள் சிந்தித்தாலும் த்ருப்திபெறக் கூடியதாக இல்லையே; என் செய்வேன்! என்றாராயிற்று.

இப்பாட்டில் குந்தன் என்பதற்குப் பலபடியாகப் பொருள் கொள்ளுவர்கள்; 'குந்த: குந்தர: குந்த:' என்று ஸஹஸ்ரநாமமாதலால் குந்தனென்று திருநாமஞ் சொன்னபடியாகலாம். அத்திருநாமத்திற்கு சங்கராசார்யர் உரைத்த பொருள்—(1) குந்தமலர்போல் அழகான அங்கமுடையவர்; ஸ்படிகம்போலத் தெளிவாயிருப்பவரென்கை. (2) பரசுராமாவதாரத்தில் பூமியைக் கச்யபருக்கு யாகதக்ஷிணையாகக் கொடுத்தவர். (3) பூமியை க்ஷத்ரியர்களில்லாமற் கண்டித்தவர் என்று. இதற்கு பட்டர் அருளிச்செய்த அர்த்தமாவது—ஞானம் வைராக்யம் முதலிய முற்படிகள் ஏறினவர்களுக்குப் பரபக்திபரஜ்ஞான பரமபக்திகளாகிய மேற்படிகளைக் கொடுப்பவர் என்று. வடமொழியில் குந்தமென்று ஆயுத விசேஷத்திற்குப் பெயராதலால், வல்வினை மாய்ந்தறச் செய் குந்தன்— விரோதிநிரஸனம் செய்ய வல்ல ஆயுத விசேஷத்தையுடையவனென்றுமாம். (இரண்டாமடியில்) செய்கும், தன்தன்னை என்றுமாம்.

வண்டீங்கவி என்றவிடத்து, வண் தீம் கவி என்று பதவிபாகம். தீம் என்று இனிமை.

ஆர்வனோவாழியங்கை எம்பிரான்புகழ் *
பார்விண்ணீர்முற்றும் கலந்துபருகிலும் *
ஏர்விலாவென்னைத்தன்னாக்கி என்னால்தன்னை *
சீர்பெறவின்கவி சொன்னதிறத்துக்கே. (அ)

ஏர்வு இலா என்னை தன் ஆக்கி	தகுதியற்ற வென்னைத் தன்னோடொக்க வருள் செய்து	ஆழி அம் கை எம்பிரான் புகழ்	சக்ரபாணியான அந்த எம்பெருமானுடைய திருப்புகழை
என்னால் தன்னை சீர்பெற இன் கவி சொன்ன திறத்துக்கு	என்னையிட்டுத் தன் விஷயத்தில் சிறப்புண்டாம்படி இனிய பாசுரங்களைச் சொன்னபடிக்கு	பார்விண் நீர்முற்றும் கலந்து பருகினும் ஆர்வனோ	மண்ணிலுள்ளாரும் விண்ணிலுள்ளாரும் க்ஷீராப்தியிலுள்ளாரும் ஒன்றுசேர்ந்து புகழநேர்ந்தாலும் நான் திருப்தியடைவேனோ?

* * *—என்னைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக்கொண்ட இந்த மஹாகுணத்திற்கு உபயவிபூதியிலுமுள்ளாருடைய சக்தியையும் வாக்கு முதலிய உபகரணங்களையும் நானொருவனே பெற்று அநுபவித்தாலும் த்ருப்திபெறமாட்டேனென்கிறார்.

பார்விண்ணீர் முற்றுங் கலந்து பருகிலும் என்பதற்கு இரண்டுவகையாகத் தாற்பரியம் கொள்வர்; (1) எங்குமுள்ள சேதநர்களெல்லாரோடுங்கூடி [எல்லாருமாகச் சேர்ந்து] அநுபவித்தாலும் ஆர்வனே! (2) எங்குமுள்ள எல்லாருடையவும் சக்தியையும் உபகரணங்களையுங் கொண்டு அநுபவித்தால்தான் ஆர்வனே! ... ... (அ)

திறத்துக்கேதுப்பரவாம் திருமாலின்சீர் *
இறப்பெதிர்காலம் பருகிலுமார்வனே *
மறப்பிலாவென்னைத்தன்னாக்கி என்னால்தன்னை *
உறப்பலவின்கவி சொன்னவுதவிக்கே. (௯)

மறப்பு இலா என்னை	மறப்புக்கு விஷயமில்லாதபடி ஸ்மரணமே யில்லாதிருந்த வென்னை	திறத்துக்கு ஏய்துப்பரவு ஆம் திருமாலின் சீர்	எந்த விஷயத்திலும் பொருத்தமான ஸாமர்த்தியத்தையுடைய திருமாலின் குணங்களை
தன் ஆக்கி	தன்னோடொக்க விஷயீகரித்து	இறப்பு எதிர் காலம்	இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் கூட்டிக்கொண்டு
என்னால் தன்னை உற பல இன் கவி சொன்ன உதவிக்கு	என்னைக்கொண்டு தனக்குப் பொருத்தமாகப் பல இனிய பாசுரங்களைப் பாடுவித்த மஹோபகாரத்திற்கு,	பருகிலும்	அநுபவித்தாலும்
		ஆர்வனே	பர்யாப்தி பெறுவேனே?.

* * *—கீழ்ப்பாட்டிற் சொன்னதுதன்னையே இன்னமும் சிறிது சித்திரித்துப் பேசுகிருர். நிகழ்காலத்தில் மாத்திரமன்று; இறந்தகாலத்தில் எத்தனை சேதநர்கள் கழிந்தார்களோ, இனி, எதிர்காலத்தில் எத்தனை சேதநர்கள் தோன்றுவர்களோ அவர்களெல்லாருடையவும் சக்தியையும் உபகரணங்களையுங் கொண்டு அநுபவித்தாலும் ஆரமாட்டேன்; அவர்களோடு கூடி யநுபவித்தாலும் ஆரமாட்டேன் என்றுராயிற்று. ... . (௯)

உதவிக்கைம்மாறு என்னுயிரென்ன வுற்றெண்ணில் *
அதுவுமற்றாங்கவன்றன்னது என்னால்தன்னை *
பதவியவின்கவி பாடியவப்பனுக்கு *
எதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே. (௧0)

உதவி கைம்மாறு	திருவாய்மொழி பாடுவித்துக் கொண்ட வுதவிக்குப் பிரதியுபகாரம்	என்னால் தன்னை பதவிய இன் கவி பாடிய அப்பனுக்கு	என்னையிட்டுத் தன்னை மதுரமாகப் பாடுவித்துக் கொண்ட எம்பிரானுக்கு
என் உயிர் என்ன வுற்று எண்ணில்	என்னுடைய ஆத்மா – என்று சொல்ல நினைத்தால்	இங்கும் அங்கும்	உபய விபூதியிலும்
அதுவும் அவன் தன்னது	அவ்வாத்மவஸ்துவும் அவனுடைய பொருளாகவே யிராநின்றது; (ஆனபின்பு)	செய்வது	செய்யக்கூடிய கைம்மாறு
		எதுவும் ஒன்றும் இல்லை	மிக அற்பமானதுமில்லை.

* * *—அவனுடைய பேருதவிக்கு ஒருபடியாலும் கைம்மாறு இல்லையென்கிருர். ஆழ்வீர் உபகாரஸ்ம்ருதிக்குக் காலம் போருகிறதில்லை யென்று நீர் புண்பட்டு இதை மீண்டு மீண்டும் பேசுவானேன்? உம்மதாயிருப்பதொரு பொருளை அவனுக்குக் கைம்மாருகக் கொடுத்துப் பிழைத்துப்போகமாட்டீரோவென்ன; ஆம்; என்ன கொடுப்பது? என் ஆத்மாவை அவனுக்குக் கொடுக்கலாமென்று பார்த்தாலோ, அதுவும் பண்டே அவனுக்கு அடிமையாதலால் இங்குமங்கும் இதுக்கொரு கைம்மாறு செய்யலாவதில்லையே, என்று தடுமாறுகின்ருர். ... . (௧0)

இங்குமங்கும் திருமாலன்றியின்மைகண்டு *
அங்ஙனே வண்குருகூர்ச்சடகோபன் *
இங்ஙனேசொன்ன ஓராயிரத்திப்பத்தும் *
எங்ஙனேசொல்லிலும் இன்பம்பயக்குமே. (கக)

இங்கும் அங்கும்	இவ்விபூதியிலுண்டான ஆச்ரயண வேளையிலும் அவ்விபூதியிலுண்டான கைங்கர்ய தசையிலும்
திருமால் அன்றி இன்மை கண்டு	லக்ஷ்மீபதியல்லது வேறொருவர் உத்தேச்யரல்லாமையை யறுதியிட்டு
அங்ஙனே வண் குருகூர் சடகோபன்	அவ்வண்ணமாகவே யிருப்பவரான ஆழ்வார்
இங்ஙனே சொன்ன	இப்படியருளிச் செய்த
ஓர் ஆயிரத்து இப்பத்தும்	ஆயிரத்துள் இப்பதிகம்
எங்ஙனே சொல்லிலும்	எப்படிச் சொன்னாலும்
இன்பம் பயக்கும்	ஆனந்தாவஹமாகும்.

* * *—இஹலோக பரலோகங்களிரண்டிலும் திருமாலல்லது தஞ்சமில்லை யென்னுமிடத்தை யநுஸந்தித்து, (அதாவது) ஸாதநாநுஷ்டானவேளையோடு பலாநுபவவேளையோடு வாசியற இவ்வாத்மாவுக்கு திவ்யதம்பதிகளே தஞ்சமென்று அத்யவஸாயங்கொண்டு அந்த ப்ரதிபத்தியே வடிவெடுத்திருப்பவரான ஆழ்வார் தம்மைத் திருவாய்மொழி பாடுவித்தருளின இம்மஹோபகாரத்தைப் பற்றிப்பேசின இத்திருவாய்மொழி அஹ்ருதயமாகவோ ஸஹ்ருதயமாகவோ எப்படி யநுஸந்தித்தாலும் இன்பம் பயக்குமென்று இதனையே பலனாகச் சொல்லித் தலைக்கட்டினாராயிற்று. ... . (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம். நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

திருவாய்மொழியில் ஏழாம்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி உரை முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

ஏழாம்பத்து—பத்தாந்திருவாய்மொழி—இன்பம் பயக்க.

உரையவதாரிகை:—எம்பெருமான் தம்மைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக் கொண்ட பேருதவிக்குக் கைம்மாறு ஒன்றுங் காணாமே தடுமாறினார் கீழ்த்திருவாய்மொழியில். இப்படிப்பட்ட இவருடைய தடுமாற்றத்தை யாற்றுதற்காக எம்பெருமான், ஆழ்வீர்! நீர் ஏன் தடுமாறுகின்றீர்? நீரும் ஒன்று செய்து நெஞ்சாறல் தீர்ந்தவராம்படி பண்ண நாம் கருதி யிருக்கின்றோம்; பண்டு திருவயோத்யையிலே நாம் குசலவர்கள் வாயாலே ஸ்ரீராமாயணம் செவிசாத்தினோமென்று கேள்விப்பட்டிருப்பீரே; அப்படியே திருவாறன்விளையிலே திருவாய்மொழி கேட்பதாகப் பாரித்திருக்கின்றோம். ஆனால் ஸ்ரீராமாயணம் கேட்டபோது நாம் பிராட்டியைப் பிரிந்திருந்தோமாதலால் தனியேயிருந்து கேட்டோமென்று ஒரு குறையுண்டு, இப்போது அப்படி யன்றிக்கே நாமும் நம் பெண்டுகளுமாயிருந்து கேட்க அறுதியிட்டிருக்கின்றோம்; நீர் அங்கே வந்து திருவாய்மொழி கேட்பித்து ஒருவாறு நெஞ்சாறல் தீரப்பெறலாமே யென்று பணிக்க, அதுகேட்ட ஆழ்வார், என்னைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக்கொண்ட உபகாரத்தளவோடு நில்லாமல் அதுகேட்கவும் பாரியாநின்றானே! இத

என்ன மஹோபகாரம்! என்று உவகை தலைமண்டை கொண்டு அந்தத் திருவாறன்விளைத் திருப்பதியிற் சென்று திருவாய்மொழி கேட்பித்தலாகிற கைங்கர்யத்லைதச் செய்யப் பாரிக்கிறார் இத்திருவாய்மொழியினாலே. .... (*)

இன்பம்பயக்கவெழில்மலர்மாதரும்தானும் இவ்வேழுலகை *
இன்பம்பயக்கவினிதுடன்வீற்றிருந்து ஆள்கின்றவெங்கள்பிரான் *
அன்புற்றமர்ந்துறைகின்ற அணிபொழில்சூழ்திருவாறன்விளை *
அன்புற்றமர்ந்துவலம்செய்து கைதொழும்நாள்களுமாகுங்கொலோ. (க)

எழில் மலர் மாதரும் தானும்	அழகிய தாமரைமலரிற் பிறந்த பெரிய பிராட்டியாரும் தானும்	அன்புற்று அமர்ந்து உறைகின்ற	மிகவும் திருவுள்ளமுகந்து வர்த்திக்கிற
இன்பம் பயக்க	பரஸ்பரம் ஆனந்தம் மேலிடும் படியாக	அணி பொழில் சூழ் திருவாறன் விளை	அழகிய சோலைகள் சூழ்ந்த திருவாறன் விளைத் திருப்பதியை
இனிது உடன் வீற்றிருந்து	இனிமையோடு கூட வெழுந்தருளியிருந்த	அன்புற்று அமர்ந்து	அன்போடு பொருந்தி
இ எழ் உலகை	இவ்வுலகங்களையெல்லாம்	வலஞ் செய்து	ப்ரதக்ஷிணம் பண்ணி
இன்பம் பயக்க ஆள்கின்ற எங்கள் பிரான்	இனிமையுற அடிமை கொண்டருளா நிற்கிற எம்பெருமான்	கை தொழும் நாள்களும் ஆகும் கொல்	கை தொழும்படியான நாட்களும் ஸமீபிக்குமோ?

* * *—எம்பெருமான் பிராட்டியோடு கூடி ஆனந்தமயனாக எழுந்தருளியிருக்குமிடமான திருவாறன் விளையிலே அநுபவித்து அடிமை செய்யுங்காலமும் ஆகுமோ வென்கிறார். ஸம்ஸாரி சேதனர்கள் எம்பெருமானோடு சேர்ந்து ஆனந்தமனுபவிப்பதுபோல, அவ்வெம்பெருமான் தானும் பிராட்டியோடு சேர்ந்தே ஆனந்தமனுபவிக்கப் பெறுகின்றானென்பது முதலடியிற் போதரும்.

"இவ்வேழுலகை இன்பம் பயக்க" என்றவிடத்தில் ஈடு—; மாதாபிதாக்களிருவரும் சேரவிருந்து பரியப்புக்கால் ப்ரஜைகளுக்கு ஒரு குறைவுகளும் பிறவாதிறே. ஆக, இருவருமான சேர்த்தியாலே தங்களுக்கு ஆனந்தமுண்டாக, அச்சேர்த்தியைக் காண்கையாலே லோகத்துக்கு ஆனந்தமுண்டாக அது தன்னைக் கண்டு, ப்ரஜை பால்குடிக்கக் கண்டுகக்கும் தாயைப்போலே இவர்களுக்குண்டான ப்ரீதியைக்கண்டு அத்தாலே தாங்கள் இனியராயிருப்பர்களாயிற்று."

திருவாய்மொழி கேட்கைக்குப் பாங்காயிருப்பதொரு தேசம் பெற்றோமென்று பெரும்பேறு பெற்றாப்போலே விரும்பி எழுந்தருளியிருக்கிற தேசமென்பது தோன்ற "இனிதுடன் வீற்றிருந்தாள்கின்ற" என்கிறார். இப்படிப்பட்ட பெருமான் அவ்விடத்திலிருப்பை ஸ்வயம்ப்ரயோஜனமாகக் கருதி, அவதாரங்கள் போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே நித்யவாஸம் பண்ணுமிடமாய், அவன் தன் விபூதியோடே யிருந்து திருவாய்மொழி திருச்செவி சாத்துகைக்கீடான பரப்பையுடைய பூம்பொழிலாலே சூழப்பட்டதான திருவாறன் விளையை ப்ரதக்ஷிணம் பண்ணி நமஸ்கரிக்கும்படியான காலம் என்றோ வென்றாராயிற்று. (க)

ஆகுங்கொல்ஐயமொன்றின்றி அகலிடம்முற்றவும் ஈரடியே *
ஆகும்பரிசுநிமிர்ந்த திருக்குறளப்பனமர்ந்துறையும் *
மாகம்திகழ்கொடிமாடங்கள்நீடு மதிள்திருவாறன்விளை *
மாகந்தீர்கொண்டுதூவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலோ. (உ)

ஐயம் ஒன்று இன்றி ஆகும் கொல்	(நமது மநோரதம்)நிஸ்ஸந்தேஹமாக ஸித்திக்குமோ?
அகல் இடம் முற்றவும்	விஸ்தீர்ணமான உலகங்களெல்லாம்
ஈர் அடியே ஆகும் பரிசு நிமிர்ந்த	இரண்டடியிலேயே அடங்கும்படி வளர்ந்தருளின
திரு குறள் அப்பன்	ஸ்ரீவாமனமூர்த்தி
அமர்ந்து உறையும்	விரும்பி வர்த்திக்குமிடமாய்,
மாகம் திகழ்	பெரிய ஆகாசத்தளவும் ஓங்கி விளங்குகிற
கொடி மாடங்கள் நீடு மதிள்	கொடிகட்டின மாடங்களையும் நெடிய திருமதிள்களையுமுடைத்தான
திருவாறன் விளை மா கந்தம் நீர் கொண்டு தூவி	திருவாறன் விளையிலே சிறந்த பரிமளம் பொருந்திய தீர்த்தத்தைக்கொண்டு தூவி
வலம் செய்து	ப்ரதக்ஷிணம் பண்ணி
கை தொழ கூடும் கொல்	அஞ்ஜலி பண்ண நேருமோ?

* * *—"ஆகுங்கொல் ஐயமொன்றின்றி" என்கிறவிது ஆழ்வாருடைய மநோரதமாகவுமாம், திருக்குறளப்பனுடைய மநோரதமாகவுமாம். பாட்டின் முடிவிலே "கைதொழக் கூடுங்கொலோ" என்றிருப்பதனால் 'ஆகுங்கொல் ஐயமொன்றின்றி' என்பது புநருக்தமாகாதோவென்னில், ஆகாது; முதலில் ஸாமாந்யமாக மநோரதித்து, மேலே விவரிக்கிறபடியென்று கொள்ளலாம். வாமனமூர்த்தியின் எண்ணமாக அந்வயிக்குமிடத்தில் இந்த சங்கைக்கே ப்ரஸக்தியில்லை. அகலிடம் முற்றவும் ஈரடியால் அளக்க ஆகுங்கொல்! என்கிற ஐயமின்றியே நிமிர்ந்து அளந்தானென்று கொள்க.

மாகம் திகழ்—ஊஹாவழ் என்கிற வடசொல் மாகம் என்று கிடக்கிறது. எம்பெருமான் திருவடிகளாலளந்த ஆகாசப் பரப்படங்கலும் வியாபியாநின்றுள்ள கொடிகளையுடைத்தான மாடங்களையும் ஓங்கியிருந்துள்ள மதிள்களையுமுடைத்தான திருவாறன்விளையை சந்தனகர்ப்பூராதி ஸுகந்தத்ரவ்யவாஸிதமாய் ஹிமசீதளமான நீர்கொண்டு தூவி வலஞ்செய்து கைதொழும் பாக்கியம் வாய்க்குமோ! என்றாராயிற்று. ஊஹாமஹமென்ற வடசொல் மாகந்தமென்று திரிந்தது.

இந்த திவ்யதேசத்திற்கு மங்களாசாஸநார்த்தமாக எழுந்தருளும் பெரியார்கள் ஆழ்வாருடைய இப்பாசுரப்புக்கிணங்க ஸுகந்தசந்தனச் சேற்றைத் திருமதிளிலே தூவி வழிபாடு செய்வது வழக்கம். ... ... (உ)

கூடுங்கொல்வைகலும் கோவிந்தனைமதுசூதனைக்கோளரியை *
ஆடும்பறவைமிசைக்கண்டு கைதொழுதன்றியவனுறையும் *
பாடும்பெரும்புகழ்நான்மறை வேள்வியைந்தாறங்கம்பன்னினர்வாழ் *
நீடுபொழில்திருவாறன்விளைதொழ வாய்க்குங்கொல்நிச்சலுமே. (௩.)

வைகலும் கூடும் கொல்	(நமது மநோரதம்) எப்போதும் நிறைவேறப்பெறுமோ?
கோவிந்தனை	ஆயர் தலைவனும்
மதுசூதனை	மதுகைடபஹந்தாவும்
கோள் அரியை	மிடுக்கனான நரஸிம்ஹனுமான எம்பெருமானை
ஆடு பறவை மிசை கண்டு	வெற்றியையுடைய கருடன்மேலே கண்டு
கைதொழுது	அஞ்ஜலிபண்ணி
அன்றி	அவ்வளவேயல்லாமல்
அவன் உறையும்	அப்பெருமான் நித்யவாஸம் பண்ணுமிடமாய்;
பாடும் பெரு புகழ் நால் மறை ஐந்து வேள்வி ஆறு அங்கம் பன்னினர் வாழ்	ஊக்கப் பாடப்படுகிற மிக்க புகழையுடைய நான்கு வேதங்களென்ன; பஞ்சமஹாயஜ்ஞங்களென்ன, சீக்ஷை முதலான ஆறங்கங்களென்ன இவற்றிலே மிக்க பரிசயமுள்ளவர்கள் வாழுமிடமாய்
நீடு பொழில்	பெரிய சோலைகளையுடையதான
திருவாறன்விளை நிச்சலும் தொழ வாய்க்கும் கொல்	திருவாறன் விளைப்பதியை எப்போதும் தொழுதுகொண்டேயிருக்கும்படியான பாக்கியம் வாய்க்குமோ?

* * *—பாட்டின் முடிவிலே "வாய்க்குங்கொல் நிச்சலும்" என்றிருக்கச்செய்தேயும் தொடக்கத்தில் "கூடுங்கொல் வைகலும்" என்றது ஆதராதிசயத்தையும் விரைவு மிகுதியையுங்காட்டும். அங்குறையும் பெருமான் பக்கலிலே விளங்கும் ஆச்ரிதவாத்ஸல்யத்தைக் கண்டு கோவிந்தனை என்றார்; விரோதிநிரஸனமிடுக்கைக் கண்டு 'மதுசூதனைக் கோளரியை' என்றார்.

"ஆடும் பறவை மிசைக்கண்டு" என்ற சொல் நயத்தை நோக்கி நம்பிள்ளை யருளிச்செய்யும் விசேஷார்த்தம்—திருவாறன்விளையை உத்தேச்யமாகக் கொண்டு எம்பெருமானை அங்கே காணவேணுமென்று நாம் அவ்விடந்தேடிச்சென்றால், அவன் திருநகரியை உத்தேச்யமாகக்கொண்டு இங்கே நம்மைக் காணவேணுமென்று ஆடும் பறவைமிசையேறி வருவனே; அன்னவனை நடுவழியிலே கண்டு—என்று.

கைதொழுதன்றி—கைதொழுவது மாத்திரமேயல்லாமல் என்றபடி. வேதாத்யயநபரர்களும் பஞ்சமஹாயஜ்ஞபராயணர்களும் வாழுமிடமென்கிறது மூன்றாமடி. (௩)

வாய்க்குங்கொல்நிச்சலுமெப்பொழுதும் மனத்தீங்குநினைக்கப்பெற *
வாய்க்கும்கரும்பும்பெருஞ்செந்நெலும் வயல்சூழ்திருவாறன்விளை *
வாய்க்கும்பெரும்புகழ்மூவுலகீசன் வடமதுரைப்பிறந்த *
வாய்க்கும்மணிநிறக்கண்ணபிரான்றன் மலரடிப்போதுகளே. (௪)

வாய்க்கும் கரும்பும் பெரு செந்நெலும் வயல் சூழ்	செழித்த கரும்புகளும் ஓங்கிய செந்நெற்களுமான கழனிகள் சூழப்பெற்ற	வாய்க்கும் மணி நிறம்	அநுபவிக்க வாய்த்த நீலரத்னம் போன்ற நிறத்தையுடையனுமான
திருவாறன்விளை	திருவாறன் விளைப்பதியிலே,	கண்ணபிரான் தன்	ஸ்ரீக்ருஷ்ணபகவானுடைய
வாய்க்கும் பெரு புகழ்	வாய்த்த மிக்க கீர்த்தியையுடையவனும்	மலர் அடி போதுகள்	விகஸிதமான திருவடித்தாமரைகளை
மூ உலகு ஈசன்	மூவுலகங்களுக்கும் ஸ்வாமியும்	எப்பொழுதும்	இடைவீடின்றி
வட மதுரை பிறந்த	வடமதுரையில் அவதரித்தவனும்	ஈங்கு மனத்து நினைக்க பெற	இங்கேயிருந்து மனதிலே நினைக்கும்படியான பேறு பெறுதற்கு
		நிச்சலும் வாய்க்கும் கொல்	எப்போதும் பாக்கியம் வாய்க்குமோ?

* * *—திருவாரன்விளையிலே சென்று அநுபவிக்க ப்ராப்தியில்லையாகிலுமாகுக; அங்கு நின்றருளின எம்பெருமான் திருவடிகளை இங்கேயிருந்தாகிலும் நிரந்தரமாகச் சிந்தனைசெய்யும் பாக்கியம் வாய்க்குமோ வென்கிறார். நிச்சலும் என்று சொல்லி, பின்னை எப்பொழுதும் என்கைக்குக் கருத்து என்னென்னில்; இங்கு ஈடு காண்மின்;—"நித்யாக்நிஹோத்ரம் போலே ஒரு காலவிசேஷத்திலேயாய்ப் போகவொண்ணாது; எல்ல வவஸ்தைகளிலுமுண்டாக வேணும்" என்று. ஒருவர் நித்யம் அக்நிஹோத்ரம் பண்ணுகிறாரென்றால் இரவும் பகலும் அதுவே தொழிலாக இருக்கிறாரென்பதில்லையே; ஒரு நாளைக்கு ஒரு சிறுபோது அக்நிஹோத்ரம் பண்ணினாலும் நித்யாக்நிஹோத்ரியென்று பெயர் வந்துவிடுமன்றோ. அப்படியாகாமே அநவரதமும் நினைக்கப்பெறவேணுமென்கிறது. மனத்தீங்கு—ஈங்கு என்று பிரிக்க. உத்தேச்யமானதொன்றை அநுபவிப்பதிற்காட்டிலும் அநுபவிக்க மநோரதிக்குமளவே நன்று என்பதை இங்கு நம்பிள்ளை மிக அழகாக விவரித்தருளுகிறார்; 'ஜாதாயாம் த்வத்கதோ மே மநோரத:, யதி நாசம் ந விந்தேத தாவதாஸ்மி க்ருதீ ஸதா.' என்பதை இங்கு நம்பிள்ளை மிக அழகாக விவரித்தருளுகிறார்; '...துர்கதாவபி ஜாதாயாம் த்வத்கதோ மே மநோரத:, யதி நாசம் ந விந்தேத தாவதாஸ்மி க்ருதீ ஸதா.'
இ. 8—31.

என்கிற ஜிதந்தாச்லோகம் இங்கு ரஸமயமாக வியாக்கியானிக்கப் பெற்றுள்ளது. "நாட்டார் மநோரத மென்றும் அநுபவமென்றும் இரண்டாகவிறே சொல்லிப் போருவது; எனக்கு இதெல்லாம் வேண்டா; இம்மநோரத மாத்ரத்தாலே க்ருதக்ருத்யன் நான். சரீர ஸம்பந்தமற்றுப் பரமபதத்திலேபோய் ஏற்றமாக அநுபவிக்குமதிற்காட்டில் நான் பேறாக நினைத்திருப்பது இத்தையே" என்கிற ஈட்டு ஸ்ரீஸூக்திகள் ரஸிக்கத்தக்கன. இங்கு, இளையாற்றுக்குடி நம்பி யென்பாரொரு பரம பக்தருடைய இதிஹாஸமொன்றும் அருளிச்செய்யப்பட்டுளது. அவர் திருநாட்கள்தோறும் கோயிலுக்கு வந்து பெருமாளை ஸேவித்துப் போவாராம். போனால், மீண்டும் திருநாள் வருமளவும் அதனையே போதுபோக்காக ஸ்மரித்துக்கொண்டிருப்பாராம். அவர் நூறு வயஸ்ஸூம் புகுகையாலே பலஹாநி பிறந்து திருமுளைத்திருநாளில் பெருமாள் புறப்பட்டருளுகைக்கு உதவவந்து புகுரப்பெற்றிலர். பெருமாளும் தேடியருளிக் காணாமை 'நம் இளையாற்றுக்குடியான் வந்திலன், நம் கண்ணுலமல்லவோ' என்று திருவுள்ளமானாராம். அவர் தாம் ஆறுந்திருநாளிலே ஸேவித்திருக்கச் செய்தே 'நாம் உனக்குச் செய்யவேண்டுவதென்?' என்று கேட்டருள, தேவரீர் தந்தருளின சரீரத்தைக்கொண்டு போரக்காரியங் கொண்டேன்; இனி போக்குவரத்துக்கு யோக்யமாகாதபடி போர ஜரித்தது' என்ன, வாராய்! மெய்யே யினைத்தாயாகில் இங்ஙனே யிரு' என்றருளிச் செய்தார். பெருமாள் நடுவில் திருவாசலுக்கவ்வருகே யெழுந்தருளுங்காட்டில் திருநாட்டுக்கெழுந்தருளினார்". .... (௪)

மலரடிப்போதுகளென்னெஞ்சத்து எப்பொழுதுமிருத்திவணங்க *
பலரடியார்முன்பருளிய பாம்பணையப்பனமர்ந்துறையும் *
மலரில்மணிநெடுமாடங்கள்நீடு மதிள்திருவாறன்விளை *
உலகமலிபுகழ்பாட நம்மேல்வினையொன்றுநில்லாகெடுமே. (௫)

மலர் அடி போதுகள்	பரமபோக்யமான திருவடித் தாமரைகளை	மலரில்	(தேவர்கள் வர்ஷித்த) புஷ்பங்களோடு கூடின
என் நெஞ்சத்து எப்பொழுதும் இருத்தி	எனது நெஞ்சிலே அநவரதமும் இருக்கும்படி பண்ணி	மணி நெடு மாடங்கள்	மணிமயமான ஓங்கின மாடங்களையும்
வணங்க	தன்னையே வணங்குமாறு;	நீடு மதிள்	நெடிய திருமதிள்களையுமுடைத்தான
பலர் அடியார் முன்பு அருளிய	மற்றும் பல பக்தர்கள் இருக்கச்செய்தேயும் அவர்களுக்கு முன்னே எனக்கு க்ருபை பண்ணின	திருவாறன்விளை	திருவாறன்விளைப்பதியினுடைய
		உலகம் மலி புகழ்	உலகமெங்கும் நிறைந்த திவ்ய கீர்த்திகளை
பாம்பு அணை அப்பன்	அனந்தசாயியான எம்பெருமான்	பாட	பாடினவளவிலே
அமர்ந்து உறையும்	உகந்து வர்த்திக்குமிடமாய்	நம் மேல் வினை ஒன்றும் நில்லா கெடும்	நம்மிடத்துள்ள பாவங்கள் ஒன்றும் மிச்சப்படாதபடி எல்லாம் தொலைந்துபோம்.

* * *—அடியார்கள் அநுபவிக்கைக்காக அநந்தசாயியானவன் வர்த்திக்கிற திருவாறன்விளையினுடைய பெரும்புகழைப்பாட, நம் பாபமொன்றும் நில்லாதே தொலைந்தொழியுமென்கிறார்.

[பலரடியார் முன்பருளிய] இவ்விடத்து ஈட்டு ஸ்ரீஸூக்திகள் பரம போக்யமானவை;— "ஸ்ரீ வேதவ்யாஸபகவான் ஸ்ரீவால்மீகி பகவான் ஸ்ரீபராசரபகவான் * இன்கவி பாடும் பரம கவிகளென்று சொல்லப்படுகிற முதலாழ்வார்களெல்லாருமுண்டாயிருக்க, என் பக்கலிலே விசேஷகடாக்ஷம் பண்ணுவதே! [ஸஹஸ்ரசோ நந்தஹதா ஹநூமஹஸ்வெக்ஷித] முதலிக

ளெல்லாருமிருக்கச்செய்தே திருவடி பக்கலிலே விசேஷகடாக்ஷம் பண்ணினுப்போலேயா யிற்று பலருமுண்டாயிருக்க இவரை விஷயீகரித்தபடி.''

இங்கு ஆழ்வானுடைய அற்புதமான இதிஹாஸமொன்று (ஈட்டில்) காட்டப்பட் டுளது. கேண்மின்; அக்காலத்திலே அரசாண்டுவந்த சோழராஜன் வைஷ்ணவ த்ரோஹி யாகையாலே ஆங்காங்குள்ள விஷ்ணுப்ரதிமைகளை யெடுத்து எறிந்துவிடவேணுமென்று முயன்றபோது அவனுக்கு இஷ்டரானவர்கள் 'மந்த்ரபூர்வகமாக ப்ரதிஷ்டை செய்யப்பட்ட விஷ்ணுபிம்பங்களை யழியச்செய்தால் ஊருக்குப் பெருத்த தீங்கு விளையும்' என்று சொல்ல, அதுகேட்ட சோழன் 'அந்த ப்ரதிமைகளில் தெய்வசக்தியை உத்வாஸநம் பண்ணியழியச் செய்வோம்' என்று நிச்சயித்து ஒரு ப்ராஹ்மணனுக்குப் பணங்கள் கொடுத்து 'நீ ஊர்த்வபுண்ட்ரா ஞ்ஜநமிட்டுக் கொண்டு உத்வாஸநம் பண்ணு' என்று ஆஜ்ஞாபிக்க, அவனும் திவ்யதேசங் களிலே சென்று அப்படியே அத்ருச்யாஞ்ஜநமிட்டுக்கொண்டு உத்வாஸநம் பண்ணி பகவத் விக்ரஹங்களைக் கடலிலே எடுத்தெறிகிற செய்தியை எம்பெருமானார் திருச்செவிசாத்தி 'நாம் நெடுநாளாக இத்திருவரங்கம் பெரியகோயிலை விடாதே நோக்கிக்கொண்டு போருகிறோம்; இவ்விடத்துக்கும் அழிவுவரும்படி ஆஸுரவர்க்கம் மேலிடாநின்றது; இனிமேல் செய்ய வேண்டுவதென்? என்று வியாகுலப்பட்டுப் பெரியநம்பியோடே சிந்தித்திருக்க, 'நான் பெரு மாளுடைய திருவெல்லையிலே ஒரு ப்ரதக்ஷிணம் வரும்படியாக உம்முடைய சிஷ்யர்களில் ஒருவரை என் பின்னே அனுப்பவேணும்; என்பின்னேவாநின்றால் 'ஒருவன்பின்னே போகி றோம்' என்று தன்னெஞ்சில்படாதே நிழல்போலே என்னைப் பின்செல்பவனாக இருக்கவே ணும்; அப்படிப்பட்ட ஒரு சிஷ்யனைப் பார்த்தனுப்பும்' என்று பெரியநம்பி திருவாய்மலர்ந் தருள, இப்படிப்பட்ட ஆத்மகுணபரிபூர்ணரான சிஷ்யர் ஆழ்வானொருவனே என்பது உடை யவர்க்கு நன்கு தெரிந்திருந்தும் இதனைப் பெரியநம்பி திருவாக்கினால் வெளியிடுவிக்க வேணு மென்றெண்ணிக்கொண்டு நம்பியை நோக்கி 'இப்படிப்பட்ட சிஷ்யர் இவ்விடத்தில் இருப்ப தாகத் தெரியவில்லையே' என்று சொல்லி நிற்க, 'நம்கூரத்தாழ்வானை அனுப்பலாகாதோ?' என்று நம்பி நியமித்தருள, அருகிலிருந்த ஆழ்வான் இதைக்கேட்டு 'நம்பிகள் நம் ஸ்வரூபத்தி னுண்மையை இங்ஙனேயறிந்து பல சிஷ்யர்களின் முன்னே இப்படி யருளிச்செய்யும்படி யான பாக்கியம் பெற்றோமே! என்று பெருமகிழ்ச்சியடைந்து, நம்பிகளின் திருவுள்ளப் படியே ப்ரதக்ஷிணத்திற்குப் பின் சென்றார், ''பலரடியார் முன்பருளிய'' என்றவிடத்திற்கு இது மிகவும் பொருத்தமான இதிஹாஸம் .... (௫)

ஒன்றுநில்லாகெடும்முற்றவும் தீவினையுள்ளித்தொழுமின்தொண்டீர் *
அன்றங்கமர்வென்றுருப்பிணிநங்கை அணிநெடுந்தோள்புணர்ந்தான் *
என்றுமெப்போதுமென்னெஞ்சம்துதிப்ப உள்ளேயிருக்கின்றபிரான் *
நின்றவணிதிருவாறன்விளையென்னும் நீணகரமதுவே. (௬)

அன்று அங்கு	முன்பொரு காலத்தில்
அமர் வென்று	பூசலிலே வெற்றிபெற்று
உருப்பிணி நங்கை	ருக்மிணிப் பிராட்டியினுடைய
அணி நெடு தோள் புணர்ந்தான்	அலங்காரங்களால் பரம போக்யமான திருத்தோள்களை யணைந்தவனும்
என்றும் எப்போதும் துதிப்ப என் நெஞ்சம் உள்ளே இருக்கின்றபிரான்	ஓய்வின்றி நான் துதிக்கும்படி எனது நெஞ்சினுள்ளே இருப்பவனுமான பெருமான்
நின்ற	நித்யவாஸம் பண்ணுகிற
அணி திருவாறன் விளை என்னும் நீள் நகரம் அது	அழகிய திருவாறன் விளை யென்கிற அந்த மஹா நகரத்தை
தொண்டீர்	தொண்டர்களே!
உள்ளி தொழுமின்	சிந்தித்துத் தொழுங்கோள்;
தீவினை ஒன்றும் நில்லா முற்றவும் கெடும்	கொடிய பாவங்களொன்றும் சேஷியாதபடி நிலை குலைந்து முழுதும் நசித்துப்போம்

* * *—எம்பெருமான் பக்கலில் சாபலமுடையாரை விளித்து உங்களுடைய ஸகல துக்கங்களும் தொலையும்படி திருவாறன்விளையை நெஞ்சாலே நினையுங்கோளென்கிறார்.

ஒன்றும் நில்லா கெடும் முற்றவும் தீவினை—பாபங்களை நாமே போக்கிக்கொள்வதாக முயலுமளவில் சிறிது கிடக்கச் சிறிது போகும்; அங்ஙனன்றிக்கே ஸர்வசக்தியான அவன்தானே போக்குகையில் வாஸனையோடே போகக்கடவதாயிற்று. விஷ்ணுதர்மத்தில் '𑌮𑍇𑌰𑍁𑌮𑌨𑍍𑌦𑌰𑌮𑌾𑌤𑍍𑌰𑍋𑌽𑌪𑌿 𑌰𑌾𑌶𑌿𑌃 𑌪𑌾𑌪𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 । 𑌕𑍇𑌶𑌵𑌂 𑌵𑍈𑌦𑍍𑌯𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌦𑍁𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌰𑌿𑌵 𑌨𑌶𑍍𑌯𑌤𑌿—மேருமந்தரமாத்ரோபி ராசி: பாபஸ்ய கர்மண:, கேசவம் வைத்யமாஸாத்ய துர்வ்யாதிரிவ நச்யதி.'' என்று கூறினது இங்கே அநுஸந்தேயம்.

அமர்வென்று உருப்பிணி நங்கையணி நெடுந்தோள் புணர்ந்த வரலாறு வருமாறு,— விதர்ப்பதேசத்தில் குண்டினமென்கிற பட்டணத்தில் பீஷ்மகனென்கிற அரசனுக்கு ருக்மன் முதலிய ஐந்து பிள்ளைகளும் ருக்மிணி என்கிற ஒரு பெண்ணுமிருந்தனர். அந்த ருக்மிணியானவள் ஸாக்ஷாத் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அவதாரம். அவளுக்கு யுக்தவயது வந்தவுடனே கண்ணபிரான் அங்குச் சென்று இப்பெண்ணை எனக்குத் தாரைவார்த்துக் கொடுங்களென்று கேட்க, ருக்மனென்பவன் அவளைச் சிசுபாலனுக்குக் கொடுக்க நினைத்துக் கண்ணனுக்குக் கொடுக்கலாகாதென்று தகைந்துவிட்டு, சிலநாள் கழிந்தபின் அந்த ருக்மிணியின் கலியாணத்திற்காக ஸ்வயம்வரம் கோடித்து ஸகல தேசத்தரசர்களையும் வரவழைத்திட்டனன். இதனிடையில் ருக்மிணி "அன்றிப் பின் மற்றொருவற் கென்னைப் பேசலொட்டேன் மாலிருஞ்சோலையெம்மாயற்கல்லால்" என்ற துணிவையுடையவளாகையால் தன்னை எவ்வகையினாலாகிலும் மணந்து செல்லும்படி கண்ணபிரானிடத்து ஓரந்தணனைத் தூதுவிட்டிருந்தாள். கண்ணபிரானும் அங்ஙனமே பலராமன் முதலியோரைக் கூட்டிக்கொண்டு அப்பட்டணத்திற்கெழுந்தருளி கல்யாண முஹூர்த்ததினத்திற்கு முதனாள் அந்த ருக்மிணியைத்தான் ப்ரகாசமாக வெடுத்துத் தேரிலேற்றிக்கொண்டு ஊர்நோக்கிப் புறப்படப்புக, சிசுபாலன் முதலிய சில அரசர்கள் கண்ணனை யெதிர்த்தும் போர்செய்ய முயல, பலராமனும் தானுமாக அவர்களை வலியடக்கி வென்று ஓட்டிவிட, பின்பு (ருக்மிணியின் தமையனான) ருக்மன் மிகவும் வெகுண்டு ஆக்ரஹப்பட்டுக் கண்ணனை முடிப்பதாக ஓங்கிவர, அவனைக் கண்ணபிரான் ருக்மிணியின் ப்ரார்த்தனையின்படி உயிர்க்கொலை செய்யாமல் அவனது மீசையையும் குடுமியையும் சிரைத்து பங்கப்படுத்தினன். "𑌚𑍈𑌲𑍇𑌨 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌤𑌮𑌸𑌾𑌧𑍁𑌕𑌾𑌰𑌿𑌣𑌂 𑌸𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌕𑍇𑌶𑌂 𑌪𑍍𑌰𑌵𑌪𑌨𑍍 𑌵𑍍𑌯𑌰𑍂𑌪𑌯𑌤𑍍—சேலேந பத்த்வா தமஸாதுகாரிணம் ஸச்மச்ருகேசம் ப்ரவபந் வ்யரூபயத்'' என்பது ஸ்ரீபாகவதம். இங்ஙனே விரோதிகளைத் தொலைத்துப் பிறகு ருக்மிணிப்பிராட்டியைத் திருமணம் புணர்ந்தானாயிற்று. ... ... (௬)

நீணகரமதுவேமலர்ச்சோலைகள்சூழ் திருவாறன்விளை *
நீணகரத்துறைகின்றபிரான் நெடுமால்கண்ணன்விண்ணவர்கோன் *
வாணபுரம்புக்குமுக்கட்பிரானைத்தொலைய வெம்போர்கள்செய்து *
வாணனையாயிரந்தோள் துணித்தான் சரணன்றிமற்றொன்றிலமே. (௭)

மலர் சோலைகள் சூழ்	பூஞ்சோலைகள் சூழ்ந்த	உறைகின்ற பிரான்	நித்யவாஸம் பண்ணுகிற மஹோபகாரகனாய்
திருவாறன் விளை அதுவே நீள்நகரம்	திருவாறன் விளையென்கிற தலமே பரமப்ராப்யம்:	நெடு மால்	(அடியார் திறத்து) மிக்க வியாமோஹ முடையனாய்
நீள் நகரத்து	(அந்த) மஹாநகரத்தில்	கண்ணன்	ஸ்ரீக்ருஷ்ணனாகத் திருவவதரித்தவனாய்

விண்ணவர் கோன் வாணபுரம் புக்கு	நித்யஸூரிகளுக்குத் தலைவனைப் பாணாஸுரனுடைய நகரிலே சென்று	வாணனை ஆயிரம் தோள் துணித்தான்	பாணாஸுரனுடைய ஆயிரம் தோள்களையும் துணித்தவனான எம்பெருமான்
முக்கண் பிரான் தொலைய	சிவபிரான் பங்கமடையும்படி	சரண்	(அந்தத் திருப்பதியை யடைதற்கு) உபாயபூதன்;
வெம் போர்கள் செய்து	கொடிய யுத்தத்தை நடத்தி	அன்றி மற்று ஒன்று இலம்	கீழ்ச் சொன்னவை தவிர ப்ராப்ய ப்ராபகங்களை யுடையோமல்லோம்.

*** திருவாறன் விளையென்கிற திருப்பதியே தமக்கு ப்ராப்யமென்றும் அங்கு உறையும் எம்பெருமானே அதற்கு உபாய பூதனென்றும் தம்முடைய ஸித்தாந்தத்தை வெளியிடுகிறார் இப்பாட்டில். இத்திருப்பதியின் சுவையை யறியாதார்க்கன்றோ பரமபதம் ப்ராப்யமாவது; இதன் சுவையறிந்தார்க்குப் பரமபதம் ஒரு பொருளாகத் தோன்றுமோ? இத்தலமேயன்றோ பரமபதமாவது. எம்பெருமானுக்குங்கூட ப்ராப்யபூமி இதுவான பின்பு இவ்வர்த்தத்தில் ஸம்சய முண்டோ? விரோதிகளைப்போக்கி இத்தலத்தில் வாஸத்தையளிப்பதற்கு உபாயபூதன் அப்பெருமானேயாவன்.

அன்றி மற்றொன்றிலமே என்றவிடத்து ஈடு—“இங்ஙனல்லத் ப்ராப்ய ப்ராபகங்கள் மாறுடக்கடவோமல்லோம்” என்று. எம்பெருமானை ப்ராப்யனாகக்கொண்டு அவனைப் பெறுதற்கு உபாயமாக இத்திருப்பதியைக் கொள்வர்சிலர்; அது தகுதியற்றதென்று ஆழ்வார் தம்முடைய அத்யவஸாயத்தை வெளியிட்டருளினாராயிற்று. ... ... (எ)

அன்றிமற்றொன்றிலன்நின்சரணேயென்று அகலிரும்பொய்கையின்வாய்*
நின்றுதன்நீள்கழலேத்திய ஆனையின் நெஞ்சிடர்தீர்த்தபிரான்*
சென்றங்கினிதுறைகின்ற செழும்பொழில்சூழ் திருவாறன்விளை*
ஒன்றிவலஞ்செய்யவொன்றுமோ தீவினையுள்ளத்தின்சார்வல்லவே. (அ)

அகல் இரு பொய்கையின் வாய் நின்று	மிகப் பெரிய பொய்கையிடத்திலே (முதலையின் வாயிலகப்பட்டு) நின்று	நெஞ்சு இடர் தீர்த்த பிரான்	நெஞ்சிலிருந்த இடரைப் போக்கின பெருமான் சென்று அங்கு இனிது உறைகின்ற-; செழும் பொழில் சூழ் திருவாறன்விளை(யை)-;
நின் சரண் அன்றி மற்று ஒன்று இலன் என்று தன் நீள் கழல் ஏத்திய ஆனையின்	‘உன் திருவடிகளையொழிய மற்றொரு புகலுடையேனல்லேன்’ என்று தன்னுடைய திருவடிகளைத் துதித்த கஜேந்திராழ்வானுடைய	ஒன்றி வலம் செய்ய ஒன்றுமோ	கிட்டி வலஞ் செய்யக் கூடுமோ? (அப்படி கூடுமாகில்)
		தீ வினை உள்ளத்தின் சார்வு அல்லவே	பாவங்கள் நெஞ்சில் பொருத்த முடையனவல்லவாம்.

*** திருவாறன்விளையிலே புகவே நம்முடைய ஸகல துக்கங்களும் தொலையுமென்கிறார். கஜேந்திராழ்வானுடைய துயரைத் தீர்த்தவன் அங்ஙனமே நம்போல்வாருடைய துயரையும் தீர்க்கத் திருவாறன்விளையிலே வந்து நித்யஸந்நிதி பண்ணியிராநின்றான்; அங்குச் சென்று கிட்டி நாம் வலஞ் செய்யக்கூடுமோ? கூடுமாகில் கொடிய பாவங்களெல்லாம் நம்முள்ளத்தில் பொருத்த மற்றவையாகிப் பாறிப்பறந்தொழியும் என்றாராயிற்று.

பொய்கையில் முதலைவாயிலகப்பட்டு *கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே—கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே.” என்னும்படி முதலை நீருக்கிழுக்க, தான் தரைக்கிழுக்க, இப்படியாகப் பல வருஷங்கள் ஸ்வப்ரவ்ருத்தியாலே உய்யப்பார்த்த

கஜேந்திராழ்வான் 'இந்த ஸ்வப்ரவ்ருத்தியானது பகவத்ப்ரவ்ருத்திக்கு விரோதியாய் நின்றது; இதற்கு நிவ்ருத்தியுண்டானாலல்லது அவனருள் பெருகாது' என்று துணிந்து "நின்சரணையன்றி மற்றொன்றிலன்" என்று அத்யவஸாயங்கொண்டு எம்பெருமானது திருவடிகளையேத் தினமை முன்னடிகளில் கூறப்பட்டது.

ஆனையின் நெஞ்சிடர்தீர்த்த பிரான்—ஆனைக்கு இடராவது உயிர் தொலைகின்றதே என்கிற இடரன்று; வெகு சிரமப்பட்டுப் பறித்த செவ்விப் பூவைத் திருவடிகளிலே ஸமர்ப்பிக்கப் பெறுதொழிகிறோமோ! என்று உண்டான இடர். 'நாமடியாக எம்பெருமானுக்கு என்ன அவத்யம் விளைகிறதோ' என்று தோன்றிய இடர் என்னவுமாம்; அதாவது, பரமபக்தனான கஜேந்திராழ்வானைக் காத்தருளாத எம்பெருமான் ரக்ஷகனெனத் தகுதியுடையவனல்லன் என்று உலகத்தார் ஸித்தாந்தம் செய்துவிடப் போகிறார்களேயென்று யானை இடர்பட்டதென்கை. .... (அ)

தீவினையுள்ளத்தின்சார்வல்லவாகித் தெளிவிசும்பேறலுற்றால்*
நாவினுள்ளுமுள்ளத்துள்ளும் அமைந்த தொழிலினுள்ளும்நவின்று*
யாவரும்வந்துவணங்கும்பொழில் திருவாறன்விளையதனை*
மேலிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலென்னும் என்சிந்தனையே.

தீ வினை உள்ளத்தின் சார்வு அல்ல ஆகி	பாவங்கள் நெஞ்சில் சேர்த்தியற்று [ஹ்ருதயம் நிர்த்தோஷமாகி]
தெளி விசும்பு ஏறல் உற்றால்	திருநாட்டிலே போக ப்ராப்தமானாலும் [அங்குச் செல்ல விருப்பமற்று]
என் சிந்தனை	எனது நெஞ்சானது.

நாவினுள்ளும் உள்ளத்துள்ளும் அமைந்த தொழிலினுள்ளும் நவின்று யாவரும் வந்து வணங்கும்	மனோவாக்காயங்களினாலே பயின்று யாவரும் வந்து வணங்குமிடமான
பொழில் திருவாறன் விளையதனை—;	
மேவி வலம் செய்து கை தொழ கூடும் கொல் என்னும்	பொருந்தி வலஞ்செய்து கை தொழ ப்ராப்தமாகுமோ! என்று இதனையே யெண்ணுநின்றது.

** திருவாறன்விளையை யநுபவிக்க ப்ராப்தமாகும்போது ஸ்ரீவைகுண்டம் கிடைப்பதானாலும் தம்முடைய திருவுள்ளம் அதனைப் பொருள்படுத்தாதென்று கூறும் முகத்தால் இத்திருப்பதியில் தமக்குள்ள ஆதராதிசயத்தை வெளியிட்டருளுகிறார். பாவங்களெல்லாம் தொலைந்து பரமபதத்திலேறப் பெறுகையாகிற ஒரு ஸமய விசேஷம் வந்து கிட்டினாலும் என்னெஞ்சானது அதில் ருசியற்று, பரமபோக்யமான திருவாறன்விளையையே கிட்டித் தொழ நேருமோவென்று பாரியா நிற்கும் என்றாராயிற்று .... (9)

சிந்தைமற்றொன்றின்திறத்ததல்லாத்தன்மை தேவபிரானறியும்*
சிந்தையினால்செய்வதானறியாதன மாயங்களொன்றுமில்லை*
சிந்தையினால்சொல்லினால்செய்கையால் நிலத்தேவர்குழுவணங்கும்*
சிந்தைமகிழ்திருவாறன்விளையுறை தீர்த்தனுக்கற்றபின்னே.... ... (ய)

சிந்தையினால் சொல்லினால் செய்கையால்	மனோவாக்காயங்களாலே
நிலத்தேவர் குழு வணங்கும்	பாகவத கோஷ்டி வணங்கப் பெற்ற

...தை மகிழ் திருவாறன்விளை உறை	மநோஹரமான திருவாறன் விளையிலே வாழ்கிற	தேவபிரான் அறியும்	ஸர்வஜ்ஞனான எம்பெருமான் தானே அறியக் கடவன்;
...ர்த்தனுக்கு அற்றபின்	பரமபவித்திரனான பெருமானுக்கு அற்றுத் தீர்ந்த பின்	சிந்தையினால் செய்வ	நெஞ்சால் செய்யப்படுமவற்றில்
...ந்தை மற்று ஒன்றில் திறத்தது அல்லா தன்மை	எனது மனம் வேறொன்றை உத்தேச்யமாக நினைத்திராதபடியை	தான் அறியாதன மாயங்கள் ஒன்றும் இல்லை	அவன் தானறியாத வஞ்சனங்களொன்று மில்லையே.

*** ஆழ்வீர்! இப்போது நீர் திருவாறன்விளையிலே ப்ராவண்யம் முற்றியிருந்தீராகிலும், பலகாலும் பரமபதம் பரமபதமென்று வாய்வெருவிக்கிடந்தீராதலால் எம்பெருமான் இதையே கொள்ளுமென்று நிர்ப்பந்தித்துக் கொடுத்தானாகில் என் செய்வீரென்று சிலர் கேட்பதாகக்கொண்டு அதற்கு உத்தரமுரைக்கிறார் இப்பாட்டில். அந்த ஸர்வேச்வரன் ஸர்வஜ்ஞனன்றே. என்னிலைவை அவன்றான் அறியானோ? அவன் புருஷார்த்தப்ரதனென்று ப்ரஸித்தனல்லனோ. புருஷன் அர்த்தித்ததையன்றோ அவன் கொடுத்தருள்வன். எனது சிந்தை திருவாறன்விளை தவிர மற்றொன்றையும் கணிசியாதிருக்கும்படியை அவன் அறிய அசக்தனல்லனே; அறிந்துவைத்து எங்ஙனே மற்றொன்று தன்னைக் கொடுப்பன்? என்கிறார். "மற்றென்கிறது பரமபதத்தின் பேர் சொல்லுகையுங்கூட அஸஹ்யமானபடி" என்று ஈடு. (௧௦)

தீர்த்தனுக்கற்றபின்மற்றோர் சரணில்லையென்றெண்ணி * தீர்த்தனுக்கே
தீர்த்தமனத்தனனாகிச் செழுங்குருகூர்ச்சடகோபன்சொன்ன*
தீர்த்தங்களாயிரத்துள் இவைபத்தும் வல்லார்களை * தேவர்வைகல்
தீர்த்தங்களேயென்றுபூசித்து நல்கியுரைப்பர் தம்தேவியர்க்கே.

தீர்த்தனுக்கு அற்ற பின்	பரமபவித்திரனான எம்பெருமானுக்கு அநந்யார்ஹப்பட்ட பின்பு	தீர்த்தங்கள் ஆயிரத்துள்	ஆயிரம் பாட்டும் ஆயிரம் தீர்த்தங்களென்னும் படியாக வுள்ளவிதிலே
மற்று ஓர் சரண் இல்லை என்று எண்ணி	வேறோர் உபாயமில்லையென்று அறுதியிட்டு	இவை பத்தும் வல்லார்களை	இப்பதிகத்தை ஓத வல்லவர்களைப் பற்றி
		தேவர்	நித்யஸூரிகள்
		வைகல்	எப்போதும்
தீர்த்தனுக்கே தீர்த்த மனத்தனன் ஆகி	அப்பெருமானுக்கே அறுதியாக்கப்பட்ட நெஞ்சையுடையவராய்க் கொண்டு	தம் தேவியர்க்கு	தங்கள் மஹிஷிகளிடத்திலே
செழு குருகூர் சடகோபன் சொன்ன–;		தீர்த்தங்களே என்று பூசித்து நல்கி உரைப்பர்	'இவர்கள் பரமபவித்திரர்களே' என்று ஸபஹுமானமாகச் சொல்லுவர்கள்.

*** இத்திருவாய்மொழியை ஓதுமவர்களை நித்யஸூரிகள் போரவும் கௌரவிப்பர்களென்று அதனையே பலனாகக் கூறித் தலைக்கட்டுகிறார். ஆயிரம் பாசுரங்களும் ஆயிரம் தீர்த்தங்களாயிற்று. இந்தப் பதிகத்தை அப்யஸிக்கவல்லார்களை திருவடி திருவனந்தாழ்வான் ஸேனை முதலியார் தொடக்கமான நித்யஸூரிகள் 'இவர்கள் பரமபவித்திரர்கள்' என்று ஆதரித்துக்கொண்டு போந்து, தங்கள் மஹிஷிகளை ஸ்நேஹித்துக் கொண்டாடும் தசையிலே அவர்களிடத்தில் இந்த விசேஷத்தையே சொல்லிக் களிப்பார்கள் என்றாராயிற்று.

திருவடியின் தேவிகள் ருத்ராஸுகீர்த்திகள்; ஸேனைமுதலிகளின் தேவிகள் ஸூத்ரவதி என்றிப்படி ப்ரஸித்தமன்றோ; அவர்களையே இங்குத் தம் தேவியர் என்கிறது, (௧௧)

திருவாய்மொழி ஏழாம்பத்து முற்றிற்று,

ஆழ்வார் திருவடிகளே சரணம். நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ராமாநுஜன் 72

மதராஸ் ஸத்க்ரந்தப்ரகாசந ஸபையின் வெளியீடு

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய தத்வார்த்தங்களை விளக்குவதற்காக
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை

ஆசிரியர் :
ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் ஜகதாசார்யஸிம்ஹாஸநாதிபதி
அண்ணங்கராசார்யஸ்வாமி.

ஸம்புடம் 6	1954ஞ அக்டோபர்மீ ஜயஞ ஐப்பசிமீ	இதழ் 12

ஸத்க்ரந்தப்ரகாசந ஸபாகார்யதரிசியின் விஜ்ஞாபநம்


அன்பர்களே! நமது ஸ்ரீராமாநுஜபத்ரிகைக்கு ஆறு பிராயம் நிரம்புகிற திப்போது. ஸ்ரீவைஷ்ணவவுலகுக்கு இது செய்துவரும் ஸேவையைப்பற்றி விசேஷித்து நாம் தெரிவிக்கவேண்டிய துண்டோ? நிகழும் வருஷத்தில் இப்பத்திரிகையில் பெரும்பாலும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனமே வெளிவந்திருக்கின்றது. சென்ற மாதத்தில் வெளிவந்த 71ஆம் இதழில் ஸுந்தரகாண்டம் முடிவுபெற்றிருப்பது அன்பர்கள் அறிந்ததே. இனி யுத்தகாண்டமும் உத்தரகாண்டமும் க்ரமேண வெளிவரும்.

இப்பத்ரிகை மூலமாக அநேக உபந்யாஸங்களை (அதாவது) நம் பத்ராதிபஸ்வாமிகளின் பற்பல விஷயமான வியாஸங்களை யநுபவித்துக் களித்துக் கொண்டிருந்த ரஸிகர்களுக்கு, ஸ்ரீராமாயண வசனம் வெளிவரத் தொடங்கினது முதலாக அவ்வநுபவம் குறைந்ததனல் அவர்களுடைய மனத்தில் உண்டான தளர்ச்சிக்குப் பரிஹாரமாக, அருமைபெருமை வாய்ந்த அனேக உபந்யாஸங்கள் கொண்ட இவ்விதழ் வெளியிடப்படுகின்றது. ஸ்ரீஸ்வாமியருளிச்செய்த க்ரந்தங்களுள் சிகரமாக விளங்கும் த்ரமிடோபநிஷத் ப்ரபாவஸர்வஸ்வமென்னும் மஹாக்ரந்தம் இவ்விதழில் வெளியிடப்படுகின்றது. இந்த ஸர்வஸ்வக்ரந்தம் சென்ற மாதத்தில் ஸித்தமாகி முக்கியமான சில மஹான்களுக்கு அபிப்ராயக்ரஹணார்த்தமாக அனுப்பப்பட்டிருந்தது. அவரவர்கள் ஸ்வாபிப்ராயங்களை மிக விரிவாகத் தெரிவித்துள்ளார்கள். அவ்வபிப்ராய பத்ரிகைகளை யெல்லாம் பூர்த்தியாக வெளியிடுவதற்கு இதில் அவகாசமில்லாமையினல் பல பத்ரிகைகளை அடியோடு நிறுத்திக் கொள்ளவும், சில பத்ரிகைகளைப் பூர்த்தியாகவும், சில பத்ரிகைகளை ஸங்க்ரஹித்தும் வெளியிட நேர்ந்தது. இவ்வபிநந்தநபத்ரிகைகளோடு கூடிய இந்த ஸர்வஸ்வ க்ரந்தத்தைப் பண்டிதர்களும் ரஸிகர்களும் அநுபவித்து ஆநந்திக்க ப்ராப்தம்.

சந்தா செலுத்த வேண்டியவர்கள் விரைவில் செலுத்துமாறு பிரார்த்திக்கப் படுகிறார்கள்.

இப்படிக்கு
K. திருவேங்கடாசாரி, B.A., B.L.
அட்வகேட், சென்னை - 3.
(ஸத்க்ரந்தப்ரகாசநஸபாகார்யதரிசி.)

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத்வரவரமுநயே நம: ஸ்ரீமத்வாநாசலமஹாமுநயே நம:



ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய உபய வேதாந்த ப்ரவர்த்தகாசார்ய ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய

(27-ஆம் பட்டத்தில் அமர்ந்து விளங்கும்)

ஸ்ரீமத் வானமாமலை ஸ்வாமியின்

திருவருளே திருவுருக்கொண்ட திருமுகம்

நம் அண்ணங்கராசார்யருடைய த்ரமிடோப நிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வக்ரந்தத்தை ஆமூலாக்ரம் வாசித்துப் பார்க்க வாய்த்தது. ஸர்வாங்க ரமணீயமான இந்த க்ரந்தத்தைக் காணும்போது "அநாக்ராதாவத்யம் பஹுகுண பரீணாஹி மநஸோ திஹாநம் ஸௌஹார்தம் பரிசிதமிவா தாபி கஹநம், பதாநாம் ஸௌப்ராத்ராத் அநிமிஷநிஷேவ்யம் ச்ரவணயோ:" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியே ப்ரதிபதம் நினைவுக்குவந்தது. இந்த ச்லோகத்திலுள்ள ஒவ்வொரு விசேஷணமும் இந்த ஸர்வஸ்வக்ரந்தத்திற்குப் பொருத்தமானதென்று உள்ளபடி தோன்றிற்று. இக்காலத்திற்கு இந்த க்ரந்தம் மிகவும் ஆவச்யகம். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மாத்திரமேயன்றிக்கே ஸகல மதஸ்தர்களுக்கும் தத்வார்த்த ப்ரகாச ஹேதுவான இந்த க்ரந்தத்தினால் மஹோபகாரம் செய்திருக்கிற நம் அண்ணங்கராசார்யருக்கு நாம் மனப்பூர்வமாக மங்களாசாஸநம் செய்கிறோம். இப்படிப்பட்ட க்ரந்தங்கள் இவ்விருள் தருமா ஞாலத்திற்கு அணி விளக்காக அடிக்கடி தோன்றவேணும்.

ஸ்ரீராமாநுஜன்

(முகாம்) திருவல்லிக்கேணி வானமாமலைமடம்.

ஜய௵ புரட்டாசி௴ ரோஹிணி

H. H. ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமீ சிவாநந்தஸரஸ்வதீ, ரிஷீகேச்.

ஸ்வாமிகள் அன்புடனே அனுப்பியருளும் நூல்களை, கையில் கிடைத்த வுடனே ஆதியோடந்தமாகப் படித்துப் பார்த்துவிட்டே வேறு பணி நோக்குவது இவ்விடத்து வழக்கமென்பதைப் பலகாலும் தெரிவித்திருக்கிறேன். இன்று கிடைத்த த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வ நூலையும் அதே முறையில் படித்து முடித்தேன். ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தங்களில் உபநிடதப் பொருள்கள் விசேடமாக வுண்டென்பதை இதுகாறும் நான் பெரியார்வாய்க் கேட்டிருந்த துண்டேயல்லது இவ்வளவு விளக்கமாக அறியப் பெற்றிருந்ததில்லை. இந்நூல் எனக்குப் பேருதவி புரிந்ததென்பதைப் பெருங்களிப்புடன் தெரிவித்துக் கொள்ளு கிறேன். இதன் தொடர்ச்சியாக மேன்மேலும் வெளிவரவிருக்கும் நூல்களையும் அருள்புரிக. அவற்றை வெகு ஆவலோடு எதிர்பார்க்கிறேன். அன்பு வாழ்க.

சிவானந்தா, ஆனந்தகுடீர், 30—9—54.

ஸ்ரீமதுபயவே. வித்வான். வை. மு. கோபாலக்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமி, திருவல்லிக்கேணி.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:. ஸ்ரீமத் வரவரமுநயே நம:. ஸ்ரீஉவே. பிரதி வாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் ப்ரஸாதித்தருளிய ஸ்ரீஸூக்தி மாலைகளுக்குள் நாயகமணியாய்த் திகழும் த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வ மென்கிற க்ரந்தரத்னத்தை இப்போது ஜ்ஞாநலவதுர்விதக்தனை அடியேனுக்கு முன்னைய நல்வினையால் ஆமூலாக்ரம் ஸேவிக்கும் பெரும்பேறு கிடைத்தது. இந்த ஸூக்திமாலை மிகவுந் தெளிவாக விஷயங்களை விளக்கிச் செல்வதால் ஆநந்தஸாக ராந்தர் நிமக்நனுனேன். அந்தோ! அடியேன் அங்ஙன் சொல்வதற்குத் தான் தகுவேனே? அடியேனுடைய தகவுரையால் அந்த ஸூக்திரத்நம் மாசுண்ணுமோ வென்று அஞ்சுகிறேன். "யத்யத் விபூதிமத் ஸத்த்வம்" என்கிற ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் வசனப்படியே இந்த ஸ்வாமியைக் கார்யார்த்தமாக பகவத் தேஜோம்ச ஸம்பவரென்றே எண்ணுகின்றேன். "பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ரவாக்யங்க ளொருங்கவிடுவர்" என்ற விடத்திற்கு வியாக்கியானமிடும்போது விசதவாக் சிகாமணியான ஸ்ரீமன் மணவாள மாமுனிகளும் உதாஹரணங் கொண்டு விளக்காது விட்டிட, அதனை இந்த ஸ்வாமி விளக்கிப் பல இடங்களிலும் ஸ்ரீ ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யாதிகளில் ஆழ்வார்களினருளிச் செயல் கொண்டே பங்க்திகளிட்டிருப்பதைச் செவ்வனே தெள்ளத் தெளியப் பல மேற் கோள் கொண்டு விளக்கியிருப்பதே இந்த ஸ்வாமி அவதார விசேஷமென்பதற்குப் பொருத்தமான நிதர்சநமாம்.

ஸ்ரீவைஷ்ணவ குலோத்பந்நரான சில வித்வான்கள் ஆழ்வார் ஸ்ரீஸூக்தி களில் ஸ்வாமி யெம்பெருமானுர்க்கு அந்வயமில்லையென்று விபரீத புத்தியுள்ளவரா யிருக்கின்றனரே! அங்ஙனுள்ளவர் இந்த க்ரந்தரத்நத்தை ஊன்றி ஸேவிப்பின் விபரீத புத்தியோடு ஆவிலமநஸ்கராயிருப்பதொழிந்து தெள்ளறிவு பெறுவரென் பது திண்ணம் திண்ணம்.

தாஸன் வை. மு. கோபாலக்ருஷ்ணமாசாரியன், 10—10—54.

ஸ்ரீமதுபயவே. வானமாமலை வித்வான். வா. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி.

ஸ்ரீஉ-வே. மஹாவித்வான் அண்ணா ஸ்வாமியின் த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வம் என்ற க்ரந்தரத்னத்தை ஓரக்ஷரம்விடாமல் ஸேவிக்கும்பேறு பெற்றோரில் அடியேனும் ஒருவன். ஞாலமெங்குமுள்ள அபிஜ்ஞர்கள் யாவரும் ஒரு மிடறாய்ப் போற்றும் ஸ்ரீஸ்வாமியின் வைதுஷ்யாதிசயத்தைப் பற்றி அடியேன் இங்கு எடுத்துரைக்க ஆவச்யகதை யில்லை. ஸ்ரீஸ்வாமி ஸாதித்திருக்கும் க்ரந்தங்கள் யாவுமே வித்வதக்ரேஸரமாநநீயதமமாயும் லோகத்திற்கு பரமோபகாரகமாயும் விளங்கா நிற்கின்றன. அவைகளுள்ளும் இந்த க்ரந்தம் மிகவும் விலக்ஷணமாயே திகழ்கின்றது என்னுமிடம் வாசக வித்வான்களுடைய திருவுள்ளங்களறிந்ததே. நமது பூர்வாசாரியர்கள் அருளிச்செய்த திவ்ய க்ரந்தங்களுள் தனிச்சிறப்புடனிலங்கும் ஆசார்ய ஹ்ருதயத்தில் "பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்கவிடுவர்" என்னும் சூர்ணிகை ஸுப்ரஸித்தமானது. இந்த சூர்ணிகையில் ஸூத்ரவாக்யங்கள் ஒருங்கவிடுவர் என்பது உபலக்ஷணம். ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்வீய திவ்ய க்ருதிகளனைத்திலுமே மதாந்தரஸ்தர்களுக்குக் கிட்டாத விசேஷார்த்தங்கள் ஸாதிப்பது ஆழ்வாரின் திவ்ய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டே என்னுமிவ் விஷயத்தை ஸ்ரீஅண்ணாஸ்வாமி இந்த க்ரந்தரத்னத்தில் பல உதாஹரணங்களுடன் அநந்ய ஸாதாரணமான ப்ரணாளியில் விசதீகரித்திருக்கிறார். இதில் உபபாதிக்கப்பட்ட விஷயங்களே கடல் போன்றிருக்க, உபஸம்ஹாரத்தில் ஸ்ரீஸ்வாமி "இந்த நூலுக்கு உத்தேச்யமாகக் கொண்ட விஷய விசேஷ விசதீகரணம் ஒரு திவலையளவே ஆயிற்றிதில்; க்ரமேண வேறுவேறு நூல்களில் இன்னமும் விசதீகரிப்போமாக" என்று ஸாதித்திருக்கிறார். ப்ரதி பக்ஷிகளின் மயர்வு நீங்க இந்த க்ரந்தமொன்றுமே பர்யாப்தமாய் இருந்தாலும் அடியேன் போன்றவர்களின் ஸகௌதுகப்ரதீக்ஷையை ஸபலமாக்க ஸ்ரீஸ்வாமி இது விஷயமான வேறு க்ரந்தங்களையும் வெளியிட்டருள வேண்டும் என்று ஸ்ரீஸ்வாமி ஸந்நிதியில் ப்ரார்த்திக்கிறேன்.

அக்னி ஹோத்ரம்தாதாசார்யர் இந்த க்ரந்தரத்னத்தின் ஆவிஷ்காரத்துக்கு நிதானமாயிருந்து நமக்கு உபகரித்திருக்கிறார் என்பது ஒரு பக்கமிருந்தாலும் அபிவாதந காலத்தில் "த்ராவிடப்ரஹ்மஸம்ஹிதாத்யாயீ ஸ்ரீவேங்கடேசசர்மா நாமாஹம்" என்று அநுஸந்தித்து வந்த ஸ்ரீதேசிகரின் ஸம்ப்ரதாயஸ்தராகத் தன்னைப் பாவித்துக் கொள்ளுமவர் இவ்வளவு தாழ்ந்த கார்யத்தில் இழிந்தாரே என்று அடியேனதுள்ளம் வருந்துகின்றது. ஸ்ரீதாதாசார்யரும் ஸ்ரீஸ்வாமியின் இந்த க்ரந்தரத்னத்தை ஆமூலசூடம் நன்கு அப்யஸித்து, தான் செய்ததை எண்ணி அநுதபிப்பாரானால் "பாபே க்ருதே யதி பவந்தி பயாநுதாபலஜ்ஜா: புந: கரணமஸ்ய கதம் கடேத" என்னும் மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திப்படி மறுமுறை இம்மாதிரியான கெட்ட கார்யத்தை நெஞ்சாலும் நினையார். தான்செய்த அபசாரத்திற்குத்தக்க ப்ராயச்சித்தம் செய்தவருமாவாரென்பது அடியேனது திடமான அபிப்ராயம்.

கடைசியாக ஓர் விண்ணப்பம். இந்த க்ரந்தரத்னம் ஸ்ரீஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யாதி பூர்வாசார்ய திவ்ய க்ருதிகளிலுள்ள விலக்ஷணாநுபவப்ரவாஹரூபமே என்பது ப்ரத்யக்ஷரம் ப்ரகாசிக்கின்றது. இத்தை அஸக்ருத்பரிசயம் பண்ணி ஒவ்வொரு வாசகரும் கண்ணின் கருமணிபோல் பாதுகாக்க வேண்டும். ஸ்ரீஸ்வாமி நமக்கெல்லாமளித்த இந்த ஸர்வஸ்வத்தை நாம் நமது ஸந்ததிகளுக்குப் பைத்ருகதனமாக அளிக்கவேண்டும் என்பது அடியேனது பேரவா.

இங்ஙனம்:

வா. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்,
ந்யாயவேதாந்தவித்வான், வானமாமலை,
4—10—54.

Nanguneri,
4—10—54.

ஸ்ரீமான் உவே. ராவ்~~பஹதூர்~~. S. ராகவையங்கார் ஸ்வாமி,

தியாகராயநகர்.

ஸ்ரீகாஞ்சீபுரம் ஸ்வாமியின் த்ரமிடோபநிஷத் ப்ரபாவஸர்வஸ்வக்ரந்தத்தை அச்சிட ஆரம்பித்தது முதற்கொண்டே அடியேன் அநுபவித்து வருகிறேன். இப்போது பரிபூர்ண க்ரந்தத்தை வாசித்தேன். இந்த க்ரந்தம் பூர்வாசாரியர்களின் காலத்திலேயே அவதரித்திருக்கவேண்டும். இப்போது ஸ்வாமி மூலமாக இது அவதரித்தது நம்போல்வாருடைய பாக்யம். ஆழ்வார்களிடத்திலும் அருளிச் செயல்களிடத்திலும் விப்ரதிபந்நர்கள் பூர்வாசார்யர்களின் காலத்திலேயே யிருந் தார்களென்று பூர்வக்ரந்தங்களிலிருந்து தெரியவருகிறது. ஆனால் அவர்கள் யாவரும் மதாந்தரஸ்தர்களே யொழிய ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த வர்களில் ஒருவர்கூட விப்ரதிபத்திகொண்டிருக்க நியாயமில்லை. கலியின் கொடு மையினால் ஸ்ரீவைஷ்ணவர்களிலும் ப்ரச்சந்ந தூஷகர்களாகச் சிலர் தோன்றியிருப் பதாகக் கேள்விப்பட்டிருந்ததுண்டு. அப்படிப்பட்டவர்களில் ஒருவராயிருந்தவர் ப்ரச்சந்நதையை விட்டு ப்ரகாசமாகவே திவ்யப்ரபந்தங்களில் குறைகூறவும் அதை பத்ரிகைகளிலும் வெளியிடவும் முன் வந்தார். அவருடைய இருளையும் மருளையும் போக்குவதை வியாஜமாகக்கொண்டு காஞ்சீபுரம் ஸ்ரீஸ்வாமிகள் ஏற்றிவைத்த பெருவிளக்கானது குன்றிலிட்ட விளக்காக விளங்குகின்றது. இதனால் இப்போது உலகுக்கு ஏற்பட்டிருக்கிற வெளிச்சம் இதுவரை எந்த க்ரந்தத்தாலும் ஏற்பட வில்லையென்று சொல்லலாம். எப்படிப்பட்ட பெருங்காற்றடித்தாலும் அணைய மாட்டாததான இவ்வொளிகொள்விளக்கு மூச்சுடர்விளங்கும் வரை விளங்குமாக.

S. ராகவையங்கார், 26, பாஜுல்லாரோட், மாம்பலம். (7-10-54)

ஸ்ரீமதுபயவே. சாஸ்த்ரரத்நாகர. வித்வந்மண்டல மண்டந. வித்யாவாரிதி. மதத்ரயநிரூபக. காளி. வங்கிபுரம். வித்வான். ரங்காசாரியர் ஸ்வாமி

(புதுக்கோட்டை ஸம்ஸ்தானம் தாநாதிகாரி - ரிடைர்ட்.)

தற்கால நிவாஸம் கல்கத்தா. 6-10'-54.

ஸகல கல்யாண குணாலங்க்ருதராய் வித்வத்வரேண்யராய் ஸேவை ஸாதித் தருளும் ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி அநுக்ரஹித்தருளிய த்ரமிடோப நிஷத் ப்ரபாவஸர்வஸ்வ க்ரந்தத்தை ஸேவித்து அடியேனடைந்த ப்ரஹ்மானந்தம் அநவதிகம், அநவதிகாதிசயம். ஸர்வஸ்வ க்ரந்தத்தை மிகுந்த விஸ்மயத்துடன் ஸேவித்தேன். ஏற்கெனவே "ஸகல பூர்வாசார்ய ஸமுதாயாவதாரர்" என்று அடியேனால் விருதுசாத்தப்பெற்ற இந்த ஸ்வாமி இந்த க்ரந்த மெழுதி யருளினதில் விஸ்மயவார்த்தைக்கு அவகாசமுமில்லை. இதரர்கள் வெகு ப்ரயாஸப்பட்டாலும் எழுத முடியாததான இந்த திவ்யக்ரந்தத்தை ஸ்வாமி ஆயாஸ லேசமுமின்றிக்கே அவலீலையாக எழுதி யிருக்கிறாரென்பதை அடியேன் உள்ளபடியறிந்தவன். ஒரு பழைய இதிஹாஸம் இப்போது நினைவுக்கு வருகிறது. 40, 45 வருஷங்களுக்கு முன் திருவஹீந்திரபுரத்தில் நாவல்பாக்கம் வித்வான் ஸ்வாமி யொருவர் எழுந் தருளியிருந்து சேட்லூர் நரஸிம்ஹாசார் முதலான சில பேர்களுக்கு மீமாம்ஸாப்ர வசனமாரம்பித்து நடத்திவருகையில் வேதப்ராமாண்யம் சொல்லி வரும்போது த்ராவிட பாஷா ப்ரபந்தம் அப்ரமாணம் என்று சொன்னார். அதைக்கேட்ட சேட்லூர் நரஸிம்ஹாசார் மீமாம்ஸாபாடம் இவ்வளவோடு போருமென்று நிறுத்தி விட்டு, த்ராவிட திவ்யப்ரபந்தமே பரமப்ராமாணம், ஸம்ஸ்க்ருத வேதம் ஸாமாந்யம்

என்று ஒரு புஸ்தகமெழுதி குருசிஷ்ய பாவத்தையும் விட்டு வாக்யுத்தமும் க்ரந்த யுத்தமும் நடந்தது ஸுப்ரஸித்தம். அந்த வாதம் மறுபடியும் தலைகாட்டுகிறப் போலிருக்கிறது. இந்த துர்வாதம் இனியொருநாளும் தலையெடுக்காதபடி அந் வர்த்த ப்ரதிவாதிபயங்கரஸ்வாமி செய்தருளியிருக்கிற இந்த மஹத்தான க்ரந்த மானது நம்முடைய தர்சநஸ்தர்களால் நிதியாகக் கொள்ளத்தகுந்தது.

பகவத்பாஷ்யகாரர் திவ்யப்ரபந்தங்களையே ஸர்வதா த்யானித்துக்கொண் டும், பிக்ஷாடனம் மாதுகரம் செய்யும்போது திருப்பாவையை யநுஸந்தித்துக் கொண்டு மிருந்து திருப்பாவைஜீயரென்று ப்ரஸித்தியடைந்திருந்ததாக சரித்ர க்ரந்தங்களாலறிகிறோம். அன்றுதொட்டு இன்றுவரையில் திருமாளிகைகளில் நைமித்திகமாய் திவ்யப்ரபந்தங்கள் ஸேவித்து சாத்துமுறை நடத்தும்போது 'ஆழ்வாரெம்பெருமானார் ஸம்பாவனை' என்று நடத்தி வருவதும் ஆழ்வார் பெற்ற தாயார், எம்பெருமானார் வளர்த்த தாயார் என்பதுபற்றியே என்று ஸம்பிரதாயம். இதற்கெல்லாம் வெகு பொருத்தமாக இப்போது அண்ணா ஸ்வாமி ஸாதித்த ஸர்வ ஸ்வக்ரந்தம் பஹுரமணீயமானது. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு திவ்யப்ரபந்தமே ப்ரமாணம், இதுவே மோக்ஷஸாதனம், இதில் அந்வயமில்லாதவர்களுக்கு முக்தி வார்த்தையே கிடையாது என்பது ஸத்யம். ஸ்ரீவைஷ்ணவ குலத்திலேயே பிறந்து திவ்யப்ரபந்தங்களில் குறைகூறுவதென்பது திவ்யஸூக்திகளின் சுவையறியாமை யினால் தான். அப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் "லவண வணிஜ:........." இத்யாதி தேசிகஸூக்தியைத்தான் நினைக்கவேணும்.

"யத்ர ஸூக்தம் துருக்தம் வா ஸமம் ஸ்யாத் மதுஸூதந, ந தத்ர ப்ரலபேத் ப்ராஜ்ஞ: பதிரேஷ்விவ காயக:" என்கிறநீதியிலே ஸ்ரீஸ்வாமி வாளாவிருந்து விடாமல், தத்வார்த்தத்தை உலகமெல்லாமறிந்து உஜ்ஜீவிக்கட்டு மென்கிற உதா ரஹ்ருதயத்துடன் இந்த ஸர்வஸ்வக்ரந்தத்தை உபகரித்ததற்கு உலகமெல்லாம் கூடினாலும் ஒரு கைம்மாறு செய்ய முடியாது. அடியேனும் சதுஸ் ஸஹஸ்ரீதாத் பர்ய மென்று ஒரு சிறு க்ரந்த மெழுதியிருக்கிறேன். அது அச்சாகவில்லை. அத் வைதிகளுக்கும் திவ்யப்ரபந்தத்தில் ருசியுண்டாகும்படி அது எழுதியிருக்கிறேன். ஆனால் அந்த க்ரந்தத்தின் ப்ரணாளி வேறு. ஸ்ரீஸ்வாமியின் ஸர்வஸ்வக்ரந்தமானது "பகவத்ராமாநுஜ ஹ்ருதயம்" என்று பெயர் பெறத்தகுமென்று அடியேனுடைய அபிப்ராயம்.

காளி. ரங்கதாஸ:. (தற்காலம் - கல்கத்தா) 6-10-54.

ஸ்ரீமான் உவே. வித்வான். விஞ்சிமூர். கி. ஆழ்வாரையங்கார் ஸ்வாமி ஸ்ரீவில்லிபுத்தூர். (திருக்குறுங்குடிமடம் ஆஸ்தாநவித்வாந்.)

ஸவிநயவிஜ்ஞாபநம்.

"அண்ணிக்குமமுதூறு மென்னாவுக்கே" என்பதற்கு ப்ரதமலக்ஷ்யமான ஸர்வஸ்வக்ரந்தத்தை அடியேன் பன்முறை ஸேவித்து நெடுநாளாக இவ்வுலகுக் கிருந்த ஒரு பெரிய குறை இன்று தீரப்பெற்றதென்று அகங்குளிர்ந்தேன். இந்த க்ரந்தம் அமைந்திருக்கு மழகை அடியேன் புந: புந: பரிசீலனம் பண்ணினதில் அடி யேனுள்ளத்தில் தோன்றியதை உள்ளபடி விஜ்ஞாபிக்கிறேன். "ஸ்ரீபாஷ்ய த்ரமி டாகமப்ரவசநம்" என்கிற ச்லோகத்தில் சொல்லுகிறபடி எம்பெருமானார் நியமித் தருளின கைங்கரியங்களில் முதலிரண்டு கைங்கரியங்களான உபயவேதாந்த ப்ரவசநகைங்கரியத்தை நம் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்வாமி இடைவிடாது பஹு முகமாக நடத்திக்கொண்டு வருகிறபடியை எம்பெருமானார் திருவுள்ளம்பற்றி

யுகந்து, தம்முடைய திருவுள்ளத்தில் ஊறியிருந்த அர்த்த விசேஷங்களை யெல்லாம் இவரொருவர்கசே தோற்றுவித்து இவர் மூலமாகவே இந்த ஸர்வஸ்வக்ரந்தத்தை வெளியிடுவித்துக்கொள்வது உசிதமென்றுகொண்டு அப்படியே செய்துகொண்டார் என்பதுதான் உண்மை. ஆழ்வார் "யானாய்த் தன்னைத்தான்பாடி" யென்றருளிச்செய்தபடி எம்பெருமானே ஆழ்வார் திருவுள்ளத்தில் பதிகிடந்து திருவாய்மொழியை வெளியிட்டதுபோல ஸ்ரீபாஷ்யகாரர் தாமே நம் ஸ்வாமி திருவுள்ளத்திலிருந்துகொண்டு இவர் பெயரால் இந்த க்ரந்தத்தை வெளியிட்டருளினரென்பதில் ஸந்தேஹமேயில்லை. ஸ்ரீஸ்வாமி ஸாதித்திருக்கிற பரச்சத - பரஸ்ஸஹஸ்ர க்ரந்தங்களெல்லாம் அதிஹ்ருத்யங்களேயாயினும் கோயிலெம்பெருமானர் திருக்கோல விஷயமாக மணவாளமாமுனிகள் "இவ்வுலகி லெந்தமக்கா யெதிராசர்கொண்டருளும், எவ்வுருவும் யான் சென்றிறைஞ்சினக்கால்—அவ்வுருவமெல்லாமினிதேனும் எழிலரங்கத் திருப்புப்போல், நில்லாதென்னெஞ்சம் நிறைந்து." என்றருளிச் செய்தாப்போல் இந்த ஸர்வஸ்வக்ரந்தம் தலைசிறந்து விளங்குகின்ற தென்பதை அடியேன் மாத்திரமன்று, உலகமெல்லாம் உகந்து சொல்லும்.

இப்படி அப்போதப்போது கிளரும் குத்ஸிதவாதிகளைக் கிள்ளிக்களையுங் கணக்கிலே நிரஸித்துக்கொண்டு நம் ஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டாக வையம் மன்னி வீற்றிருக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

விஞ்சிமூர் ஆழ்வார்தாஸ: திருக்குறுங்குடி, 5-10-54.

ஸ்ரீமதுபயவே. வித்வத்வரிஷ்டரான
திருச்சி ஏ. வி. கோபாலாசாரியர் ஸ்வாமி, M.A., B.L., கோகுலம்.
ஸர்வஸ்வப்ராபவ விஜ்ஞாபநம்.

அடியேனுக்கு அடியோடு கண்ணில்லாமலிருக்கச் செய்தேயும் ஸ்ரீஸ்வாமி பரமக்ருபையாயனுப்பிய ஸர்வஸ்வக்ரந்தத்தை பலபாகங்கள் ஸேவிக்கச் செய்து கேட்டு ஆனந்த பரிதனனேன். ஸ்ரீவைஷ்ணவலோகத்திற்கு இது ஓர் ஸர்வஸ்வமேயாகும். ஆளவந்தார் முதலான நம் பூர்வாசார்யர்களும், விசேஷித்து ஸ்ரீபாஷ்யகாரரும் ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களை யுபஜீவித்து திவ்யஸூக்திகளருளிச் செய்திருக்கிறபடியை விரிவாகவும் ப்ராமாணிகமாகவும் வித்வஜ்ஜந ஹ்ருதயங்கமமாகவும் நிரூபிப்பது இந்த க்ரந்தம். இந்த விஷயத்தில் ஸ்ரீவைஷ்ணவலோகத்தில் ஒருவர்க்கும் விப்ரதிபத்தியில்லை. உபயவேதாந்தைககண்ட்யம் என்கிற தாஸனுடைய க்ரந்தம் ந்ருஸிம்ஹ ப்ரியாபத்ரிகையில் இப்போது முடிவடைந்திருக்கிறது. ஸ்வாமியின் இந்த ஸர்வஸ்வ க்ரந்தமானது ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளிலிருந்து பல அபூர்வவிஷயங்களை யெடுத்துக்காட்டியிருப்பது பரமரஸ்யம். இதில் பக்கம் 25 முதல் 32 வரையில் கப்யாஸ ச்ருத்யர்த்தவிசாரத்தில் ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளைக்கொண்டு ஸமந்வயம் காட்டியிருப்பது மிகவும் ஹ்ருதயங்கமம். ஸாமரஸ்யத்தையே அவலம்பித்து இந்த க்ரந்தத்தில் விஷயங்களை உபபாதித்திருக்குமழகு அடியேனுக்கு அபாரமான ஸந்தோஷத்தை யளிக்கின்றது.

உபய வேதாந்தங்களையும் தேனையும் பாலையும் கலப்பது போலச் சேர்த்து பரஸ்பரம் இனிமையையும் சோபையையும் தரும் ப்ரகாரத்தில் பரப்ரஹ்மஸ்வரூப குணாதிகளை யநுபவித்து ப்ரஹ்மானந்தத்தில் ஆழ்வார்களைப்போல் மூழ்குவது ஸ்ரீவைஷ்ணவர்களெல்லோருக்கும் ப்ராப்தம். நம் பூர்வாசார்யர்களெல்லோரும் அப்படியே உபய வேதாந்தங்களில் ஆழ்ந்து இன்புற்றவர்கள். இந்த பரமார்த்தத்தை சிலாலிகிதமாக்கி வைத்திருக்கின்ற இந்த ஸர்வஸ்வ க்ரந்தம் ஸர்வர்க்கும் ஸர்வதாநுபாவ்யம்.

தாஸன். அ. வே. கோபாலாசார்யன், திருச்சி, 3-10-54.

ஸ்ரீமான் உவே. பண்டித. (ஸ்ரீரங்கம்) T. ரங்கராமாநுஜய்யங்கார்.

ஸ்ரீவைஷ்ணவஜகத்துக்கே ஸர்வஸ்வமான ஸர்வஸ்வக்ரந்தம் ஸேவிக்க பாக்யம் பெற்றேன். இது ஸர்வவிதத்திலும் ஸஜ்ஜநமநோஹாரி யாயிருக்குமழகை எளியேன் என்னவென்று சொல்லுவேன்? அக்நிஹோத்ரம் ஐயங்காருடைய வாதம் சண்டமாருதத்தின் எதிர்ப்பட்ட சருகு போலாயிற்று. இந்நூலுக்கு முன்னுரைதந்து முத்ரணமும் செய்வித்த ஸ்ரீமதுபயவே கும்பகோணம் ராவ்ஸாகிப், ரங்கஸ்வாமி ஐயங்கார் உண்மையில் பரமபாக்யசாலி; மஹாவிவேகி. அவர் தம் முன்னுரை தொடங்கும்போதே "ப்ரஹ்மஸ்ரீ அக்நிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியார்" என்று எழுதியிருப்பது இந்நூலின் ஸாராம்ச ஸர்வஸ்வத்தை முகப்பிலேயே அள்ளிக்கொடுப்பது போலுள்ளது. அவரும் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் தானேயென்று நினைத்து "ஸ்ரீமத் உவே. அக்நிஹோத்ரம்........." என்று முன்னுரைகாரர் எழுதியிருந்தாராகில் இந்த ஸர்வஸ்வம் அவதரித்தது விபலமாகியே யிருக்கும். அவருடைய உண்மை வடிவத்தை ப்ரஹ்மஸ்ரீ என்கிற விசேஷணம் (அல்லது) உபபதம் என்ன அழகாகக் காட்டுகிறதென்று வித்வான்கள் இதிலேயே ஸ்தம்பித்து நிற்கிறார்கள். வாஸ்தவமாகவே அவர் உபயவேபட்டத்திற்கு ஆசைப்படுகிறவருமல்லர். அவருக்குக் கடிதமெழுதுகிறவர்கள் யாராவது உவே. என்று எழுதிவிட்டாலும் வெறுப்பும் வருத்தமும் அடைகிறவரே அவர். இப்படிப்பட்ட வருத்தத்தை அவர் இனி ஒருநாளும் அடையாதபடிக்கு மஹோபகாரம் செய்வித்தது இந்த ஸர்வஸ்வ மஹாக்ரந்தம்.

ஆனால் அடியேனுக்கு ஒரு வருத்தமுண்டாயிற்று, அதை உள்ளபடி விஜ்ஞாபிக்கிறேன். இந்த ஸர்வஸ்வக்ரந்தத்தில் ஸ்ரீமந்நிகமாந்த தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளிலிருந்து விசேஷமாக எடுத்துக்காட்டியிருக்கின்ற ஸ்ரீஸ்வாமியின் திருவுள்ளமென்னவென்றால், அக்நிஹோத்ரமையங்கார் தேசிக ஸம்ப்ரதாயஸ்தராகையாலே அவர் தேசிக ஸூக்திகளைக் கண்டு திருந்திவிடக்கூடும் என்பது போலும். இது வீணான அபிநிவேசம். தேசிகன் த்ரமிடோப நிஷத் தாத்பர்யரத்நாவளியும் ஸாரமும் பாதுகாஸஹஸ்ரமும் ஸாதித்திருக்கிறாரென்பது அக்நிஹோத்ரமையங்காருக்குத் தெரியாமலா இருக்கிறது. ஸம்ப்ரதாய பரிசுத்தி முதலான ரஹஸ்யங்களும் தேசிக ப்ரபந்தங்களென்று வழங்கப்படுகிற தமிழ்ப்பிரபந்தங்களும் தேசிகன் ஸாதித்தவையல்ல என்று அவர் பிரசாரம் செய்துகொண்டிருந்தாலும் பாதுகாஸஹஸ்ராதிகள் தேசிக க்ருதியல்லவென்று இதுவரை அவர் சொல்ல முற்படவில்லை. ஆனாலும் தேசிகனை அவர் கிள்ளுக்கீரையாகவே நினைத்திருக்கிறார். நேரில் அநுபவித்தவொரு விஷயத்தை மனம் தாளாமல் இங்கு வெளியிடுகிறேன். ஓரிடத்தில் இவர் ராமாயணப்ரஸங்கம் செய்துகொண்டிருந்தார்; அது மஹர்ஷிகளின் படியுமல்ல, மஹாகவிகளின் படியுமல்ல; பூர்வாசார்யர்களின்படியுமல்ல. ஏதோ ஜர்மனியென்றும் ஜப்பானென்றும் அமெரிக்காவென்றும், பொலிடிகல் பாயிண்ட்ஸில் பேசுகிறேனென்றும் சொல்லிக்கொண்டிருந்தார். அஹல்யையின் பேச்சு வரும்போது இவள் கல்லாய்ப் போனாளென்று சிலர் சொல்லுவது மடத்தனம் என்றார். உடனே ஒரு வித்வான் எழுந்து, ஸ்வாமீ! அவஸரப்பட்டு அப்படி சொல்லத்தகாது, தேசிகன் பலவிடங்களில், இதைப்பற்றி ஸாதித்திருக்கிறார். "சிலாதே: ஸ்த்ரீத்வாதி:" "யோஷித்பூத த்ருஷந்தி" 'ஜஹதுபலதநு" "சாபாயுதவதா த்ருஷத்கா துர்ஜாத" என்றிப்படி ஏராளமான ஸ்ரீஸூக்திகளை கவனியாமல் சொல்லலாகாது என்றார்; அதற்கு இவர் சொன்னபதில்—அதெல்லாம் எனக்குத் தெரியாமலில்லை; அதெல்லாம் பேத்தல்......என்றார். உடனே அந்த ஸ்வாமி இவரோடு நாம் பேசத் தகாது என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார். ஸ்ரீவைஷ்ணவர்கள் யாவருமே எழுந்து போய்விட்டார்கள். சில பஸ்மதாரிகளை வைத்துக்கொண்டு ஏதொ குழப்பிக்கொண்டிருந்தார்.

இப்படிப்பட்ட விவர்க்கு தேசிக ஸ்ரீஸூக்திகளைக் காட்டுவதனால் என்ன பலனாகும்? ஸ்ரீராமாநுஜரையோ ஆளவந்தாரையோ எவரையும் இவர் மதிப்பவரல்லர். ஸ்ரீவைஷ்ணவாசாரியர்களில் ஒருவரும் பசுமாரணகர்மதாருணர்களாக இருக்கவில்லையென்று இவர்க்கு வருத்தமும் கோபமும் அதிகம். இவர் ஸமீபகாலத்தில் ஆளவந்தாரிடத்திலும் அபசாரப்பட்டு ஹிண்டுவிலேயே ஒரு வியாஸமெழுதி வெளியிட்டிருந்தார்; அதற்கு ஸ்ரீ உவே. வித்வான். கோழியாலம் ரங்கநாதாசாரியர் எழுதிய மறுப்பு, ஸ்ரீவைஷ்ணவஸுதர்சநபத்ரிகையில் சென்ற மாதத்தில் (ராப்பரில்) வெளியிட்டிருக்கிறது. ஸ்ரீவைஷ்ணவாசாரியர்களுக்குக் குறை கூறுவதையே நித்ய கர்மாநுஷ்டானமாகக் கொண்டவர் இவர் என்பதை அறியாதபேர்களில்லை.

இவர் இப்போது ஒரு விதத்தினால் ஸ்ரீவைஷ்ணவவுலகுக்கு மஹோபகாரகராகவும், ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவராலும் நித்யம் ப்ராதஸ்ஸாயம் ஸ்மரணீயராகவும் ஆய்விட்டார்; இதுவொரு பாக்ய விசேஷமே. 'யேநகேந ப்ரகாரேண ப்ரஸித்த: புருஷோ பவேத்' என்றது இவர்க்கு நன்றாய்த்தகும்.

(இந்த ஸ்ரீமுகம் மிக விரிவாக இருப்பதால் இவ்வளவோடு நிறுத்தப்பட்டது.)

T. ரங்கராமாநுஜய்யங்கார். (பள்ளத்தூர்,) 6-10-'54.)

ஸ்ரீமான் உவே. வித்வான் ராமாயண பூஷணம். கோமல்
T. சேஷாத்ரி ஐயங்கார் ஸ்வாமி

ஸ்வாமி ஸாதித்த த்ரமிடோப நிஷத்ப்ரபாவ ஸர்வஸ்வக்ரந்தத்தை பரம ஸந்தோஷத்துடன் ஸேவித்தேன். அதன் ருசியை நன்கு யநுபவிக்க மூன்று தடவைகள் ஸேவித்தேன். அத்யத்புதமாயிருக்கிறது என்பது தவிர வேறொன்று மெழுதத் தோன்றவேயில்லை. அருளிச்செயல்களை ஸ்ரீபாஷ்யத்தோடு ஸமந்வயம் பண்ணியிருப்பது மிகவும் அழகு. ஸ்வாமியின் க்ரந்தத்திலுள்ள விஷயங்களை அடியேனும் உபந்யாஸங்களில் ஸ்வாமி ஸாதித்த விஷயமென்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஜகத்விக்யாதரான ஸ்வாமியின் வைதுஷ்யத்தை அடியேன் எடுத்துப்பேச அதிகாரியா? விஷயங்களை யெடுத்துரைக்கும் ஸாமர்த்தியம் ஸ்வாமிக்கே அஸாதாரணமானது. ஸ்வாமி ஸாதித்த அருளிச்செயல் வியாக்கியானங்களையெல்லாம் ஸேவிக்க மிகுந்த ஆவலுள்ளவனாக இருக்கிறேன்.

தாஸன். ராமாயண பூஷணம்: T. சேஷாத்ரி,
மதராஸ், 6-10-'54.

ஸ்ரீமான் உவே. (உப்பிலியப்பன் ஸன்னிதி) வங்கீபுரம். நவநீதம்.
சேஷாத்ரி ஆசார்யர், B.A., B.O.L. சிரோமணி; வித்வான்.
அண்ணாமலை யூனிவர்ஸிடி, ஸம்ஸ்க்ருத லெக்சரர்.

ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி விசேஷணங்களை நாம் பலபேர்களுக்கும் எழுதிக் கொண்டிருந்தாலும் ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் ஸ்வாமி யொருவரே அந்த பிருதாவளிகளை அந்வர்த்தமாக வஹிப்பதற்கு உரியா ரென்பதை ஏற்கெனவே ஸ்ரீஸ்வாமியின் பலக்ரந்தங்களினால் உலகமுணர்ந்திருந்தாலும் இப்போது ஸ்ரீஸ்வாமியாலருளிச் செய்யப்பட்டு வெளிவந்திருக்கின்ற த்ரமிடோபநிஷத்ப்ரபாவ ஸர்வஸ்வ

க்ரந்தரத்நம் அதை ஸுப்ரதிஷ்டிதமாக்கி விட்டது. இதுவரை வியாக்கியான
ரூபமாகவும் ஸ்வதந்த்ரக்ரந்தரூபமாகவும் வெளிவந்துள்ள ஸ்ரீஸ்வாமியின் க்ரந்தங்
களுக்குள்ளே இந்த ஸர்வஸ்வக்ரந்தம் அத்யத்புதமாகவும் அகில ஸ்ரீவைஷ்ணவ
பாக்யஸர்வஸ்வமாகவும் அமைந்துள்ளது என்பதற்குமேல் அதிகமாக எழுதுவது
மிகையென்று நிற்கிறேன்.

V. K. சேஷாத்ரிதாஸன், திருவிண்ணகர், (5-10-'54).

நாச்சியார்கோயில் (திருநறையூர்) ஸ்ரீமதுபயவே. வித்வான்
நடாதூர். ராகவாசாரியர் ஸ்வாமி, குளித்தலை.

ஜகத்விக்க்யாதரா யெழுந்தருளியிருந்த அடியேனுடைய திருத்தகப்பனாரா
ஸ்ரீக்ருஷ்ணமஹாதேசிகனுடைய காலத்திலிருந்து அடியேன் ஸ்ரீகாஞ்சீ ஜகதா
சார்ய ஸிம்ஹாஸநாதிபதி ப்ரதிவாதிபயங்கர ஸ்வாமியின் பல்வகை நூல்களையும்
அஸக்ருத் ஸேவிக்கும்படியான பாக்யம்பெற்றவனென்பதை விஜ்ஞாபித்துக்
கொள்ள அவகாசம் கிடைத்ததற்கு தந்யவாதம் ஸமர்ப்பித்துவிட்டு, ப்ரக்ருதம்
ஸ்ரீஸ்வாமி திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்ற த்ரமிடோப நிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வ
க்ரந்தத்தை ஆபாத சூடமநுபவித்ததனாலுண்டான ப்ரஹ்மானந்தத்தை ஸ்வல்பம்
விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய பரம்பரையில்
படிந்தவர்களுக்கு உபய வேதாந்தங்களும் இரு கண்களாக விளங்குவன. அதில்
த்ராவிட வேதாந்தம் வலக்கண்ணாகவும் ஸம்ஸ்க்ருத வேதாந்தம் இடக்கண்ணாகவும்
கொள்ளப்படுவதற்கு ஔசித்யாதிசயமுள்ளதாக அடியேனுடைய திருத் தகப்பனார்
அடிக்கடி ஸாதிக்கக் கேட்டிருக்கிறேன். அந்த ஔசித்யாதிசயத்தை இந்த
ஸர்வஸ்வக்ரந்தத்தின் மூலமாகவே அடியேன் விசதமாக வறியப்பெற்றேன்.
பகவத் ராமாநுஜதர்சநத்திற்கு மஹாநிதியென்று போற்றத்தக்க இந்த மஹாக்
ரந்தத்தின் அருமை பெருமைகளை உள்ளபடி யெடுத்துரைக்க அடியேன் அதிகாரி
யல்லேன். இந்த க்ரந்தத்தை எத்தனை தடவை ஸேவித்தாலும் த்ருப்தியே உண்
டாவதில்லை. பகவத்பாஷ்யகாரதர்சநஸ்தர்களாய் விவேகிகளாயுள்ளவர்கள் இந்த
ஸர்வஸ்வத்தை தினப்படி ஒருகால் ஸேவித்து வந்தால் அவர்களுக்கு உபய
வேதாந்த ரஹஸ்யங்களும் கையிலங்கு நெல்லிக்கனியாகும் என்பதே அடியே
னுடைய விஜ்ஞாபநஸர்வஸ்வம்.

N. K. ராகவதாஸன், வைகநல்லூர், (குளித்தலை) 2-10-54.

ஸ்ரீமதுபயவே. வித்வான். பகவத்விஷயரத்நதீபம். இளையவில்லி.
தி. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருக்குடந்தை.

அடியார்க்கின்பமாரி

ஆழ்வார் திருவடிகளிலும், அவர்கள் கண்டு வெளியிட்ட திவ்ய ஸூக்திகளி
லுமீடுபட்ட ஆசார்யர்களிடத்தில் அளவிறந்த பத்தியையுடையராய், உபயவேத
வேதாந்தங்களையும் ஸதாசார்யர்களிடம் அடிபணிந்து முறைப்படி ஓதித்தெளிந்
திருக்கும் மஹான்களின் திருவடிகளில் தலைவணக்கிக் கைகூப்பி நின்று அடி
யேனுடைய பேரானந்தத்தை ஒரு சிறிதளவு விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

இதர ஸித்தாந்திகளெவர்க்குமின்றி, ஸ்ரீராமானுஜதர்சனத்தவர்களாலேயே அஸாதாரணமாக வநுபவிக்கப்பட்டு வருவதும், ஸம்ப்ரதானமாக இருந்து வருவதுமான வடமொழி தென்மொழி வேதங்களில் என்றும் இங்குமங்குமெங்கும் எவராலும் ஏற்றமாகப் போற்றப்பட்டு வருகிற "திவ்யப்ரபந்தம்" என்கிற ஆழ்வார்களின் திவ்யஸூக்திகளில் ஆழ்ந்த வநுபவங்களை ஓரிடத்தே ஒருங்கச் சேர்த்தநுபவித்து, ஸ்ரீ. உ. வே. ப்ரதிவாதி பயங்கரம், மஹாவித்வான், அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் இப்பொழுது எழுதி அச்சியற்றப்பெற்ற "த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வம்" என்கிற உத்தமோத்தமமான ஓர் அநுபவ வெளியீட்டை ஓரெழுத்தும் விடாமல் 80 பக்கங்களையும் மேன்மேலும் எழும் அவாவுடன் அநுபவிக்கும் பாக்கியம் பெற்றவர்களில் அடியேனுமொருவனானேன்.

இந்த பாக்கியம், திருக்குடந்தையில் தமிழ்வேதம் மறையாதே காட்டியருளிய ஸ்ரீஆராவமுதாழ்வானின் குடியடியாராய்ப் போந்து தமிழ்வேதமறிந்த பகவர்களில் தலைசிறந்துவிளங்கி, நாலாயிர அத்யாபகர்களாக அத்தாணிச்சேவகத்திலுமமர்ந்து, தம்மடியார்களையும் அப்படியிலேயே அமரும்படி அருள்புரியவல்ல மஹாத்மாக்களின் ஸந்ததியில் குடல் துவக்காலேதான் அடியேன் பெறப்பெற்றேனென்றால் இது சிறிதேனும் மிகையாகாது. இந்த ஸர்வஸ்வக்ரந்த மூலமாக ஆழ்வார்களுடைய ஸூக்தி யநுபவங்களில் மெய்மறந்து அநுபவித்துக் கொண்டே சென்றனனாதலால், அநுபவங்களெல்லாம் அடியேனுக்கு ஆனந்தாவஹமாகவே விளங்கி நின்றன. இந்நூலுக்கு இந்நூலாசிரியராலிடப்பட்ட "த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வம்" என்கிற திருநாமத்தில், "த்ரமிடோபநிஷத்" என்கிற சொல், புதிதாக இவ்வாசிரியர் வெளியிட்ட வார்த்தையல்ல; முன்னோர்களனைவரும் ஒரே அபிப்ராயமாக அநுஸந்தித்துப் போந்ததேயாம்.

இந்தத் திருநாமத்தின் போக்யதை, ராமானுஜதர்சனத்தைச் சேர்ந்தவரனைவர்க்கும் தித்தித்திருப்பதோடு, ஆசார்யஹ்ருதயம் முதல் ப்ரகரணம், 65ஆவது சூர்ணையான "பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்கவிடுவர்" என்பதற்கேற்ப, அந்த பாஷ்யகாரரே மறுபடியும் ஸ்ரீதேசிகனாகவவதரித்து அவர் திருவாக்கினால் "பொய்கைமுனி" என்று தொடங்கி, "இவர்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ்மாலைகள் நாம்தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்று, தெள்ளியார் பலரும் தலைதுலுக்கிக்கொண்டாடும்படி பாடநின்றால், வாஸ்தவமான ஸ்ரீ நிகமாந்ததேசிக பக்தர்க ளனைவருக்கும், இத்திருநாமம் "தேனும் பாலும் அமுதுமாய திருமால் திருநாமம்" என்கிறபடி, அர்ச்சாவதாரத்திற்கே பெரும்பான்மையும் ப்ரமாணதமமான இச் சப்தராசிக் கேற்பட்ட திருநாமம் என்பது கொண்டு "தேனூறி யெப்பொழுதுந் தித்திக்குமே" என்கிறபடியிலன்றோ கொண்டாடத்தகும். "சந்தமிகு தமிழ் மறையோன்" என்று தனிப்பெருமை பூண்ட தம்மையும், தம்மைப் பின்பற்றி வாழ்வாரையும் கணிசித்தன்றோ "நாலாயிரமு மடியோங்கள் வாழ்வே" என்று திருவுள்ளம் பூரித்துத் திருவாய் மலர்ந்தருளினார் நம் தேசிகனார்.

அப்படித் தம் அநுபவங்களை யாரேனும் சிலர் அநுபவிக்காது போவதும் தக்கதில்லையென்று அவர்களையும் தகவுடன் திருத்திப் பணிகொள்ளுமவராகவிருந்தும், "கலகண்ட கணஸ்வாத்யே காமஸ்யாஸ்த்ரே நிஜாங்குரே, நிம்பவ்ருத்திபிருத் கீர்ணே ந சூத: பரிதப்யதே" என்றும் ஒருபடி அருளிப் போந்தார்.

ஆகவே, நமக்குப் பூர்வாசார்யர்களநுபவங்கள் தனித்தனியே நிற்க, அவ்வநுபவங்களனைத்தும் திரண்டெழுந்து நிற்கிற திருமலைமால் திருமணியாயவதாரம் செய்த வள்ளலின் திவ்ய க்ரந்தங்களினோசையொன்றே எல்லா வநுபவங்களையும்

இங்கு மங்கு மெங்கும் தரவல்லதானதாலே, இக்கிரந்தத்திற்கு இடப்பட்ட திரு நாமமே மிக்க சுவையுடன் விளங்கி நிற்கிறது.

இந்த த்ரமி டோபநிஷத்து வடமொழி வேதம்போல் நித்யம் என்பதும், ஆழ்வார்கள் கண்டு வெளியிட்ட மாத்திரமே என்பதும், சில ரிஷிகளின் ப்ரவசனுதிகளை யிட்டு வடமொழி வேதத்தில் சில பெயர்கள் விளங்குகிருப்போலவே "சடகோபன் சொல்" முதலியதென்றும், இப்படி வடமொழி வேதத்தின் ஒற்றுமைப் பாடோடு, ஸத்ஸம்ப்ரதாயப்படிகளில் ஸ்ரீவைஷ்ணவத்திரளில் ஆராயும்போது பலபடிகளில் மிகவும் ஏற்றமுற்றுமிருக்கும்.

"தென்குருகூர்ப் புனிதன் கவி ஓர் பாதத்தின் முன் செல்லுமே தொல்லை மூலப் பரஞ்சுடரே" என்று கவிச்சக்கரவர்த்தி பேசும்படி விளங்கி நிற்கும் திவ்ய ப்ரபந்தத்தின் பெருமையை ஸத்ஸம் பிரதாய மறிந்த பல மஹான்கள் பேசி நிற்பார்கள். இவ்வண்ணம் பேசியநுபவித்த மஹான்களில் சிலரை இங்கு தியானிப்பதும் பரம பாக்கியமேயாகும். ஸ்ரீ உ. வே. மஹாவித்வான்களான காஞ்சீ, அய்யா, கிருஷ்ணதாதாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம் சேட்டலூர், நரஸிம்மாசார்ய ஸ்வாமி, கோஷ்டீபுரம் ஸௌம்ய நாராயணுசார்ய ஸ்வாமி, ஒப்பிலியப்பன் ஸன்னிதி, நவநீதம், க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, தேவனர் விளாகம், ப. ஸ்ரீவேங்கடாசார்ய ஸ்வாமி முதலான மஹான்கள். இவர்கள் போன்ற மற்றும் சில மஹான்களும் நம் வைணவத்திரளில் ஆழ்வார் ஸூக்திப் பெருமை வெளியாகு மிடங்களில் நினைக்கத்தக்கவர்கள்.

ஸ்ரீ ஆளவந்தார், பாஷ்யகாரர், ஆழ்வான், பட்டர், தேசிகன், திருக்குடந்தை தேசிகன் முதலான வனைவரும், தாங்களருளின தோத்திரங்களனைத்திலும், திவ்ய ப்ரபந்தவநுபவங்களையே சப்தத்திலும் அர்த்தத்திலும், தாத்பரியத்திலும் பெரும்பாலும் நன்கு புலப்படவைத்தே அருளியிருக்கிறுர்களென்பதை தமிழ் வேதக்கடலில் ஆழ்ந்து சீரிய செழும்பொருளை ஆசார்யனருளால் பெற்ற பாக்கியாதிகர்களனைவரும் அறிவார்கள்; அப்படியுள்ளவர்களுக்கு ஆனந்தத்தை அதிகப்படுத்துங் க்ரமத்திலும், அப்படியறிய அவகாசமில்லாதவர்களுக்கும் அறிவித்து உபகரிக்கும் க்ரமத்திலும் இந்த ஸர்வஸ்வக்ரந்தம் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதனில் பக்கம் 5 பாதியிலிருந்து 6 ஆவது பக்கம் முடிய, வடதேசத்தில் ஒரு சாஸ்திரிகளின் ஈடுபாட்டைக் கண்டு களிப்பது முக்கியமாகும்; 28 பாதியில், "அநந்தகுண ஸாகர" ஸூக்திக்குப் பெரிய திருவந்தாதி 69, மிகுந்திருமால் சீர்க் கடலையுள் பொதிந்த. என்கிறவிடம்; தேசிகன் இப்பாசுரத்தைத் திருவுள்ளத்திற் கொண்டே அம்ருதாஸ்வாதினியில், "சீர்க்கடலின் திரையன்ன" என்று ஒரு பாசுரமிட்டிருக்கிறுர்; 25+40, கப்யாஸ ச்ருதி விவரணம், "ஸ்வாதீந" இத்யாதிகத்ய வாக்கியத்திற்கு உயர்வறப்பதிகத்தில், 4-5-6 பாட்டுக்களின் விவரணம், (கிரீட மகுட சூடாவதம்ஸ) என்பதற்கு, திருவிருத்தம் "பாரளந்த பேரரசே" இத்யாதி விவரணம். (பரித்ராணுயஸாதூநாம்) என்பதற்கு, "மழுங்காத வைந்நுதிய" பாட்டு விவரணம், 50ல் ஸ்ரீபாஷ்யத்தில், "நச பரமபுருஷ:" "வாரிக்கொண்டுன்னை" என்கிற விவரணம், மேல் 53 வரை, "வாஸுதேவஸ்ஸர்வம்" என்பதற்கு ஆழ்வாரை யநுபவிப்பது. 57-58ல், துஷ்யந்திச ரமந்திச "தெரித்தெழுதி" பாசுர விவரணம், 61 கீழ் பாகத்தில் "உளனெனில்" பாசுரமும் ஸ்ரீபாஷ்ய ஸூக்தியும், 64ல் "யத்பதாம் போருஹ" ஆச்சர்யமான விவரணங்கள், 67ல், "உடன்மிசை யுயிரென" விவரணம், மேலே பல பக்கங்களில், ஆளவந்தார், ஆழ்வான், பட்டர் இவர்களநுபவமும் உபஸம்ஹார அழகும் அனைத்தும் வெகுரஸம்.

இப்படி ஏதோ சில பக்கங்களைக் குறிப்பிட்டது அடியேனநுபவத்திற்கு ஒரு போக்கு வீடேதவிர வேறில்லை. முழுவதும் ரஸமயமான விதனை அநுபோக்தாக்கள் முழுவதும் அகங்குழைந்தே அநுபவிப்பர்களென்பதில் ஸந்தேஹமில்லை. இப்பொழுது ஒரு திவலையையே வெளியிட்டிருப்பதாக ஸ்வாமியருளியபடிக்கு மேன்மேல் இதன் விரிவான வியாஸங்களையே எதிர்பார்த்திருக்க எவரும் கடமைப் பட்டிருப்பர்கள்.

ஸ்வாமியின் இந்தக் கிரந்தத்தை அநுபவிக்குமவர்களுக்கு, "ஆரானுமாதானும் செய்ய, அகலிடத்தை யாராய்ந்து அது திருத்தலாவதே" என்கிற ஸ்ரீஸூக்தியின்படி, ஆழ்வார் ஸூக்தியில் அநுபவவர்த்தகமான க்ரந்தங்களிலேயே ஆசை வளருமல்லது, வேறு பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துறையின் பார்ச்வத்திலும் மனம் செல்லாது என்பதை மட்டில் விண்ணப்பித்து, இப்பொழுது இதனை நிறுத்திக் கொள்ளுகிறேன்.

ஜயபுரட்டாசி
திருவோணம்
திருக்குடந்தை

இளையவில்லி, தி. ஸ்ரீநிவாஸ தாஸன்.

ஸ்ரீ

உணர்ச்சி விண்ணப்பம்

(ஸ்ரீமதுபயவே. வித்வான். வித்யாவிசாரத. வங்கிபுரம் நவநீதம்.
ஸ்ரீராமதேசிகாசாரியர் ஸ்வாமி திருவிண்ணகர்).

நவீந விவாத க்ரந்தங்கள் அடியேமுக்கு இனிப்பதில்லை. விவாதத்தில் புக்க இருதிறத்தாரும் தத்தம் வல்லமையைக் காட்டுவதே அதன் பயனாகும். எத்தனை ஆதாரங்கள் காட்டினாலென்ன? அவரவர் தாங்கள் கொண்ட கொள்கையை மாற்றிக்கொள்ளுதல் ஒருபோதுமில்லை. ஆனால் ஸர்வஜ்ஞரான நாதமுனிகள் முதலிய ஸகலாசார்யர்களும் ஆய்ந்தறிந்து ஒரு மிடறாய் உறுதிபடுத்திக் கூறிய விஷயங்களில் நாம் தலையிட்டுச் சர்ச்சை செய்வது நம் ஸ்வரூப விருத்தமாம். ஸ்ரீராமானுஜ தரிசனத்தில் நிலைபெற்ற நமக்குள் அருளிச்செயலுக்கு முன்னோர் கண்டு உணர்த்திய பெருமையைப் பற்றி ஆக்ஷேபம் எழுவதும் அதற்கு விடையிறுப்பதும் மிக்க வருத்தத்தை விளைவிப்பன.

வேதத்திற்கு உள்ள அருமை பெருமைகளை மறைப்பவர் யாருமிலர். அனைத்துக்கும் மூலம் வேதமே என்பதையும் அதைத் தழுவிய நூல்களே பிரமாணமாகத் தக்கன என்பதையும் எவரும் மறுக்கத் துணியார். ஆனால் கடல் போன்ற வேதத்தினின்று ஸாரதமமான அர்த்தங்களை அறிவது அரியதாகும். வேதாந்த ரஹஸ்யார்த்தங்களை நமக்குத் தெளிவாக விளக்குவதில் அருளிச்செயலுக்கு ஈடானது ஒன்றுமில்லையென்பது நம்பூர்வாசார்யர்கள் அனைவரும் கண்ட உண்மை. முந்திய யுகத்தில் முதலாழ்வார்களும் இந்த யுகத்தில் நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களுமே ஸகலவேதாந்த ஸார தமார்த்தங்களையெல்லாம் அமுதப்பெருக்கான தம் ஸூக்திகளில் பொதியவைத்து நமக்கு அருளினர். எம்பெருமானுடைய பல்வேறு அவதாரங்களாலும் திருந்தாத உலகத்தைத் திருத்தியமை பற்றி ஆழ்வார்களின் அவதாரம் அபிநவதசாவதாரமென நம் தேசிகனால் போற்றப்பட்டது.

அருளிச்செயல் செய்த செயல்கள் யாவை? வேதம் செப்பும் பொருள்களில் ஸாரதமமானவற்றைத் திரட்டியது; பராவரதத்துவங்களை நிர்ணயித்துக் கொடுத்தது; எம்பெருமானுடைய திவ்ய மங்களவிக்ரஹம் திவ்யாத்மஸ்வரூபம், திருக்கல்யாண குணங்கள், உபயவிபூதி யோகம் முதலியவற்றை விளக்கியது; பகவத்குணாநுபவத்தில் மண்டி இவ்வுலகிலேயே பரிபூர்ணாநுபவத்தைப் பெறச்செய்தது. இத்தகைய எல்லையற்ற உதவிகளை முழுவதும் பயன்படுத்திக்கொண்டு தங்யர்களான ஸகலபூர்வாசார்யர்களும் அருளிச் செயலின் அருமைபெருமைகளை உள்ளத்துக் கொண்டு அதை உபப்ர்ம்ஹணங்களுள் தலை சிறந்ததென்றும் வடமொழி வேதத்தைப் போன்றதென்றும் அதினும் சிறந்ததென்றும், வேதம் செய்யும் தோண்டினை இன்னும் திறம்படச் செய்தலால் வேதத்தை இளைப்பாறச் செய்வதென்றும் பலபடியாகப் போற்றினர்.

இப்பொழுது வெளியாகும் இந்த 'த்ரமிடோபநிஷத் ப்ரபாவஸர்வஸ்வம்' என்னும் க்ரந்தம் அருளிச்செயலைப்பற்றிய சில ஆக்ஷேபங்களுக்குப் பரிஹாரம் செய்யப் பிறந்ததாய்த் தோன்றினும் முழுதும் நோக்கும்போது இது சிறந்த அநுபவ க்ரந்தமாகவே கொள்ளற்குஉரித்து என்பது புலனும். எம்பெருமானாருடைய ஸ்ரீஸூக்திகள் அனைத்தும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளாகிய அமுதவெள்ளத்தில் மூழ்கித் திளைத்ததன் பயனாக அவதரித்தவை என்னும் உண்மை இக்கிரந்தத்தில் மிகமிக அழகாக விளக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ P. B. A. ஸ்வாமி இந்நூலில் பல் வேறிடங்களில் செய்துள்ள விவரணம் படிப்பவர்களின் உள்ளத்தை உருக்குமென்பது ஒருதலை. உதாஹரணமாய் ஸாது சப்தார்த்த விவரணம், கிரீடமகுட சூடாவிபாகம், 'தொழுங்காதல்' விவரணம், 'அடியேனுள்ளானுடலுள்ளான்' ப்ரகரணம், 'துஷ்யந்திச ரமந்திச' விவரணம் முதலியவற்றைக் குறிக்கலாகும். மேலும் இந்நூல் பரதூஷணமின்றி அநுபவத்தையே முதன்மையாகக் கொண்டிருத்தல் மிகப் போற்றற்கு உரித்தாகும்.

ஸ்ரீபாஷ்யகாரர் நம் ஸித்தாந்த நிர்த்தாரணத்திற்கு அருளிச்செயலை அவலம்பமாகக் கொள்ளவில்லை யென்று கூறுவது நேர்மையன்று. ப்ரஹ்ம நந்த்யாதிகளுக்குப் பின் நம்மாழ்வாரையே வேதாந்த ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராக ஸ்ரீதேசிகன் அருளிச் செய்ததால் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளின் துணையின்றிப் பரிசுத்தமான நம் வேதாந்த ஸம்ப்ரதாயம் வந்திருக்க முடியாதென்பது உறுதி. மேலும் நம் ஸித்தாந்தம் சுத்தாந்த ஸித்தாந்தமானதற்கும் மூலம் அருளிச்செயலே.

எம்பெருமானர் அருளிச்செயலைப் பற்றித் தம் ஸூக்திகளில் ப்ரஸ்தாவம் செய்யாமையையும் அருளிச்செயலின் ஒரு பகுதிக்கும் உரைகாணாமையையும் அவருக்கு அதில் ஈடுபாடின்மைக்குக் காரணமாகச் சிலர் கூறுவதும் ஏற்றதன்று. ஸ்ரீபாஷ்யகாரர் காலத்திலிருந்த சூழ்நிலையைச் சரித்திரத்தின் உதவிகொண்டு நாம் ஆராயின் உண்மை விளங்கும். அப்பொழுது பாஹ்யமதத்தினரும் குத்ருஷ்டிகளும் தத்தம் மதத்தைப் பரவச்செய்ய மிக்க ஆர்வங்கொண்டு பெரும் பெருங் கலஹங்களை விளைவித்தனர். அப்பொழுது எம்பெருமானர் தம் வாழ்நாளின் பெரும் பகுதியை அவர்களுடன் வாதப்போர் நிகழ்த்தி அவர்களை ஒடுக்குவதிலும் பல்லாயிரக்கணக்கான தம் சீடர்களுக்கு ஸித்தாந்த க்ரந்தங்களைக் காலக்ஷேபம் ஸாதித்து அவர்களைக்கொண்டு ஸித்தாந்தப்ரசாரம் செய்வதிலும் செலவிட நேரிட்டது. ஆகவே அத்தகைய கிரந்தங்களில் ஆழ்வார்களைப் பற்றியோ அருளிச்செயலைப்பற்றியோ ஸ்பஷ்டமாகக் குறிப்பிடுவதற்கு வாய்ப்பில்லை. ஆயினும் ஸ்ரீபாஷ்யகாரர் தாம் அருளிச்செயலைச் சுவைத்துச் சுவைத்து அதன் கருத்துக்களைத் தம்முடைய ஒவ்வொரு ஸ்ரீஸூக்தியிலும் பொதியவைத்திருக்கும் அழகு இந்த ஸர்வஸ்வக்ரந்தத்தில் அதியற்புதமாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

எம்பெருமானுரை நேரில் ஸேவித்துக் காலக்ஷேபம் செய்து ஸ்வாமியின் திருக்கல்யாண குணங்களை அநுபவிக்கும் பாக்யம்பெற்ற அமுதனர் "உறுபெருஞ் செல்வமும்" என்ற ஓர் அமுதச் செய்யுளால் ஸ்வாமிக்கு ஸர்வவஸ்து ஜாதமும் அருளிச்செயலே என்று உத்கோஷித்திருக்கும்போது அதைப்பற்றி ஐயங்கொள்ளவோ ஆக்ஷேபிக்கவோ நமக்கு உரிமையில்லை; தகுதியுமில்லை. இப்படியிருந்தும் நாம் அருளிச்செயலில் எம்பெருமானருக்குள்ள ஈடுபாட்டைக் கண்ணழிக்க முற்படின், "உங்கள் பாஷ்யகாரர் ஸூத்ரத்துக்கும் கீதைக்கும் பாஷ்யமிட்டு உபநிஷத்துக்குத் தனிப்பட பாஷ்யம் இயற்றவில்லை யாதலின் அவர் உபநிஷத்துக்களை முக்கியமாகக் கருதவில்லை" யென்பாருக்கும் நமக்கும் வாசியில்லாது போம்.

ஸ்ரீமத் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்வாமி உபய வேதாந்தங்களில் தமக்குள்ள ஜ்ஞானவிசேஷத்தையும் ஆழ்வாரிடமும் அருளிச்செயல் பாலும் உள்ள எல்லையற்ற பக்தியையும் அநுபவத்தையும் ஒன்று திரட்டி இந்நூலை இயற்றிப் படிப்பவர்களின் மனம் உருகச்செய்துள்ளா ரென்னுதல் மிகையாகாது. விவாதரூபமாய் வெளியாகும் கிரந்தங்களைக்காட்டிலும் இத்தகைய கிரந்தங்களைப் படிப்பவருக்குப் பேரின்பம் பெருகிப் புத்துணர்ச்சி நிரம்பி நிற்குமென்னுதல் சாலப் பொருந்தும்.

இவ்வாறு பெருமைபெற்ற இக்கிரந்தத்தில் கண்ணெச்சிற்படும் என்று அஞ்சி ரஸபங்கம் வரும் ஓர் அம்சம் இதில் புகுந்துகொண்டது போலும். இந்நூலின் உயிர் நாடியென்னும்படியுள்ள, சுவை வெள்ளமிட்டோடும் "தொழுங் காதல்" விவரணப் பகுதியில் கடைசிப் பாராவும் அதற்கு முந்திய 3 வரிகளும் (பக்கம் 41) நுழைந்துகொண்டன. இது உண்மையில் த்ருஷ்டிபரிஹாரமே. 64, 65, பக்கங்களில் "யத்பதாம்போருஹ" ச்லோகத்திற்குச் செய்திருக்கிற அர்த்த விவரணபாகத்தை க்லிஷ்டகல்பநமென்று சிலர் நினைக்க நேர்ந்தாலும் மற்ற ஸகலாம்சங்களும் ரஸகநமாயுள்ளனவென்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த க்ரந்தத்தால் தேறிய ஸாரமான பொருள்—இரண்டு வேதங்களையும் இருகண்களாகக் கொள்பவர் நிபுணர். அவரே உண்மை ஸ்ரீவைஷ்ணவர்—என்பதாம்.

உள்ளத்துத் தோன்றியவற்றை உள்ளவாறே அடியோம் கூறிவிட்டதற்கு மகிழவேண்டும். அல்லது அடியோமை க்ஷமிக்கவேண்டும்.

அடியவர்கள் தம்மடியான்

ஒப்பிலியப்பன் ஸந்நிதி **வ. ந. ஸ்ரீரம தேசிகதாஸன்,** 10—10—'54.

ஸ்ரீமதித்யாதி உவே. வி. வி. ஐயங்கார் ஸ்வாமி, பாம்பே.

த்ரமிடோபநிஷத் ப்ரபாவஸர்வஸ்வம் பெரும் நிதியாக இன்று பெற்றேன். இது எம்பெருமானர் தாமே நேராகப் பரம கருணையோடளித்த ஆராவமுதம் என்பதில் தட்டில்லை. இந்நூலை என்னுடன் கூடவிருந்து வாசித்த நண்பர்கள் 'ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகள் நமக்கு வேண்டா; இதுவொன்று போதுமே' என்று ஏககண்டமாகச் சொன்னர்கள். இதை யாரும் அதிசயோக்தியாக நினைக்க நியாயமில்லை. செவிக்கினிய செஞ்சொல்லே ஸ்ரீபாஷ்யமாக வடிவுகொண்டதென்று காட்டுமிந்த ஸ்ரீகோசத்தையளித்த வள்ளலுக்கு 'பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ' என்ற வெறுஞ் சொல்லுடன் திசைநோக்கித் தெண்டனிட்டு நிற்கிறேன்.

தாஸன், V. V. Bombay, 2-10-54.

ஸ்ரீமத் (உவே. திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமி திருக்குமாரர்)
T. விஜயராகவன், D. Phils சென்னை-7.

மஹாநிதியென்றே திருநாமம் சாத்தத்தக்க மஹாக்ரந்தம் கிடைக்கப் பெற்றேன். ஜூலை மீ 25உ ஹிந்துபத்ரிகையில் வெளிவந்த வியாஸத்தை அன்றே வாசித்து 'ஸ்ரீவைஷ்ணவகுலத்திற் பிறந்தவர்கள் இப்படியெல்லாம் ஏதுக்கு எழுதுகிறார்களென்று நினைத்ததுண்டு; உடனே நம் ஸ்வாமியால் அம்ருத ப்ரவாஹம் கிடைக்குமென்றும் நினைத்தேன். இது ஸ்வாமி திருக்கண்களில் படுமாவென்றும் நினைத்தேன். விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேணுமென்று ஆவல்கொண்டவர்களான என்போல்வார்களுக்கேயன்றி முழுதுணர்ந்த மஹநீயர்களுக்கும் ஸ்வாமி செய்தருளும் மஹோபகாரங்களை நினைந்துநைந்துள் கரைந்துருகி நிற்குமடியேன்

தி. விஜயராகவன், 9—10—54.

திருக்கோவலூர் ஸ்ரீமத். எம்பெருமானார் ஜீயர் மடாதிபதி
ஸ்ரீமத் உவே. திருவேங்கடராமாநுஜாசாரியர் ஸ்வாமி.

ஸர்வர்க்கும் ஸர்வஸ்வமேயான ஸர்வஸ்வக்ரந்தம் "கோலமாமென் சென்னிக்கு" என்கிற ரீதியிலே அடியேனுக்கு சிரோ பூஷணமாகி ஆயனார் ஸன்னிதியிலே ஒரு மஹோத்ஸவத்தை முன்னிட்டுக் குழுமிய தொண்டர் திரளிலே பலரறிய வாசித்துக்காட்டவும் பெற்றது. ஸ்ரீமந்நாத முனிகள் மூலமாக திவ்யப்ரபந்தங்கள் புநரவதாரம் செய்வதற்கு மூலமாயிருந்த ஆராவமுதே என்கிற பாசுரத்தின் திருநாமத்தையே இந்த ஸ்ரீகோசத்திற்கும் சாத்தலாமென்று ஸகல ரஸிகர்களும் கூறினார்கள். உண்மையில் இதைவிட வேறு ஆராவமுதம் இருக்கமுடியாதென்று சபதம் செய்வேனடியேன். நிரூபிக்கப்பட்ட ஒவ்வொரு விஷயமும் விலையில்லா மாணிக்க மென்னத் தகுந்ததாயிருக்கச் சேயும், "யத்பதாம்போருஹத்யாந" என்கிற ஆளவந்தார் தனியனுக்கு நிரூபித்திருக்கிற நிர்வாஹங்கள் ஆழ்ந்து நோக்குவாருடைய உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் விதம் எழுதி முடியாது. "பாஷ்யஞ் சேத் வ்யவ்ருணோத் ஸ்வயம் யதிபதிர் வ்யாக்க்யாநவாசாம் ததா காம்பீர்யாதந வஸ்திதி:" என்று ச்ருதப்ரகாசிகாசார்யர் ஸ்ரீபாஷ்யகார ஸ்ரீஸூக்திகளைப் பரம கம்பீரமென்று ஸாதித்ததன் மருமம் இப்போதுதான் விளக்கமாகிறது. அவ்வளவு கம்பீரமான ஸ்ரீஸூக்திகளின் உள்ளுறை பொருள்களைத் தெள்ளமுதென அள்ளிக் கொடுப்பதற்கு வாய்த்த வள்ளல் நம் அண்ணனே. சீலமில்லாச்சிறியேன் அதிகமெழுத அசக்தன். திருத்திப்பணிகொள்ளவேணும்.

திருவேங்கடராமாநுஜார்யதாஸன்,

திருக்கோவலூர்மடம், 7-10-54.

ஸ்ரீமதுபயவே. ஸ்ரீஸூக்திரத்நார்ணவம். இளையவில்லி. சடகோபாசாரியர் ஸ்வாமி, ஆழ்வார்திருநகரி.

ஸர்வஸ்வ ஸம்மான ஸம்மோத ப்ரவாஹம்

"திரமிடோபநிஷத் பிரபாவ ஸர்வஸ்வம்" என்கிற அத்யத்புத திவ்யக்ரந்தம் எம்பெருமானார் தர்சனஸ்தர்களுக்கு மட்டிலுமென்ன, இவ்வுலகுக்கே ஒரு மஹத்தான

ஸர்வஸ்வலாபம். வேதாந்தத்தில் "ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம்" என்கிறதினால்—எதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாக ஆகிறதோ அதுவே பரம்பொருள் என்று காட்டினபடியே இந்த 'ஸர்வஸ்வ' க்ரந்தத்திலுள்ள விஷயங்களை உணர்ந்தால் ஜ்ஞாதவ்யார்த்தங்கள் அத்தனையும் அறிந்ததாகவே ஆகும் என்கிறதை சபதமிட்டுச் சொல்லலாம். இந்த மஹத்தனம் அதஸ்கர கர க்ராஹ்யமாய், கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்று நீங்காதே ப்ராஜ்ஞசிரோ பூஷணமாய், குன்றத்திலிட்ட விளக்காய், அஜ்ஞாநாந்தகாரத்தை அடியறுப்பதாய்த் திகழ்கிறது. சிஷ்ய லக்ஷணபூர்த்தியுள்ளதோவென்று பரீக்ஷித்து சிக்ஷிக்கவேண்டிய அர்த்தங்களை ஸ்ரீஸ்வாமி அபேக்ஷா நிரபேக்ஷமாக வாரியிறைப்பதைக் கண்டால் ரஹஸ்யமர்யாதைக்கு பங்கம் விளைந்தாலும் அதையும் ஸஹித்து உண்மையை உணர்த்தியே தீரவேண்டிய செல்லாமை நன்கு விளங்குகிறது. க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யரென்று விருதுபெற்ற எம்பெருமானாரையும் அதிசயித்தவர் நம் ஸ்வாமி. இம்மஹார்த்தங்கள் வெளிவரும்படி செய்து வைத்தது கொண்டு அக்னிஹோத்ரம் ஸ்வாமியை சில அபிநந்தன ப்ரதாதாக்கள் புகழ்ந்து வைத்தார்கள். எம்பெருமானார் தரிசனத்துக்கு பஹிர்ப்பூதரானவர்களில் ஒருவருடைய துர்வாதத்தால் இவ்வர்த்தம் வெளிவந்திருந்தால் வ்யாஜமாகிய அவரைக் கொண்டாடலாம். புரோபாகிகள் மலிந்த இவ்வுலகிலே உங்கள் ராமாநுஜதர்சனஸ்தரிலேயே ஒருவர் திவ்யப்ரபந்தங்களின் பெருமைகளை திரஸ்கரித்திருக்கிறாரே? அதற்கு பரிஹாரமென்? என்று கேட்பவர்களுக்கு இந்த ஸர்வஸ்வ க்ரந்தம் கொண்டு வாய் மூடுவித்தாலும் ரந்த்ரான்வேஷிகள் உங்கள் தர்சனஸ்தரே ஒப்புக்கொள்ளவில்லையே! என்று த்ருடதரபிபத்தமூஷ்டிகளாம்படி தௌர்ஜன்யாஸ்பதமாக்கி வைத்தது பெரும்பிசகு. அந்தோ! திருக்குடந்தையில் தோன்றினவரா இந்தபிசகுக்காளாவது.

ஸ்ரீமந்நாதமுனிகள், ஆழ்வார்கள் காலத்துக்குப் பிறகு திவ்யப்ரபந்தங்கள் ப்ரமுஷிதமாய் இருந்த காலத்திலே, திருக்குடந்தையில் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருவாய்மொழியில் (5—8) 'ஆராவமுதே' என்று தொடங்குகிற பதிகத்தை ஸேவிக்கத் திருச்செவி சாத்தினார். அதில் 'குழலில் மலியச்சொன்ன ஓராயிரத்துளிப் பத்தும்' என்றிருப்பதால் மற்ற பாசுரங்களையும் லபித்தல்லது தரியாதபடியானார். தேவகான ரஸிகரானபடியாலே குழலில் மலியச்சொன்ன பாசுரத்தைப்பெற ஆசை கொண்டது யுக்தமே. ஆழ்வார் தீராதஆசையுடன் ஆராவமுதனைப் பாடுவதிலே 'நீராய் அலைந்து' கரைந்த நிலைமைபோல இப்பாசுரங்கேட்ட நாதமுனிகளுக்கும் ஈடுபாடு உண்டாய், திருக்குருகூருக்கு எழுந்தருளி, 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' கொண்டு மனந்தனைக்கட்டி யோகத்தாலே ஆழ்வாரை ஸாக்ஷாத்கரித்து நாலாயிரப் பிரபந்தமும் தர்சனரஹஸ்யார்த்தங்களும் பெற்றார். அதுவே ஓராண் வழியாய் எம்பெருமானாரளவும் வந்து அவ்வழியாலே பஹுமுகமாகப் பிரவஹித்து ஸர்வோபஜீவ்யமாயிருக்கிறது. இந்த ஐதிஹ்யம் உபயகலா சிஷ்ட கோஷ்டிகளிலும் அத்யாதரத்துடன் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இதனால், திருக்குடந்தையில் எழுந்தருளியிருந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவமஹாநுபாவரே பக்தாமிருதமான திவ்யப் பிரபந்தத்துக்கு ஊற்றுவாயாக இருந்தார் என்பது அறுதியிடப்படுகிறது.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் திவ்யதேசாநுபவமெல்லாம் தலைக்கட்டி பரமபதத்தில் இங்கிருந்து போமவர்களை அங்குள்ளவர்கள் ஸத்கரிக்கும் பிரகாரத்தை அருளிச்செய்யுமடைவிலே (10—9—7) "குடந்தை யெங்கோவலன் குடிபடியார்க்கே" என்று, திருக்குடந்தை ஆராவமுதனுக்கு குடிகுடி வழிவந்தாட் செய்யுமவரான விண்ணுளாரிலும் சீரியர் வந்தார் என்று தோத்திரம் சொல்லி எதிர்கொள்ளுகிறார்கள் என்று ஸாதித்தார். இத்தால் 'கோயிலில் வாழும் வைட்டணவனென்னும் வன்மை கண்டாயே' என்கிற பெருமைக்கும் மேம்பட்டதன்றோ

திருக்குடந்தைவாழ் வைஷ்ணவருக்குள்ள மேன்மை. எல்லாம் லுப்தமானாலும் ஆராவமுதனைப் பற்றின திருவாய்மொழி மட்டிலும் லுப்தமாகாமல் ரக்ஷித்து வைத்திருந்தார் என்கிற பெருமைக்கு இலக்கான ஸ்ரீவைஷ்ணவர் வாழ்ந்த *செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தையிலே இன்று எம்பெருமானார் தரிசனத்திலே தோன்றி ஆசார்ய புருஷஸந்ததியிலே சிஷ்ய பரிபாலனாதி தர்சனநிர்வாஹதத்பரராய் உபயவேதாந்த பிரவர்த்தகரென்கிற உபாதிக்கு ஆசைப்படுகிறவராயுமிருக்கிற ஒரு அக்நிஹோத்ரி அந்தோ! ப்ரஹ்மஸ்ரீபட்டத்திற்கு இலக்கானாரே!

ப்ரஹ்மஸூத்ரங்களுக்கு பாஷ்யம் செய்ய உபநிஷத்துக்களிருக்கும்போது என்ன குறையென்று நினைக்கிறார் அக்நிஹோத்ரி; அந்தோ எந்த ப்ரமாணங்களும் "பிபேத்யல்பச்ருதாத்" என்கிறபடியே குத்ருஷ்டிகளிடம் சிக்கிக்கொண்டு படுகிறபாடு தெரியவில்லையா? நம் பகவத் ராமாநுஜரிடத்திலும் அவை அப்பாடு தான் படுகிறதாக இவருடைய நினைவு போலும். ஆழவார் ஸ்ரீஸூக்திகளை அண்டை கொண்ட பலத்தினாலன்றோ ஸ்வாமியின் திவ்யஸூக்திகள் வெற்றிபெற்றன. இதர பாஷ்யகாரர்கள் சருக்கி விழுந்த இடங்களையும் அங்கங்கு ஸ்வாமி ஆச்சரியமான நிர்வாஹங்கள் காட்டியிருக்குமழகையும் ஸர்வஸ்வம் கரதலாமலகமாக எடுத்துக் காட்டியிருப்பதானது நம்மவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கிடைத்ததனாலுண்டாகு மானந்தத்திற்கும் மேற்பட்ட ஆனந்தத்தை விளைக்குமதல்லவா? இப்படிப்பட்ட நிரூபணங்கள் வைவஸ்வதமந்வந்தரே கலியுகே ப்ரதமபாதே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே ஒருவரெடுத்துக்காட்டி நாம் கண்டதுண்டோ?

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு இந்த நம் ஸ்வாமி மூலமாகவே ஒரு ஸர்வஸ்வ க்ரந்தமவதரித்தது. அது வேதாத்யயநவிஷயமாகையாலே என்போன்றவர்களுக்கு உபயோகப்படாமல் ஸலக்ஷணகநபாடிகளென்று பேர்பெற்ற மஹா மஹா வைதிகர்களுக்கு அது ஸர்வஸ்வமாகவே யிருந்ததென்பதை இன்றைக்கும் குணக்ராஹிகளான வைதிகர்கள் சொல்லக் கேட்டு வருகிறோம். அந்த ஸர்வஸ்வ மஹாப்ரதீபத்தில் சலபவ்ருத்தியை யடைந்த அக்நிஹோத்ரிகளுக்காகவே இப்போதும் இந்த ஸர்வஸ்வக்ரந்த மவதரித்தது. இதிலும் சலபவ்ருத்தியையோ சபலவ்ருத்தியையோ அடையாமல் "தேநாவலோக்ய க்ருதிந: பரிபுஞ்ஜதே தம்" என்று மாபோகமுண்டுகளிப்பரேல், இதுகாறும் அபரிமிதமாகச் செய்துவைத்திருக்கிற குத்ருஷ்டிகளின் அங்கப்ராசநத்திற்கு ஒருபடி ப்ராயச்சித்தம் செய்ததாகும். அவ ருடைய கதி எதுவாயினுமாகுக. அதைப்பற்றி நமக்கென்ன?

"கட்டெழில் வானவர் போகமுண்பாரே" என்று ஆழ்வார் ஸாதித்த வானவர்போகம் நமக்கெல்லாம் இவ்வுலகத்திலேயே கிடைத்துவிட்டது. எம்பெருமானார் கூரத்தாழ்வானைத் திருக்கோட்டியூர் நம்பி பக்கலில் அனுப்ப, அவர் ஆறுமாஸ காத்திருந்து ஒரு பாசுரத்துணுக்கை கொண்டுவந்ததற்கு ஸ்வாமியின் உகப்பு தலை மண்டை கொண்டதென்று இதிஹாஸம் வாசிக்கிறோம். இந்த ஸர்வஸ்வ க்ரந்தத்தில் ஸ்வாமி வாரியிறைத்திருக்கிற மஹாரத்னராசிகளை நாம் பெற்றதற்கு க்ருதஜ்ஞர்களாயிருப்பது தவிர வேறு என்ன செய்யப்போகிறோம்.

தாஸன் இளையவில்லி சடகோபன், 2—10—'

———

ஸ்ரீமான் உவே. T. ஆராவமுது தாதாசாரியர் ஸ்வாமி, அட்வகேட், கள்ளக்குறிச்சி.

நாற்பது வருஷங்களுக்கு மேலாக ஸ்ரீகாஞ்சீ ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி ஸ்வாமியால் உலகுக்குக் கிடைத்துவரும் உபகாரங்கள் எண்ணுதற்கு அரியன. மாதப்பத்ரிகையாகவோ உபந்யாஸ நூல்களாகவோ வியாக்கியான க்ரந்தங்களாகவோ ஸ்வாமி வெளியிட்டுவரும் உயர்ந்த ப்ரசுரங்கள் பூர்வாசாரியர்களின் மஹோபகாரங்களிற் காட்டிலும் நூறுமடங்கு அதிகமானவை என்றால் ப்ரதிபக்ஷிகள் கூட இதை ஆக்ஷேபிக்கமாட்டார்களென்பது நிச்சயம். ஸ்வாமி செய்யுமுபகாரம் ஒரு பாஷையிலா? ஸ்ரீவைஷ்ணவ வுலகில் பெரும்பான்மையாக நடையாடுகிற பாஷைகளிலெல்லாம் பத்ரிகைகளும் வியாக்கியானங்களும் வெளியிட்டு வருகிறாரென்றால் இது மற்ற பேர்களுககு நெஞ்சாலும் நினைக்கக்கூடிய விஷயமாக இல்லையே. நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்கு மிக விரிவான திவ்யார்த்த தீபிகையுரையெழுதி வெளியிட்டதோடு நில்லாமல் ஸம்ஸ்க்ருத பாஷையிலும் மொழிபெயர்ப்பும் வியாக்கியானமும் எழுதத்தொடங்கி ஸ்வல்பகாலத்தில் ஒரு ஆயிரம் பாசுரங்களுக்குமேல் தெலுங்குலிபியிலும் தேவநாகரியிலுமச்சிட்டு வெளியிட்டாய் விட்டது. இந்த ஒரு காரியத்தை மாத்திரம் தனியாக வொருவர்செய்ய முன்வந்தால் அவருடைய வாழ்நாள் முழுவதும் போராது என்னவேண்டும். அப்படிப்பட்ட ஒரு பெரிய காரியத்தை நம் ஸ்வாமி மற்றும் பல காரியங்களினிடையே அவலீலையாகச் செய்து வருகிறாரென்பதைப் பார்த்தால், ஸர்வேச்வரன் "ஸோகாமயத" "ஸ தபோதப்யத" என்று உபநிஷத்து ஓதுகிறபடி ஸங்கல்பமாத்ரத்தினாலேயே ஸர்வத்தையும் செய்து முடிப்பதுபோல, நம் ஸ்வாமியும் பத்ரிகாப்ரகாசநம், க்ரந்தப்ரகாசநம் என்னும்படியான ஸகல காரியங்களையும் ஸங்கல்பமாத்ரத்தாலேயே நடத்தி வருகிறாரென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

பூர்வாசார்யர்களருளிச் செய்த ஸ்தோத்ரங்களில் ஒன்றுவிடாமல் ஸகலத்துக்கும் தேசிக ஸ்தோத்ரங்களுக்குமுட்பட சிறந்த வியாக்கியானங்களை யருளிச்செய்து வெளியிட்டிருக்கிற காரியமும் மற்றொருவர்க்கு நெஞ்சாலும் நினைக்க கூடியாதது.

சிலமாத காலமாக ஸ்வாமி தமது ஸ்ரீராமாநுஜன் பத்ரிகை வாயிலாக ஸ்ரீமத் வால்மீகி ராமாயணவசனம் வெளியிட்டு வருகிறார்; ஸுந்தரகாண்டம்வரை முடிந்து வெளியாகிவிட்டது. அந்த நடையைப்பார்க்கிற லௌகிக வைதிக விவேகிகள் யாவரும் 'இது அதிமாநுஷமாயிருக்கின்றதே' என்றுதான் சொல்லுகிறார்கள். இப்படி எந்த ப்ரசுரத்தைப் பார்த்தாலும் அதிமாநுஷமாகத்தான் காண்கிறது. 1951 ஆம் வருஷத்தில் ஸ்வாமிக்கு ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம் நடந்தபோது சென்னை பெருங்கூட்டத்தில் ஒருநாள் தலைமைதாங்கிய ஹைகோர்ட்டு சீப் ஜட்ஜ். கனம். ராஜமன்னாரவர்கள் பேசினதாவது—நம் ஸ்வாமி இதுவரையில் முந்நூறு க்ரந்தங்களுக்குமேல் இயற்றியிருப்பதாகத் தெரிகிறது; அந்த க்ரந்தங்களிலெல்லாம் ஒருபிரதி நான் வரவழைத்துப் புத்தகவுருவத்தை மாத்திரம் பார்க்க நேர்ந்தது; அப்படி பார்க்கும்போது புத்திக்கு அடியோடு சிரமம் கொடாமல் ஒரிஜனல் பார்த்துக் காபியெழுதுவதில் கைதேர்ந்தவர்களில் ஒருவர் தம்முடைய வாழ்நாள் முழுவதிலும் இவ்வளவையும் காபிபண்ணுவதாகிற காரியத்தையாவது செய்து முடிப்பரா?' என்பதே என்மனதில் தோன்றிற்று என்றார். அந்த மஹானுக்கு அப்படிப்பட்ட ஆலோசனை தோன்றியதைப்பற்றி அப்போது ஸபையில் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். உண்மையில் ஸ்வாமியின் வெளியீடுகளைப் பார்ப்பவர்கள்

'இவர் ஒருநாளைக்கு 500 ஸைட் எழுதுவரா? 600 ஸைட் எழுதுவரா?' என்று மதிப்பிடுகிறார்களேயொழிய 50, 60 ஸைட் என்கிற மதிப்பு ஒருவருடைய புத்தியிலும் தோன்றுவதில்லை. இதுதவிர, நாற்றிசையிலுமுள்ளவர்களும் தினப்படியாக ஸ்வாமிக்கு எழுதுகிற கடிதங்களுக்கெல்லாம், பிரதிநிதியொருவரையும் வைத்துக் கொள்ளாமல் தம் கையினாலேயே எழுதுகிற பதில் கடிதங்களைப்பற்றி மதிப்பிடத் தொடங்கினாலோ அது ஒரு கணக்கிலுமடங்காது. அடியேனுக்கு ஸ்வாமியோடு அடிக்கடி கலந்துபழக ஸந்தர்ப்பம் வாய்ப்பதனால் இவ்விஷயங்களையெல்லாம் அடியேன் தவிர வேறுயாரும் தெரிந்து கொள்ளவும் தெரிவிக்கவும் முடியாது.

இனி ப்ரக்ருத விஷயம் பற்றிப் பேசுகிறேன். ஸ்ரீஸ்வாமியால் இப்போதே அச்சிடப்பட்டு முடிக்கப்பட்டதும் இன்னமும் வெளியிடப்படாததுமான த்ரமிடோபநிஷத்ப்ரபாவஸர்வஸ்வமென்கிற க்ரந்தத்தை இந்த நவராத்ரியில் அனேகமாக நித்யபாராயணம் செய்யப்பெற்றேன். இதைப்பற்றி அடியேன் விரிவாக என்ன எழுதப்போகிறேன். உபயவேதாந்தங்களிலும் பரிபூர்ணாதிகாரிகளாக ஆங்காங்கு பல மஹான்கள் இல்லாமற் போகவில்லை; அவர்களில் யாரேனுமொருவர் இந் நூலிலுள்ள விஷயங்களையெல்லாம் கிரஹித்து தரித்துக்கொண்டு எடுத்துரைக்கக் கூடியவருண்டாவென்று அடியேனுள்ளம் விமர்சிக்கத்தொடங்கியது. இப்படி அடியேன் எழுதுவது மஹத்தான பாகவதாபசாரத்தில் பர்யவஸிக்குமோ? என் றும் அஞ்சுகிறேன். அடியேன்கொண்ட ஆநந்தாதிசயமும் விஸ்மயமுமே இப்படி யெழுதப் பண்ணினதாகக் கொள்வது நலம். வஸ்துஸ்திதியில் மிகவும் ஆழ்ந் ஆராய்ச்சிகள். எதிரிகளுங்கூட ஒன்றிலும் ஒருவிதமான எதிர்வாதமும் செய் முடியாதபடி ஒவ்வோரெழுத்தும் ஆணித்தரமானது.

பிடிவாதமாக ஏதாவது எதிர்வாதம் பண்ண வேணுமென்று தோன்றின "காடகச்ருதியிலும் தைத்திரீயோபநிஷத்திலும் திவ்யப்ரபந்தங்களை ப்ரசம்ஸி திருப்பதாக ஒரு அதிகாரம் எழுதியிருக்கிறாரே, இது அப்படித்தானோ?" என் க்ஷேபிக்கலாமே தவிர, மற்று எந்த விஷயத்திலும் அணுவளவாவது வாயை திறக்கமுடியுமோ? திருவாய்மொழியைப்பற்றின ப்ரசம்ஸை வேதத்தில் இருந் தீர வேணுமென்று என்ன நிர்ப்பந்தம்? இருக்கவுமாம், இல்லையாகவுமாம். பகவ பாஷ்யகாரர் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில்கண்ட அர்த்தவிசேஷங்களையே தம்முடை பாஷ்யாதிகளில் நன்கு பதிய வைத்திருக்கிறார் என்பதை நிரூபிப்பதொன் இந்நூலுக்கு முக்கியமான நோக்கென்று முகப்பிலேயுள்ளது. அது மற்றொ வருடைய புத்திக்கு கோசரமாகாத முறையிலும் அசைக்க முடியாதவகையி 'எம்பெருமானாருக்கும் அண்ணாஸ்வாமிக்குமேதான் இது தெரியும்' என்று சொல்லும்படிக்கும் இதில் அமைந்து விட்டது. இதற்கு "அஸ்மதாசார்ய தயம்" என்று திருநாமம் சாற்றியிருந்தால் மிகப் பொருத்தமாயிருக்கும்.

ஸ்ரீவைஷ்ணவ குலத்திலேயே பிறந்தவொருவர் தம்முடைய நிலைமை அடியோடு தகாதமுறையில் எழுதியிருந்த வொரு வியாஸத்திற்குக் கண்டனப அவதரித்த இந்த க்ரந்தத்தில், அந்த ஸ்வாமியின் பெயரைக்கூடத் தொடாம கடுஞ்சொல் ஒன்றுகூட புகாமலும் மிகவுயர்ந்த க்ராந்திகஸரணியில் உபபாத கள் காணப்படுவது மிகவும் குலாவிக் குறிப்பிடத்தக்க விசேஷம்.

தாஸன் T. A. தாதாசாரியன், 1—10-